# பரராசசேகரம்

## இரண்டாம் பாகம்

2



மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்
வட மாகாணசபை

# பரராசசேகரம்

## இரண்டாம் பாகம்

(மீள்பதிப்பு)

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்

வட மாகாணசபை.

**நூல்** :- பரராசசேகரம் (இரண்டாம் பாகம்)

**முதற்பதிப்பாசிரியர்** :- ஏழாலை ஐ.பொன்னையா

**மீள்பதிப்பு** :- மாகாண சுதேச மருத்தவத்திணைக்களம்
வட மாகாணசபை.

**பதிப்பு** :- டிசம்பர் 2016

**பிரதிகள்** :- 1000

**அச்சுப்பதிப்பு** :- வைரஸ் பிறிண்டேஸ்
கணனி வடிவமைப்பு.

# வடமாகாண கௌரவ ஆளுநரின் ஆசிச்செய்தி

**"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள்பதிப்புக்கு எனது ஆசிச்செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகிறேன்.

நூலின் மீள்பதிப்பு முயற்சி வெற்றிபெற இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

**"பரராசசேகரம்"** என்பது யாழ்ப்பாண பரராசசேகரன் மன்னனால் 12 மருத்துவர்களின் உதவியுடன் இயற்றப்பட்ட மருத்துவத் தமிழ் நூல் ஆகும் எனவும் பரராசசேகரன் என்ற பட்டப்பெயருடன் பல அரசர்கள் இருந்துள்ளனர் எனவும் இந்த நூல் 14 - 16 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியை சேர்ந்ததாகவும் இதன் நூல் 12000 செய்யுள்களால் அமைந்தது என்று கூறப்படினும் 8000 செய்யுள்களே அச்சில் வந்துள்ளன. என்பதையும், இந்த நூல் அகத்திய வைத்திய சிந்தாமணி, தந்வந்திரி வைத்திய சிந்தாமணி ஆகியவற்றைத் தழுவியே எழுந்தது என்றும் "பரராசசேகரம்" எனும் மருத்துவத் தமிழ் நூல் பற்றிய தகவல்களை வேறு தமிழ் அறிஞர் நூல்களின் மூலமாக பெறமுடிந்தது.

ஆகையினால் இத்தகைய மருத்துவப் பெறுமதியும் வரலாற்று விழுமியமும் நிறைந்த **"பரராசசேகரம்"** எனும் மருத்துவத் தமிழ் நூல் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதுடன் அதன் உள்ளடக்கமாகவுள்ள மருத்துவக்குறிப்புக்களும் விளக்கங்களும் சந்ததி சந்ததியாக கையளிக்கப்படுவதன் மூலமாக தமிழர் மருத்துவப் புலமை அனைத்து மக்களுக்கும் பயன்படவேண்டும். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள் பதிப்பு செய்வதன் நோக்கமும் அதுதான்.

மீள்பதிப்புப் பணியை பொறுப்பேற்று நிறைவேற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தைப் பாராட்டி வாழ்த்துகிறேன். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூலின் மீள்பதிப்பு நூல்கள் மருத்துவர்களையும் மாணவர்களையும் அத்துறையில் அறிவை வளர்க்க விரும்பும் ஏனைய மக்களையும் சென்றடைந்து அவர்கள் பயனடையவேண்டும் எனவும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி

ரெஜினோல்ட் கூரே,
ஆளுநர்,
வடமாகாணம்.

## வடமாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் மன்னர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பரராஜசேகரன் ஆட்சி புரிந்த காலத்தில் இயன் மருத்துவத்தின் மீது கொண்டுள்ள உவகையினால் பல்வேறு திக்குகளிலும் மருத்துவத்தில் சிறப்புற்று விளங்கிய மருத்துவப் புலமை மிக்க பண்டிதர்களை அழைத்து அவர்களின் மருத்துவக் குறிப்புக்களைப் பெற்று பன்னிரண்டாயிரம் பாடல்களுடன் பாடல் வடிவில் "**பரராசசேகரம்**" எனும் பெயரில் நூலொன்று உருவாக்கப்பட்டது. அவற்றை ஏழு பாகங்களாகத் தொகுத்து திரு.ஐ.பொன்னையா என்பவர் வெளியிட்டார். அவை சிதிலமடைந்து மேலதிக பிரதிகள் கைவசமின்றி அவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் இம் மருத்துவக் குறிப்புக்கள் அழிந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் அவற்றை மீள் பதிப்பு செய்ய முன்வந்திருக்கும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு எமது வாழ்த்துக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மேலைத்தேய மருத்துவத் துறைகளில் நாட்டம் கொண்ட எம்மவர்களில் பலர் இரசாயனக் குளிகைகளிலும், ஊசி மருந்துகளிலும் நாட்டம் கொண்டு கீழைத்தேய மருத்துவ முறைகளில் இருந்து விலகி மேலைத்தேய மருத்துவத்தை நாடிச் செல்கின்றனர். அதே தருணத்தில் மேலைத்தேயத்தில் வாழ்கின்ற பலர் கீழைத்தேய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருந்துகள், எண்ணெய்கள் மற்றும் குடிநீர் போன்றவை எந்தவித பக்கவிளைவுகளும் அற்றதாக, நிரந்தர வைத்திய முறைமையாக பூரண வைத்திய முறையாகவும் இருப்பதைக் கண்ணுற்ற இந்தியா போன்ற நாடுகளை நோக்கி அவர்களின் உடல் உபாதைகளைப் போக்கவும் நீண்ட நொடிய நோய்களை குணப்படுத்தவும் படை எடுத்து வருகின்றார்கள்.

இந் நிலையில் கீழைத்தேயத்திற்கே உரித்தான பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறைகளை அழியவிடாது பாதுகாத்து எமது அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. அந்த வகையில் மீள்பதிப்பு செய்யப்படுகின்ற இந்த 07பதிப்புக்களும் எமது எதிர்காலத்தின் அரும்பெரும் சொத்தாக அமையவேண்டும் என வாழ்த்தி இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாண சபை.

# வடமாகாண கௌரவ சுகாதார அமைச்சரின் ஆசிச்செய்தி

பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த **"பரராச சேகரம்"** எனும் வரலாற்றுப் பொக்கிசமான வைத்தியநூலை வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மீள்பதிப்பு செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னோர்களால் ஏட்டில் பாடல்களாக எழுதப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த திரு.ஐ.பொன்னையா அவர்களினால் ஏழு பாகங்களாக தொகுக்கப்பட்டு 1928 - 1936ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்டாலும் அவற்றை மீள்பதிப்பு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்தின் தேவையறிந்து இவற்றை மீளப்பதிப்பதற்கு முயற்சி மேற்கொண்ட வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் (திருமதி) சி.துரைரட்ணம் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலைத்தேய மருத்துவத்தின் மோகம் மக்களிடையே அதிகமாக இருந்தாலும் அதனை உருவாக்கிய மேலைத் தேயத்தவர்களே தற்போது சுதேச மருத்துவ முறைகளில் அதிக நாட்டம் காட்டுவது அதன் சிறப்புகளைக் கோடிட்டு காட்டுகின்றது.

மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்த புத்தகம் எமது சுதேச மருத்துவத்துறை மாணவர்களுக்கும், மக்களுக்கும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர்.பத்மநாதன் சத்தியலிங்கம்,
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

# பிரதம செயலாளரின் ஆசிச் செய்தி

ஒரு காலத்தில் சுதேச மருத்துவத்துறையில் இந்தியாவுக்கு இணையாக மிகவும் பயனுறுதியும் விளையபயனும் மிக்கதான மருத்துவ சேவையை வழங்குவதில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருந்தது. ஆயுள்வேத மற்றும் மூலிகை மருத்துவத்தில் மிகவும் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட யாழ்ப்பாண இராஜ்யத்தை அரசாட்சி புரிந்த பரராஜசேகர மன்னன் அவனது காலத்தில் பல்வேறு புலமை மிக்க வைத்தியர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த இந்த மருத்துவத்தை அழியவிடாது பாரம்பரியமாக நடைமுறைப்படுத்தும் நோக்கோடு 12,000 மருத்துவப் பாடல்கள் அடங்கிய ஏட்டுப்பிரதிகளை தனது காலத்தில் இருந்த மருத்துவ வியலாளர்களைக் கொண்டு ஆவணப்படுத்தினார்.

1928 - 1936 காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு.ஐ.பொன்னையா என்பவரால் ஏட்டுப்பிரதியாக இருந்த இம் மருத்துவக் குறிப்புப் பாடல்கள், ஏழு பாகங்களாகத் தொகுக்கப்பட்டு முதன் முதலாக நூல் மயமாக்கப்பட்டது. இந் நூலை ஆதாரமாகக் கொண்டே இன்றும் பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவம் செய்து வருகின்றனர்.

இயற்கை மூலிகைகளோடு இணைந்த சித்த ஆயுர்வேத மருத்துவமானது தற்போது அனேக நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற இக் காலத்தில் எமக்கு அரும்பொக்கிஷமாகக் கிடைக்கப்பெற்ற **"பரராசசேகரம்"** மருத்துவ நூலானது அழிந்து விடாதபடி மீண்டும் மீண்டும் மீள்பதிப்புக்குட்படுத்தி காத்து அடுத்து சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டுப்பாடு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும்.

சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற **"பரராசசேகரம்"** மீள்வெளியீட்டின் முயற்சி யானது காலத்தோடொட்டிய அத்தியாவசியமானதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதென்றாகும். இந்நூலின் மூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் பயன்பெற எல்லாம் வலல் இறைவன் துணை வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடமாகாண சபை

# செயலாளரின் வாழ்த்துரை

கலை பண்பாடுகளினால் சிறப்புற்ற யாழ்ப்பாண இராச்சியம் செழிப்புடனிருந்த பரராஜசேகர மன்னனின் ஆட்சியின்போது, அவன் முன்னிலையில் பல மருத்துவப் புலமையாளர்களைக் கொண்டு உருவாகியதே பரராசசேகரம் என்னும் பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த மருத்துவ நூலென வரலாற்றாளர்கள் கூறுவர்.

அன்று முதல் முறைசார் கல்வியூடாக மருத்துவம் போதிக்கப்படும் வரை மருத்தவத்தையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மருத்துவப் பரம்பரையினர் பரராசசேகரத்தின் ஏட்டுப் பிரதிகளை தமது அரும்பெரும் சொத்தெனவும், பிரதான உசாத்துணையெனவும் கொண்டு பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர்.

ஏழாலை ஐ.பொன்னையா எனும் மருத்துவரின் அயராமுயற்சியின் பயனாக ஏழு பாகங்களாக எண்ணாயிரம் பாடல்களுடன் அசேற்றப்பட்ட நூலாக பரராசசேகரம் கடந்த நூற்றாண்டில் கிடைக்கப் பெற்றிருப்பினும் காலவோட்டத்தால் அவற்றிலேற்பட்ட சிதைவுகளினாலும், கிடைத்தற் கரியனவாயி ருப்பதாலும் அவற்றை மீள்பதிப்பு செய்து எதிர்காலத்திற்கும் கிடைக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் அரியமுயற்சி பாராட்டுக்குரியதாகும்.

ஏழுபாகங்களாக உள்ள வெவ்வேறு ரோகங்களிற்கான நிவாரணம் தொடர்பான இந்நூலில் 1ம் 2ம் 5ம் 6ம் 7ம் பாகங்கள் மீள்பதிப்பு செய்யப்படுகின்றன.

நவீன காலத்தின் தேவைக்கேற்ப இந்நூலின் பித்தரோகம் என்ற பகுதியை இணையத்தில் ஒரு நண்பர் பதிவேற்றியிருந்தமையைக் காணுகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முயற்சியின் பலன்கள் எமது சந்ததியனருக்கு நன்மை பயப்பதாக என வாழ்த்தி நிற்கின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்.
சுகாதார சுதேச மருத்துவ நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.
வடமாகாணசபை

# மாகாண ஆணையாளரின் செய்தி

சித்த மருத்துவமானது "தமிழர் மருத்துவம்" எனவும் "தமிழர் பாரம்பரியம்" எனவும் போற்றப்படும் மருத்துவ முறையாகும். ஏனைய சுதேச மருத்துவ முறைகளைப் போலவே சித்த மருத்துவமானது தமிழர் வரலாற்றில் பிண்ணிப்பிணைந்திருப்பதை வரலாற்று நூல்கள் மூலம் தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரை இலங்கையை ஆண்ட மன்னர்கள் பலர் சிறந்த வைத்தியர்களாக இருந்ததை பல வரலாற்று நூல்கள் எடுத்தியம்பி உள்ளன. இவர்களுள் "செகராஜசேகர மன்னன்", "பரராஜசேகர மன்னன்" ஆகியோரது பெயர்கள் ஈழத்து சித்த மருத்துவ வரலாற்றில் முக்கியத்தவம் பெறுகின்றன. இவர்களது காலத்தில் சித்த மருத்துவமானது சிறப்புற்று இருந்தமைக்கு "பரராஜசேகரம், செகராஜசேகர வைத்தியம்" எனும் நூல்கள் சான்று பகர்கின்றன. இந்நூல்களில் குறிப்பிடப்படும் மருத்துவ முறைகள் எமது நாட்டிற்குரிய தனித்துவமான சித்த மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்டதாக கருதப்படுகிறது. மேலும் "பரராஜசேகரம்" எனும் நூலானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களது பாட நூல்களில் ஒன்றாக அமையப்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த வைத்திய நூல்களில், பல சிதிலமடைந்து அரகிப் போய் வருவது சித்த மருத்துவத்தின் அபிவிருத்திக்கும் ஒரு பாரிய சவாலாகவே காணப்படுகிறது. எனவே *1928 - 1936*ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா என்பவரால் தொகுக்கப்பட்ட "**பரராஜசேகரம்**" எனும் ஏழு பாகங்கள் கொண்ட நூல்களுள், எமக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து பாகங்கள், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் மீள் பதிப்பு செய்யப்படுகின்றன.

இந்த மீள் பதிப்பின் போது ஐ.பொன்னையா அவர்களால் குறிப்பிடப்பட்டிருந்த பிழைகள் திருத்தப்பட்டிருப்பதுடன் எழுத்துச் சீர்திருத்தமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் இதுவரை "ஒன்பது விஷ ஆருடம் - பத்மநாம அய்யர், "நாடி தர்ப்பனம்" சிதம்பரநாத வைத்தியர்" ஆகிய நூல்களை மீள் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இந்த வரிசையில் பரராசசேகரத்தின் ஐந்து பாகங்களை வெளியிடுவதில் திணைக்களம் என்ற வகையிலும், சித்தமருத்துவர்கள் என்ற வகையிலும் நாம் பெருமை கொள்வதோடு இந் நூலை வெளியிடுவதற்காக தம்மிடம் இருந்த பிரதிகளை எமக்கு தந்துதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது சித்த மருத்துவத்தைப் பேணி பாதுகாத்த அனைவருக்கும் இந் நூலை நாம் சமர்ப்பணம் செய்கின்றோம்.

டாக்டர்.(திருமதி).சி.துரைரட்ணம்,
மாகாண ஆணையாளர்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடமாகாண சபை.

யாழ்ப்பாண வைத்திய நூல் வெளியீடு ங

# பரராசசேகரம்

## (இரண்டாம் பாகம்)

**கெர்ப்பரோகநிதானம்,**
**பாலரோகநிதானம்.**

**பதிப்பாசிரியர்**
**யாழ்ப்பாணத்து, ஏழாலை**
சுதேச வைத்தியர்
**ஐ.பொன்னையா**

**சுன்னாகம், திருமகள் அச்சியந்திரசாலை.**
**பிரமோதூத ஹூ சித்திரை மீ**
**1930**

உரிமை பதிவுசெய்யப் பெற்றது.

# பரராசசேகரம்
# (இரண்டாவது)

## கெர்ப்பரோக நிதானம்

திருவுறு கைலை மீதிற் றெவிபோர் பாக னந்தாள்
உருவுறு முயிர்கட் காக வொதிடு மாயுள் வேதத்
தருவுறு வினையி னாலே யாகிய நோய்க டம்முள்
தெரிவையம் கெர்ப்ப நோயுந் தீர்த்திடு மருந்துஞ் சொல்வாம் 1

### கெர்ப்பரோகத் தொகுப்பு

திருவனையா ருதரமதிற் கெர்ப்ப ரோகஞ்
செப்பின றொன் பதுபேதஞ் செய்ய சோரி
மருவுசுரஞ் சூலைமிகு வாயு மெலும்
வருத்துபுழு விற்புருதி வான்பு ணர்ச்சி
கருவிலுறு வஞ்சனையு மருந்தி னீடுங்
கழறனரிங் கிவற்றுளைந்துந் தீரு மென்று
பொருவரிய தமிழ்முனிவ னன்று ரைத்த
பொருளாராய்ந் தறிதல்கடன் புலமை யோர்க்கே 2

### மற்றொரு பிரதியிற் கண்டபாட பேதம்

வஞ்சிக் கொடியர் ருதமதின் மருவுங் கெர்ப்ப ரோகமது
மிஞ்சுஞ் சுரோணி சுரஞ்சூரை மிகுந்த வாயு கிருமியொடு
செஞ்சொன் மடவீர் விற்புருதி சேரும் புணர்ச்சி வஞ்சனையோ
டொஞ்சு மருத்தீ டோன்பதினா லுறுமே கெர்ப்ப ரோகமதே 3

இரத்த ரோக மத்திசுரத் தெடுத்தநோவு சூலையினம்
உரத்த வாயுத் திரட்சியோ டுறையுங் கிருமிவிற்புருதி
வருத்தும் புணர்ச்சிவ ஞ்சனையு மருத்தினீடு மொன்பதனுள்
திருத்த மாக முன்னான்குந் தீரா தைந்துந் தீருமன்றே 4

சுரோணித் கெர்ப்பவாயு, சுரத்தின் மேல் கெர்ப்பரோகம், கெர்ப்ப சூலை, கெர்ப்பவாயு, கெர்ப்பக்கிருமி, கெர்ப்பவிற்புருதி, கெர்ப்பப்புணர்ச்சி, கெர்ப்ப வஞ்சனை, கெர்ப்ப மருத்தீடு எனப் பெண்களின் கருப்பையைப் பற்றிப் பிறக்கும் உரோகம் ஒன்பது வகைப்படும். அவற்றுள் முதலிற்கூறிய சுரோணித கெர்ப்ப வாயு முதலிய நான்கும் அசாத்திய மென்றும், ஏனை ஐந்தும் சாத்திய மென்றும் கூறப் படுகிறது. (நாட்ப்பட்ட சிகிச்சையின் மேல் மாறக்கூடியதை அசாத்திய மென்றனர்) இங்கு கூறப்படாத இரத்தசூலை முதலிய கெர்ப்ப ரோகங்களெல்லாம் இவற்றுளடங்குமாறு உய்த்துணர்ந்துகொள்க.

**அசாத்தியம் நான்கினுள்**

**க- சுரோணித கெர்ப்ப வாயுவின் குணம்**

திரண்டு புரண்டு கீழ்வயிற்றிற் 1 றிதமாய் மாத விடைபோலும்
மருண்டு குருதி மிகுந்துவரும் வாய்நர் பெருத்து மயங்கிவரும்
அருண்டு சிலநாள் விட்டுநிற்கு மழிக்குங் கருவை யரைதுடைநோம்
உருண்ட விரத்த ரோகமென வுறுதி யதுகண் டுணர்வீரே 5

உந்தித்கீ ழுதரம் புக்கி 2யுலமென விருக்கு மோடிச்
சந்துகள் விருவி ருத்துத் தானுட னடுங்கி யெங்கும்
மந்தமா யுடம்பு ழற்றி மறுகியுட் சத்தி தோன்றி
இந்தமா குணங்கள் கண்டா லிதுகெர்ப்ப சுரோணி யென்னே 6

1திதம் - வெப்பம். தினவாய் மாதவிடைப்போது – என்றும் பாடம். அருண்டு சிலநாள் விட்டு நிற்கும் - என்னும் மூன்றா மடியில் “விட்டுநிற்கும் என்பது” சிக்கி நிற்கும் எள்றும் சிலபிரதிகளிலுண்டு.
2உலம் - கல்லு.

## கெர்ப்பரோக நிதானம்

### சிகிச்சை

இக்குணங் கண்டபோதி லிதுகெர்ப்ப சுரோணி யென்று
மிக்குமிங் கிதற்குச் செய்யு மேலுறு கிரியை கேண்மின்
சுக்கொடு 1கழ2லிங் குள்ளி துலங்3கிரா வடியே யிந்துப்
பொக்கவெள் ளெண்ணெய் தன்னி லுறவெரித் துண்டிடாயே (ரு)

நண்ணியிம் மருந்து தன்னை நயமுறக் குடித்த போதே
எண்ணெயு நெய்யுங் கொண்டே யிதிலுற வொழுக்கு மாற்றிக்
கண்ணிய மிக்க வெள்ளைக் கருக்கியே யரைத்து தீயும்
திண்ணிய வுரோக மேலே செறிந்திடப் பூசிப் பின்னர் (சு)

பூசிய மருந்தின் மேலே பூமத்தி னிலையைப் போட்டு
மாசற விதனை மாற்றி மன்னுபேய்ப் பீர்க்கங் காயை
வீசியே பிளந்து பின்னும் வியாதியின் மேலே சேர்த்திக்
காசறக் கட்டி வைத்தாற் கரைந்திடுஞ் சுரோணி யன்றே (எ)

கட்டிய வெட்டு நாளிற் கரைந்து நோய் நீங்கா தாகில்
முட்டிய 4செளுகஞ் செய்து முரணற வுதிரம் போக்கிக்
கட்டிடுங் கொல்லன் கோவைக் கிழங்கினைத் துவைத்தே 2யிங்கும்
பட்டுறச் சுரோணி மேலே பண்புடன் கட்டி வையே (அ)

1கழல் - கழற்சிப் பருப்பு. 2இங்கு – பெருங்காயம். 3இராவடி – ஏலம். சீராடம் என்றும் பாடம்.
4செளுகஞ் செய்தல் - அட்டைவிடல்.

பதைத்துறக் கட்டி வண்பாற் பரிந்துமேற் கரையா தாகில்
இதப்படு கோடைக் கந்த மிடித்துமேற் குழைத்துத் தேனில்
விதப்படு முரோக மேலே வீசியே கட்டி வைத்தாற்
சிதைத்திடு சுரோணி கெர்ப்பஞ் சிக்கென மாறுங் காணே (கூ)

உற்றிடு மருந்தி தற்கு முரைத்தநோய் மாறா தாகில்
பற்றற நனைத்துப் பின்னை பசைந்துமவ் வர்க்கம் பூட்டி
மற்றிது குவிந்த வாறே மறித்துமஞ் செளுகஞ் செய்து
இற்றிடச் சத்தி 5வேரை யிடித்து மேற் கட்ட நன்றே (க0)

**கொம்புவைக்க**

வைத்தவிம் மருந்துக் கெல்லாம் வாடியே கரையா தாகில்
சுத்தியே கழுவிப் பின்னைச் சுருக்கற நனைத்துக் கொண்டு
கொத்தியே கொம்பை விட்டுக் கொடியபுங் கிலையைக் கட்டில்
மற்றுமா றாதி ருக்குஞ் சுரோணித மாறு மன்றே (கக)

**குடிநீர்**

கருக்குவாய் வேருஞ் சுக்குக் கரியகாக் கொவ்வை வேரும்
பருத்தசா ரடையின் வேரும் பரியதோர் கான்றை வேரும்
தெரித்தநன் முறையி டித்துச் சேர்த்திடு நாழி நீரில்
எரித்துழக் காக்கிக் கொள்ளி லேகுமே சுரோணி தந்தான் (கர்)

கரியசூரை முன்னைவேர் கழற்ப ருப்பு வேருமே
பரியசார டையதுள்ளி பதித்த வீஞ்சின் வேருடன் கஞ்சு
உரியநாழி நீரிலிட் டுகந் துழக்க தானபின்
தரியுமீத ருந்திடிற் றள்ளுமே சுரோணிதம் (கக)

5சத்திவேர் - சத்திச்சாரணைவேர்.

## எண்ணெய்

உற்றதொரு கள்ளியிலைச் சாற்றி னோடே
யுவந்தகழ லெருக்கலையிற் சாறு தானும்
குற்றமறும் வெள்ளை யுள்ளி யுத்த மாணி
கொள்ளுமிவை சாறெள்ளி லெண்ணெ யோடு
முற்றவிவை யளவியொரு காண்டத் திட்டு
முதுசிவதை வேரரைத்துக் கலக்கி யின்னும்
வெற்றிபெறு மிந்துப்பு நிறையோ ரெட்டும்
வெண்கார மொருபத்தும் விரவிக் காய்ச்சே (கச)

உ்ரியபதந் தனில்வடித்துக் கரண்டி யெண்ணெ
யுட்கொள்ளச் சுரோணி கெர்ப்ப வாயு வோடு
மருவுபழ மலமசற்று முதரம் விம்மி
வருத்திமிக மேன்மூச்சாய்க் குத்துண் டாகி
இருமியுள்ளே யடசிமலங் கழியா தாகி
லெண்ணெய்நெய்யா லொற்றிமிகு மொழுக்கு மாற்றிக்
கருதியுப்பும் பழப்புளியு மரைத்துக் கொண்டு
காட்டுசா ரடைவெரிற் பூசிப் பின்னர் (கரு)

சுற்றியே யபான வாயிற் சூழ்ந்துநா லங்கு லத்திற்
பற்றியங் குலிசை செய்யப் பழமலங் கழிந்து போகும்
மற்றது கழிந்த பின்னர் மன்னுகி ழுதரந் தன்னில்
உற்ற வெள்ளாம ணக்கு முறுதியா யரைத்துப் பூசி (ககூ)

பூமத்தி னிலையை வாட்டிப் பொருத்தமே லிட்டு வைத்துக்
காமுற்ற சுக்குங் கூட்டிக் காய்ந்தநீ ருள்ளே கொள்ளத்
தாமுற்ற மிளகு சாறு சார்புனற் பாகங் கஞ்சி
ஏமுற்ற வேழு நாளு மிப்படி யுணவு கொள்ளே (கஎ)

சுண்டிநீர் காய்ந்து கொண்டாற் சுகம்பெறச் செரியா தாகில்
மண்டுநீர் கொள்ளுச் சாற்றின் மாக்குளத் துள்ளி விட்டுக்
கொண்டிடு மற்றைக் கற்றைக் குணவிது வாக நீயும்
பண்டியுண் மற்றை நாளிற் பசிக்குமே லுணவு கொள்ளே (கஅ)

பசிபற்று நிற்கு மாகிற் பண்ணுணாக் குறிஞ்சா கத்தை
நசப்புற வரிந்து நாழி நீரினிற் காய்ந்து ழக்சாய்
வசப்பெறு மோதஞ் சுக்கு வண்கடு குள்ளி யுப்பு
மசர்ப்பற வரைத்துக் காய்ச்சி மறுபடி காய்ச்சிக் கொள்ளே (கசூ)

கொண்டொரு சாம மற்றாற் கொண்டசா றதுதான் சென்று
பண்டியுள் ளுழலும் வண்ணம் பசிக்குநீ மிளகுச் சாறு
மண்டியிங் கேழு நாளு மருவியிப் படியே செய்து
சுண்டிநீர் காய்ந்து கொண்டு சுகம்பெறக் குடிக்க நன்றே (ர்0)

### நாவல் நெய்

நாவன் மரத்திற் பட்டைவெட்டி நலமாய்ப் பலங்க ளொருமுப்பா
னன்றா யிடித்துப் பதக்குநீர் நாலொன் றாக வடித்ததற்பின்
ஆவி னறுநெய் யிருநாழி யதனோ டளவி நாகம்பூ
வாத்தி தனிற்பூ வரட்சுண்டி யருமா தளையின் பிஞ்சு விளா

மேவும் பிஞ்சு தற்கொல மேல மோமங் கருஞ்சீரம்
விளம்பு நாவ றனில்வித்து மிசைபே ரீஞ்சின் சனியதுவும்
தாவுங் கண்ட சர்க்கரையுந் தகுகொட் டியின்றன் கிழங்குடனே
சாரு மிலந்தைப் பட்டை முத்தத் தருகு தத்தின் பால்கூட்டே ()

கூட்டும் பங்கம் பாளையின்வேர் குடசப் பாலை தனிற்பட்டை
கூரக் கமழ்சாம் பிராணியினை குறையா திரண்டு கழஞ்சாக
நாட்டி யிடித்துப் பொடிதூவி நலஞ்சேர் மெழுகு பதத்திறுத்து
நவிலுங் கரண்டி நாற்பதுநா ணல்க வயிற்றுப் புண்ணுடனே
வாட்டும் வெள்ளை பெரும்பாடு மாறாக் கெர்ப்ப விற்புருதி
வலிக்குங் கெர்ப்ப வாயுமுதல் வகையா மிரத்த பித்தமதும்
தீட்டு மெலும்பை யுருக்குலதுந் தீராக் கிராணி யதிசாரஞ்
செப்பு நோய்க ளவைநீங்கித் தேறுமுடம்புஞ் சேயிளையே
(ர்ர)

**நாவலெண்ணெய்**

நாவலிற் பட்டை சீந்தி னற்றண்டு பொன்னாங் காணி
தாவறு சமல மூலந் தகுநெல்லிக் காய்க ரும்பு
மேவுபூ சினிக்காய் பேயன் மிகுவாழைக் கிழங்கி தெல்லாம்
ஓவறச் சாறுநாழி யுடன்பசுப் பாலு நாழி (ர்கூ)

தூணிநீர் தனிற்க லந்து சொல்லுநா லொன்றாய்க் காய்ச்சி
வேணுநல் லெண்ணெய் நாழி விட்டுநா ளைந்து சென்றால்
மாணுறு கோட்டந் தேவ தாருமஞ் சிட்டி மாஞ்சில்
காணுறு மதுர மத்தித் திப்பிலி விடயங் 1கற்கம் (ர்ச)

சந்தனஞ் சிறுநா கம்பூத் துவர்ச்சிகை 2கல்லா ரத்தின்
கந்தமுப் பலைநல் லேலல மிலவங்கங் காட்டு பிச்சிக்
கொந்துறு மலர்வெட் பாலை சவ்ர்க்காரங் கூறு மிச்சின்
வந்தவேர் விளாம்ப ழத்திற் சதைவகை கழஞ்சொவ் வொன்றே
(ர்ரு)

இடித்தரைத் ததிற்க லக்கி யெரித்துநற் பதந்தப் பாமல்
வடித்தொரு கரண்டி யுண்டு மருவுபத் தியத்தைக் காக்க
அடுத்திடு சுரோணி கெர்ப்ப வாயுவே யாதி யாகத்
தொடுத்திடுகெர்ப்பநோய்கடொலைந்திடுமென்றார்முன்னோர் (ர்சு)

1 கற்கம் - இலுப்பைப்பூ. 2கல்லாசம் - செங்கழுநீர்க்கிழங்கு.

### சுரத்தின் மேல் கெர்ப்பரோகக் குணம்

நீறுஞ் சுரமா யுடம்புலரு நீருஞ் சிவக்கு மடிவயிற்றில்
ஊறு மிகவே கறைபடும்போ துடனே நீரு மொடுவாகும்
தேறுங் கருவை யழிப்பிக்குந் தினமே காந்தன் மிகும்பொருமும்
கூறுஞ் சோரி யிலதாகுங் கொடிய சுரத்தின் குணமாமே (ர்எ)

### ங-கெர்ப்பசூலையின் குணம்

பிள்ளைப் பெற்ற வுதரமதிற் பெருகுஞ் சோரி போகாதாய்
உள்ளே திரளு முலம்போல வூதும் வாயுச் சூரையதாய்
வெள்ளை வீழு மொடுப்பட்டு மிகவு மழிக்குங் கெர்ப்பமதைக்
தள்ளு முடம்பு தான்விம்முஞ் சாற்றுங் குணத்தைத் தானறியே
(ர்அ)

திரண்டுகீழ் வயிற்றிற் றோன்றிச் சிக்கிநின் றிரத்தம் வீழ்ந்து
பிரண்டுதா னுதர மெங்கும் பிள்ளைபோ லாக வூரும்
அருண்டுதா னழுக்க தானா லதனுடன் வலியுந் தோன்றும்
உருண்டுங் கெர்ப்ப சூலந் தானென வுரைக்கலாமே (ர்கூ)

வஞ்சனைக் குறைக ளாலு மருத்தீடு தன்னி னாலும்
ஒஞ்சிய காய வெக்கை யுறுதிசெய் தெண்டிப் பாலும்
அஞ்சவே பிள்ளைப் பேற்றி லவதரித் திரத்தத் தாலும்
கெஞ்சவே கெர்ப்ப சூலை கெடுக்குமா மிரத்த ரோகம் (கூ0)

திரண்டுகீழ் வயிற்றைப் பற்றிச் சிக்கிநின் றிரத்தம் வீழ்ந்து
புரண்டுதான் வலிக்கு மாகிற் பொல்லாத கெர்ப்ப சூலை
வரண்டுமே வெளுத்து வற்றி மயங்கிடக் குருதி சோரில்
உருண்டிடா விரத்த ரோக முறுதியா யுரைக்க லாமே (கூச)

## சிகிச்சை

### அக்கினி குமாரன் குளிகை

சூதங் கெந்தக மரிதாரஞ் சொன்முக் கடுகு நேர்வாளம்
பேத மறவே வெண்காரம் பெருகச் சமமாய்க் கரிசாலை
ஓதுஞ் சாற்றி லரைத்துண்டை யுரட்டிக் குன்றி யளவாகக்
கோதின் மிளகு கஷாயத்திற் கொடுக்கக் கெர்ப்ப சூலைவிடும் (கூ0)

### புனுகு நெய்

பச்சைப் புனுகு கழஞ்சொன்று பகரு மஞ்சள் பலமுக்கால்
இச்சை யிதர மூன்றுகழஞ் சிணங்குங் கடுக்காய் நீர்கெடுத்துக்
கொச்சைக் கொடுவே லிருவேலி கொள்ளும் வேரோர் முக்கழஞ்சு
நச்சுஞ் சாரணை நாலுபிடி நசுக்கிச் சாறு வடித்துவிடே (கூகூ)

விட்ட கஷாயந் தனிற்பசுநெய் விரவிப் பதத்தில் வேகவிட்டு
முட்ட வடித்து நெய்யருந்தின் முதிருங் கெர்ப்ப சூலையுடன்
இட்டவிரத்த சூலையது மெதிருஞ் சூரன் றனைவடிவெல்
தொட்டே யெறிந்த குருபரனார் தூய வருளாற் றொலைந்திடுமே
(கூச)

### அக்கினி குமார பற்பம்

இருசீரகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்கெந்தகம், இந்துப்பு, பொரிகாரம், அரிதாரம், கடுகுரோகணி, அரபொடி, துத்தம், துரிசு, நேர்வாளம், திரிகடுகு, குக்கில், பெருங்காயம், தேவதாரு, மிளகு, இரசம், வகை-கழஞ்சு-க. நிருவிஷம், வெள்ளைப்பாஷாணம் வகை-கழஞ்சு-இ. தூதுவளை, அமுக்கிராய், கொடுவேலி, பிரண்டை, சாரணை, கறுத்தப் பூக்கொடி இவை வேர். நொச்சிச் சாறு, பிரண்டைச்சாறு சமன் கொண்டு அதிற் சரக்கும் வேரும் வெவ்வேறாக அவித்துலர்த்திச் சூரணம் செய்யவும். நோயின் பெலனும், உடம்பின் இயல்பும் அறிந்து ஏற்ற அளவில் தேனிலாயினும், பனங்கட்டியிலாயினுங் கொடுக்க இரத்த சூலை,

கெர்ப்பசூலை தீரும். இந்த மருந்திற்கு இன்னும் அனேகநோய்கள் தீரும். குணமும் அனுபானமும் கண்டு கொடுக்கவும். எருக்கம்வேர்ச்சாறு-உழக்கு, கோசலம்-உழக்கு, கையாந்தகரைச் சாறு-நாழி, பிரண்டைச் சாறு-நாழி இவை திரளக் காய்ச்சி அதுவும் பனங்கட்டியும் பற்பமும் கூட்டிக் கொடுக்க நவசுரமும் வேறு பல நோய்களும் தீரும்.

### காயம்

கொற்றா னெருக்குவாய் நிலவாகை நிம்பங்
கொடிக்கழ லிலைக்கள்ளி வான்கொன்றை யோடு
சொற்பாவு நிர்க்குண்டி காற்றோட்டி கான்றை
சொலுமுத்த மாகாணி யதுமா விலங்கை
பிற்றாவு பாவட்டை நல்வேரு மின்னும்
பெருகுசா றணைவேரு மொருபிடி வகைக்கே
பிற்பாடு தூளாக வேநாளி கேரப்
பெட்புற்ற துருவலிற் பிட்டா யவித்தே (கூரு)

சாறு பிழிந்து சட்டி யிட்டுச் சாற்றும் விடய மிருசீரம்
கூறுங் கன்னா ரசமோதங் கொடிய வாள நறுங்காயம்
தேறும் பலைமுன் றுள்ளிதிரி கடுகுமல்லி கடுரோணி
சீறுஞ் சரக்கை யிடித்தளவித் திரளக் காய்ச்சி யதற்பின்னை (கூசா)

கள்ளிப்பா லதனி னோடு காட்டிய வேரண் டெண்ணெய்
உள்ளுறவிட்டுக் காய்ச்சி யுற்றநற் பதத்தெடுத்துக்
கொள்ளவே யுதரந் தன்னிற் கொண்டிடு கொப்ப சூலை
அள்ளிலை வேலாற் சூரை பட்டவ னருளாற் போமே (கூஎ)

### சூலையினத்துள்

### இரத்தசூலையின் குணம்

செப்புங் கருப்பக் குழியதனிற் செளிம்போ டிரத்தந் தான்கூடி
ஒப்பத் திரண்டு கட்டுண்டே யுறலாற் றீட்டு மறிபட்டுக்
கெர்ப்பந் தரிக்கு மதுபோலக் கிளருங் குறிக டாங்கொண்டே
இப்போ பிள்ளை போலிருக்கு மியல்பை நோக்கி யுணர்வீரே

(கூஅ)

காணு முலையிற் பாலுமுண்டாங் கனத்து வயிற்றில் மயிரொழுக்கம்
பேணு முலைக்கண் டான்கறுத்துப் பிறகு வயிறு தான்வீங்கும்
தோணுந் திங்க ளானதொறுஞ் சுகமாம் பிள்ளை போலிருக்கும்
காணும் பெரிய வைத்தியர்கள் கண்டே யாராய்ந் தறிதனன்றே

(கூ..)

செப்பிய வாண்டு சென்றாற் சேர்ந்தது பிள்ளை யல்ல
ஒப்புறு வியாதி யென்றே புணர்கவென் றுரைத்தார் முன்னம்
அப்புறு குடகே போல வழுக்கியே கியலும் வீழும்
தப்புள விரதத மெல்லாஞ் சார்சிய னாற்ற நாறும் (ச0)

### சிகிச்சை

### குளிகை

நல்லோர் விரும்பும் பெருங்குரும்பை நவில்சா ரடைவேர் கொடுவேலி
சொல்லா லெருக்கம் பால்கள்ளித் யிந்ருங் கருவே லிலையுடனே
எல்லோர் விரும்புஞ் சாதிக்கா யிந்துப் பிருசீர் வரம்புள்ளி
வல்லீ ரோம மிரண்டுமுடன் மருவி யிவையோர் கழஞ்சு கொள்ளே ()

மருவி யிவையோர் கழஞ்சு கொண்டு வகையாங் கடுகுப் பொடியுடனே
திருவே யெள்ளிற் புண்ணக்குத் திகையா திதற்குச் சரிகூட்டி
அரையீர் சுண்டைக் காயினள வந்தி விடிந்து நல்லெண்ணெய்
உரமாய்த் தோய்த்துத் தின்பீரா லோடு மிரத்த சூலையதே (சர்)

செய்யுந் திங்கள் பலகாலிற் சேரும் பிள்ளை யல்லவென்று
வையம் புகலுஞ் சூலையது மாறும் படிக்கு மருந்து செய்யில்
நையும் பழைய வரிகிதனை நன்றா யெடுத்துச் சோருக்கி
நெய்யி லுள்ளி தான்பொரித்து நெய்வாகத் துச்சோ றுண்பீரே (சகூ)

### நெய்

கடுக்காய் நெல்லி தான்றிக்காய் கனத்த மிளகு திப்பிலியும்
முடுக்காஞ் சுக்கு விழாலரிசி முதிய மல்லி கொடுவேலி
எடுக்குஞ் சரக்கு செவ்வியமூ மிசைந்த கழஞ்சு மூன்றாக்கித்
தொடுக்கும் பசுப்பால் வார்த்தரைத்துத் துய்ய நெய்யும் பசுப்பாலும்

பாலு நெய்யுந் தான்விட்டுப் பதத்தில் வடித்தே யுட்கொள்ளும்
கால மந்தி தினமானங் காசி னிடைதான் மூன்று கொள்ள
மேலு மிரத்த சூலையது விரைந்து பற்றி யோடிவிடும்
ஆல முண்ட கண்டர்திரு வருண்முன் மாயை யதுபோலாம் (சரு)

### சிகிச்சை

### வேலம்பட்டையெண்ணெய்

உற்றவெள்வேற் பட்டைபல மிருபானான்கு
முகந்திடித்து முக்குறுணி நீரிலிட்டே
வற்றியது நாலொன்றாய்க் காய்ந்த பின்னே
வடிகட்டி யெள்ளெண்ணெ யேரசண் டத்தின்
சொற்றவெண்ணெய் வெள்ளாட்டுப் பால்வ கைக்குச்
சோராம லொருநாழி வெள்வெண் காயம்
மற்றுமந்நாய் வேளையினவே ரதனினோடு
மருவுவெள்ளைச் சாரடைவேர் பலம்வ கைக்கே (சகூ)

1காட்டெருமைப் பாலைந்து கழஞ்சு கூட்டிக்
கரைத்தெரித்து மெழுகுபதந் தனில்வ டித்து
நாட்டியிரு காசினிடை யுள்ளே கொண்டு
நவிலுப்புப் புளியகற்றக் கெர்ப்ப சூலை
தீட்டுமறி பட்டிருக்கு மிரத்த சூலை
சேர்கெர்ப்ப விற்புருதி கெர்ப்ப வாயு
வாட்டடங் மடமானே தீரும் வேதம்
வகுத்தவுண்மை மூன்றுபிறை தொடர்ந்து கொள்ளே
(ச...)

**வேலம்பட்டையெண்ணெய்-உ**

தணியா விரத்த சூலைக்குச் சாரும் வெள்வே லந்தோலை
நுணிதாய் நருக்கிப் பொடியிட்டு நூறு கழஞ்சு நீர்விட்டு
அணிதீக் காய்ந்து நாலொன்றா மளவில் வடித்த நீரதனில்
மணித்தக் காளி நாய்வேளை வளர்சா ரணையு முள்ளியுமே (சஅ)

உள்ளி கெசதிப் பிலியோரொன் றொருக ழஞ்சு நாழிக்கங்
கெள்ளோ டாமணக் கெண்ணெ யிரண்டு மோரொன் றொருநாழி
வெள்ளை யாட்டுப் பானாழி விளைந்த கள்ளிப் பால்கழஞ்சு
கொள்ளு மிந்தப் படிகூட்டிக் குறுகக் காய்ச்சி வடித்திடுமே (சகூ)

வடித்த வெண்ணெய் முறைப்படியே மருவி யருந்த மண்டலமும்
துடித்த கெர்ப்ப சூலைகுடற் சுரப்பு வாத முள்ளெரிப்பும்
அடுத்த குருதி யந்தரத்தி லணையும் வாயு வடுத்தகுன்மம்
துடித்த வாதஞ் சுகந்தருநீர் துணிந்தே யருந்தின் சொற்கிளியே(ரு...)

1காட்டெருமைப்பால்-சதுரக்கள்ளிப்பால்

### குடிமருந்து

கிளிசேர் மொழியாய் முருங்கைவித்துக் கிளர நாலு மிளகுகழஞ்
சளவே பொடியிட் டாவின்பா லளவிக் குடிப்பை யாமாகில்
தழல்சேர் வெள்வே லந்தோலைத் தக்ர்த்தே யெண்ணெய் தனிலருந்திக்
களிவேற் றோலுங் குறுவை நெல்லுங் கருதி யருந்துங் காரிகையே ()

காலை யெழுமுள் ளத்திக்காய் கருதி மட்டி நாவற்றோல்
நாலுஞ் சரியா யெள்ளெண்ணெய் நனைத்தே யூட்டி யிடித்தருந்தச்
சூலை யிரத்த ரோகமுடன் சுரக்குங் கெர்ப்ப விற்புருதி
மேலுஞ் சடரி லொருபக்க மிண்டுந் திரட்சி வேரறுமே (ருர்)

### இலைக்கள்ளிக்குழம்பு

ஓதுமிலைக் கள்ளிதனிற் பிழிந்த நற்சா
றுரியதன்பா லாழாக்கு நெய்யு ழக்குக்
தீதகற்றுங் கோமயமோ ருழக்குங் கூட்டிச்
சேர்காயம் வெளுத்தலுடன் வெண்கா யள்ளி
சோதிபெறு மிந்துப்புக் கழஞ்சேர் றொன்று
தூளிட்டுக் குழம்பாகக் காய்ச்சி யுண்ண
வாதைபுரி சூலைமுதற் கெர்ப்ப வாயு
வலிகுன்ம மிவையனைத்து மாறிப் போமே (ருகூ)

### நிதம்பசூலையின்குணம்

தோற்புரை வழிய தாயங் குரித்தது கனத்தே யேறி
நீர்ப்புக வாயுக் கோத்து நிரம்பியே முளைத்தேங் காய்போல்
ஏர்க்கவே சவ்வு முற்றி யிறுகியே திரளு நாளில்
நீர்ப்பொசிந் திருக்கு மென்று நிதம்பமாஞ் சூலைதானே (ருச)

பிள்ளைப் பெற்ற விடந்தன்னிற் பெருக்க யோனி தனில்வாயு
உள்ளே குருதி யடைபட்டே யொதுங்கிப் புடைபட் டொடுவாகி
மெள்ளக் கனத்தோர் பால்வீங்கி வெடித்தே வலியு மாறாது
வள்ளைக் குழலா யிக்குணந்தா னிதம்ப சூலை வகைதானே
(ருரு)

வெய்யதோர் கிரந்தி தன்னான் மேவிய யோனி மீதே
மொய்பனை யதின்காய்த் தோல்போன் மோதியே கனத்துக் கட்டி
நையுநீ ரொடுவு மாறா நத்தையிற் சதைபோ லுந்தும்
உய்விலா நிதம்ப சூலை யாமென வுரைக்க லாமே (ருசு)

### சிகிச்சை

#### புகை

பாம்புக் கண்டங் குத்திருக்கம் புருக்கையின்றிப் பொடிசெய்து
சாம்பல் போக்கித் தழலெடுத்துச் சட்டி தனிலிட் டுரலுள்ளே
ஓம்பு மாணி தனைப்போக்கி யுரன்மே லாளை யுறவிருத்தி
ஆம்பின் பொடியைத் தழல்தூவிப் புகைக்க வலிக ளகன்றிடுமே
(ருஎ)

#### புகை - 2

தக்க வோமம் வெள்ளுள்ளிக் கருகு சர்ப்பக் கண்டமுடன்
சுக்கு மிளகு திப்பிலியுஞ் 1சோமன் வசம்பு குந்திருக்கம்
மிக்க வெளுத்த லவைநுணுக்கி மேவு முடம்பி லெண்ணையிட்டே
ஒக்க விருத்திப் புகையூட்ட யோனிச் சூலை யகன்றிடுமே
(ருஅ)

1சோமன்-பெருங்காயம்
கைப்பு என்றும் பாடம்.

### முடக்கொத்தானெண்ணெய்

அடைவுபெறு முடக்கொற்றான் சாறு நாழி
யதனுடனே குறிஞ்சாநீர் தானு நாழி
இடமுடைய நல்லெண்ணெய் நாழி விட்டே
யிதிற்காயஞ் சீரகங்கார் கோலு மேலம்
திடமுடைய குந்திருக்கஞ் சன்ன சாலை
திரிகடுகு வசம்புள்ளி மதுரங் குப்பை
பொடிபடவே தூவிவடித் துள்ளே கொள்ளப்
பொருயோனி தனிற்சூலை யொடுவும் போமே (ருசு)

### மேனியெண்ணெய்

குப்பைமேனி சமூலம் அரைத்து நல்லெண்ணெயிற் கொதிப்பித்து ஆறுநாள் நக்க நிதம்பசூலை தீரும்.

### பிரமிநெய்

பிரமி தனிற்சா றிருநாழி பேசும் பசுவிற் பானாழி
உரைசேர் நறுநெய் தானாழி யுளுவை யிந்து விழாலரிசி
வரைசே ரமரர் தருமஞ்சள் வசம்பு மிளகு சதகுப்பை
நிரைசேர் கண்ட சர்க்கரையு நெல்லி தனிற்காய் திப்பிலியே
(சுo)

எய வகைக்கு நாற்கழஞ்சா யிடித்துப் பிரமிச் சாற்றரைத்து
நேய முடனே யதிற்கலக்கி நேரா மெழுகு பதம்வடித்துச்
சாய விரண்டு காசளவு தானே நக்க யோனிதனின்
மெய சூலை தீருமென வேதம் வகுத்து விதியாமே (சுக)

### குடிமருந்து

கழற்சிக்கொடி வடக்குவேர் பிடுங்கி வெந்நீரிலரைத்துப் புன்னைக்காயளவு மூன்றுநாட் குடிக்க நிதம்பசூலை தீரும்.

## பூச்சு

வேப்பம்விரை, ஆமணக்கம்விரை சமன் வேப்பிலைச்சாற்றி லரைத்து மேலும் பூசி யோனி வாயில் வைக்க வலி குத்து நீங்கும்.
பெருங்காயம், தேவதாரம், வேப்பம்வயிரம், வேப்பம்விரை, மஞ்சள் இவை மோரிலரைத்துப் பூசவும்.
வெள்ளுள்ளி, ஒட்டறை, விழாலரிசி வட்டுப்பழச் சாற்றிலரைத்துப் பூசவும்.

உள்ளி வசம்பு மெய்வழி நீரிலரைத்து வீக்கத்திற் பூசவும். (மெய்வழி நீரென்பது சிறுநீர்போலும்)

## உள்ளியாமணக்கெண்ணெய்

உள்ளி யிஞ்சி யிந்துவினுப் புற்ற சிவதை 1சீவந்தி
கொள்ளு நிலவா கைசமூலங் குலவு மிளகு திப்பிலியும்
முள்ளே ரண்ட வெண்ணெயுட னுதவு முடக்கொற் றானிலையும்
தள்ளா தொக்கக் கள்ளிப்பா றன்னோ டெரித்துக் கொள்வீரே
(கூர்)

கொள்வீர் குன்மங் குடல்வாதங் கொடிய பிலிகை யட்டிலிகை
உள்ளே திரளு மலக்கட்டி யுடனே பிறந்த சஞ்சீதம்
கொள்ளோர் பக்க சூலைவலி குமிறும் வாயுப் பெருவயிறு
கள்ளார் கூந்தன் மடமானே கழிந்தே போமென் றுரைத்தனரே
®கூ)

## அக்கினிகுமார பற்பம்கொடுக்க அனுபானக் காயம்

பிரண்டைச்சாறு, எருக்கலம்வேர்ச்சாறு, கையாந்தகரைச்சாறு, கோசலம் இவை சமன்கலந்து பிரண்டைவேர், கொடுவேலிவேர், பெருமருந்துவேர், தூதுவளைவேர், சத்திச்சாரணைவேர் சமன் அரைத்துக் கரைத்துக் காயங்காய்ச்சி அதில் அக்கினிகுமார பற்பம் வைத்துக் கொடுக்கவும்.

1 சீவந்தி - சீந்ளல்

**மேற்கூறிய மூவகைக் சூலைகட்கும்**

**இரட்சை**

மாறிலா விரத்த சூலை வளர்கெர்ப்ப சூலை வாயு
ஈறிலா யோனிச் சூலை 1யெனும்வகை தனக்குச் சூடு
வீறினா பிக்குக் கீழு மேலும்பொட் டுச்சூ டாம்பின்
கூறுநா பியின்கீழ் மேண்மற் றிடம்வல மிருபு றத்தும் (கூச)

இருபுறந் தனிலு மும்மூன் றங்குல மிதனுக் கப்பால்
பெருகிட வாழிச் சூடும் பிறைச்சூடு நாரி தன்னில்
உருகவே பொட்டும் 2பஞ்சாக் கினிதயி லந்தா னுள்ளே
பருகுமக் கினிகு மார பற்பமா கிலுங்கொள் வீரே (கூரு)

**செம்முள்ளிநெய்**

**(வயிற்றிற்புண்ணுக்கு)**

கொள்ளுநற் றயில மாகி னேரங்கா சிடைதான் கூட்டு
மெள்ளவே பற்ப மாகில் வெருகடி தேனில் மாந்து
தெள்ளிதாய் வயிற்றிற் புண்ணைத் தீர்க்குநெய் சிவந்த முள்ளி
தள்ளுணா வியங்கு கையாந் தகரைமுண் முருக்குத் தேடே (கூகூ)

தேடுறு 1மங்குச பாதி திகழ்பொடு தலையின் சாறு
கூடவே யொன்றொர் நாழி குலவிய நறுநெய் நாழி
2வாடர லியங்கு தூது வளைதிராய் கிரந்தி நாயன்
சாடிய செங்கத் தாரி சாரணை பிரண்டை வேரே (கூஎ)

1எண்வகை தனக்குஞ்சூடு என்றும் பாடம்

2பஞ்சாக்கினி தயிலம் என்பது 1-ம்பாகம் 23-ம்பக்கத்திற் கண்நாராயண தைலத்தை

1வாழை, 2மரல்

வேரிவை வகைக்கோ ரொன்று விரவுமோர் பிடிவெட் பாலை
சீரக மிரண்டு குப்பை சிறுதேக்குக் கடுகு ரோணி
நேரிய விடயங் கோட்ட நெடியதோர் மதுரங் கைப்பக்
கார்புகா வெளுத்த லோமங் கடுகுசாத் திரமாம் வேதி (கூஅ)

மாசிறு மூலமூன்று கடுகமக்க ராமா யாக்காய்
காசறு தேவ தாரம் வகைக்கோர்கா சிடைக டுக்காய்
பேசினாற் பதுதா னீர வெண்காயம் பலமூன் றித்தைக்
கூசிடா தரைத்து முன்பு கூறிய சாற்றி லிட்டே (கூகூ)

இட்டெரித் தறுநா ளூறி யியல்புடன் வடித்த நெய்யைத்
திட்டமாய் நேரந்நாலு காசிடை தின்பீ ராகில்
துட்டமாம் வயிற்றுப் புண்க டொலையுமுட் கிரந்தி தீரும்
சட்டமாய்ப் புளிய முப்புந் தவிர்த்திடுங் தடங்கண் மானே (எ0)

இரட்சைபுரிந்த விடங்களில் பஞ்சாக்கினித் தயிலமிட்டுப் பின் ஒடு எண்ணெய் துவரெண்ணெய் இட்டுப்புண்ணை யாற்றுக. உள்ளுக்குப்பஞ்சாக்கினித் தயிலமாயினும் அக்கினிக்குமார பற்பமாயினும் ஒரு மண்டலம் அரை மண்டலம் கொடுத்துப் பின் வயிற்ப்புண் தீரும்பொருட்டு மேற்கூறிய நெய் கொடுக் நன்று. இரட்சை புரிந்த நாள் துவங்கி உப்புப்புளி நீக்கிப் பத்தியம் வைக்க.

### ச.கெர்ப்பவாயுவின் குணம்

பொருமு முதரந் தனையடர்த்துப் போத மிகவும் வலியுண்டாய்க்
குருதி கழியில் வலிதீருங் கொள்ளுங் கெர்ப்ப முறவழிக்கும்
வருடி யிடுப்புத் துடையுளையு மயக்கு மலத்தை மிகவிறுக்கும்
பெருகப் பணைக்கு முதரத்திற் பேசுங் கெர்ப்ப வாயுவிதே
(எகூ)

வேரா மிடது பாகத்தின் மிண்டி வலிக்கு மேலேறும்
சாருங் குருதி தணியாது தலையா மெனவே தலைதிமிர்க்கும்
நேரே திரளூ நாபிக்கீழ் நிற்குஞ் சாய்கை யதிற்சாரும்
நாரி கடுக்குஞ் சந்துளையு நலஞ்சே ருதரந் தனில்வலியே (எர்)

### சிகிச்சை

### குடிமருந்து

வலிக்கு மாதர் தெருட்சிதின மாற்றும் புன்கு கடுமிளகு
முலைக்கு மடைவே முற்றல்பழ முடைத்துத் தனபா லுடன்கொடுக்க
விலக்குந் திரட்சி வெடிக்கும்பின் வெடியா தென்னின் மிளகுபழம்
இலைக்கள் ளித்து ரிளநீரி லிட்டே யருந்து மேந்திழையே (எகூ)

### உள்ளியாமணக்கெண்ணெய்

கடுக்காய் மஞ்ச ளித்துப்புக் கடுகோ டுள்ளி வெண்காரம்
அடுத்த வீழி யாமணக்கு மதுவு நிலவா கையின்வேரும்
தொடுத்து மூன்று பலமாக்கித் துலங்க வெரித்தா மணக்கெண்ணெய்
கொடுக்கக் கெர்ப்ப வாயுவிடுங் கூட்டுங் கள்ளிப் பால்கழஞ்சே (எச)

### தேங்காய்நெய்

சொல்லரிய பழத்தேங்காய் நாலு தன்னைத்
துருவியிள நீர்செறித்துப் பிழிந்த பாலை
மெல்லவெரித் தெண்ணெயுடன் கடுகு தானும்
வெவ்வேறாய்ப் பிரிபதத்தில் வெண்கா யுள்ளி
நல்லகராம் புடன்சாதிக் காயோ றொன்று
நவையிலிரு கழஞ்சேல மிலவங் கந்தான்
வல்லகைப்புக களிப்பாக்குத் திருகு கள்ளி
வருமாலிங் குடனிவையோர் கழஞ்சு லாங்கெ (எரு)

வாங்கியந்தப் பாறனைவார்த் தரைத்த டுப்பில்
வைத்ததிடுபா கதிற்புகட்டி யெரித்துக் காய்ச்சித்
தெங்குகடு குடன்முரிந்து சிவந்த போதே
சிறக்கவடி மாதவிடை சேர்நா ணிக்கிப்
பாங்குறநற் காசிடைமுத் தினமுந் தின்று
பாலுடனெய் கிரந்திதவிர் பதார்த்தம் கூட்டில்
ஓங்குகெர்ப்ப வாயுவுடன் சூலைக் கூடு
முருகினிழு மெனமுனிவ ரோதி னாரே (எச)

**சவர்க்காரஎண்ணெய்**

பொரிகாரஞ் சவர்க்காரஞ் சீனக் காரம்
பொருந்தியதோர் வெள்ளுள்ளி யுடனோ ரொன்று
சரியாக விருகழஞ்சி னுடனேர் வாளந்
தானுமொரு பத்துவிரை சுத்தி பண்ணிப்
பரிவான பழத்தேங்காய் துருவும் பூவும்
பரிய நல்ல புனமுருங்கைப் பூவு மொன்றாய்
எரியாகு மடுப்பிலவித் திறக்கிப் பாலா
யிதைப்பிழிந்து முன்மருந்திட் டெரித்துக் காய்ச்சே (எஎ)

காய்ச்சியெண்ணெய் தெளித்துமட வார்க மன்னக்
கருதுகெர்ப்ப ரோகமிவை கெர்ப்ப வாயு
மூச்செதிரே யெடுத்துநிற்கும் வாதங் கெர்ப்ப
முடுகியதோர் சூலையெலா முரிந்தே யோடும்
கூச்சமற வேமுழுக்கு மாறி னோருங்
குடிக்கெண்ணெ யுடனேதான் குலைந்து கெர்ப்பம்
பாய்ச்சிடுநீ ரெனவெளியில் வருமே கண்டீர்
பரிந்துப்பி னுடன்புளிகைப் படவொண் ணாதே (எஅ)

தேங்காய்ப்பூ முருங்கைப்பூ இவற்றுடன் மேற்கூறிய நேர்வாளம் உள்ளி இரண்டையும் கலந்து வேட்டிலவித்து அவிந்தபின் அவ்விரண்டையும் நீக்கி பூவகை இரண்டையும் கசக்கிப் பால்பிழிந்து அதில் உள்ளி வாளமிவற்றோடு மற்றைச்சரக்குகளையும் அரைத்துக் கரைத்துக் காய்ச்சவும்.

## தேங்காய்நெய்-வேறு

தேங்கா யிரண்டு துருவிப்பா றெளியப் பிழிந்தங் கெரித்துவற்றப்
பாங்கா யெண்ணெய் பிரிபதத்திற் 1பாள மிளகு வேர்க்கொம்பு
வாங்காக் கழற்சி விரைநாலு வருமூன்றிரண்டொன் றிவைகழஞ்சாய்
ஆங்கேபொடிசெய்திட்டரைத்தங்கறையும்பதத்தி லிறக்கிவையே()

வைத்தே யெண்ணெய் தனைத்தெளித்து மகளிர் பூத்த வைந்தாநாள்
துய்த்தே யெண்ணெய் மருகுளிரேற் றுடருங் கெர்ப்ப வாயுவகை
குத்துந் தணியுங் குருதியதாய்க் கூடுங் கரைந்து விழும்பேதி
மெத்தக்கழியா தெனிற்கடுகுகலந்துவிழுங்குமெல்லியலே (அ0)

## உள்ளியாமணக்கெண்ணெய்

சொல்லுவெள் ளுள்ளியிரு பதுபலம் பொடுதலை
துலங்குகை யான்றகரையும்
துய்மணித் தக்காளி யுத்தமா காணியொடு
துறுகா லடக்கிநொச்சி
நல்லமுண் முருக்கியங் கொடுசெருப் படிநாய
னவிலுமா டாதோடையு
நற்பீச்சு விளாவினுட னேசிறு குறிஞ்சியிவை
நல்குசா றொன்றோர்நாழி

1டாளம்-நேர்வாளம்

வெல்லுமே ரண்டநெய் யிருநாழி தெங்கதனில்
விரவுகனி யின்பாலதும்
வீறாக நானாழி கோசலமு நானாழி
விரவீர வுள்ளி தனினீர்
மெல்லவிரு நாழியுட னேபுகட் டிப்பின்பு
வேகவைத் திச்சாற்றிலே
விடு1சிவைத் தொகையினோடு கற்கவகை தன்னையும்
விரைவாக நீர்கேளுமே (அக)

தேடுகொடு வேலிசா ரணைபெரு மருந்தினோடு
சிவநிம்ப மமுதவல்லி
சிற்றவரை கொவ்வைகாக் கணமமுக் கிரவுதரை
திகழும்வெள் ளறுகுவேம்பு
நாடுசெங் கத்தாரி யெருக்குமலை தாங்கிவளர்
நற்கிலு கிலுப்பையிவைவேர்
நல்கவொன் றொருபிடி சரக்கின்வகை வெட்பாலை
நவையிறிரி கடுகுமிங்கு

காடுசெறி தேவதா ரங்கடுகு ரோகணி
கருஞ்சீர கங்கார்புகாக்
கம்பியின் பிசினோடு நற்சீர கத்தினொடு
கருதுமொன் றொருகழஞ்சாய்
ஓடுசெறி நேர்வாள முக்கழஞ் சிவையெலா
முரலிலிட் டுறவிடித்தே
யுறுசிவைப் பொடியினுட னொன்றா யரைத்துமுன்
னுறுகஷா யத்திலிட்டே (அர்)

1சிவை-வேர்

இட்டெரித் துக்1காட்டி லெருமையின் பாலுழக்
கிவையெலா மளவிநன்றா
யெரிசெய்து நாலுநா ளூறியே மற்றைநா
ளிதமுடன் வடித்ததயிலம்
துட்டளவு காலையிற் கொண்டுவெந் நீர்பருகு
துயர்செய்பதி னெட்டுவாயு
சொல்லிய கிரந்தியோன் பதுகெர்ப்ப வாயுவகை
தொகைமருவு பன்னிரண்டும்

நட்டமுறு பன்னிரு கரப்பனொன் பதுவீக்க
நவையுள வனைத்துமாறு
நன்றாய பத்தியங் குன்றாம லேதின்று
நற்பசுப் பானெய் கூட்டிச்
சட்டமுட னிப்படிப் பதினெட்டு நாளளவு
தவறா தருந்து வீரேற்
றப்பாது கைகண்ட தயிலமிது வாமென்று
தமிழ்முனிவ னுரைசெய்தானே (அகூ)

**காயம்**

திரிகடுகு, கடுக்காய், சாம்பிராணி, பெருங்காயம், கல்மதம், வெண்காயம், மஞ்சள், குந்திருக்கம், இந்துப்பு, சமன் பொடி செய்து திராய், பாகல், ஆடாதோடை, வேம்பு இவற்றின் இலைச்சாறு சமன்கலந்து காய்ச்சி வற்றிவரும்போது பொடிதூவிக் காயங்காய்ச்சி எண்ணெய் வகையிற் புறப்பத்தியம் முடிந்தபின் கொடுக்கவும்.

1காட்டெருமைப்பால்-சதுரக்கள்ளிப்பால்

## பற்பம்

எண்ணெய் மஞ்சள்-பலம்-ச, வெண்காயுள்ளி-பலம்-ச, இந்துப்பு-பலம்-உ0, ஆண்பனைப்பாளை சுட்டசாம்பல்-பலம்-உ0, பொன்னிறமாய் வறுத்துப் பொடிசெய்து வெருகடிதின்னவும் அழுக்குமாறினவுடன் மஞ்சள் மாக்களிகிண்டி மூன்றுநாள் உண்டுபின் தோல்போக்கி விளங்கின எள்ளு-படி-க, பருத்திப்பருப்புமா ஒருசிறங்கை, செங்கத்தாரிப் பட்டைத்தூள் ஒருசிறங்கை, இடித்து நேரம் ஒரு எலுமிச்சங்காயளவு-ஆறுநாள் தின்னவும்-பின் காந்தபற்பம் உ0-நாள் உப்புப்புளி நீக்கிப் பத்தியமாய்த்தின்னக் கெர்ப்பவாயு முதலியன நீங்கிக் கெர்ப்பந்தரிக்கும்.

## காந்தபற்பம்

ஊசிக்காந்தம், இரசம், அரிதாரம், மனோசிலை, நெல்லிக்கெந்தகம், வகை-பலம்-உ, இருசீரகம், கடுகு, ஏலம், கராம்பு, வசுவாசி, இலவங்கம், நாகம்பூ, சாதிக்காய், குறாசாணி, அதிவிடயம், திரிகடுகு, உலுவா, வகை-பலம்-க, தான்றிக்காய்-க0-கஞ்சாக்கொட்டை-பலம்-இ, அவின்-பலம்-வ, இடித்தரித்து தேனிற்தின்னவும். வயிறுபுண்பட்டிருந்தால்

## களி

உதிரவேங்கைப்பட்டை, அமுக்கிராய்வேர், வேலம்பட்டை, இவை தனித்தனிமாவாக்கி குறுவைநெல்லுமாவுடன் கலந்து களிகிண்டி நல்லெண்ணெயிற் தோய்த்துத்தின்ன குத்து, கொதிப்பு, வயிற்றுப்புண் கழுநீர்போல் தீட்டுப்படுதல் இவைதீரும்.

## சந்திரகாந்த சூரணம்

மங்கையர்க்குச் சூதகத்தில் வந்தெதிரும் வாயுமுதல்
தங்குகெர்ப்ப வாயு தவிருதற்குத் - துங்கமுறு
சந்திர காந்தமெனுந் தக்கதொரு சூரணங்கேள்
கெந்தகநற் சூதங் கிளர்காந்தம் - கொந்துசெறி

கூந்தன் மடமானே கூரு மயப்பொடியும்
போந்தபெருங் காய மிளகுசுக்கு – வாய்ந்தவிவை
முக்கழஞ்சு வெள்ளையுள்ளி முற்பகருஞ் சோம்பிருசீர்
திப்பிலியு மேலந் திகழ்கடுக்காய் - சொற்பெரிய
சோமனுப்பு நற்கடுகு சொல்லுலுவா வோடோமம்
காமர் குலக்காய் வசுவாசி – ஆமினுங்கேள்
சேருமில வங்கப்பூச் சேர்ந்தபட்டை யோடிவைகள்
ஓரொன் றொருகழஞ்சா யுற்றபடி - கூடும்
குமரி மடற்சாறு கொள்ளவொரு நாளாட்
டமருமிஞ்சிச் சாற்றி லதுபோல் - நமைதீரும்
கையானின் சாறொருநா ளாட்டிக் கருத்துடனே
வெய்யிற் படாம னிழலுலர்த்தி –மைதலிரும்
நற்சந் தனமரைத்து நன்றா யுலர்ந்தபின்பு
சொற்சூ ரணத்தி னிடைகலந்து – மற்றினிக்கேள்
பூத்தநா ளைந்திற் புகன்றமுறை பேதிபண்ணிச்
சேர்த்த மருந்துதனைத் தின்னக்கேள் - வாய்த்தபர
ஆனை முகவ னடிபணிந்து சொன்முறையே
தேனில் வெருகடி தூடின்று – மானனையாய்
துய்யநீ ரிற்குளித்துச் சுடுநீரி னிற்றோய்ந்து
செய்யபத் தியங்காக்கத் தீர்நோய்கேள் - மையல்செயும்
கெர்ப்பத்தில் வாயு கிளர்கெர்ப்ப சூலையுடன்
கெர்ப்பசோ ணிதவாயு கேடுசெயும் - கெர்ப்பக்
கிருமிமுதற் றீருமென வாயுண் மறையோர்
உரைசெய் வளமதனையோர் (அச)

## கெப்பவாயுக்குழம்பு

அரபொடி-கழஞ்சு-க0, காந்தம்-கழஞ்சு-கூ, தான்றிக்காய்-கழஞ்சு-ச, பெருங்காயம், வசம்பு, சன்னிநாயன், சுக்கு, உள்ளி, மிளகு,

சவாக்காரம், வசுவாசி, மதுரம், கோட்டம், அக்கறா, நவச்சாரம், பெருங்குரும்பை, மஞ்சள், மல்லி, சந்தனம், சாதிலிங்கம், வகை-கழஞ்சு-உ, திப்பிலி, மனோசிலை, நற்சீரகம், கராம்பு, விழாலரிசி, சீனக்காரம்,கண்டில்வெண்ணெய், வாலுளுவை, நெல்லிக்காய், சிறுதேக்கு, கடுகுரோகணி, வெளுத்தறப்பிசின், சதகுப்பை, அரேணுகம், அத்தித்திப்பிலி, கார்புகா-வகை-கழஞ்சு-க, சாதிக்காய்-கழஞ்சு-து, நெய்தேன்கூட்டிக் குழம்பாக்கிக்கொள்ளக் கெர்ப்பவாயுதீரும். பிரமாணம் உடம்பின் இயல்பறிந்து கொள்ளவும்.

## நறுவிலிநெய்

நறுவிலிப்பட்டை, நாவற்பட்டை, பப்பரப்புளியிற்பட்டை, வகை-பலம்-உ0, அத்திப்பட்டை, ஆத்திப்பட்டை, ஓதியம்பட்டை, வாழைப்பூ, வகை-பலம்-ரு, இடித்து எட்டுமரக்கால் தண்ணீர்வைத்து நாலொன்றாயக்காய்ச்சிவடித்து நறுநெய், இருநாழி, நன்னாரி, இம்பூறல்.முத்தறகாசு, தென்னம்பாளை, மலைதாங்கிவேர், கொட்டிக்கிழங்கு, கிளுவங்கொட்டை, புளியங்கொட்டைத்தோல், வெட்பூலாவேர், மாதளம்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, ஆத்திப்பூ, வில்வம்பழம், மாங்கொட்டை, கொடிக்கழற்சிப்பருப்பு, இலந்தைத்தம்பலம், நாவற்கொட்டை, மாம்பால், மாந்துளிர், நாவற்றுளிர், விடற்தற்துளிர், துவரந்துளிர், சுக்கு, ஓமம், இருசீரகம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கோட்டம், கடுக்காய், காசுக்கட்டி, இந்துப்பு, அதிவிடயம், திப்பிலி, பேரிஞ்சு, முந்திரிகை-வகை-கழஞ்சு-கூ, மேற்படி கஷாயநீர் விட்டரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடிக்கவும். நேரம் கரண்டி நெய்தின்னக் கெர்ப்பவாயு முதலியனவும் பெரும்பாடு, இரத்தபித்தம், அதிசாரம் இவையும் தீரும். இந்தநெய்க்கு அதிவிடயமும் இலவம்பிசினும் பொடிசெய்து நேரம் அரைக்காற்கழஞ்சு மேற்பொடி தூவித்தின்னவும். கம்பிப்பிசி னென்றும் பாடம்.

### காயம்

பெருங்காயம், ஓமம், நற்சீரகம், மல்லி, உலுவா, வகை-கழஞ்சு-ர், வெள்ளுள்ளிப்பருப்பு ஒருசிறங்கை பூனைக்கழற்சிவித்து ஓருள்ளிப்பருப்பின்முகிழ் ஒருசிறங்கை இவையெல்லாம் பொட்டளியில் கட்டிவைத்துக்கொள்ளவும். ஒருபுதுப்பானையில் தண்ணீர்விட்டு கம்பிளியினால் வேடுகட்டி வேட்டின்மேல் முருங்கையிலையும் முடக்கொற்றானிலையும் பரப்பி அதன்மேல் பொட்டளியை வைத்து பழத்தேங்காய்ப்பூவினால் மூடிச் செம்மி மேலே சட்டியினால்மூடி அவிக்கவும். அவிந்தபின் எடுத்து இலையையும் தேங்காய்ப் பூவையும் வெவ்வேறாய்ப்பிழிந்து பின் ஒன்றாய்க்கலந்து மேற்படி பொட்டளியிற் சரக்கரைத்துக் கரைத்துக்காய்ச்சி எண்ணெய்பிரியும் பதத்திலிறக்கித் தான்றிக்காயளவு உட்கொள்ள கெர்ப்பவாயு, வயிற்றிற்புண், கிருமி வெட்டையினால்லுண்டாகும் புண் இவையெல்லாம் தீரும் பத்தியமாய்க் கொள்ள.

14-ம் பக்கத்திற்கூறிய இலைக்கள்ளிக்குழம்பு இவ்விடத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆயின் இலைக்கள்ளிப்பால் அங்கு ஆழாக்கு என்றும், இதில் உழக்கு என்றும் வேறுபாடு உண்டு.

### கெர்ப்பவாயுப்பேதி

விளக்கெண்ணெய்-படி-க, நன்றாகமுற்றிப் பழுத்தபேய்க்கு மட்டிக்காய் வரகுவைக்கலிற்சுட்டுப் பிழிந்தசாறு-படி-க, ஈருள்ளிச்சாறு, படிக, பசுப்பால்-படி-க, எலுமிச்சம்புளி-படி-க, கலந்து பதத்தில் குழம்பாகக் காய்ச்சி வைத்துக்கொள்ளவும் கரண்டியளவு தின்றுவெந்நீர்க்குடிக்கப் பேதியாகும் கெர்ப்பவாயு, மலட்டுவலி முதலியன தீரும்.

### கெர்ப்பவாய்விற் துவாலைக்கட்டுக்குக் காயம்

ஆடாதோடைவேர், பாவட்டைவேர், கற்றாழைக்கிழங்கு,

சான்றைவேர், உத்தமாகாணிவேர், பூனைக்கழற்சிவேர், மேற்படி விதைப்பருப்பு, சடற்சில்லுப்பருப்பு, வகைக்குப்-பலம்-இ, இடித்தவித்துப் பிழிந்தநீரில் திரிகடுகு, இருசீரகம், உள்ளி, ஓமம், சதகுப்பை, அரத்தை, சேங்கொட்டை, பெருங்காயம், இந்துப்பு, வாளம் - வகை,கழஞ்சு-உ, அரைத்துக்கரைத்துக் காயங்காய்ச்சி மூன்றுநேரங்கொள்ள கெர்ப்பவாயுமறித்ததுவாலையுடைபடும். உப்புப்புளிதவிரவும்.

## மேற்படிவேப்பிலைக்காயம்

வேப்பிலை முற்றலும் துளிரும்தள்ளி நல்லதாய் எட்டுப்படி எடுத்து-கசூ படி தண்ணீர் எட்டொன்றாய் வற்றவைத்து பிழந்து வடிகட்டி மாவிலங்கை, வட்டுக்கத்தரி, தூதுவளை, நன்னாரி, காற்றோட்டி, பெருமருந்து, இன்பூறல், நொச்சி, இவைவேர்-வகை-கழஞ்சு-கஇ, திரிகடுகு, இருசீரகம், ஏலம், இலவங்கம், ஓமம், பொரிகாரம்,சீனக்காரம், மஞ்சள், உலுவா, மல்லி, வெளுத்தற்பிசின், பெருங்காயம்,-வகை-கழஞ்சு-க, அரைத்துக்கரைத்துக் காயங்காய்ச்சிப் பத்தியத்துடன் பன்னிரண்டுநாள் காலைமாலை தின்னத் துவாலையுடைக்கும் அதனால்வந்த ரோகமெல்லாம் தீரும்.

## வேப்பிலைக்காயம்-உ

வெள்ளையுள்ளி பொரிகாரம் வசம்பு துத்த
மிகுமதுரம் கொத்தமல்லி கடுக்காய் நற்சீர்
தள்ளரிய திப்பிலியா மலகக் கெந்தி
தக்ககருஞ் சீரகமுங் கழஞ்சொவ் வொன்று
கள்ளவிழ்வேப் பிலைதுவைத்துப் பிழிந்து சாறுங்
காட்டுபிராய் மரப்பட்டை யதனிற் சாறும்
உள்ளபடி காற்கொத்து வகைக்குக் கூட்டி
யுற்றசா ரடையின்வே ரரைத்துக் கேண்மின் (அரு)

அரைத்தெடுத்துப் பாக்களவு கலக்கி மற்று
மறைந்தசரக் கெலாமரைத்துக் காயங் காய்ச்சி
உரைத்தபடி நாற்கழஞ்சு கொள்ளக் கெர்ப்ப
முறுவாய்விற் சட்டுடைக்கு மிகுந்து தானால்
தெரித்தமுறை யாவரங்காய் தின்னத் தீருந்
திரிகளுக்கு வருமுதர வாய்வுந் தீரும்
பருத்ததொந்தி யைங்கரனுக் கிளைய வேலோன்
பதயுகளம் பணிந்துமருந் தருந்த நன்றே (அசா)

## வெள்ளறுகுப் பற்பம்

வெள்ளறுகு சமூலமுட னாட்டின் பாலு
மிகுந்தகருஞ் சீரகமு மிளகு தானும்
தள்ளரத்தை மஞ்சண்மர மஞ்ச ளெல்லாந்
தக்கபற்ப மாயிடித்துத் தினபீராயின்
விள்ளிரத்தந் துவாலையுடைத் தாறா யோடு
மிகுந்துவரி லாவரங்காய் தின்னத் தீரும்
கொள்ளுமிரு பது நாட்க ளந்தி சந்தி
கூறுவென்னீ ரனுபானங் கொடுக்க நன்றே (அஎ)

## கர்ப்பூரக்குளிகை

வசுவாசி கராம்பினொடு சாதிக்காய் கெந்தம்
வாலுளுவை சூடன்கர்ப் பூரமதுந் துரிசும்
கசிவான விந்துப்புத் திப்பிலியக் கராவுங்
கரும்பினது பாகுதுத்தங் கழஞ்சிவையோ ரொன்று
விசுவாக மூள1வரத்த மூன்றுதுளாய்ச் சாறு
விட்டரைத்துச் சூரைக்கா யளவுருட்டிக் கொள்ளின்
பசுமாவிற் போட்டுவைத்து நேரமொன்று கொள்ளப்
படுங்கெர்ப்ப வாயுகுடல் வாதம்புண் கடுப்பும் (அஅ)

## வில்வம்வேர்க்களி

வில்வம், பெருமருந்து, கான்றை, நொச்சி, முருங்கை, எருக்கலை, நன்னாரி-இவை வேர் மாதளங்காய்த்தோல், கொறுக்காய்ப்புளி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வசம்பு, சுக்கு, மிளகு, உள்ளி, கோட்டம், மஞ்சள்-இவை-வகைக்கு-பலம்-க, நற்சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம், குறாசாணி, கடுகுரோகணி, திப்பிலிமூலம், சித்தரத்தை, அக்கறா, அமுக்கிராய்க்கிழங்கு, சாரணைவேர், தூதுவளைவேர்-இவை சமன் கூட்டியரைத்துத் தோடங்காய்ப்புளியிற் களிகிண்டித் தான்றிக்காயளவு காலை மாலை தின்னவும். உப்புப்புளி கிரந்திப்பண்டம் தவிர்த்துப் பத்தியம் கொள்க கெர்ப்பவாயு, கெர்ப்பமுடக்கம், முதலிய கெர்ப்பரோகங்களும் கை காலெரிவு உளைவ முதலியனவும் தீரும்.

## காய உண்டை

கொட்டைப்பாக்கு-க00, இதைச்சொத்தை பூச்சிமுதலிய பழுதுகளின்றித்தெரிந்தெடுத்துக்கண்ட நிறைக்கு இருபங்கு பறங்கிக்கிழங்கு-இரண்டும் முழுப்படியே ஒருமரக்கால் தண்ணீரில் ஒருஇரவு முழுவதும் ஊறவைத்து விடிந்தபின் எடுத்து மெலிதாகச்சீவி முன் ஊறினதண்ணீரிற் போட்டு வற்றக்காய்ச்சிச் சாந்துபோல் அரைத்துக்கொண்டு அதில், நல்லெண்ணெயும் நெய்யும் செல்லுமளவு கூட்டி இருசீரகம், உள்ளி, வசம்பு, பெருங்காயம், வசுவாசி, சாதிக்காய், காசுக்கட்டி, திரிகடுகு, ஓமம்-வகை-கழஞ்சு-க, அரைத்துக் கூட்டி அனிச்சை, கசட்டை, அத்தி, பூலா, வெள்வேல், கருவேல், இவற்றின்பட்டையும் தென்னம்பாளையிளமணியும் தென்னங்குரும்பையும் கூட்டித்துவைத்து நன்றாயரைத்து நாழி தண்ணீரிற்கரைத்துக் காய்ச்சி இறுகினபதத்தில் முன்மருந்தும் சேர்த்துப்பிசைந்து காய்ச்சிப் பதத்தில் எலுமிச்சங்காய்ப்பிரமாணம் உண்டைபண்ணித் தின்னவும். கைப்புப் புளிப்பு நீக்கிப் பத்தியம் கொள்ளக் கெர்ப்பவாய்வு. கச-ம் பிரமேகம்-உக-ம்-தீரும்.

1-அரத்தம், சாதிலிங்கம், குங்குமப்பூ, என்பாருமுளர்

காலையனிச்சை என்று எல்லாப்பிரதியிலு மிருக்கின்றது.

### விரேசன எண்ணெய்

கோங்கார் முகிழ்முலைக் கோதைநல் லாய்கேள்
தேங்கா யிரண்டு சிறக்கத் துருவிச்
சுத்திசெய் வாளஞ் சுகம்பெற நூறு
உத்தம மான வொளிர்பெருங் காயம்
வெண்கா ரத்துடன் வெண்சவர்க் காரம்
கண்கா ணித்தோர் கழஞ்சிரண் டாக
இத்தனை யெல்லா மியல்பெற வரைத்துப்
பற்றிய தேங்காய்த் துருவலிற் பிசறிப்
பாண்டத் திட்டுப் பழந்துகி லதனால்
வேண்டியே வேடு விரைவுடன் கட்டித்
தோயமு நாழி சுகம்பெற விட்டுக்
காயவே யடுப்பிற் கசடற வைத்து
வளம்பெறமூடி
மிண்டிய விறகால் விரகுட னெரித்து
நற்பதம் பார்த்துப் பொற்புற விறக்கி
உரலிட் டிடித்தே யூறுவராமற்
பாலைப் பிழிந்து பதத்தினிற் காய்ச்சி
மேலே பிரிந்து மிதந்திடு மெண்ணெய்
தன்னை யெடுத்துச் சட்டியில் விட்டுப்
பதந்தப் பாமற் பக்குவ மறிந்து
காய்ச்சிய வெண்ணெய் காசிடை கொள்ள
மூச்செறி வீக்க முதிர்ந்திடு பித்தம்
கெர்ப்ப வாயுவுங் கெர்ப்ப ரோகமும்
உற்பன கெர்ப்பத் துள்வரு கிருமியும்
கெர்ப்ப சுரோணியுங் கெர்ப்பவிற் புருதியும்
கெர்ப்ப சூரையுங் கெர்ப்பவஞ் சனைகளும்
நீராம்ப லோடு நிறைபெரு வயிறும்

சூலை வாதமுந் தொடர்ந்திடு சோகையும்
வேலெறிந் தசுரை வீட்டித் தேவர்
சிறைதவிர்த் தருளுஞ் தேவசே னாதிபதி
தன்னரு ளாலே தவிர்ந்திடும் வெந்நீர்
உண்ணுக பத்திய முப்பும் புளியும்
நீக்கிநற் பசுப்பா னேர்பெறக் கூட்டவென்
றகத்திய முனிவ னருளின்
வகுத்துரை செய்த வாகடங் கூறுமே (அகூ)

## மேற்படி உள்ளிக்குழம்பு

முருங்கைப்பூ-படி-க, உத்தமாகாணிப்பூ-படி-க, நேர்வாளம்-கூ0, இவற்றை இரண்டு பழத்தேங்காய்ப்பூவுடன் கலந்து வேட்டிலவித்து நன்றாய் அவிந்தபின் துவைத்துச் சாறுபிழிந்து, அதில் உள்ளி-பலம்-கூ, கடுகு-படி-வ, சீனக்காரம், பொரிகாரம், சவர்க்காரம், நவச்சாரம், இந்துப்பு கல்லுப்பு, வளையலுப்பு, பெருங்காயம், மிளகு, சுக்கு-வகை-கழஞ்சு-க, அரைத்துக் கரைத்துக் குழம்புப்பதத்திற் காய்ச்சிக்கொள்ளவும். முழுகினமறுநாள் காலையில் நோயின் பெலனுக்கும் உடம்பின் இயல்புக்கும் ஏற்ற அளவில் உட்கொண்டு வெந்நீர்குடிக்க கெர்ப்பவாயு, கெர்ப்பசூலை, கெர்ப்பவிற்புருதி முதலியனவும் பக்கவாயு, நீராமை, வெருவயிறு, வெப்புப்பார்வை இவையும் தீரும். உப்புப்புளிதவிர.

## புனுகுநெய்

பச்சைப் புனுகு கழஞ்சொன்று பகரு மஞ்சள் பலமுக்கால்
இச்சை மூன்று கழஞ்சிரத மிதனைக் கடுக்காய் நீர்கெடுத்துக்
கெச்சை வேர்க ளிருவேலி கிளர்ந்த கொடுவே லியின்வேரும்
கச்சை யணைக்கு முலைமானே கழச் சோறொன்று மூன்று கொள்ளே

கொள்ளே சாரணை யின்வேருங் குலவு நாலு பிடிகொண்டு
துள்ளே துவைத்த சாறதனிற் றுலங்கு மாவி னெய்விட்டுக்
கள்ளே யனைய மொழிமாதே காய்ச்சிப் பதத்தில் வடித்ததனை
உள்ளே யருந்தில் வாயுவினோ டோடு மிரத்த சூலையுமே (கூக)

கெர்ப்பவாய்விற் சிலகுணத்திற்கு சலம் இரத்தநிறமாய்ப்போதலும் சலத்தோடு இரத்தம் விழுதலும் உண்டாம். அதற்குக்

**குடிநீர்**

வில்வம்வேரில்வயிரம், சந்தனம், முத்தற்காசு, இலாமிச்சம்வேர்-வகை-கழஞ்சு-கூ, இடித்து நானாழிதண்ணீர் விட்டு நாலொன்றாய்க்காய்ச்சி எட்டுநேரம் குடிக்கவும்.

செங்கழுநீர்க்கிழங்கு, வாழைத்தண்டு, தாழைவிழுது, இருவேலிவேர்-வகை-கழஞ்சு-ச, முன்போற் கஷாயஞ் செய்து குடிக்கவும்.

**கெர்ப்பவாய்விற் குத்துப்பொறுப்பு**
**வயிற்றுப்பொருமல் இவைக்கு**
**உடன்சிகிச்சை**

பூப்புவந்தமறுநாட் காலையில் நொச்சியிலையும் வெள்ளுள்ளியும் விழுது விட அரைத்துப் பாக்களவு வெந்நீரிற்குடிக்கவும் அடுத்தநாள் முசுமுசுக்கையிலையும் வெள்ளுள்ளியுமரைத்து முன்போற்குடிக்கவும், நான்காநாள் முழுகின உடனே ஈரப்புடவையுடன் வேப்பிலைச்சாறு காற்படி குடிக்கவும் இப்படி மூன்றுநாட்குடிக்கக் கெர்ப்பவாயு, மலட்டுவலி, மலட்டுப்புழு முதலியன நீங்கிப் பிள்ளையுண்டாம் புளிநீக்கிப் பத்தியம் வைக்க.

அசாத்தியம் நாலும் முற்றிற்று

## சாத்தியம் ஐந்தனுள்

## க - கெர்ப்பக்கிருமியின்குணம்

பொருமித் திரண்டு கீழ்வயிற்றிற் புண்பட் டழுந்திச் சியல்கொண்டு
மருவி வலிக்கும் வெள்ளையுண்டாம் வாய்நீ ரூறு முவாந்திக்கும்
உருவிப் பிழிந்தாற் போன்மேனி யுலர்ந்து தியங்கு மொடுவுண்டாம்
கிருமித் தோஷ மதுவென்னுங் கெர்ப்ப ரோகக் குணமாமே (கர்)

### சிகிச்சை

### குடிமருந்து

சிறுபாகலிலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து பூத்தநாள்முதல் மூன்று நாளைக்குக்குடிக்கவும்.

மேற்கூறிய வேப்பிலைக்காயம் முதலியன கொடுக்கநன்று.

### எண்ணெய்

பாகலிலைச்சாறு, பேய்க்குமட்டிச்சாறு, தேப்பங்காய்ச்சாறு, வீழியிலைச்சாறு, எருக்கலையிலைச்சாறு, வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், வகை-படி-ச, கலந்துகாய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, கரண்டியெண்ணெய்-சஉ-நாட்கொள்ள மலசலக்கட்டு கெர்ப்பப்புழு, வாதம், மேல்க்கடுப்பு, வாயுவகை, கெர்ப்பக்கிருமிவகை எல்லாம் தீரும். புளி நீக்குக.

### இலசுனாதிமுக்கூட்டெண்ணை

வெள்ளுள்ளி பன்னிரு களஞ்சுகடு ரோகணி
விளம்புமதி யுப்பொடிங்கு
வெடியுப்பு மிளகுபொரி காரமொடு திப்பிலி
விளம்பொன்று முக்கழஞ்சாம்
அள்ளுநேர் வாளமுயர் நற்சீர கஞ்சுக்கொ
டவையொன்ற தைங்கழஞ்சா
மடர்கருஞ் சீர்பளைய லுப்பொன்று நாற்கழஞ்

சறைசவர்க் காரமேழாம்
தள்ளரிய 1வனதுர்க்கி யிருபதொடு கிருமிபகை
தானறு கழஞ்சிவைகளைத்
தண்ணீரி னாலரைத் தேரண்ட நெய்தெங்கி
னெய்நறுநெ யொன்றுழக்கா
மெள்ளவிட் டொருவிறகி லெரிதிரள் பதத்தெடு
விரைந்துசுவர் மீதிலெறியில்
வீழா திருக்கிலது பதமென் றறிந்தெடு
விரைக்குழன் மடந்தை நீயே (கூகூ)

மடந்தையர்கள் மாதவிடை வருமுயர் தினத்தினில்
மனத்தொரு கரண்டியெண்ணெய்
மாற்றுவெற் றிலைசுருட் டிக்குழலி லூற்றியே
மாந்திவெந் நீர்கொளின்னும்
தொடர்ந்துமுத் தினமுமிப் படிநுகர்ந் திடிலுடற்
றெங்குகிரு மிகளனைத்துந்
தூய்தாக வேவிழுந்.................................
....................................................

திடம்பெற வி தற்குநீ மோர்சோறு தின்றுபின்
றெண்ணீரி லேகுளித்தாற்
றிடமாக மகவுறு மிரண்டுமதி மூன்றுமதி
தின்றுபத் தியமிகக்கொள்
வடம்பொரு தனத்தினரை மலடெனச் செய்கிருமி
மாறியமக வுற்பத்தியாம்
வளமாக லேபுளியொ டுப்புமுத லானவைகள்
மாற்றிவெஞ் சோறயிலுமே

1.வன துர்த்கி கடுக்காய்

## கோரோசனைப்பற்பம்

மங்கை தனக்குக் கருக்குழியில் வாய்வும் புழுவுஞ் சூலைமுதன்
மாற்று மருந்து வேம்பாடல் மாஞ்சில் காய மரமஞ்சள்
தங்குங் குப்பை யிலவங்கஞ் சாதிக் காயும் பொரிகாரந்
தக்க கராம்பு வசுவாசி சாத்திர வேதி கடுகிஞ்சி
பொங்குங் கோவின் ரோசனையும் புகலுங் கன்னா ரக்கறவும்
போத நிறையோர் கழஞ்சுசுத்தி புரிந்த வாளங் கழஞ்சிரண்டு
பங்கம் படாது வறுத்திடித்துப் பகரு மளவு வெருகடியாம்
பருக வெந்நீர் மலங்கழியும் பரிபுங் கிருமி தொலைந்திடுமே
(கூரு)

மருந்தை இளவறுப்பாய் வறுத்திடித்துப் பாதிக்குவாளம் சேர்க்கவும். முழுகின மற்றநாள் காலையில் வாளஞ்சேர்ந்த பாகத்தில் வெருகடி கொண்டு வெந்நீர்கொள்ள மலம் கழியும் மாலையில் வாளஞ்சேராத பாகத்தில் வெருகடிகொள்ளவும் இப்படி-க0-நாள்-உ0-நாள் கொள்ளலாம் வேண்டாதபோது வாளம் சேர்ந்த பாகத்தை நிறுத்தி மற்றதையே இருவேளையும் கொள்க. புளி எண்ணெய் கிரந்திதவிரவும்.

## குடிமருந்து

பூத்தநாள்முதல் மூன்று நாளும் மலைவேம்பினிலை பறித்து இரண்டாம் முறைகழுவிய கழுநீர்தெளித்துப் பிழிந்து அரைக்காற்படி குடித்து நாலாநாள் முழுகி ஈரப்புடவையுடன் சிறுபாகலிலையும் மலைவேம்பினிலையும் துவைத்துப்பிழிந்து நாலு ஆறுமுறை வடிகட்டி அரைக்காற்படி குடிக்க. உப்புப்புளிதவிரவும் கெர்ப்பக்கிருமி மலட்டுப்புழு முதலியன நீங்கிக் கெர்ப்பந்தரிக்கும்.

கிருமி இருபத்தொருவகை என்றும், கெர்ப்பவாயு பன்னிரண்டுவகை என்றும் தொகை கூறப்பட்டிருப்பினும் விபரம் ஒன்றும் பெறப்படவில்லை.

## கெர்ப்பவிற்புருதியின்குணம்

அடிவயி றதைத்து விம்மி யழுந்திடும் புண்போ னோவாம்
தடைபட விரத்த நின்று சற்றுச்சற்றாக வீழும்
இடருற வலிக்கு மாத விடையினா லிரத்த மில்லை
மிடைபடுங் குணமே கெர்ப்ப விற்புர்தி யென்னலாமே (கூகூ)

வயிற்றை வலிக்கும் வெள்ளெச்ச மதுபோற் பிடவை தனிற்படுமாம்
உயிர்ப்பைக்கிறந்த வுடலுருக்கு முவந்தன் னத்தினாடாது
வெயிற்கட் பொறாது தாசமுமா மிகவே மேனி தளர்ச்சியுண்டாம்
குயிற்சொற் பயிலுங் கொடியிடையீர் குறிக்கும் விற்புரு திக்குணமே

## சிகிச்சை

விடுத்த சரீரம் வீக்கமுண்டாய் மிகவே கியலாய்ப் பேதிக்கும்
உடுத்த பிடவை தனிற்படுமா முழலை தாக மிகவுண்டாம்
அடுத்தே யிதற்குப் பரிகார மாடா தோடைப் பட்டையதை
எடுத்தே வெள்ளாட்டுப்பாலி லிதமாய்க் காய்ச்சிக் குடிக்கநன்றே
(கூஎ)

இதற்குமுன் சொல்லிய நறுவிலி நெய்யாயினும், நாவல் நெய்யாயினும் கொடுக்க நன்று.

## தேங்காய்நெய்

ஓமம், இந்துப்பு, வெள்ளுள்ளி, வாளம், வளையலுப்பு கல்லுப்பு, பெருங்காயம், கோட்டம், கடுகுரோணி, வசம்பு, சுக்கு, கருஞ்சீரகம், இரசம், கெந்தகம், சாதிலிங்கம், வகை-கழஞ்சு-க. கொடுவேலி, அமுக்கிராய், சாறணை, இன்பூறல், உத்தமாகாணி, மிளகரணை, இவை.வேர் கருணைக்கிழங்கு வகைக்குப்பிடி-க, இடித்துத் தேங்காய்ப்பால் வார்த்தரைத்து அதிற்கலக்கிக் காய்ச்சித் தயிலம் எடுத்துக் கடுகுடன் ஏழு நாட் தின்னக் கெர்ப்பவிற்புருதி தீரும்.

## விசயசுந்தரிநெய்

திரி கடு குள்ளி கோட்டஞ் செண்பகப் பூநற் சீரம்
வருகராம் புடன்செஞ் சந்தம் வயங்குரு ளரிசி யோமம்
தருமில வங்க மேலந் தக்கநற் கடுக்கா யோடு
மருவுறு கணித வேதி மதுரநல் விடயங் கைப்பு (௬௫)

சேர்களிப் பாக்கு மத்தித் திப்பிலி யிவைக ளெல்லாம்
ஓரொரு கழஞ்சு பச்சை மஞ்சளோர் பாக்குத் தண்டி
காருறு தென்னம் பாளை யிளமணி புங்கம் பட்டை
ஆருறு 1சூத மத்தி யாலர சிவற்றின் பட்டை (௬௬)

மட்டுறு குழலாய் 2சிந்து வாரத்தின் பொருக்கு மன்னும்
கட்டுசா றடைக்கி ழங்கு காக்கணங் கொவ்வை காணி
நெட்டிலைக் கள்ளி கீழ்காய் நெல்லிநன் னாரி யோடு
தட்டுறு மாடா தோடை சார்புளி நடலை 3சில்லி (௬௭)

நறுவிலி மரத்திற் பட்டை நன்னிலப் பனைக்கி ழங்கு
மறுவறு மொடுவ டக்கி புளிதரு நடலை மூலம்
குறைவறப் பலமொவ் வொன்று கூட்டிநான் மரக்கா றண்ணீர்
முறைபெறக்காய்ச்சியெட்டொன்றாய்வடித் ததிற்ப சுப்பால் (௬௮)

ஆவுறு நெய்யெள் ளெண்ணெ யருமிள நீருங் கூட்டி
ஓவறு சரக்க ரைத்தே யுற்றநற் பதந்தப் பாமல்
தாவற வடித்துக் கொண்டு தலைமுழு கினநா ணீக்கி
நாவுற் நாலு காசி ணிடைநக்கி யடிவயிற்றில் (௬௯)

*1சூதம் - காமரம் 2சிந்துவாரம் - புளியமரம்.*

*3சில்லி – சிறுகீரை.*

ஒற்றிடப் பாவை நல்லார்க் குற்றுமெய் வருத்தஞ் செய்யும்
கெர்ப்பவிற் புருதி யென்று கிளத்திடு மிருபத் தொன்றும்
பற்றறத் தீரு மென்று பகர்ந்தன ராயுள் வேதம்
முற்றுணர் முனிவ ரந்நாண் முறையது தப்பாதன்றே (க00)

## தேங்காய்நெய் - வேறு

சுக்கு, மிளகு, கழற்சிப்பருப்பு-வகை-கழஞ்சு-கூ, சுத்திசெய்தவாளம் கழஞ்சு-உ, தேங்காய்ப்பாலிலரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி எண்ணெயும் கடுகும் வெவ்வேறாக வைத்துக்கொண்டு மாதவிடை வந்த மூன்றாம்நாள் காசிடை எண்ணெயும் அவ்வளவு தண்ணீரும் கலந்து குடிக்கவும். மலங்கழியாவிடின் கடுகு கூடத்தின்னக் கழியும். கெர்ப்பக்கூடு விழும். கெர்ப்பவலி தீரும்.

## குடிமருந்து

1நாய்நாக்கி வடவேரை யிழைத்தெ டுத்து
நலம்பெறவே யான்பாலிற் கொடுக்க நன்றாம்
மாயாத புளிநடலைக் கிழங்கு தன்னின்
மாவினுட னோரளவா யரைத்தே யுண்ணில்
ஓயாம லொடுப்பாவுங் கெர்ப்ப ரோக
முதரமதிற் கிருமிசிய லுள்ள நோவும்
தூய்தாகத் கழிந்துருகிப் போவ தென்று
தொல்லுலகி னன்முனிவர் சொன்ன தாமே (க0க)

முருங்கைவித்து மூன்று பருப்புப் பொடிசெய்து ஆழாக்குப் பசுப்பாலிற் கொடுக்கவும்-இப்படி-ங-நாட்கொடுக்க விற்புருதிமாறும்.

குளவரகு சுட்டசாம்பலை முட்கிளுவையிலைச்சாற்றிற் கலக்கிக் குடிக்க விற்புருதிக் கூடுவிழும்.

சுத்திசெய்து கட்டின பொன்னரிதாரம், பேய்க்குமட்டிக்காய் வகைக்கு நாலு மஞ்சாடியளவு அரைத்துக் கோசலத்திற் கரைத்துக்குடிக்க விற்புருதி கூட்டோடேவிழும்.

**களி**

வேலம்பட்டையிடித்து இரண்டு ஆழாக்குத்தூள் நல்லெண் ணெயிலூறப்போட்டு அதுபோலத் தண்ணீரிலூறப்போட்டு வெவ்வேறாக வைத்துக்கொள்ளவும். குறுவைநெல்லரிசிமாவைப் பட்டையூறின தண்ணீரிற் களிகிண்டி, அந்தக் களியில் பட்டையூறின எண்ணெய்வார்த்து மூன்று நாள் தின்னவும். பின்பு எழுமுள்ளுப்பட்டை; இலுப்பைப்பட்டை, அத்திப்பட்டை, நாவற்பட்டை, சமன்கொண்டிடித்து நல்லெண்ணெயிலுறப்போட்டு அந்த எண்ணெய்சற்றே நக்கவும்.

**நாவல்நெய்**

ஆமணக்குச் கிவதைகொடு வேலி கொள்ளு
மடுத்தசார ணைமுருங்கை யிலந்தை தானும்
பூமணக்கு நொச்சிமூக் கறைச்சி மூலம்
புகலுவரோர் வேரிரண்டு கொத்துச் சாறு
தேமணக்கு நாவலின்றோற் சாறு நாழி
செப்பமதாய்க் கஷாயமது குறுகக் காய்ச்சி
நாமணக்கும் பசுநெய்யோர் கொத்தி லிட்டு
நல்லகடை மருந்துதனை நயந்து கொள்ளே (கо0ர்)

நாய்நாக்கி - இலைக்கள்ளி

கொள்ளுவது கற்கடக சிங்கி தேக்குக்
குலவசும தாகமதி விடய மோடு
விள்ளுதிரி பலைகடுகு பெருங்கு ரும்பை
மிக்கபெருங் காயமிவை யொருக ழஞ்சாய்த்
தெள்ளுமிந்துப் பிலவங்கத் தோடு கைப்புச்
செப்பிடுவ ரொன்றுகழஞ் சிரண்ட தாக
வெள்ளையுள்ளி பலமைஞ்சு தோடு போக்கி
விரவுசுத்தி நேர்வாள முக்க ழஞ்சே (க0கூ)

வல்லைவிம் மருந்துதனை யம்மியி லரைத்து
வற்றிய கஷாயமதி லுற்றுற விடுத்து
நல்லமெழு கானபத மாம்படி வடித்து
நாரிதலை தான்முழுகு நாளினி லடுத்துச்
சொல்லுமுறை யேயோரு கரண்டியுட் குடித்துத்
தோயமது காய்ச்சியுவ ரோடுபுளி நீக்கில்
நல்லரவி கண்டபனி தானகலு மாபோ
னாலுவகை விற்புருதிநாசமது வாமே (க0ச)

கெர்ப்பவிற்புருதி இருபத்தொருவகையென்று ஓரிடத்திலும் நான்கு வகையென்று மற்றோரிடத்திலும் கூறப்பட்டிருக்கிறது.
பின்வருஞ் செய்யுட்கள் சிலபிரதிகளில் வேறாகக்காணப்படுகின்றது.

**கெர்ப்பவிற்புருதிக்குணமும்மருந்தும்**

இருந்தகைமைக் கெர்ப்பவிற் புருதி தன்னை
யிசைத்திடுகி னால்வகையா மிதனின் பேதம்
வருந்தியிட வூற்றானால் வருவ தொன்று
வற்றினதால் வருவதொன்று முற்றி யொன்று
திருந்தவே தடித்தமல டொன்று நான்குஞ்
செப்பியபேய் தெய்வத்தாற் பித்தந் தன்னால்
பொருந்தியவன் கிருமியினால் வருமிவற்றின் குணமும்
போக்குமவு டதமும்பின் புகல்வன் காணே (க0ரு)

காணுமுதன் மலடுகீழ் வயிறு நோகுங்
கடுத்துநீ ரிறங்குநானாங் கள்ளி வேர்தான்
கோணிலர சம்பளம்போ லரைத்துத் தேனுங்
கூட்டியதிற் குழைத்தேழு நாளுங் கொள்ள
பேணியபத் தியம்பாலா மதற்குப் பின்னர்ப்
பேசுநோய் கறைபடுகிற் கடுக்கு நாறும்
வரணுதலா யிதற்குமருந் துரைப்பக் கேண்மின்
வளர்புளியின் முற்றியவேர் சோம னுப்பும் (க0௬)

கூட்டியிங்குக் கற்றாழஞ் சாற்றிலரைத் திதனைக்
குடிப்பதுபத் தியமுன்போற் கொள்கமற் றதுகேள்
தீட்டியநீர் கறையுடனே யழன்றிருக்கு மதற்குச்
சீந்திலுறு தண்டுவேப் பலகு மற்றும்
பாட்டியலு முத்தமுட னருக்கி யிந்தப்
பகர்சாற்றி லரைத்துநெய்யுங் கலந்து காய்ச்சி
மூட்டுமொரு காசினிடை வகுத்தெ டுத்து
மூன்றுநாட் கொள்கநீர்க் கஞ்சிபத் தியமே (க0எ)

மேவியபின் னாவதற்குக் கறைபடுகி லிறைச்சி
மிகக்கழுவு நீர்போலா மணமுங் கொள்ளும்
பாவியநற் சீந்திலிலைக் கள்ளி மூலம்
பசுவினது நெய்கலந்து பதத்திற் காய்ச்சித்
தாவியே குடித்துநறும் பாலுஞ் சோறுந்
தான்கொள்ள வருசிபலு மணமும் போகும்
தேவுறுநற் றமிழறிந்து பொதிகை மேவுந்
திருமுனிவ னுரைத்தபடி தெளிந்து கொள்ளே (க0அ)

### ங.-கெர்ப்பப்புணர்ச்சியின்குணம்

இந்திரி யந்நீர் போல விடைவிடா தொழுகி வீழும்
ர்ந்தவே தங்குங் கெர்ப்ப முடைபடு முதிர மாகச்
சிந்தியே யோடும் வாயு திரட்சியாய்ச் செறுத்து விம்மும்
புந்தியை மயக்குங் கெர்ப்பப் புணர்ச்சியின் குணமா மென்னெ (க0கூ)

### ச-கெர்ப்ப வஞ்சனைக்குணம்

பஞ்சென வெளுக்கு மேனி பறிந்திடுந் தலையு ரோமம்
நெஞ்சுற வெரித்து வாய்நீ ரூறியே நிதம்பங் காய்ந்து
மிஞ்சவே சோரை சாயும் வேர்வையு மிகவு முண்டாம்
வஞ்சனைக்குறையாங்கெர்ப்பம்வருத்திடுங்குணங்கடாமே (கக0)

### ரு-கெர்ப்ப மருத்தீட்டின்குணம்

அருந்திடும் பொசிப்புக் காணா வறவுலர்ந் தத்தி யாகும்
வருந்தியே நெஞ்சு லர்ந்து வரட்சியா யிரும லுண்டாம்
பொருந்திய கெர்ப்ப நீர்போற் பொங்கியே யுதிரம் போகா
மருந்தினீ டதனால் வந்த கெர்ப்பநோய் வகையி தாமே (ககக)

இவற்றிற்கு வேறாகச் சிகிச்சை கூறப்படவில்லை மேற்கூறியவையே பொருந்துவனவாம். கெர்ப்பமருந்தீடு நறுவிலிநெய், நாவல்நெய், நீற்றுப்பூசனிநெய், முதலியவற்றாற் தீரும்.

சாத்தியம்-ஐந்தும் முற்றிற்று

### பெரும்பாடு

வருபெரும் பாட்டு ரோக மண்டியே யிருந்தால் வாலை
தருபரு வத்தி னோர்க்குத் தங்கிய சோரி தானும்
பொருமுய லுதிரம் போலப் போந்துவாய் கிழிந்து நாளும்
சொரிவது பெரும்பா டென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர் ()

### பெரும்பாட்டு ரோகத்தின் ஏது

தானிவை வருமுற் பத்தி தனைச்சொலின் வெப்பி னாலும்
மானவ ரிடைவி டாதே மருவுத லாலுங் கெர்ப்பப்
பினமொட் டித்து நொந்து பிளந்திட லாலு மோகம்
வான்முலை மடந்தை நல்லாய் வருத்துத லாலு முண்டே (ககசூ)

உண்டினங் கறையா காதே யுக்கிர மிகுதி யாலும்
மண்டியே பித்த வாதம் வருகிலேற் பனம்ப கைத்துக்
கொண்டிடு முதரங் கெர்ப்ப முடைந்திடக் குடல்க லங்கித்
திண்டிறற் குழன்மா தர்க்குச் சிந்திடும் பெரும்பா டன்றே (ககசூ)

### முத்தோஷங்கள் அதிகரிக்கும் வேறுபாடு

பாடுறு வாத கோபம் பகருமஞ் சணிப்புக் கொள்ளும்
தேடுறு பித்த சோபஞ் சிவப்பது குணமுண் டாக்கும்
வாடுறு மய்யின் கோபம் வகையது வெளுத்தி ருக்கும்
நாடுறு மிந்த வண்ண நாடொறும் போக்கி நின்றே (ககரு)

### பொதுக்குணம்

நின்றுடல் வெதும்பிச் சென்னி நித்தமு நொந்து காது
பொன்றவே யிடித்துத் தண்ணீர் 1போல்வுட் டாக மாகி
அன்றவே யுடம்பெ ரித்துக் கீழ்வயி றதுக னத்துக்
கன்றிட வருத்தஞ் செய்யுங் கடுபெரும் பாட்டு ரோகம் (ககசூ)

1 போல - அசை

**சிகிச்சை**

**சூதகசிந்தாமணிக்குளிகையும், கயரெண்ணையும்**

மங்கை தனக்குப் பெரும்பாடு மாறா வெள்ளை சியன்மேவி
வயிற்றை வலித்து நொந்தடசின் மருந்து கருவெல் விளாத்தியொதி
தங்கு நிம்ப முள்ளிலவு சாரும் பிசின்கள் சமனாச்
சம்பு வதிற்றோல் தென்னையினிற் றகுபாளையுமே யிடித்தவித்துப்
பொங்கு தனினீர் பிழிந்ததிலே புகன்ற பிசின்க டமையவித்துப்
பொருந்துமுள்ளிவேர்க்கொம்புபோகுங்கராம்பு கைப்பிவைகள்
துங்க முறவே பன்னிரண்டு கழஞ்சு கடுக்கா யிருபதுடன்
சொல்வேம் பாடல் களிப்பாக்குத் தூய1ஞாழ விலவங்கம் (சகஏ)

மருவு குலக்காய் செண்பகப்பூ வகைக்குக் கழஞ் சென்றாய்க்கூட்டி
வகுத்த பிசினீர் தனிலரைத்து மானே தேற்றா வருவிரையைப்
பொருவ வுருட்டி நிழலுலர்த்திப் பொங்குந்தேனி லுரைத்துண்ணப்
புகன்ற நோய்களகலுமெனப் பொருந்தவுரைத்தாரதற் கெண்ணெய்
கருவேல் வெள்வே லொதி யாத்தி கயட்டை யத்தி யுடனுதிரங்
காட்டும் வேங்கை யுடனாவல் கருது மிவைக டமிற்பட்டை
திருவே தெங்கி னிளம்பாளை சேரும் குரும்பை யொவ்வொன்றுந்
தெளியப் பலங்க ளைம்பதுடன் றேறு மரசா லொடு வடக்கி (ககஅ)
அடக்குங் கிளுவை தமிற்பட்டை யருநீர்ப் பூலா வுடன்றுடரி
யமரா வரையு மின்பூற லாகுங் கொன்றை 2கத்தாரி
தொடக்கும் வேர்கள் புளிவிதையின் றோடும் பூக மதிற்பசுங்காய்
சொல்லப் பலம்பத் தாய்நான்கு தூணி நீரி லெட்டொன்றாய்
எடுக்கு மெள்ளி லெண்ணெயுட னிருசீர் கராம்பு திரிகடுக
மேலங் கோட்டம் வேம்பாட லினிய வோம மிலவங்கம்
அடுக்குங் கைப்பு வெள்ளுள்ளி யமர நாலு கழஞ்சது கொண்
டருஞ்செஞ் சந்தங் குங்குமப்பூ வானகுலக்காய் களிப்பாக்கே ()

*1- ஞாழல் குங்குமப்பூ*
*2 - கத்தாரி - செங்கத்தாரி*

செப்பு மல்லி செண்பகப்பூச் சிவந்த வள்ளி கழஞ்சாறாய்ச்
சேருங்கடுக்கா யிருபதுவுஞ் சேர்த்தே யிடித்துத் தூளாக்கி
ஒப்பத் தூவிப் பதத்தில்வடித் துள்ளே கரண்டி யெண்ணெய்நக்க
வூறுந்துவாலைபெரும்பாடு முற்ற வெள்ளை யொடுப்பாய்ச்சல்
வெப்புங் குத்தி யடசுதலு மிகுநீ ரழிவு பிரமேகம்
வேறுமுதரந் தனிற்புண்ணோ மிகாமே யொழிந்து போகுமெனச்
செப்புங் கதிரை வேன்முருகன் றிருத்தாட் கன்பு பூண்டொழுகுஞ்
சிறியவடிவிற்றமிழ்முனிவன்றெளிந்தேயுரைத்ததிறமிதுவே

### நாவல்நெய்

நாவற்பட்டை உலர்த்தியிடித்து 1ஈழப்படி-ҧ0-பலம் கொண்டு-அ-மரக்கால் தண்ணீர்விட்டு நாலொன்றாய்க்காய்ச்சிப் பிழிந்து வடிகட்டி, அத்துடன் தயிரின்மேல் தெளிந்த தண்ணீர் புளியாரைச்சாறு, நறுநெய் வகைக்கு நாழி-ச-கூட்டி வில்வப்பழச்சதை, வெள்ளிலோத்திரம், சாம்பிராணி பேரிச்சம்பழம், நாகம்பூ, வரட்சுண்டிவேர், தாதுமாதளம்பூ, பிஞ்சு, பங்கம்பாளைவேர், முத்தற்காசு, ஓமம், நாவல்வித்து, கொட்டிக்கிழங்கு, கருஞ்சீரகம்-வகை-கழஞ்சு-ச, இடித்துக் கஷாய நீரிலரைத்துக் கலக்கப் பதத்தில் வடித்து நாளொன்றுக்கிருகழஞ்சு நெய் சற்றே வெதுப்பி உட்கொள்ள பெரும்பாடு, இரத்தபித்தம், இரத்தரோகம், எலும்புருக்கி, அதிசாரம், இவையெல்லாந் தீரும். நெய்தின்னும்போது வில்வவேரிலாணி, சுக்கு, மிளகு-இவை-வகைக்கு நாலுகழஞ்சு நருக்கி இருநாழி நீர்வார்த்து உழக்காய்க் காய்ச்சிக்குடிக்க அரோசிகம் வாய்நீரூறல் இவைதீரும்.

*1-ஈழப்படி ஒருபலம்-உ0-வராகனிடை*

## நாவல்நெய்-2

நாவற்றோ லினையிடித்துத் தூள தாக்கி
நாரமதி லஞ்சுமரக் காலும் விட்டுக்
காவற்கா யூறியது குறுணி யானாற்
கற்றாழை நீர்வள்ளி விளாம ரத்தின்
மேவிலைச்சா றுடன்கலந்து நெய்யும் விட்டு
மேன்மருந்து கோட்டமில வங்க மேலம்
தேவர் க்காம் பச்சிலைநா கம்பூ வோடு
திப்பிலிவெட் பாலைவிழால் சுக்கு மாஞ்சில் (கர்க)

மாஞ்சிலுடன் கண்டில்வெண்ணெய் 2கழுநீர் மூலம்
மருவுதிரி பலையட்டி மசரப் பூவும்
வாஞ்சைதரு நன்னாரி கமல மூலம்
வருலாமிச் சிவையிரண்டு கழஞ்சு கொண்டு
தேய்ஞ்சவம்மி தனிலரைத்துக் கரைத்துக் காய்ச்சித்
தின்றிடுகின் மேனோக்கு மிரத்த பித்தம்
தீய்ஞ்சபெரும் பாடிரத்த மென்பு துக்கி
தீராத வெண்மாசுந் தீரு மன்றே (கர்ர்)

## வேறுநெய்

அதிமதுரங் கோட்டமத்தித் திப்பிலி யுடனே
யதாவரிசி வெட்பாலை யரிசி தானும்
துதிபெறுசுக் குடன்மாஞ்சில் கண்டில் வெண்ணெய்
சோதிபெறு செங்கழுநீர்க் கிழங்கு தானும்
புதியநன்னார் செங்கமல மிலாமிச் சம்வேர்
புகட்டிநெய்யும் விட்டுவடித் துள்ளே கொள்ளில்
மதிநுதலா யுனதுபெரும் பாட தெல்லா
மாறிவிடு மென்றுமுன்னோர் வகுத்தா ரன்றே (கர்கூ)

2-கழுநீர்மூலம்-செங்கழுநீர்க்கிழங்கு

## பருத்திக்குழம்பு

பருத்தியின்வித் திடித்ததிலே நீர்விட் டூறிப்
பகலிரவு சென்றபின்பு பிசைந்து நன்றாய்த்
திருத்தமுறப் பிழிந்தபின்பு திரளக் காய்ச்சிச்
செய்யகுழம் பதுவானாற் சேர்க்குங் கற்கம்
பெருத்ததிரி கடுகுநற்சீர் பலமொவ் வொன்று
பேணியிள வறுப்பாகப் பொடிசெய் திட்டுப்
பொருத்தமுற நெய்கூட்டிக் குழம்பா யுண்ணப்
போம்வெள்ளை பெரும்பாடுட் சுரமு மன்றே (கஉச)

## இளநீர்க்குழம்பு

சிற்றாமுட்டி-1சமூலம்-பலம்-உச நறுக்கியிடித்து இளநீர் பதக்கிலிட்டு நாலொன்றாய்க்காய்ச்சிப் பிழிந்து வடித்து அதனுடன் பசுப்பால், தாழைவிழுதுச்சாறு, எலுமிச்சம்புளி-வகை-படி-க. கூட்டிக் காய்ச்சவும் பாதிவற்றியபின் அதிமதுரம், முத்தற்காசு, ஏலம், இலாமிச்சம்வேர், நிலப்பனைக்கிழங்கு, வெண்கோட்டம்-வகை-பலம்-க, சூரணித்துத்தூவிக் கருப்புக்கட்டி கூட்டிக்கிண்டவும். பதத்தில் நல்லெண்ணெய் சற்றே விசிறி யிறக்கி நெல்லிக்காயளவுகொண்டு வெந்நீர் கொள்ளப் பெரும்பாடு, எலும்புருக்கி, சுக்கிலப்பிரமியம், உட்டணத்தால் வந்த மூத்திரரோகம், உள்வெக்கை இவை தீரும் மெலிந்த உடம்பு தடிக்கும் தாதுவிருத்தியும் பெலனுமுண்டாம்.

## அடை

நற்சீரகம், அதிவிடயம், திப்பிலி, ஓமம், மாயாக்காய், ஆவரைவித்து, மேற்படிமரப்பட்டை, வேர்ப்பட்டை சமன்கொண்டு தூள்செய்து புழுங்கலரிசி மாவுடன் கலந்து அடைசுட்டு நல்லெண்ணெயிற் தோய்த்துத்தின்னப் பெரும்பாடுதீரும்.

## எள்ளுப்பாகு

எள்ளு விளக்காமல் ஒருபடி, புல்லாந்தி, ஆல், அரசு, ஓதி, கறுக்காய், நாவல், செங்கத்தாரி, வேல், கிளுவை இவற்றின் பட்டைத்தூள்-வகைக்குப்பிடி-க, சாதிக்காய், கராம்பு, வசுவாசி, ஏலம், கறுவா, கடுக்காய், மதுரம்-வகை-கழஞ்சு-க, பாகுபண்ணித்தின்னவும்.

## ஈருள்ளிப்பாகு

உதிரவேங்கைப்பட்டை, கயட்டைப்பட்டை, நாவற்பட்டை, இதரைவாழைப்பூ, புளியங்கொட்டைத்தோல், மாதளம்பிஞ்சு, இவை எல்லாம் சமன் இடித்துப் பதக்கு நீரில் எட்டொன்றாய்க்காய்ச்சிப் பிழிந்து அதில்-ஈருள்ளி, வெள்ளுள்ளி, நற்சீரகம், திப்பிலி, ஏலம், கராம்பு, சாதிக்காய், மஞ்சள், மிளகு, செவ்வள்ளி, சுக்கு, மதுரம், மாயாக்காய் களிப்பாக்கு, மல்லி, சமனாகக்கொண்டு சூரணித்துத் தூவிக்கிண்டி எள்ளைவிளக்காமல் ஊற்றியெடுத்த எண்ணெய் விசிறிப்பாகுசெய்து தின்னப் பெரும்பாடுதீரும்.

## சீரகப்பாகு

நற்சீரகம், திப்பிலி, ஓமம்-வகை-பலம்-ரு, சிற்றாமுட்டிவேர்-பலம்-உ,பற்ங்கி கிழங்கு - பலம் -, இடித்தரித்துத் தேன்கூட்டிப் பாகுசெய்து தின்னப் பெரும்பாடு தீரும்.

## மேற்படிவேறு

நற்சீரகம், பறங்கிக்கிழங்கு-வகை-பலம்-உ, சுக்கு-பல-இ, சூரணித்து நெய்தேன்கூட்டிப் பாகுசெய்து தின்னமாறும்.

## திரிகடுகுப்பாகு

சுக்கு மிளகு திப்பிலியுங் துய்ய கடுகு வெந்தயமும்
ஒக்க வுள்ளி யோர்நிறையா யுற்ற தேங்காய்ப் பாலுடனே
மிக்க முருங்கைச் சாறதுவும் வெம்மை யான காற்றோட்டி
பக்கமாகச்சரிகொண்டுபாகாய்க் காய்ச்சி யெண்ணெய்விடே(கஉரு)

1-சிற்றாமுட்டி மூலம் என்றும் பாடம்.

விட்டே கொடுக்கிற் பெண்களுக்கு மேவும் பெரும்பா டுடனேதான்
சுட்டே கொல்லுங் கிருமியுடன் சுருக்காய்க் குத்தும் வாயுவதும்
மட்டில் லாத வுதரத்தில் வந்த வியாதி யத்தனையும்
திட்டமாகவோடுமென்று தென்பான் முனிவன் கூறினனே (கஉசு)

**சம்பாதிச்சூரணம்**

நாவற்பட்டை பலமெட்டு நவிலு மத்தி மரப்பட்டை
மேவுந் நாலு பலங்கைப்பு மிகாம லிரண்டு பலமாகும்
பாவுந் தெங்கின் பாளையிள மணியுங் கொம்பி லரக்குடனே
பூவிற்படருங்கருவாழைக்கிழங்கும்வகைக்குப்பலமொன்றே (கஉஎ)

ஒன்றித் தவினும் பலங்காலா யுலர்த்தி யிடித்துச் சூரணித்துக்
குன்றிற் பேரிய முலைமடவாய் கூறு நாலு வராகனிடை
துன்ற வெடுத்தா நெய்பாலிற் றுய்க்கக் காலை மாலையிற்றேன்
நன்றேயுனதுபெரும்பாடுநவிலு மெலும்பை யுருக்குவதும் (கஉஅ)

போகுங் கெர்ப்பக் கரைவு புழுக்கடி
ஆகும் யோனி யதிலுறு ரோகமும்
வேக மான துவாலையும் வெள்ளையும்
போகு மென்று புகன்றனன் மாமுனி (கஉகூ)

**உண்டை**

அவின், சாதிக்காய், கராம்பு, சுக்கு-சமன் கொண்டு கையாந்தகரைச்சாறு விட்டரைத்து உருட்டிப்பாலில் அல்லது தேனிற்குடிக்கப் பெரும்பாடுமாறும்.

ஆவரம்பட்டைத்தூள்-படி-உ, சுக்கு, களிப்பாக்கு-வகை-பலம்-க, இரசம்-கழஞ்சு-இ, நாவற்பட்டைச் சாற்றிலரைத்துக் கிளுவங்காயளவு உருட்டிக் காலை மாலையாவின்பாலிற் கரைத்துக் குடிக்கத்

துவாலை பெரும்பாடு வெள்ளை சியல்புண்பாடு வயிற்றுநோ மாறும்.

வெள்ளைக்குந்திருக்கம், சாதிக்காய், சீலைசுட்டசாம்பல்-வகை-பலம்-க, அபின்-கழஞ்சு-உ, பொடிசெய்து தேனிற்தின்ன மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

### குடிநீர்

வேலம் பட்டை பலமொன்று வேர்க்கொம் புள்ளி களிப்பாக்குச்
சாலக் கைப்போ டிவைநாலுஞ் சரியா யவித்துக் கொள்வீரேல்
கோலத் துவாலை பெரும்பாடு குடலில் வலிப்போ டுட்குத்து
நீலவெள்ளை சியன்மாறி நிதானஞ் சுகத்தில் வருந்தானே (ககூ0)

நாவல், புல்லாந்தி, அமுக்கிறாய், இலாமிச்சு, சிற்றமட்டி, கடலிறாஞ்சி, ஆலம்முகை-விழுது, சுக்கு, கைப்பு, களிப்பாக்கு இவை அவித்து தேன் குங்குமப்பூ கூட்டிக்குடிக்க.

கருவாழைக் கிழங்கத்தி யாத்தி நாவல்
கருதுபட்டை யுடன்றெங்கின் பாளை தானும்
சரியாகப் பலங்கூட்டி யிடித்துத் தெள்ளித்
தானதிலே பன்னிரண்டு கழஞ்செ டுத்தே
இருநாழி யீருழக்காய்க் காய்ச்சி ஞாழ
லினிமையுறு தேனதிலே கலந்து கொள்ளத்
திருவாரைக் கெர்ப்பமழிப் பதுவுந் தீருந்
தீராத பெரும்பாடுந் தீரு மன்றே (ககூக)

இரா அடுப்பிலூறவைத்துக் குடிக்க.

## வயிற்றிற்புண் அவியலுக்கு

## நெய்

அதிவிடயம், சுக்கு, மதுரம், மாயாக்காய், ஏலம், கராம்பு, ஓமம், திப்பிலி-வகை-கழஞ்சு-இ, வசுவாசி, கல்நார், கோட்டம், வெளுத்தற்பிசின், இருசீரகம்-வகை-கழஞ்சு-க, இலாமிச்சு, சாதிக்காய், சாத்திரவேதி, குங்குமப்பூ-வகை-கழஞ்சு-கஇ, அக்கறா-கழஞ்சு-உ, இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். பசுநெய் ஒருகொத்து வெற்றிலை வெடிபதத்தில் கொதிப்பித்து இறக்கித் தூள்போட்டுத் தண்ணீரில் வைக்கவும். காசிடை நக்கவயிற்றுப் புண் அவியல்தீரும்.

## பெரும்பாட்டிற்குக் கைமருந்துகள்

ஆவரை சமூலம் இந்துப்புக் கூட்டியரைத்து எருமைமோரிற்குடிக்க. கிளுவம்பட்டையும் பருத்தியிலையும் அரைத்துப் பசுப்பாலிற்குடிக்க. இதற்குத்தீராவிடின் அபின்குன்றியிடை கூட்டி அரைத்து எருமைத்தயிரிற்குடிக்க.

வில்வம்வேர் மலைதாங்கிவேர் செவ்வந்திப்பூ தேற்றாவேர்ப்பட்டை சிற்றமட்டிவேர் இவற்றைத் தனித்தனியாயினும் சிலவற்றை ஒருங்குகூட்டியாயினும் பசுப்பால் எருமைத்தயிர் இவற்றிற்குடிக்கநன்று.

சீலைசுட்ட சாம்பல் மூன்றுபாக்களவு நல்லெண்ணெயிற் குழப்பித்தின்ன.

கீரைவேரும் குளவிந்தமும் நல்லெண்ணெயிற் கொதிப்பித்துக் குடிக்க, புளியங்கொட்டைத் தோல்பொடித்துத் தேங்காய்ப்பாலிற் கலக்கிக் குடிக்க, ஆவரையிலையும் மல்லிகையிலையும் அரைத்து எருமைத்தயிரிற் குடிக்க, இம்மருந்துகள் உண்ணும் காலத்தில் வரகுவைக்கல்சுட்டுத் தண்ணீரிற் கலக்கிக் கால்கழுவநன்று.

வேலம்பட்டையும் செங்கத்தாரிப்பட்டையு மவித்தநீரில்

சுக்குமாத்தூவிக் களிகிண்டித்தின்னத் துவாலைவெள்ளைசியல் மாறும்.

ஆவரம்பூ, இலை, வேர், பட்டை, பெருமருந்திலை சமன் இடித்த சாறு பிழிந்து அரையாழாக்கும் நல்லெண்ணெய் அரையாழாக்கும் கலந்து மூன்றுநாட்குடிக்க ஓயாத்துவாலை, சிக்குத்துவாலை, துளித்துவாலை, பெரும்பாடு வெள்ளைசியல் மாறும்.

## மெழுகு

புத்தி தன்னை மிகவு மயக்கியே
போதை செய்யு மவினொரு பங்கெடு
சுத்தி தன்னிற் றெளிந்திடு லிங்கமுஞ்
சொல்ல வேயிரு பங்கது வாகவே (கசுர்)

தோலை நீக்கி விளக்கிடு மெள்ளது
தோகை யேயட்ட பாக மெடுத்துடன்
சால வம்மியி லிட்டு 1மதுவினாற்
றான ரைத்து விரைந்து வழித்துமே ( கசுகு)

மரனை வென்ற வரிவிழி மாதராய்
வந்த டுத்திடு வெள்ளை சியலுடன்
ஊன மார்பெரும் பாடு துவாலையு
மோட வென்றுரை செய்த மருந்தினை (கசுச)

தூது ளம்பழ மாமள வாகவுட்
டுய்த்து மேபுளி யோடுவ்ர் நீக்கிடில்
சோதி சேர்வடி வேல னருள்பெறுந்
தொண்டர் பாவம தென்னத் தொலையுமே (கசுரு)

1-மது.தேன்
2-மாதுளம்பழத்தோடு-மாதுளம்பழத்தின் ஓடு

2மாது ளம்பழத் தோடவி னெள்ளுடன்
மங்கை யேபனை வெல்லமுங் கூடியே
தீது தீர விடித்தொரு பாக்கிடை
தின்ன வேபெரும் பாடது தீருமே (ககசு)

## மலட்டுக்குறி

### காரணம்

திறிமல டாகும் வாறு சென்மநாட் டோஷத் தாலும்
உறுதிருப் பூத்த நாளா லொளிர்தெய்வ விரோதத் தாலும்
செறியுமுத் தோஷத் தாலுஞ் சிலேட்டும மிகுதி யாலும்
மறுவுற மலடா மென்று மாதவ னருளிச் செய்தான் (ககஎ)

### குணம்

செய்யுமக் குணங்கள் செப்பிற் செறுவி லக்கஞ் சேட்சித்து
நையுநீர் போலப் பட்டா னாபிக்கீழ் நோவுண் டாகும்
மைபுழுத் தோஷ மானால் விலக்கமு மதம்போற் கண்டு
நொய்யவேயுதரமெல்லாநோவுற்றே யுவாந்தி கொள்ளும் (ககஅ)

கொள்சிலேற் பனதீ தாகிற் குணமது பலவுண் டாகும்
விள்ளுவிந் துவின்றி தென்றால் விலக்கம்பச் சரிசி யூறித்
துள்ளிய கழுநீர் போலத் தோற்றிநெஞ் செரியும் பண்டி
மெள்ளவே யெரித்து நாளும் விதமுறு பச்சை மேவும் (ககசு)

### சிகிச்சை

மேவுமிக் குணமே வைக்கும் விழைபொது மருந்து செப்பிற்
தாவிய சிறிய பாகற் றலையெழு சாறு கூட்டிப்
பூவில்வா ழாம ணக்குப் பொருந்திய வெண்ணெய் தானும்
மாவலர் மேனி மாதே வளம்பெறக் குடிக்க வுள்ளே (கச0)

உன்னுநாற் பான்ம ரத்தி னுறுதுவர் நீரி னோடே
துன்னுமாற் றுத்தண் ணீருந் துலங்கிய குளத்து நீரும்
பன்னிய கூவ னீரும் பகர்வண்ணான் றுறையி னீரும்
மன்னுதா மரையோ டைக்குள் வந்திடு நீரும் தேடே (கசக)

தேடிய விவைக டம்மை யொருகுசக் கலத்திற் சேர்த்துக்
கூடொரு பங்கு தண்ணீர் குறைவற வமுது பொங்கிச்
சாடியின் மற்றைப் பங்கு தனையெடுத் தரிவை யோடே
ஆடவன் றானு மூழ்கி யமுதினை யுண்ட பின்னர் (கசர்)

பின்னர்முன் சொல்லி வந்த தேவதைப் பிழைய தாகில்
துன்னிய வமுக்கி ராய்வேர் துகளறப் பொடியே செய்து
மன்னிய பசுநெய் தன்னில் வாரமோ ரேழுந் தின்றே
இன்னமுந் தேவ நீதிக் கேற்றிடுங் கிரியை பண்ணே (கசகூ)

பன்னிய புழுத்தீ தென்றாற் பகரிஞ்சி யிலையி னோடே
உன்னுசா ரணையின் பத்ர மொரு1கடு வளவு கொண்டு
மன்னிய பசுவின் பாலில் வாரமோ ராற ருந்திப்
பின்குழித் தாம ரைத்துர் பேருமம் 2மரளை யொப்பே (கசச)

47ஒப்பிடு நிரையின் பாலி லுண்டபின் குந்தி ருக்கம்
தப்பறு கோட்டந் நாகம் பூவொடு மதுரந் 3தானும்
மெய்ப்புறப் பொடியே செய்து விரைவுடன் பசுப்பா னக்கி
அப்புறு குமரிச் சோற்றி லழுத்தமாய்க் கமுகின் வேரும் (கசரு)

வேருடன் பசுவின் பாலு மிகவுமே குடிக்க நன்றாம்
கூருசேற் பனதீ தென்றாற் குறைவற மனதி னோர்ந்து
மாருதப் புவியி லேகத் தவத்துமா நாலி வேரை
நீர்சொரி காடி கூட்டி நீகுடி மூன்று வாரம் (கசகூ)

1-கடுகளவு-கடுக்காயளவு. 2 அரளை-பீநாறி. 3-மதுரந்தாரம் என்றும் பாடம்.

நாலி என்பது கார்த்திகைக்கொடி, இதன் கிளங்கைத் துவைத்துப் பலமுறை தண்ணீரில் போட்டுக் கழுவியெடுத்த மாவைக் காடியிலிட்டுக் குடிக்கலாம். இது அதிகப்பட்டாற் கொடிய நஞ்சாகும். ஆதலால் மிகுந்த எச்சரிக்கையோடு கொடுக்க வேண்டும்.

வாரமே சென்ற பின்னர் வரிமதர்த் தடங்க ணல்லாய்
ஏருறு பொற்ற லைச்சா றியல்புடன் பிழிந்து கொண்டு
கூரவே விலக்க மான நாலுநாட் கோவின் பாலிற்
சேரவே குடிப்பீ ராகிற் செல்லுமே தோஷ மெல்லாம் (கசஎ)

நாகத்தின் சாப நீக்கி நவில்கண பதிக்குப் பூசை
ஊகமாய்ச் செய்து பின்ன ருண்டிட மருந்து நன்றாம்
தோகையே யுதர மேவுந் தொகுபிணி யனைத்து மாறும்
நாகமா முனிவ னந்நா ணவின்றன னிந்த வண்ணம் (கசஅ)

## கெர்ப்பரோக சிதானம்

## மலட்டின் காரணம் - எ

1பூவாயில் விலகிநிற்கும்-அதன்குணம்-புருடனுடன் கூடி நீங்கிய பின்-தலைநோகும்-கருத்தங்காது.

### சிகிச்சை

பருத்திவித்தும் கோழிப்பித்துமரைத்துப் பூப்புவந்த நாலாநாள் குறியிற் பூசிப்புணரக் கருத்தங்கும்.

2வேது பூவாய் பிடித்தாற் புகையினால் மணிகரைந்து தங்காது குணம்-கூடிநீங்கியபின் உடம்புநோகும்.

## சிகிச்சை

நல்ல சோமளாதிக்காயம் நல்லெண்ணெய் விட்டரைத்து நாலாநாள் பூசிப்புணரவும்.

3 கருவாயில் சதைவளர்ந்திருந்தால் கருத்தரியாது-குணம்-கூடி நீங்கியபின் நெஞ்சுநோகும்.

## சிகிச்சை

கஸ்தூரியும் திப்பிலியும் கோழிப்பித்தும் கூட்டியரைத்துப் பூசிப்புணரச் சதைகரைந்து கருத்தரிக்கும்.

4 கிருமி, புழுமிகுந்திருந்தால் மணியைத்தின்றுவிடும்-குணம்-கூடி நீங்கியபின் கீழ்வயிறு அடிமுதுகும் நொந்துவலிக்கும்.

## சிகிச்சை

நற்சீரகமும் மிளகும் நல்லெண்ணெயிலாகுதல் கடுகெண்ணெயிலாகுதல் அரைத்து முன்போற் பூசிப்புணரவும். முடக்கொத்தானிலையும், கருங்குறுவையரிசியும் கோழிமுட்டையும் மிளகும் அரைத்து அடைதட்டி விளக்கெண்ணெயிற் பொரித்துத்தின்ன மலட்டுப்புழு கெர்ப்பப்புழு முதலியவைசாகும்.

5 உட்டணம் மிகுந்திருந்தால் மணிகருகிவிடும்-குணம்-அனலாகவீசும், கூடிநீங்கியபின் கெண்டைக்கால் வலிக்கும்.

## சிகிச்சை

அவின், பொரிகாரம், தேவதாரம், கடுக்காய், கூட்டியரைத்து முன்போற் பூசிப்புணரலாம்.

கருங்குறுவையரிசிமாவில் ஆவரமிலை கூட்டிப் புட்டவித்து நறுநெய் விட்டு மூன்றுநாள் தின்னவும்.

ஏலம், இலவங்கம், செங்கழுநீர், கோட்டம், மதுரம், செவ்வள்ளி, மல்லி, கடுகு, திப்பிலி, சந்தனம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சதகுப்பை, சாதிக்காய், நற்சீரகம், நன்னாரி, மயில்மாணிக்கம், முத்தற்காசு, சிற்றமட்டி, சீந்திற்றண்டு, பொன்னாங்காணி இவையெல்லாம் பசுவின் பாலிலே யூறப்போட்டு அரைத்துக்கரைத்துக் குடிக்கவும்.

பசுநெய்யில் ஆதியிதிவிடயமும் எலுமிச்சம்புளியும் கூட்டிக்காய்ச்சித் தலைக்குவைக்கவும்.

*1* சஞ்சீவி மிருத்திமாதித்தைலம் 2சஞ்சீவிச்சூரணம் நறுவிலிநெய் நாவல்நெய் முதலியன கொடுக்கநன்று.

6 கருக்குழியில் இரத்தம் மிகுந்து புறத்திற் சிந்தும் குணம்-கூடிநீங்கியபின் குளிர் நளிருண்டாகும்.

**சிகிச்சை**

நீர்க்கோழிப்பித்தும் கஸ்தூரியும் திப்பிலியும் அரைத்து முன்போற் பூசிப்புணரவும்.

7 பசாசுதேவதையினாலும் நாகசாபத்தினாலும் மலடு ஏற்படும் குணம் கூடிநீங்கினால் நோ நோன்பனவு இல்லையாகும் (மனத்திருப்தி இல்லையென்பது கருத்துப்போலும்)

**சிகிச்சை**

கஸ்தூரி, புனுகு, குங்குமப்பூ, பொன்னம்பர் அரைத்துப் பூசிப்புணர நோன்பனவு உண்டாம்.

*1-2.*இவை பின்னர்ப் பெறப்படும்.

நாகசாபம் நீக்கி தெய்வப்பிரிதிசெய்து முன்னர்கூறிய மருந்துகளில் இயைவன உட்கொள்ளக் கெர்ப்பமுண்டாம்.

## கெர்ப்பந்தரிக்கநெய்

ஆடாதோடைச்சாறு, சீந்திற்சாறு, பாகலிலைச்சாறு, வெள்ளாட்டுப்பால், நெய், வகை-படி-க கூட்டி நாலாநாள் வடித்து அந்திசந்தி 20 நாள் காசிடை நக்க உதரநோ கிருமி புழுமுதலியவை நீங்கிக் கருத்தரிக்கும்.

## கெர்ப்பந்தரிக்க ஆமணக்கெண்ணெய்

ஆமணக்கம் முத்தை இளநீரில் அவித்து உலர்த்தி தூள்செய்து இளநீரில் கலக்கிக்காய்ச்சியெடுத்த எண்ணெய்-படி-க முடக்கொற்றானிலைச்சாறு, கழற்சியிலைச்சாறு, குமரிமடற்சாறு மூன்றும் படி-க கலந்து மூன்றுநாட் சூரியபுடம்வைத்து நாலாநாட்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து பூப்புவந்த நாலாநாள் முழுகி அன்றுதொடக்கம் ஒவ்வொரு சிப்பியெண்ணெய்-12 நாள் அந்திசந்தி தின்றுவரக் கெர்ப்பந்தரிக்கும்.

## வேறுநெய்

அமுதவள்ளிக்கிழங்குச்சாறு, தூதுவளை, பிரமி, வேம்பு, கழற்சி குறிஞ்சா இவை இலைச்சாறு-வகை-படி-உ நறுநெய்-படி-க கலந்து காய்ச்சிப் பதத்தில்வடித்து முழுகினநாள்முதல் காலைமாலை கரண்டி நெய் நக்கப்பிள்ளையுண்டாம்.

ஆடாதோடை, எருக்கு, சீந்தில், தூதுவளை குளக்கொட்டி, பிரமி, குமிழ், நிலபாகல்-இவை எட்டும் இலைச்சாறு-வகைக்கு உழக்கு, வெள்ளாட்டுநெய் உழக்குவிட்டுக் காய்ச்சிவடித்து நாற்பதுநாள் தின்னப் பிள்ளையுண்டாம்.

## கெர்ப்பரட்சணி

கருவுற்றமுதல்மாதம் தொடக்கம் பத்துமாதங்களுக்கும் ஒவ்வொருமாதத் தொடக்கத்திலும் முதல்மூன்றுநாளைக்குக்

கீழ்க்காணும் மருந்துகளை முறைப்படி குடித்துவரக் கருச்சிதைவு முதலிய விக்கினங்களின்றிப் பூரணசுகத்தோடு கெர்ப்பம்வளரும் (மாதத்தொடக்கம் என்பது முழுகினபக்கத்தையே குறிக்கும் ஆமணக்கெண்ணெய் முதலியவற்றைப் பேதிக்குச் சாப்பிடவேண்டினோரும் இக்காலங்களிற் சாப்பிடுவதேநன்று.)

க-ம்மாதம் - தாமரைப்பூவிலுட்காயும் நற்சந்தனமுமரைத்துப் பசுப்பாலிற்குடிப்பது.

உ-ம்மாதம் - நெய்தற்கிழங்கு, முத்தற்காசு, கஞ்சா, மதுரம், இஞ்சிக்கிழங்கு-வகை-கழ-க அரைத்துப்பாலிற் கலக்கிக்குடிப்பது

ந-ம்மாதம் - சந்தனம், தகரம், கோட்டம், தாமரையல்லி, சீந்திற்றண்டு சமன் குளிர்ந்ததண்ணீரிலரைத்துக் குடிப்பது.

ச-ம்மாதம் - நெய்தற்கிழங்கு, சீந்திற்றண்டு, நிலப்பனைக்கிழங்கு, நெருஞ்சிவேர்-பாலிலரைத்துக்குடிப்பது.

ரு-ம்மாதம் - சாரணைக்கிழங்கு, இலுப்பைப்பூ, அழிஞ்சில் விதை தகரம், எள்ளு, நெய்தற்கிழங்கு பாலில் அரைத்துக்குடிப்பது

சூ-ம்மாதம் முயற்பித்து தண்ணீரிலரைத்துக் குடிப்பது.

எ-ம்மாதம் - கச்சோலம், ஆமணக்குவேர், நெய்தற்கிழங்கு அரைத்துத் தண்ணீரிற் கலக்கித் தேன்கூட்டிக் குடிப்பது.

அ-ம்மாதம் - மதுரம், தாமரைவித்து, முத்தற்காசு, விளாம்பிஞ்சு, அத்திப்திப்பிலி, நெய்தற்கிழங்கு அரைத்துப் பாலிற்கலக்கிக் குடிப்பது.

சூ-ம்மாதம் - வட்டுவிரை பொடி செய்து தேனிற்குழப்பித்தின்பது.

க0-ம்மாதம் - முத்தற்காசு, முந்திரிகைப்பழம், நெய்தற்றண்டு சீனி இவை அரைத்துத் தேனிற் குழப்பித் தின்பது.

இவற்றிற் கெல்லாம் பிரமாணம் சரக்கினியல்புக்கும் உடம்பின் நிலைக்கும் ஏற்றபடி கொள்க,

## சஞ்சீவி மிருத்தியாதி யெண்ணெய்

சிற்றா மணக்கின் முத்ததனைச் சிறக்க வேழு தண்ணீரால்
குற்ற மறவே கழுவியபின் குலவு முரலி லிட்டி டித்து
முற்றா விளநீர் நாலு பங்கின் முறுகா தெரித்த தைலமுடன்
கற்றா ழையினீர் தூதுவளை கழற்சி துளசி வல்லாரை (கசகூ)

கோவை முருக்கு நாயுருவி கூறும் வேலிப் பருத்தியுடன்
காவிற் படரு முசுமுசுக்கை கண்டங் காரி மால்காந்தி
பூவிற் படருஞ் சிறுநெருஞ்சி புகலு முருக்குப் பழம்பாசி
சாவைத் தவிர்க்குங் கரிசாலை தகுகர்ப் பூர வள்ளியமே (கரு0)

சிறுதக் காளி புள்ளடியுஞ் செப்பு மிவைகள் வெவ்வேறாய்ப்
பெறுநற் சாறு சமனாகப் பேணிக் கலந்து விடுங்கற்கம்
தெறுநல் வசம்பு திரிபலையுந் திப்பிலி கராம்பு மாயாக்காய்
உறுவெண் கோட்டஞ் சாதிக்கா யோம மிருசீ ரகமேலம் (கருக)

சீர்பெறு மதுர மல்லாற் செப்பில வங்கம் வாசி
ஏர்பெறு மக்கறாவு மிருகழஞ் சிவற்றி னோடு
நேர்பெறு சந்த னந்தா னிறையிரு பலமுங் †கோவின்
பீர்பெற விட்ட ரைத்துப் வெட்புறக் கரைத்துக் காய்ச்சே (கருர்)

செப்புகன் மெழுகு தென்னுஞ் சீர்பெறு பதத்தைப் பார்த்துத்
தப்பற வடித்துக் கொண்டு தகவுட னந்தி சந்தி
ஒப்புறு கரண்டி வீத முண்டிட மலடு நீங்கி
மெய்ப்புறக் கருவுண் டாகு மிகுமூலக் கடுப்பு வாயு (கருகூ)

†-கோவின் பீர்-பசுப்பால்

மூலத்திற் கிராணி சத்தி முதிர்குடல் வாத மீரன்
மேலெரி வெண்பு ருக்கி மிகுகுட கரியின் வாயு
வேலெரிந்த தகரை மாய்த்த விண்ணவ னருண்முன் மாயை
போலறுமாட வர்க்கும் பொருந்துநோய் தமையுந் தீர்க்கும்(கருச)

மானனார்க் குறுக ருப்பம் வளர்ந்திடுந் திங்க டோறும்
ஊனமில் லாம லுண்டா லுறுகரு வழிக்கும் வாயு
தானறுங் கிரந்தி திருந் தகுசுக பாகப் பிள்ளை
ஆனதும் பெறுவ ரென்றே யறைந்திடு மாயுள் வேதம் (கருரு)

கருத்தங்கிய நாலாம்மாதம் தொடக்கம் மாதந்தோறும் முதல் மூன்று நாளைக்குக் கொடுக்க.

## கெர்ப்பசஞ்சீவி யெண்ணெய் (வேறு)

மங்கை தனக்குக் கெர்ப்பத்தில் வந்தே
யுதிக்குஞ் சிசுவதனை
வளர்க்கு மெண்ணெ யாமணக்கு 1வாரி
மீட்டான் மாவிலங்கை
புங்கு மிவைவேர் துவைத்தெடுத்துப் பொருந்துஞ்
சாறு தேங்காய்ப்பால்
புகலா மணக்கி னெண்ணெயதும் போத
வகைக்கோர் படிகூட்டி
2இங்கு குலக்காய் திரிகடுகு மிருசீ
ரோமம் வசம்புள்ளி
யிருசந் தனத்தோ டதிவிடய மிந்துப்
பரத்தை வசுவாசி

1-வாரிமீட்டான்-சாத்தாவாரி
2-இங்கு-பெருங்காயம்

பொங்கும் வெடியுப் பதில்கடுகு புகலு
மமரர் தாருவுடன்
பொலியும் 1வாசி யேலமதும் பொன்னா
கோட்டஞ் சவர்க்காரம் (கரு...)

காரம் பொருந்துஞ் சிறுமூலங் கராம்பு
குப்பை பெருங்குரும்பை
கல்லின் மதமு முப்பலையுங் கடுரோ
கணியோ 2டரத்தவுப்பு
வீரம் பொருந்தும் வளையலுப்பு வகைக்கோர்
கழஞ்சு பொடிதூவி
விளங்கும் பதத்தி லெண்ணெய்தான் விரைய
விறக்கி மிடாவொன்றில்
ஈரம்பொருந்து நீரூற்றி யிதிலே
யெண்ணெய் வைத்தாற்றி
யெடுத்து வடித்தே கரண்டியெண்ணெ யியலு
மாதந் தொறுந் தோறும்
தாரும் பொருந்துங் குழன்மடவா வுண்டு
தலைக்கும் வைத்தி டுகிற்
சாரும் வாய்வு மலக்கட்டுந் தவிர்ந்து
சிசுவும் வளர்ந்திடுமே. (கருஎ)

சிற்றாமணக்கம் முத்தை இளநீரிலவித்துலர்த்தி இடித்து இளநீரிற் கலக்கிக் காய்ச்சி எடுத்த எண்ணெயைக் காய்ச்சிய பசுவின்பாலும் கற்கண்டுப் பொடியும் கலந்து மூன்றாம் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒருநாள் இரண்டுநாள் வீதம் கொடுத்துவர நன்று. சகல நோயும் தீரும் பிள்ளையும் சுகமாய்ப் பெறுவள்.

சிற்றாமட்டிவேர், பேரமட்டிவேர் சமனிடைகொண்டு ஒருபடி தண்ணீர்வைத்து நாலொன்றாய்க் காய்ச்சி வடித்த நீரில் பச்சை

வெண்ணெய் ஒரு கொட்டைப்பாக்களவு கூட்டி இரண்டாம் மாதம்-கூ நாளும் மூன்றாம்மாதம்-ச நாளும் நாலாம்மாதம்-ரு நாளும் இப்படி ஒன்பமு மாதத்துக்கும் கொடுத்தாற் சகலநோயும் தீர்ந்து கருவளரும்-சுகப்பிரசவமுமுண்டாகும்.

**கெர்ப்பசுரக்குணம்**

சுரத்துட னிளைப்புத் தலைவலி காய்ச்சு றுயர்மிகு
நடுக்கமுட் கூதல்
அரத்தினா லுடலை யறுப்பது போல வடுத்தடுத்
துடம்புநொந் தழற்றிச்
சிரத்தினு மயக்கித் தீன்மறந் துவட்டிச் சிலகழிந்
திடும்வயி றூதும்
உரத்திடுங் கால்கை முகம்வயி றதைக்கு முறுகெர்ப்ப
சுரகுண மிதுவே (கருஅ)

**சிகிச்சை**

குணமறிந் திதற்குக் குடிநீரு முரைத்தார்
கொண்டிரு கழஞ்சுநற் கராம்பு
கணமதி லவித்துக் குடித்திடத் தீரும்
கண்டுநற் சீரகஞ் சுக்குத்
துணர்மலி கொத்த மலியுடன் கராம்பு
சொல்லிய வொன்றொரு கழஞ்சாய்
மணமலி தரவே யவித்தநீர் குடிக்கின்
வருகெர்ப்ப சுரமது போமே (கருகூ)

*1-வாசி-வசுவாசி*

*2-அரத்தர்ப்பு-சிவந்தர்ப்பு*

*1-இதன் கீழுள்ள ஐந்து செய்யுட்களும் சுரவிதி என்னும் ஓர் தனி நூலிலிருந்தெடுத்துச் சேர்க்கப்பட்டன.*

தருமிரு கழஞ்சு மிளகுட னவித்துத்
தங்குநர் குடித்திடத் தீரும்
வருமொரு பிடிநற் சாயவேர் மிளகு
வரித்திடக் காயமா யருந்திற்
பொருவருங் கெர்ப்ப சுரம்விடு மன்றிப்
பொற்புறு சீரக மோமம்
பரிவுறுஞ் சாதிக் காயுடன் சுக்குப்
பகர்சரி வறுத்துமா வாக்கே (கசo)

ஆக்கிடும் மாவெந் நீரினிற் குழைத்தே
யருந்திடக் கழிச்சலு மகலும்
தேக்கிடக் கழியில் வேர்க்கொம்புக் களியுந்
தின்றிட மாறிடு மன்றித்
தாக்கிடு மிஞ்சி யுறட்டியுந் தேனிற்
சற்றருந் திடவுநன் றாகும்
நோக்கருங் கெர்ப்ப சுரமகன் றிடவே
யின்னமு நுவலுவன் பூவாய் (கசுக)

பூவர்மாந் துளிரால முகைபுல் லாந்தி
பொருந்துமதின் வேர்பட்டை நாவற் பட்டை
தூவார்சுக் கிருகழஞ்சா யிவையோ ரொன்று
சொன்னபடி யிடித்தவித்து நாலொன் றாக்கி
நாவாரத் தேன்கலக்கி யருந்திற் சத்தி
நடுங்குசுரங் கழிச்சலுடற் கொதிப்புட் டாகம்
தேவாருங் கெர்ப்பசுர மிவைக ளெல்லாந்
தீருமென வ்ாயுண்மறை தெரிந்த தன்றே (கசுஉ)

### குடிநீர்

இலாமிச்சு இருவேலி சீந்திற்றண்டு வட்டத்துத்தி பருத்திவேர் சிறுகாஞ்சோன்றிவேர் பற்படாகம்-வகை-கழஞ்சு-க எட்டொன்றாய்க் காய்ச்சி பசுவின்நெய் மேற்பொடியிட்டுக் குடிக்க கெர்ப்பசுரம் இருமல் தீரும்.

### காயாசுவாதத்தின்குணம்

மூச்சு வாங்கி நாவரண்டு மூக்கு மலரச் சுழிக்குமேற்
பேச்சு முண்டாய் வேர்வரும்பிப் பெருகு முழலை தவனமுமாய்க்
காய்ச்சல் கழிச்சல் குளிர்மறப்புக் கனத்துப் புறந்தா வதைத்திடினும்
ஆச்சு மரண முண்டென்றே யறியக் காய சுவாதமிதே (கசுசு)

### சிகிச்சை

### குடிநீர்

கெர்ப்பனி யான பேர்க்குக் கேடுறு சுவாதங் காய்ச்சல்
முற்படு மிருமல் சூதன் முடிவுறக் குடிநீர் கேண்மின்
சுற்றுறு முத்த மாடா தோடைதூதுளைமுள் வட்டுச்
சொற்பெறுமிவைவேர்சுக்குச்சொல்லுவல்லாரல்தேடே (கசுச)

தேடிய பிரமி சிறந்திடு மிலையும்
நீடிய மிளகு நிலவே ருடனே
சாடிய தண்ணீர் தானது விட்டு
வாடிய பின்னர் மகிழ்ந்திடன் குடியே (கசுரு)

### பெரிய சிவப்புச்சூரணம்

இருசீரகம், ஓமம், மதுரம், மாயாக்காய், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, ஏலம், இலவங்கம், சிறுநாகம்பூ, செண்பகப்பூ, செவ்வள்ளி, உள்ளி, மிளகு, திப்பிலி, கடுக்காய், வெளுத்தற்பிசின், அதிவிடயம், செஞ்சந்தனம், சிற்றரத்தை, கோரோசனை, அபின்,

சாதிலிங்கம்.வகை-கழஞ்சு-க-சூரணம் செய்து ஏழுபுடமிட்டெடுக்கவும். பணவிடை இஞ்சி, தேன்முலைப்பால், கற்கண்டு, கல்லக்காரம், உள்ளி, சுக்கு இவற்றில் குணங்கண்டு கொடுக்க காயாசுவாதம் சுவாத சாசம் முதலியன தீரும்.

### கராம்புச்சூரணம்

கராம்பு-கழஞ்சு-ச சாதிக்காய், வசுவாசி, இருசீரகம், திரிகடுகு, செவ்வள்ளி, செஞ்சந்தனம், அதிமதுரம், வால்மிளகு, சிறுநாகம்பு, மரமஞ்சள்-வகை-கழ-க சூரணித்து முன்போற் புடமிட்டு அனுபானம் கண்டு கொடுக்க மேற்படி வியாதிகள் தீரும்.

### வசுவாசிச்சூரணம்

திருவளர்பொன் னரிதாரஞ் சாதி லிங்கந்
திரிகடுகு பொரிகாரஞ் சீனக் காரம்
மருவளரும் வெண்கோட்ட மூசிக் காந்த
மாயக்கா யதிவிடயம் வெளுத்த வேலம்
உருவளரு மதிமதுரம் வசம்பு துத்த
முறுதுருசு மிலவங்கங் கடுகு ரோணி
கருவளரும் வசுவாசி குலக்கா யிந்து
காயமுடன் வெண்காரங் கராம்ப ரத்தை (கசுசு)

அரத்தைகருங் குந்திருக்கஞ் சிலையி னேடே
யானபலை மூன்றிருசீ ரக்க றாவும்
பருத்தவட்டுத் தூதுவளை கண்டங் காரி
பகருருவி நன்னாரி கழஞ்சு வீதம்
உரைத்தபடி யேழுபுடங் கொண்டு பின்ன
துள்ளியின்சாற் றினிலரைத்து நிழலு லர்த்தி
அரைத்ததூள் பணவிடைநல் லிஞ்சி தேனி
லானமுலைப் பாலதனி லருந்த நன்றாம் (கசுஎ)

கருப்பமுற்ற மாதர்பிணி கழிச்சல் குத்துக்
காய்ச்சல்முட்டுத் தொய்விரும னாவ ரட்சி
அருப்பமுறுங் குளிர்விறைப்புச் சழிய டைப்போ
டண்டிவருஞ் சுவாதமுடன் சுவாத காசம்
திருக்குலவுங் கதிரைநகர் மேவி யென்றுந்
தீராத பிணியகற்றுஞ் செவ்வேள் பாதம்
மருக்குலவு மலர்தூவி வழிபா டாற்றும்
வாலறிஞர் பாவமென மாறு மன்றே (கசுஅ)

1-புதுச்சட்டியை நன்றாகக் காயவைத்திறக்கிச் சற்றாறியபின் சூரணமிட்டு வறுத்தெடுப்பது ஒருபுடம். இப்படி-எ-முறைசெய்க.

## கெர்ப்ப சஞ்சீவிக் குளிகை

மாலுற்ற விரகமுறு மயல்கொண்டு கருவுற்ற
மாதர்பிணி மாற்று குளிகை
மணமுறு கராம்பினொடு மகிழ்சா திலிங்கமும்
மாசற்ற தொருகோ ரோசனை
நூலுற்ற படிகழஞ் சோரொன்று வசுவாசி
நுவறிரி கழஞ்சு கூட்டி
நுறவனப் பால்விடுத் தரையுமெழு காம்பத
முரியமிள களவு ருட்டிச்
சூலுற்ற குழவிதன் னெஞ்சிலே றிடுகினுஞ்
சுழல்வாய்வு பலதி ருகினுஞ்
சொற்பெரிய வுட்குத் தடைப்புடன் மார்முதுகு
சொருகுபுற வீச்சு வரினும்
காலுற்ற முசிறுதவு கனமுள் ளவித்தநீர்
கசடற வடித்து மதிலே
கரையவொரு குளிகையுரை பருகிவிட
வேபிணிகள் கதிர்கண்ட பனிகடாமே (கசுசு)

கண்டவா டாதோடை வெந்தநீர் தன்னிலே
    கருதியுரை குளிகை யொன்று
கனலிட்ட திப்பிலிப் பொடியிட் டளாவுசெங்
    1கள்ளொடு கலந்து பிணிகள்
கொண்டகூ லிக்கருளு கின்றவுட னையங்
    கொதித்தெழு சுவாத மூச்சுக்
குறையா வெதுப்பிரும லடர்கோழை குக்கலுங்
    குளிர்கூத லிட்டு முட்டுத்
துண்டமே லிட்டடரு தொய்விளைப் பீழையுஞ்
    சுடர்சு ரப்பொடு வீக்கமுந்
தொந்தித்த பித்தமுட னையம் பணைத்தபல
    தோஷமுற் றடரு சுரமும்
கண்டுற்ற காயா சுவாதமறு மேயுண்மை
    கதிரைமலை மேவு முனிவன்
கழலிணைக எனுதினம் பரவுமுயர் தமிழமுனி
    கழறுமொழி யாகு மிதுவே (கஎ0)

## கொதியெண்ணெய்

எலுமிச்சை, வட்டுக்கத்தரி, கான்றை, இயங்கு, புங்கு, குருந்து, எருக்கலை, வேம்பு, பிராய், கரம்பை, நொச்சி, தூதுவளை, சங்கங்குப்பி, குமிழ் கொடுவேலி-இவை-வேர் திரிகடுகு, உள்ளி, ஓமம், இந்துப்பு, கடுகு, அத்தித்திப்பிலி, நேர்வாளம், முசுற்றுமுட்டை நீர்வெட்டிமுத்து, இரசம், நெல்லிக்காய்க்கெந்தகம், அவின், பொன்னரிதாரம், வெண்காரம்-வகை-கழஞ்சு-க நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நறுநெய் சமன்கூட்டிக் கொதிப்பித்து வெற்றிலை வெடிபதத்திலிறக்கி ஆற்றிவேர்த்தூள் முன்னும் சரக்குத்தூள் பின்னும் போடவும். தலைக்கும் வைத்து உள்ளும் கொடுக்க காயாசுவாதம் தீரும். சுவாதகாசத்திற்குமாகும்.

1-கள்-தேன்

### வேறு எண்ணெய்

சாரணை, கையாந்தகரை, தூதுவளை, கீழ்காய்நெல்லி, பிரமி, பொடுதலை, சிறுவழுதலை, சுழலாவரை-இவை சமூலம் இயங்கமிலை, இவை வகைக்குச் சாறு-படி-உ நல்லெண்ணெய்-நாழி-க வசம்பு, திப்பிலி, மிளகு, கடுகு, பெருங்காயம், சீரகம், சிறுதேக்கு, விழாலரிசி, சாதிக்காய், பெருங்குரும்பை, வெட்பாலையரிசி, ஏலம், இலவங்கம், கொடுவேலிவேர், கோரோசனை-வகை-கழஞ்சு-ர் மெழுகுபதத்தில் வடித்து காலையில் இருகழஞ்சு கொடுக்கக் காயாசுவாதம் இருமல் கண்டத்தைப் பற்றிய வியாதி எல்லாம் தீரும்-க0-நாள்கொடுக்கவும்.

### நீற்றுப்பூசனிநெய்

நீற்றுப்பூ சினிப்பழநீர் நாலு நாழி
நிறைகருப்பஞ் சாறுமிரு நாழி யான்பால்
சாற்றியகை யான்றகரை பொன்னாங் காணி
தாழைவிழு தொடுமுசுக்கை சாத்தா வாரி
தேற்றுறுமுந் திரிகையுடன் சாம்பல் வாழை
செவ்விளநீர் தாமரையின் வளையந் நோயைப்
பாற்றுறுவெள் ளரிக்காய்தூதுளம்ப ழத்தின்
பகர்சாறு மிவையொன்றோர் நாழி கொள்ளே (களக)

கொள்ளுமிரு வேலிசிறு பூளையிலா மிச்சுக்
கோதில்கண்டங் காரிசிறு கீரையொடு கோரை
உள்ளதொரு நாரியுட னோரிதழின் மூல
மொவ்வொர்பிடி வேரிவையி னுற்றபொடி தூவி
உள்ளபழச் சாறிலைச்சா றொன்றாகக் கூட்டி
யுற்றநறு நெய்யிரண்டு நாழிவிட்டுக் காய்ச்சி
அள்ளுகற்க மதிமதுரங் கோட்டமில வங்க
மரத்தைகுலக் காயிந்து செவ்வள்ளி குப்பை (சளஉ)

சாதிகருஞ் சீரேலந் திப்பிலிவெட் பாலை
சாற்றியசெண் பகமொட்டுக் கொத்தமலி சந்தம்
ஓதியமஞ் சிட்டிகாரம் பொடுவிழால் விடய
முற்றவசு வாசிநெல்லி கண்டில்வெண்ணெய் கடுக்காய்
நீதியுட னிவைசரக்கு வகைக்கிரண்டு கழஞ்சாய்
நிறுத்தரைத்தேழ் நாளூறி யரும்பதத்தில் வடித்துப்
போதமுனி யன்றுரைத்த படிவேழ முகனைப்
பூசித்து நற்சீனி கலந்துநெய்யை யருந்தே (களசு)

அருந்திவர மங்கயர்க்கு வருகாயா சுவாத
வபிகாச முளைமாந்தை கசரோகங் கோழை
பொருந்துமையில் வருரோக மெலும்புருக்கி யிளைப்புப்
புகலிரத்த ரோகமுட னீழைவயிற் றெரிவு
வருந்தியிடு முள்ளுருக்கி யுடனுலர்த்து சூலை
வகுத்தபிணி யிவையனைத்து மாறியுட னகலும்
திருந்துசிவ னடியரடி சேர்ந்தவர்க்குத் தொண்டு
செய்யுமவர் வினைபோலத் தீர்வதுவு நிசமே (களஜ)

**நீற்றுப்பூசனிநெய் - வேறு**

சாதிக்காய், வசுவாசி, அதிமதுரம், அதிவிடயம், கோட்டம், ஏலம், இலவங்கம், சிறுதேக்கு, விழாலரிசி, மரமஞ்சள், நாகம்பூ, செண்பகப்பூ, செவ்வியம், சதகுப்பை, இந்துப்பு, கச்சோலம், சுக்கு, கற்கடகசிங்கி-வகை-கழஞ்சு-உ இயங்கு, தூதுவளை, அமுக்கிராய், கறிப்பாலை, ஆடாதோடை, இருவேலி, இலாமிச்சு, கண்டங்கத்தரி-இவைவேர்-வகை-பிடி-க நீற்றுப்பூசனிக்காய்ச்சாறு, கருப்பஞ்சாறு, மாதளம்பழச்சாறு, முந்திரிகைப்பழச்சாறு, பேரீச்சம்பழம், சாத்தாவாரிச்சாறு, பசுப்பால், நெய், இளநீர் இவைகூட்டிவடித்துத் தின்ன நாட்டப்பட்ட காயாசுவாதம் தீரும்.

## அபான வாயுவின் குணம்

மங்கை தனக்கு திருமதலை வயிற்றி லுதித்து வளர்நாளில்
திங்கண் மூன்று நாலைந்து சேருந் திங்க ளீரைந்தில்
பொங்கு முதரந் தனில்வாயு பொருமிப் பரந்து திமிரேறும்
அங்குச் சொன்னோ மடிவயிற்றி லடசு மபான வாயுவிதே (களரு)

அடசும் பரவி வாய்வதுதா னபான முதர நோவுகொள்ளும்
துடிசே ரிடையார் கருமாறித் தோன்றித் துயரங் காண்பிக்கும்
அடியு முடியுந் தான்சுருக்கி யதனோ டுதர நோவுகொள்ளக்
கொடியேரிடையாள்முகம்வேர்க்குங்கூறுஞ்சலமுங் கட்டுண்ணும்()

## சிகிச்சை

செப்பு மிதற்குப் பரிகாரஞ் சேரு முள்ளி 1மோதகமிந்
துப்பு மரைத்துப் பொடியாக்கி யுற்ற தேனிற் குழைத்துண்ண
ஒப்பாங் கான்றை வேர்சுக்கு முள்ளி யொடுகாக் கணம்வேரும்
அப்பிற் காய்ச்சி யிட்டருந்த லபான வாயு ளகன்றிடுமே (களஎ)

இடுமே முதலிற் பேதிபண்ணி யியம்பு மருந்து பிறகுகொடு
துடியே ரிடையாய் காய்ந்தநீர் தொட்டே குடிக்க நன்றாகும்
படிசே ருள்ளி தனைப்பாலி லவித்துக் கடைந்தே யோமமதிற்
பொடிகுங்குமப்பூமேற்றூவிக்கொடுக்கவகலும்பொருவாயு (களஅ)

## குதிரைவலி

## வரலாறு

சீதத்தின் மந்தந் தோன்றித் திமிர்த்ததில் விறைப்புண் டாகிச்
சேதத்தின் மண்ணீ ரோடு தேயுவாய் வாகா யங்கள்
பேதத்திற் குளிவுந்தொன் றாகிப் பெருத்திடுங் குணங்கள் பித்த
வாதத்திற் சன்னி தோன்றில் வலித்திடும் வலியாய் வந்தே(களகூ)

1-மோதகம்-ஓமம்

கன்னிச்சூன் மகளிர் தங்கள் கடுங்கொடும் வினைகீ டாகிச்
சென்மவுற் பத்தி யான தினமுதற் பத்தாந் திங்கள்
வன்மத்தி னலைத்த மார்பன் வலியதே வதையை யேவக்
குன்மத்தின்கொடுமையானகுதிரையின் வலிவந் தெய்தும் (கஅ0)

**குணம்**

காலுங் கரமுங் கண்மூக்குங் கதிக்கத் திருகி வலியுண்டாம்
மேலுங் கனன்று கண்சிவந்து மிகவு நெஞ்சிற் சழிகட்டித்
தோலுந் தசையும் படபடெனத் துடித்துக் கண்ணு மிமையாதால்
ஆலம் விழியார் குதிரைவலி யாகு மிதுகண் டறிவீரே (கஅக)

**அசாத்தியக்குறி**

எண்ணுஞ் சன்னி வாதத்தி லிதுவுங் குதிரை வலியென்னும்
கண்ணிற் புருவங் கதுப்புதரங் கரமுங் காலு மொருபக்கம்
எண்ணு நுரையு மிகுந்துதள்ளி யேறத்திருகி வலியுண்டாம்
விண்ணைப்பார்த்துவிழிநிற்கின்மீளா திதுவுந் திண்ணமிதே (கஅஉ)

கண்ணும் வீழ்ந்திட் டொளிகுன்றிக் கண்டத்தடைத்துச் சிலேற்பன
உண்ணின்றிழுத்து வரண்டடைத்தேயுற்றுச் சலமு மலமழிந்திட் மும்
டெண்ணம் வேறாய் மெய்குளிர்ந்திட் டிழுத்தே வலியு மிள்ளடங்கில்
விண்ணின்றியமன்லிடுந்தூதாய்விளம்புமரியவாயுண்மறை (கஅக)

பிள்ளையும் வயிற்றிற் செத்துப் பெருந்திமிர் விறைப்புண்டாகி
கள்ளமார் வலியு முள்ளே கரந்துறச்சன்னி தோன்றி
மெள்ளவே மூச்சுமாகி விறைத்துடனிருக்கும் மாகில்
கொள்ளவே கூற்று வந்த தெனமனந் துணிந்து கொள்ளே (கஅரு)

**சிகிச்சை**

மந்தத்திற் றிமிருண் டாகி வலிவரு மூன்றாஞ் சாமம்
தொந்நித்து வலிக்கத் தானே தொங்கிடும் பிள்ளை நெஞ்சில்
அந்திக்கப் பிள்ளை சாவா லடுத்திடு மயக்குஞ் சோர்வும்
சந்திக்கு முபாயத் தாலே சாபிள்ளை விழுத்தப் பாரே (கஅசூ)

பிள்ளைதான் விழுந்த பின்பு பெருந்திமிர் விறைப்பு மின்றி
மெள்ளவே யுள்ளிக் கஞ்சி விழுங்கியே யறிவுண் டாகில்
உள்ளநன் மருந்து நையங் கலிங்கநற் றயிலஞ் செய்க
கள்ளமார் விதியை யாரே கண்டுணர்ந் தறிய வல்லரர் (கஅஎ)

குணம்வருங் குறியுண் டாகிற் குறித்ததா னத்திற் சுட்டே
இணங்கிய வெண்ணெய் வைத்து மிதரமத் திக்க நன்றாம்
அணங்குறு கோழி யண்டத் தயிலத்தில் வலிய லெண்ணெய்
உணங்கிய சரீர முற்றும் பொருத்தென வுரைக்கும் வேதம் (கஅஅ)

குதிரைவலியானது தலைப்பிள்ளைத்தாச்சிக்குவயிறு நோகிற அவதியில் வரும் அது உண்ணும் உணவின் பேதத்தினாலும் பிறகோளாறுகளினாலும் வயிற்றில் மந்தந் தோன்றி அதில்வாதமும் சன்னியும் வயிற்றிலடங்கப் பிள்ளை விக்கினப்படும். வாதத்தில் சன்னி என்னும் விஷம் சேரவலியுண்டாகும். வலிகண்டவுடன் தாமதமின்றிப் பிள்ளையை வெளிப்படுத்தும் வழிபார்க்கவேண்டியது வயித்தினுடைய கடமை. பெரும்பாலும் பிள்ளை வயிற்றுள்ளேயேசாகும், சிலது பிறந்தபின் இறப்பது முண்டு வயிற்றிலே பிள்ளை இறந்து அதனால் சன்னி தோன்றி வலிவருமாயின் மீளுதல் அரிதென்றறிக.

தலைப்பிள்ளைத்தாச்சிக்கு பிரசவ நோக்காட்டுக்குமுன் ஐந்துநாட்களுக்குள் வருவதுவே குதிரைவலி என்று அறியப்படும். அதற்குமுன் வருவதும், பிள்ளைப்பெற்று ஐந்து ஆறுநாட்களுக்குள்

வருவதும், வழிப்பிள்ளைத்தாச்சிக்கு வருவதும் ஆகிய இவையெல்லாம் குதிரைவலி யன்று மந்தவலி, அதிமந்தவலி, வாதசன்னிவலியாயும் வருவதுண்டு. அவற்றினியல்பு சிகிச்சை முதலியன எல்லாம் வலிநிதானத்திற் கண்டறிக. இங்கு கூறப்படும் சிகிச்சைகளும் எல்லாவலிகளுக்கும் ஏற்றனவேயாம்.

பிள்ளைபெற்றபின் வயிற்றுப்புண் ஆறும்போதும், முற்றாய் ஆறாமலிருக்கும்போதும் வலிவரக்காத்திருக்கும். (அதற்கு பின்வரும் செய்யுள் உதாரணமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது).

"சூலநீங் கியபின் பெற்ற சூற்பைப்பு ணாறி டாதேல்
கோலவேல் விழியாய் புண்ணிற் குறைவிருந் திடுமப் போதும்
1சூலத்தி லேற்புண் டாகித் தொடர்ந்திடும் வலிதா னென்று
வாலறி வுடையோ னக்காள் வகுத்துரைத் திட்டா னன்றே" (கஅகூ)

புண்முற்றாயாறிய பின் மந்தசன்னி வலியாய், அதிமந்தவலியாய் ஏகதேசத்தில் வருவதுமுண்டு.

### மந்தவலி குதிரைவலியின் பொதுக்குணத்தில் அசாத்தியம்

தலையாம் பிள்ளைத் தாச்சிக்குத் தான்முன் றைந்தே ழொன்பானாள்
தலைதான் மூழ்கி னன்று பின்னாட் டலையும் வலித்து மிகக்குத்தி
உலைவாய்ப் பிடரி தனைவாங்கி யுபாதி பண்ணி நாள்விட்டும்
அலைவாய் மூன்று நாலுவலி வலித்துச் சற்றே யாறிடுமே (ககூ0)

ஆறா வலியுந் திமிருண்டா யடுத்து விடாமற் பசிதோன்றக்
கூறு வித்து மூன்றாநாட் கூறுள் வலியாய்த் தோன்றாமல்
மீறிவலித்துச் சன்னிகண்டு விண்ணிற் சேரு மென்றறிவாய்
கூறுவலிமேற்பார்வைதிமிர்குறையாதாகின் மருந்தென்னே (ககூக)

கொடுக்குமருந்திற் குறைவிலையேற் கொல்லும் வலியு மென்பார்கள்
அடுக்கும் வலிவந் தடுக்குமுன மறிவாய் வலது பாரிசத்தில்
மிடுக்காய்க் குத்தித் தலைகனத்து மேவு மொருசார் கால்கரமும்
தொடுக்குங்கண்ணு முகந்தானுங் தொடர்ந்து சுழித்து வலியாமே()

வலிக்கும் போது கண்புரளும் வாய்கண் புருவ மூக்குநுனி
சுழிக்கு மந்தப் பக்கத்திற் சொற்கால் விரல்கள் குறண்டிவிடும்
நலிக்கு மிந்த வலிசீலாய் வழியச் சேற்ப நெஞ்சடைக்கில்
கலக்க முறவே மரணமென்று தமிழ்தேர் முனிவன் கழறினனே ()

வலிகண்டவுடன் பேதிக்குக் கொடுத்துப் பிள்ளைபிறப்பதற்கு வேண்டிய சிகிச்சை செய்து பின் அதற்குவேண்டிய அஞ்சனம் நசியம் முதலியவற்றைச் செய்க.

### இலசுனாதி அண்டத்தைலம்

உள்ளியிரு பலமுரித்தே யரைத்துச்சீலை
யுறப்பூசித் தெளிவெண்ணெய் விளக்கிற் காய்ச்சித்
தள்ளரிய கோழிமுட்டைத் தயிலத் தோடு
சன்னிவிரை வசம்பிவைகள் பொடித்துத் தூவி
அள்ளுமெண்ணெ யுறநசியங் கலிங்கஞ் செய்தே
யருஞ்சிரத்தும் பூசியுள்ளு மளவ தாகக்
கொள்ளவே யந்திசந்தி வலிபோ மென்று
கூறினா ராயுண்மறை யுணர்ந்த மேலோர் (ககூச)

உள்ளியை அரைத்துச் சீலையிற் பூசித் பந்தச்சுற்றி வேம்பெண்ணெயிற்தோய்த்துச் சுடர்த் தையிலம் இறக்குக அத்துடன் கோழி முட்டைத்தைலம் சமனிடை கலந்து சூட்டுடன் வசம்பும் சன்னிவிரையும் பொடிசெய்து தூவிப்பின் உபயோகிக்க.

## கொதியெண்ணெய்

வெண்கா யுள்ளி நேர்வாள மிகுந்த சுக்கும் திரிகடுகு
நண்பாங் கடுகு பெருங்காயந் நற்சீ ரகமும் வெந்தயமும்
மண்பார் விளைந்த கெந்தகமும் வசம்பு வெளுத்தற் பிசின்காரம்
உண்பா ரசமோ தகந்துரிசி னுடனே குதிரை வாலிவட்டே (கசுரு)

வட்டக் குருந்து தூதுவளை வலிய முருங்கை சாரடைவேர்
துட்டக் கொடுவே லியுஞ்சற்றே துய்ய வாடா தோடைநொச்சி
மட்டுக்குலவும் வெள்வேலு மதிக்கி லிவையொன் றொருநிறையாய்த்
திட்டந்தெளிவெண்ணெயிற்கொதித்துத்தின்னக்குதிரைவலிபோமே
(கசுசு)

## கொதியெண்ணெய் - 2

தூதுவளை யெருக்கவுரி குதிரைநெடு வாலி
தூயவெள்வேல் சிறுகுருந்து நொச்சிகொடு வேலி
மீதுவளர் முருங்கைவட்டி னுடனாடா தோடை
மிகுந்தசா றணைநிலவேர் முசிறினது முட்டை
தாதுவளர் பெருங்காய முள்ளிசிறு திப்பிலி
தனிமிளகு வெளுத்தலுட னேர்வாளந் துரிசு
தீதினெல்லிக் கெந்தியுலு வாக்கடுகு சீரஞ்
சீனத்தின் காரமி வைவகைக் கிரண்டு கழஞ்சே (கசுஎ)

சரக்களவு வேர்த்தூளுஞ் சரியாய்க் கொண்டு
சாற்றுநிம்ப வெண்ணெய்கொத்திற் கொதியாய்த் தூவிப்
புரக்கவெண்ணெய் சிரத்துமுள்ளும் பொருத்திப் பூசிப்
புகைநசிய மஞ்சனமும் பொருந்தச் செய்து
பரக்கவுடம் பிலும்பூசி வருவீ ராகிற்
பகர் குதிரை வலிபூதஞ் சன்னி குத்துக்
குரக்குவலி பூ஌ையுடன் குமர கண்டன்
கொடுங்காக்கை யமர கண்டன் குலைந்து போமே (கசுஅ)

## பெரிய கொதியெண்ணெய்

எருக்கவுரி தூதுவளை சன்னி நாய
நிசைவான பேரமட்டி மணித்தக் காளி
தருக்குநொச்சி மாவிலங்கை குதிரை வாலி
தனிச்சிவதை கொடுவேலி முருங்கை கான்றை
பெருக்குமுத்த மாகாணி குருந்து மூன்று
பெருமருந்து கிலுகிலுப்பை வாதங் கொல்லி
மருக்கொள்புங்கு தில்லையுவா யாடா தோடை
வருசீந்தில் கன்முரிசோ டமுக்கி ராய்வேர் (கசுகூ)

குக்கிலுள்ளி கெந்தகநற் ருசினுடன் கோட்டங்
கொத்தமல்லி பெருங்காயம் வெளுத்தலிரண் டரத்தை
தக்கவசம் புடன்கடுக்காய் மிளகுசத குப்பை
சன்னிமஞ்சள் தேவதாரங் கடுகுசிறு திப்பில்
மிக்கநற்சீ ரிலவங்க மேலமார மஞ்சண்
மிடுக்கான செண்பகப்பூ வழிஞ்சில்கழற் பருப்புத்
தொக்கமகிழ் முருங்கைசில்லுப் பருப்புமிவை கூட்டிச்
சூதமுடன் சரக்கிவையோர் கழஞ்சுநிறை வாங்கே (உ00)

வாங்கியநற் சரக்குடன்வே ரிடித்து மாவாய்
வறுத்தமுகிற் றண்டமுட னிலவேர் தானும்
ஓங்கிவளர் நிம்பவெண்ணெய் கொதியிற் றூவி
யுடனிறக்கு கோழியண்டைத் தயிலஞ் சேர்த்துத்
தாங்கியநற் சிரத்தில்வைத்து மேலும் பூசித்
தகுசெவியின் னாசியில்விட் டுள்ளுங் கொண்டாற்
தீங்குதரு வலிகளெல்லாந் திடுக்கிட் டோடித்
தீர்ந்திடுமென் றாயுண்மறை செப்பு மன்றெ (உ0க)

## இராமபாணத் தைலம் - வேறு

ஈசுவரமூலிவேர், கான்றைவேர், நொச்சிவேர், மாவிலங்கைவேர், மயிலடிக்குருந்து, பிச்சுவிளாத்தி,சிறுகிளா, கோழிவரை, தூதுவளை, வட்டு, வேம்பு, கொன்றை, அலரி, அரமுறி இவை எல்லாம் வேர் சமன்கொண்டு இடித்துத் தூள்செய்து சதுரக்கள்ளிப்பால் செல்லுமளவு விட்டுக்குழைத்து, சதுரக்கள்ளி அடிக்கட்டைவெட்டி, உட்சோற்றிதள்ளி அதனுள் மருந்தைவைத்துச் செம்மி, கட்டையினால் வாயை அடைத்து தயிலம் விழுவதற்கு ஓர் தூவாரம்விட்டு அது தவிர மற்றிடமெல்லாம் பசுச்சாணியினால் கவசம்பூட்டி மூன்றுசிலை மண்செய்து எருவினால்மூடிப் புடம் போடத் தயிலமிறங்கும் அதுகண்ட இடைக்குக் கோழிமுட்டைத்தயிலமும் வேப்பெண்ணையும் சமன் கலந்து திரிகடுகு, உள்ளி, வசம்பு, சன்னிநாயன், வெளுத்தறபிசின், இவைகூட்டிக் கொதிப்பித்து நெற்றி, காதடி, கன்னக்சுழி, தலை, உள்ளங்கால் முதலிய இடங்களிற்பொருத்தி உள்ளுந்தின்றி கடுகுபுகை காட்டவும் குதிரைவலி, ஏர்ப்பு சன்னி, வாதம் முதலியனதீரும்.

## நசியம்

திரிகடு குள்ளி காயஞ் சேருமிந் துப்ப ரத்தை
மருவுறு கராம்பி னோடு வசம்புவெண் கார மின்னம்
வருமதுகா கத்தின் கட்டி யுடன்வசு வாசி சீனத்
துரைபெறு கார நல்ல பனரையின் பழமி தெல்லாம் (உ0உ)

நிறைதர வெடுத்த ரைத்து நேர்முலைப்பாலிற் கூட்டிக்
குறைவற நசியஞ் செய்யக் குதிரையின் வலிபேய் பூதம்
விறைதரு சன்னி மூர்ச்சை வேறுள வலிக ளெல்லாம்
மறுவற வோடு மென்று மாதவ னருளிச் செய்தான் (உ0ஞ)

பூகம் பழமும் பழவாப்பும் புதிய மிளகோ டிந்துப்பும்
ஆகத் தடங்கு மகத்திப்பா லதுவோ டொக்கப் பொடிசேய்தே
வேகக் குதிரை வலிதனக்கு விடவே யோடு மிதுவன்றிப்
பாகக் கபால வலிபூதப் பசாசும் பறந்து போமன்றே (உ0க)

## அஞ்சனம்

திப்பிலி மிளகு 2நாக வல்லியின் சிறந்த காம்பு
பொற்பற வரைத்துத் கண்ணி லஞ்சனம் போடு வீரேல்
முற்படு வலிக ளோடு பூதங்கண் முர்ச்சை யாதி
சொற்பெறுசன்னிமற்றுந்தொலைத்திடுமென்றார்முன்ளோர் (உ0ரு)

இவையன்றி இன்னம் 3காயம், மாத்திரை, தைலம் முதலியவற்றால் சிகிச்சைசெய்து வலிதீராவிடல் மூன்றாம்நாள் அல்லது ஐந்தாநாட் கொல்லும். அதுகடந்து கொல்லாமலும் சிகிச்சைக்கு வசப்படாமலும் நின்றால் அல்லது குறித்த நாட்களுக்குள்ளும் சிகிச்சையை பொருட்படுத்தாது நோய் மீறினாலும் இரட்சை செய்யும் படி:-

கதிரைமலைமுருகன் சழலிணைகளில் நம்பிக்கைவைத்து பொற் கம்பியின் நுனியைப் பிறைபோல் வளைத்து மண்சட்டியில் வேப்பம் புறணியினாற்மூட்டி மேற்படி இரட்சைக்கருவியைக் காய்ச்சிக் கொண்டு இரட்சைவிதியிற் கூறிய முறையறிந்து உச்சிச்சுழியிற் புள்ளடிச்சூடும், பிடரிச்சுழியின் மேற்பொருத்திற் களவக்காற்சூடும், கையிரண்டிற் சவடியென்பிற் பிறைக்காற்சூடும், தோட்பொருத்திற் சவ்வுக்கருகாகக் கவைக்காற்சூடும், கபாலச்சுழியிரண்டிற் சுடவேண்டியதானத்தில் அதுபோற்சூடும்,

1.பூகம்பழ – பழப்பாக்குக்கோம்பை 2- காகவல்லி – வெற்றிலை
3- இதற்குவேண்டிய காயம் மாத்திரை முதலியவற்றை வலிநிதானம் சன்னி

கபாலச்சுழியின் சவ்வுக்கருகாகக் கையிற்பொருத்திரண்டிலும் ஒரு அளவாகச்சுட்டு, இரண்டுகாலினும் கீழ்ப்பரண்டைக்குமேல் மூன்றங்குலங்கழித்து உள்ளாகக் காலில்லிரலைக்கழித்துப் படத்திலே மூன்றங்குலத்தளவு அளந்துசுட்டு அதன்பின் எல்லாச்சூட்டிற்கும் எருக்கலம்பால் மத்திக்கவும். பின்பு இரசமும் துரிசும் அரைத்து மத்திக்கவும்.

சுடமுன் உடம்பின் நிலையறிந்து சூடுதாங்முடியாத உடம்பாயினும் வேறு தடுப்பவர் உளராயினும் சட்டை செய்யாது விட்டுவிடவும்.

சிகிச்சையைமீறி உயிர்போகும் அவதியிற்னானே சுடவேண்டியது.

அன்றியும் சிரைவிதியிற் கூறிபடி கையில் காரிசத்தோட்ட நரம் பறிந்து இரத்தங்குத்தி வாங்குதலும் ஆகம்.

## கருங்கிரந்தியின் குணம்

மங்கை தனக்குத் திருமதலை வயிற்றி லுதித்த நாண்முதலாய்
அங்கந் தலைகா லம்முகமு மரிக்குந் தினவு மிசக்கொள்ளும்
பொங்குங் கரிய முட்போலப் போடு மங்கம் விருவிருக்கும்
சிங்கணாலைந்தாறெட்டிற்றிடனாய்க்கருவை யழிப்பிக்கும் (உ0ஈ)

கருவை யழிக்குங் கருங்கிரந்தி கால்கை யெரியும் வயிற்றுவலி
அரிவை வயிற்றிற் றுவாலையுண்டா மார்பு மிடுப்புத் துடையுளையும்
திருவே யனையார் திருமேனி சேரச் சோருஞ் சோகமுண்டாம்
வருகைக் குரிய பண்டிதர்கள் மதித்தே யறிந்து கொள்ளநன்றே ()

வருந்திட மேனி நொந்து வயிற்றினில் வலியுண் டாகித்
திரிந்திட வங்கம் பூரித் திடர்செயுங் குருதி பாயும்
மருங்கொடு விலாவி ரண்டும் வயிறது மிரைச்ச லுண்டாம்
கருங்கடுங் கிரந்தி யென்று கருத்தினி லறிந்து கொள்ளே (உ0அ)

### சிகிச்சை

கருத்துறு புடை கரப்பான் கருங்கொள்ளிக் கரப்பன் வீங்கி
வருத்திடுங் கரப்பன் பித்த வாதசேற் பனக ரப்பன்
பருக்கிடுஞ் செங்க ரப்பன் பலத்ததோ ரெரிக ரப்பன்
திருத்தம்மரங் சுருங்க கரப்பன் றீர்ந்திட மருந்து சொல்வாம் (உ0ங)

தீர்ந்திடு செங்கத் தாரி சேர்கரு நொச்சி கொற்றான்
சார்ந்திடுங் கழற்சி புங்கு சங்கொடு சங்கங் குப்பி
பேர்ந்திடு கிரந்தி நாயன் புகல் செருப் படியுஞ் சன்னி
கூந்தல்வே லிப்ப ருத்தி கொடியவெள் ளறுகு கூட்டே (உக0)

கொடியவேம் பாடற் பட்டை கூறிய சிவனார் வேம்பு
நெடியதோர் சிவதை மூல நெருங்கிய கண்டங் காரி
பொடியது கடுகு ரோணி பூகத்திற் கரப்பன் பட்டை
வெடியசீ ரகமி ரண்டு விளக்கெண்ணெ யெரித்து வாரே (உகக)

### பெருங்கிரந்தியெண்ணெய்

உற்றதொரு செம்பரத்தை யதனிற் பூவு
முவந்தமுசு முசுக்கயிலை பருத்தி யோடு
குற்றமறு முருக்கமிலை குக்கு டத்தின்
கொளுமிலையுந் 1தாடிமத்தின் பிஞ்சி தெல்லாம்
சொற்றபடி சாறுவகை படிதான் கூட்டிச்
சுகந்தரு 2மே ரண்டவெண்ணெய் படியு மாகும்
மற்றினிக்கேள் சட்டியினி லிட்டுக் கொண்டு
வகுத்தபடி தீயெரித்துப் பாதி யானால் (உகஉ)

வேலிலந்தை யொதிநாவ லாத்தி புங்கு
விளங்கிலுப்பை கிளுவையிவை பட்டை வெட்டி
நூலிலங்கு குறித்தபடி கண்டங் காரி

நூவல் முசுக்கை சிறுகுறிஞ்சி கிரந்தி நாயன்
சேலிலங்கு விழிமடவாய் செங்கத் தாரி
செப்புமிவை யனைத்தும்வேர் கழஞ்சி ரண்டு
மாலிலங்கு சாதிக்காய் மிளகு மஞ்சண்
மாயாக்காய் வசுவாசி புரியி ரண்டே (உகங)

ஏலமில வங்கமுள்ளி சிவந்த சந்த
மிந்துப்பு வசம்புகடுகு நற் சீரம்
கோலமுறு வேர்க்கொம்பு கடுக்காய் கைப்புக்
கூறுகளிப் பாக்குமல்லி யொடுசெவ் வள்ளி
தாலமதிற் பெருமரத்திற் பட்டை யெல்லாஞ்
சரியாக வொருகழஞ்சு பறங்கிப் பட்டை
மேலுமிரு கழஞ்சிடித்துப் பொடிய தாக்கி
வீசியெண்ணெய் மெழுகுபதம் வடித்துக் கொள்ளே (உகச)

வடித்தவெண்ணெய் கருவுயிர்த்த மூன்றா மாதம்
வளமைபெற மூன்றுநாட் கரண்டி வீதம்
குடித்தபின்பு நாலுமதி நாலு நாட்கள்
கொண்டுவரத் தசமதிக்கு மிந்த வண்ணம்
தடித்துவருங் கிரந்திவகை யனைத்துந் தீருந்
தாயுடனே சிசுவுக்குஞ் சுகமே மேவும்
படித்துவருந் தமிழுணர்ந்த மலைய மேலோன்
பகர்ந்தன்னிவ் வண்ணமருட் பண்பி னாலே (உகரு)

*1- தாடிமத்தின் பிஞ்சு-மாதளம்பிஞ்சு*
*2- எள்ளெண்ணெயது-என்றும்பாடம்*

## பெருங்கிரந்தி யெண்ணெய் - 2

வல்லாரல் கிரந்தி நாயன் மால்காந்தி குதிரை வாலி
சொல்லுநன் னாரி தூது வளைபஞ்ச பாண்ட வர்க்காம்
முல்லைகன் முரிசி னோடு முதிர்ந்தவெள் ளறுகு பின்னும்
நல்லதோ ரசுவ கந்தி நபந்தசிற் றவரை யாமே (உகக)

கறுத்தக்காக் கணமி தெல்லாங் கருதிய சமூல மாகும்
தறித்தவேர் செங்கத் தாரி தகுமிரு வேலி வட்டு
நிறுத்திடு மவுரி மிச்ச நிலக்குமிழ் திராய்வேர் கூட்டிக்
குறித்தகர்ப் பூர வள்ளி குரங்கின்கை பிரமி சாறே (உகஎ)

சாறிவை படியொவ் வொன்று தகுமெள்ளி லெண்ணெய் தானும்
கூறுமொன் றரையாங் கோட்டந் திப்பிலி மதுரம் வாசி
நாறுவெள் ளுள்ளி மல்லி நற்குலக் காய்க ராம்பு
தேறெனு மஞ்சள் கைப்புக் களிப்பாக்குச் செண்பக கப்பூ (உகஅ)

சீரக மிரண்டு நாகம் பூவுட னேலந் தேவர்
தாருசெம் பரத்தை யிற்பூத் தகுமிள கிவைக ழஞ்சாய்
ஆரவே யிடித்துத் தூவி வடித்துண்ணைக் கிரந்தி தீரும்
வார்முலை மானே கெர்ப்பம் வளர்ந்திடு முண்மையாமே (உககூ)

## செம்பரத்தம்பூ எண்ணெய்

திருமதலை வந்துதித்த சேயிழையார் தங்கள்
கருவழிக்கும் பொல்லாக் கருமை – தருமுதிய
தீய கிரந்திவகை தீர்வதற்கு வேண்டுமெண்ணெய்
ஆயக்கருப் பூரவள்ளி யத்தோடு சேயதொரு
செம்பரத்தை தன்னிலையுஞ் சேர்சா றிருநாழி
நம்புமெள் ளெண்ணெ யொருநாழி – வம்பவிழும்
கூந்தன் மடமானே கூட்டியொரு சட்டிதனில்

ஏய்ந்தசெங் கத்தாரி யீர்துடரி – வாய்ந்த
கருஞ்சூரை நீர்ப்பூலாக் காட்டுகொன்றை யோடு
வருஞ்சாய வேர்நாரி வண்மை – தருந்திருவே
விட்டாடி தானுமிவை வேரிருசி ரகங்கடுகு
மட்டாருஞ் சந்து வசுவாசி - இட்டமுறும்
சாதிக்காய் செவ்வள்ளி சாளியாக் கொத்தமல்லி
பேதிக்கா மோமம் பெருவசம்பு – தீதற்ற
கைப்புக் கடுக்காய் களிப்பாக்கு மாயாக்காய்
செப்புங் கராம்புசெஞ் சந்தனமிந் - துப்பினுடன்
பூத விருக்கம் புகன்மதுரந் திப்பிலியும்
ஓதுமி ருள்ளியிவை யோர்கழஞ்சாய் - மாதே
அரைத்தெண்ணெ யிற்கலக்கி யான வடுப்பில்
எரித்துவற்றி யான்சாணி யென்றே – உரைத்தபதம்
தன்னி லிளநீர் தனையுமிரு நாழிவிடுத்
துன்னுசெம்ப ரத்தையிற்பூ வோதுகேன் - முன்னி
ஒருநூறரைத்தே யுறக்கலக்கி மேலாய்
வருநற் பதத்தில் வடித்துக் - கருவுயிர்த்த
சேயிழையா ருண்ணுகின்ற செய்திகேண் மாதமொன்றுக்
கேயு மொருகரண்டி யேற்றியே – நேயமுடன்
தின்றுவர மாறாத செங்கிரந்தி செங்கரப்பன்
துன்றுங் கருங்கிரந்தி தோஷமெலாம் - நன்றாகத்
தீர்ந்து கருவளருஞ் செப்பியநற் பாலகர்க்கும்
ஓர்ந்து தலையினில்வைத் துள்ளருத்த – நேர்ந்துவரும்
செங்கிரந்தி செவ்வாப்புச் செங்கரப்பன் விற்புருதி
பொங்கும் பொரிகிரந்தி போந்தகனை - தங்கிருமல்
ஆதியநோ யெல்லாம் மரிய சிவ புண்ணியங்கள்

போதமுடன் செய்து புசிப்பற்றோர்க் - காதரவு
நல்கி யுணவளிக்கு நற்றவத்தோர் பாவமெலாம்
நில்லா தொழிந்துவிடு நேர்மையென – வல்லே
யொழிந்துவிடு மென்றே யயர்ந்த முனிவன்
மொழிந்த தமிழ் கண்டீர் முதல் (உஉ0)

## கிரந்தியெண்ணெய்

இருசீரகம், மாயாக்காய், திப்பிலி, ஓமம், செவ்வள்ளி, கடுக்காய், கராம்பு வெளுத்தற்பிசின், புல்லாந்திவேர், கிரந்திநாயன்வேர், கொடிக்கழற்சிவேர், கருவிளைவேர், நிலக்குமிழ்வேர், எருமைமுல்லைவேர், வெருகு, சாத்தாவாரியிலை, குன்றிமணியிலை சமன்கூட்டி நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்து வெயிலில்வைத்து எடுத்து தலைக்கும் வார்த்து மாதந்தோறும் கரண்டி எண்ணெய் குடித்துவரவும்.

## கொதியெண்ணெய்

கோழியவரைவேர், சிற்றவரைவேர் இரண்டும் சமன்கொண்டு இடித்து தூள் -பிடி-க கோடகசாலை விட்டுணு கிராந்தி இரண்டும் சமன்கொண்ட இடித்து தூள் பிடி - க திரிகடுகு, இருசீரகம், மஞ்சள், செண்பகப்பூ, ஓமம், வெள்ளுள்ளி - இவை தனித்தனியிடித்ததூள் - வகை – கழஞ்சு – க நல்லெண்ணெய் ஒருநாழியற் கொதிப்பித்து பத்துமாதமும் முன்போலத்தின்றுவரவும். செவ்வாப்பு கருவாப்பு முதலிய கிரந்தி வகை எல்லாம்தீர்ந்து கருவர்த்திக்கும்.

## சூசிகாவாயுவின்குணம்

மங்கையர்க்குக் கருப்பமுற்ற பத்தா மாதம்
வாயுவினில் வாயுவதிற் பித்தந் தோன்றித்
தங்குகெர்ப்ப பிரவேசங் கண்டா லங்கந்
தனில்வெயர்வை பெலவீனந் தாது நாசம்

அங்ககம்ப மயிர்க்கூச்ச நெற்றி வேர்வை
யாயாசங் குருதிவலி யழலும் வேகம்
துங்கவிழி யுறங்காதோங் காளாங் கண்டாற்
சூசிகா வாயுவெனச் சொல்ல லாமே (உஉக)

### சிகிச்சை

### பலவாய்வுக் குளிகை

சுக்கு, இஞ்சி, சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், இந்துப்பூ, இருசீரகம், கடுகுரோணி, மிளகு, உள்ளி, வெட்பாலை, கல்நார், கல்மதம், வெண்காரம், சாதிக்காய், கைப்பு, திப்பிலி, திப்பிலிமூலம், உலுவா, மகரப்பூ, ஓமம், சீனக்காரம், மதுரம், கராம்பு, கழற்சிப்பருப்பு, சிவதைவேர், மல்லி – வகை கழஞ்சு 1 சாதிலிங்கம், மனோசிலை, காந்தம் இவை மூன்றையும் நன்கு சுத்திசெய்துகொள்ளுக. சுக்கு, ஒருபலம் தோல்சீவி எட்டொன்றாயவித்த நீர்விட்டு – நான்கு சாமமரைத்துப் பயறளவு உருட்டி நிழலுலர்த்தி சாம்பிராணிப்புகை கர்ப்பூரப்புகை மூன்று நாட்கொடுத்து வைத்துக்கொள்ளவும்.

உள்ளி, மிளகு, சுக்கு. உலுவா, காக்கணம்வேர் அவித்தநீரில் இரண்டு குளிகை கொடுக்க சூசிகாவாயு, அபானவாயு, சுரேணிதவாயு வயிறுநொந்து வலிக்கும் சூலைவாயு முதலியன தீரும் கெர்ப்பனிக்கு மலங்கழிந்தால் நற்சீரகமும் ஓமமும் கருகவுறுத்தவித்த நீரில் இரண்டு குளிகை கொடுக்கவும்.

### வெள்ளை வெண்காயக் குளிகை - வேறு

சிற்றரத்தை, திரிகடுகு, ஊசிக்காந்தம், அக்கறாகாரம், வசுவாசி, கராம்பு, சாதிக்காய், ஏலம், கடுகுரோகணி, பெருங்காயம், ஓமம், வசம்பு, உலுவா, சதகுப்பை, கடுகு, பொரிகாரம், கறுவா, நற்சீரகம், மல்லி, வெண்காரம், கோட்டம், அதிமதுரம், வெள்ளிலோத்திரம், கருஞ்சீரகம் - வகை – கழஞ்சு -1 தோல்நீக்கிய

வெள்ளையுள்ளி பலம் - *1* – உத்தமாகாணிச் சாற்றாலாட்டித் தூதுளம்பழமளவு உருட்டி நிழலுலர்த்தி வைக்கவும். அனுமானம் - வெந்நீர். உள்ளி சாரணைக்கிழங்கு அவித்த நீர் முதலியனவாம். பத்து மாதமும் கொடுக்கலாம்.

### வெள்ளை வெண்காயக் குளிகை - 2

வெள்ளையுள்ளி பலமாறு தோடு போக்கி
வேர்க்கொம்பு தோனீக்கி யரைப்ப லந்தான்
கள்ளமறு மிளகுபல மரைய தாகுங்
கராம்பிருசீ ரகங்குலக்காய் சிறிய மூலம்
தள்ளரிய பெருங்காய மதுர மேலஞ்
சன்னிவிரை மாயாக்கா யிலவங் கத்தோல்
விள்ளரிய திப்பிலியுங் கழஞ்சோ ரொன்று
விரும்புவசு வாசிகழஞ் சிரண்டு கூட்டே (உஉஉ)

கூட்டுசரக் கெலாமிடித்துத் தூள தாக்கிக்
கூறுமுள்ளி யறுபலமுஞ் சேர்த்த ரைத்துத்
தோட்டுனே முளையதுவு நீக்கிக்கொண்டு
சுத்திசெய்த நேர்வாளங் கழஞ்சு மூன்று
போட்டொருபங் கினிலரைத்து வெந்நீ ராலே
புகறூதின் பழமளவா யுரட்டித் தேனும்
ஈட்டுமிஞ்சி தனினீ ருங் கூட்டி யுண்ண
வேகுமே யுதரத்தின் மந்தம் வாயு (உஉங)

வாயுவறுங் கெர்ப்பனிக்குப் பேதி வேண்டின்
வண்மைபெற நேர்வாளஞ் சேர்ந்த பங்கில்
ஏயுமொரு குளிகையிஞ்சி தேனி லுண்ண
விசைவாகும் பலவாயு பக்கந் தன்னில்

வாயுவுட னபானத்தில் வாயுந் தீரும்
வருபேற்றி னோக்காட்டைத் தடுத்து நிற்கும்
வாயுவது மகலுமென வாயுள் வேதம்
வகுத்தமுறை தேர்ந்தியற்றல் வழக்கா மன்றே (உ உ ச)

## பெருங்காய வில்லை

பொருங்காயம், உள்ளி, மிளகு, திப்பிலி, வசம்பு, வேப்பங்கூர் சமன்கொண்டு வெந்நீர் விட்டரைத்துச் சிறுவில்லையாகத் தட்டி எலுமிச்சமிலையில் வைத்து ஓட்டிற் கருகப் புடமிட்டெடுக்கவும். வெந்நீரிற் கொடுக்க வாயு, விறைப்பு, வேர்வை வயிற்றுநோ எல்லாம் தீரும் பிள்ளைப் பெற்றவர்களுக்கும் ஆகும்.

## வெள்ளைசாய்தலின் குணம்

மருவுமே மாலையணி முலைமு கத்து
மானனையார் விரகமுறு மயலே கொண்டு
கருமேவு மடிவயிற்றிற் குத்தி நொந்து
காட்டுவெள்ளை சத்ததுபோற் றுவாலை தானும்
உருமேவி யேசாயும் பிடரி நோவா
முறுநெற்றி தனிலிடிக்கும் வேர்வை சொட்டும்
திருமேனி யும்வெளுத்து மெலிந்து தோன்றுஞ்
செய்குணங்க டேர்ந்துமருந் தீத னன்றே (உ உ ரு)

## சிகிச்சை

வெள்ளை சாய்தல் எலும்புரிக்கிக்கு முன்-கூக-கஉம் பக்கங்களிற் கூறிய நீற்றுப்பூசினி நெய்வகை கொடுக்க நன்று.

## சஞ்சீவிச் சூரணம்

முற்றிய சீந்திற்தண்டு பச்சை நீக்கித் தறித்திடித்துத் தண்ணீரிற்

போட்டுக் கழுவியெடுத்தமா உழக்கு வெள்ளைச்சர்க்கரை - இறாத்தல்-க சாதிக்காய், கராம்பு, வசுவாசி, திப்பிலி, சுக்கு, குங்குமப்பூ, கோரோசனை – வகை-கழஞ்சு க சூரணித்து நாற்பதுநாள் காலை மாலை தின்று வெந்நீர் பரிமாறவும். கிரந்திப்பண்டம் காரசாரவகை நீக்கவும். வெள்ளை சாய்தல் எலும்புருக்கி வரட்சி முதலியன தீரும்.

## சீந்தில் நெய்

நீர்வள்ளிக்கிழங்கு, சீந்திற்றண்டு, நன்னாரி, சிற்றாமுட்டி, பொன்னாங்காணி, நொச்சி, சீதேவியார்செங்கழுநீர், முசுமுசுக்கை, நீற்றுப்பூசினிப்பழம் இவையிற்சாறு – வகைக்கு –நாழி-க நறுநெய், உரி, சந்தனம், கோட்டம், இருவேலி, இலாமிச்சு, செண்பகப்பூ, மதுரம், மல்லி, சுக்கு, ஏலம், தேற்றாவிரை-வகை-கழஞ்சு-உ பதத்தில் வடித்து பசுப்பால்- ஆழாக்கு, இளநீர். உ பேயன்வாழைப்பழம் சீனி கூட்டிக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு நக்கும்போது அத்திப்பட்டைத் தூள் தூவிக் கொடுக்கவும் கால்கையெரிவு நெஞ்செரிவு, வரட்சி, வெள்ளை சாய்தல் எலும்புருக்கி இவை தீரும்.

## எலும்புருக்கியின் குணம்

உட்காய்ச்ச லெடுக்குமத்தி யுறையும் வெப்பு
முயர்கிரந்தி யதிகரிக்கு மூல வாயு
நட்பாக வேயுண்டாம் வெள்ளை சாயுந்
நவில்வாதங் கோவித்தாற் பெரும்பா டாக்கும்
கொட்பான பித்தமது கோவி க்குங்காற்
கொடியவெலும் புருக்கியினிற் சாய்க்குஞ் சாய்த்தால்
தட்பான காலெரியு மலமுஞ் சிக்குந்
தலைவலிமெய் கிறுகிறுக்கும் வற்றுந் தானே (உஉகூ)

### சிகிச்சை

கற்றாழை மணியும் சந்தனமும் பசு வெண்ணெயிற் குழைத்து எலி மிச்சங் காயளவு விழுங்கவும்.

சீந்திற்றண்டும் நெல்லி முள்ளியும் வகை-கழஞ்சி-ரு-நருக்கி இரு நாழி நீர் விட்டு உழக்காய்க் காய்ச்சிப் பசு நெய் கலந்து குடிக்கவும்.

பொன்னாங்காணிவேர். வெள்ளறுகம்வேர், முத்தற்காசு, நற்சீரகம், ஏலம், உலுவா, இவை சமன்கொண்டு பசுப்பால் வார்த்தரைத்து எலுமிச்சங்காயளவு பாலிற்கலக்கிக் குடித்துவர எலும்புருக்கி வெள்ளை சாய்தல் தீரும்.

### கெர்ப்பனி இரத்தம் சாய்தல் எலும்புருக்கிக்கு

குடிப்பிறந்த பிள்ளையருள் சூலி யர்க்குக்
குருதிவிடிற் றாதுமா தளையின் வேரும்
வடிப்பமுறு குப்பையினின் மேனி வேரும்
வசம்புள்ளி யெண்ணெயினிற் குளிச மாடி
வெப்புறவே வெந்தவெண்ணெய் விழுங்கிற் றீரு
மேவுமதி மதுரமுடன் கோட்ட மத்தி
பிடித்திடுதிப் பிலியதா வரிசி சுக்குப்
பேரான வெட்பாலை யரிசி மாஞ்சில் (உஉஎ)

மாஞ்சிலொடு செங்கழுநீர்க் கிழங்கு கண்டின்
மருவுவெண்ணெய் நன்னாரி வனசந் தானும்
ஆய்ஞ் சணமிச் சிருகழஞ்சு வகைக்குக் கூட்டி
பாவினெய் தானுமதி லளவாய் விட்டுக்
காய்ஞ்சபின்பு பதத்தில்வடித் துள்ளே கொள்ளிற்
கூடியபெரும் பாடிரத்த ரோக மென்பில்
ஒய்ஞ்சுருக்கி வெண்மாசு முதிரந் தானு
மொழிந்துவிடு மெனமுனிவ ருரைக்கின் றாரே ()

## கெர்ப்பனி கழிச்சலுக்குப்பாகு

அதிவிடயம் கல்நார், ஓமம், கராம்பு, நற்சீரகம், சாதிக்காய், இலவம்பிசின், குறாசானி, கைப்பு, சுத்தி செய்த-கஞ்சா, அபின்-வகை கழஞ்சுகவறுத்து, தேனைக் காய்ச்சி நுரை நீக்கி இறக்கி ஆற்றி அதில் சூரணத்தைத் தூவிக் கிண்டி தூதுளங் காயளவு கொள்ளவும்.

## கெர்ப்பனி பித்தத்துக்கு

அதிமதுரம், இலாமிச்சம்வேர், கோட்டம், ஏலம் சமன் நருக்கி நாழிநீர் விட்டு உழக்காகக் காய்ச்சி கொடுக்கவும்.

## கெர்ப்பனி சிலேற்பனத்துக்கு

கொன்றைப் பட்டை இருநாழி நீர்விட்டு உழக்காய்க் காய்ச்சி திப்பிலி மேற்பொடி இட்டுக் கொடுக்கவும்.

## கெர்ப்பனி மாலைக்கண்ணுக்கு நெய்

இலந்தைப்பட்டை, வேலம்பட்டை, வகை-பலம்-க பொடி செய்து குதிரைவாலிச்சாறு –நாழி-ஒன்றிற் கலந்து அடுப்பில் வைத்து எருமை நெய் கூட்டி வடித்து நக்கவும்.

## கெர்ப்பனி காய்ச்சல்கழிச்சல் முதலியவற்றிற்கு காத்த பூபதிச் சூரணம்

உளசிக்காந்தம், வசுவாசி, கடுகு, கருஞ்சீருகம், பெருங்காயம், அதிவிடயம், ஓமம், குங்குமப்பூ, கோரோசனை, அபின்வகை கழஞ்சு-க சூரணித்து ஏழு புடம் பண்ணி தேனிலிடவும். கழிச்சல் முதலியன தீரும். மீறினால் மோரை வற்றக்காய்ச்சி அதிலிடவும்.

## பிழைத்திருத்தம்

27ம் பக்கம் விரேசன எண்ணெய் என்பதில் “கண்காணித்தோர் கழஞ்சிரண்டாக” என்னும் கூறும் அடியின் கீழ் வெள்ளை யுள்ளி

மேற்றோல் போக்கி, உள்ள படிகழஞ் சொன்பது கூட்டி" என்னும் இரு அடிகளையும் அமைத்துக்கொள்ளுக.

### கெர்ப்பனி வீக்கத்துக்குக் குடி நீர்

சாரணை – கழஞ்சு- அ பச்சையிஞ்சி- கழஞ்சு-கஉ இவைதட்டி பசுப்பால் அரைப்படி தண்ணீர் அரைப்படிவிட்டு நாலொன்றாய்க்காய்ச்சி ஐந்துநேரம் குடிக்க கெர்ப்பத்து மேல்வீக்கம் தீரும்.

சாரணைக்கிழங்கு – கழஞ்சு – ரு பச்சையிஞ்சி – கழஞ்சு- க0 நீர் முள்ளிவேர் - கழஞ்சு கஉ கடுக்காய்- கழஞ்சு-சு இவையெல்லாம் தட்டி நாலுபடி தண்ணீர்விட்டு ஒருபடியாய் வற்றவைத்து எட்டுநேரம் குடிக்கவும்.

### புளியமிலைக்குழம்பு - வேறு

புளியமிலை-சாற்றுலாம் கழுநீர்க்காடி நாலு கொத்திலிட்டு அவித்து பழைய இரும்புக்கிட்டம் சுட்டு இடித்ததூளை அதற்குள் போட்டு நன்றாயவிந்தபின் நாலுமுறை துவைத்துப்பிழிந்து வடிகட்டவும் - பலமுறை வடிகட்டி உள்ளி, மிளகு, கடுகு-வகை-பலம்-க இலை நீரிலரைத்துக்கலக்கிக் காய்ச்சிப் புளிப்பதத்தில் பசுநெய்விட்டுக் காய்ச்சவும்- தூதுளம்பழமளவு ஆண்பனங்கட்டி கூட்டித்தின்ன கரப்பன் கிரந்தி, வீக்கம், சிலேற்பனம், முட்டுத்தாகம் நெஞ்சடைப்புத்தீரும் சலங்கழித்து வீக்கம்வடியும் உப்பு, புளி, குளிப்புமுழுக்கு ஆகாது. அறைக்கீரை முருங்கையிலைத்தண்ணீர் மிளகு உள்ளி கூட்டிவரவும்.

### வீக்காரிச் சூரணம் - வேறு

இருசீர கங்கோட்ட மேலங் காந்த
மியலுந்நீர் வெட்டிவிரை பூத விர்க்கம்
தருசீனங் கல்லுப்பு வளைய லுப்புத்

தகரமக்க றாவிளங்கங் கராம்பு கிட்டம்
வரு1வேயி னிலைமுள்ளி யுருவி வித்து
வான்மிளகு வெண்காரங் கழஞ்சி ரண்டு
பொரிகார மெண்கழஞ்சு பொரித்துக் கூட்டிப்
புகன்ஞாழல் ரோசினையுங் கழஞ்சொவ் வொன்றே ()

ஒன்றித்தே யிடிபொடித்துக் கருவு யிர்த்த
வொண்டொடியார்க் குறுவீக்க மொழியு மாற்றால்
வென்றிதரு கற்கண்டை யவித்த நீரில்
வெருகடிதூளிட்டுண்ண நீரும் போகும்
நன்றிதரு முடற்கனப்பு வெளுப்போங் காள
நவிலசதி நெஞ்சிடிப்புந் தீர்ந்து போகும்
குன்றுநிக ருந்தனத்து வடிவே லுண்கட்
கொடிநுசுப்பி னடைபயலுங் கோல மானே (உஙo)

**கெர்ப்பனி நீர்க்கடுப்பு எரிவுக்கு - வேறு**

மானே யரத்தை வசுவாசி மதுர மேல நாசம்பூத்
தேனே சீரக மிந்துப்புச் சேர்முக் கடுகு மரமஞ்சள்
தானே குலக்கா யொவ்வொன்றுஞ் சார்முக் கழஞ்சு குங்குமப்பூ
ஆனேயதனிற் சினையிரண்டு கழஞ்சு 2பன்னை யொருகழஞ்சே

ஏயந் தூளைச் சட்டியினி லிட்டே புடமொன் றெடுத்தரைத்து
நீயுஞ் சீனி யனுபான நேரே கூட்டி யினிதருந்த
நோயுஞ் செய்யு நீர்க்கடுப்பு நுவலு மெரிவு சூட்டினுடன்
வாயு மகலுஞ் சூலியர்க்கு வகுத்தா ராயுள் வேதியரே (உகூஉ)

**கெர்ப்பனி வீக்கத்துக்கு மிளகாய்த் தயிலம் - வேறு**

ஒருபடி மிளகாயில் ஒன்றரைப்படி தண்ணீர்வைத்து அரைப்படியாய் வற்றவைத்து வடித்து நல்லெண்ணெய்-படி-இ-பசுப்பால்-படி-இ

கலந்து கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், மிளகு-வகை-கழஞ்சு-க நற் சந்தனம்-பலம்-இ பொடித்துத் தூவி மெழுகு பதத்தில் வடித்து குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம்-வகை-கழஞ்சு-இ மேற் பொடி தூவி தலைக்கும் வைத்து மேலும் பூசக் கெஉப்பனி வீக்கம் குத்து உளைவு கனப்பு மாறும்.

### கெர்ப்ப சூலம், பத்துமாதங்களிலும்வரும் நோய்களும் சிகிச்சையும்

முதற்றிங்க டனிற்சூலம் வந்து தோன்றின்
முதியகைகா னெஞ்செரியும் வனசப் பூவின்
இதழ்ச்சந்த மோரொன்று கழஞ்சு கொண்டே
யினியபசு வின்பாலிற் குடிக்கத் தீரும்
விதற்பமுறு மிரண்டான திங்கள் தோன்றின்
மேவுசலங் கழுநீர்போற் கழியுங் கொட்டி
மதர்ப்பான கிழங்குடனே கோட்ட மேல
மருந்துகளோ ரொன்றுடனே கழஞ்சு வாங்கே ()

வாங்கியரைத் தேயாவின் பாலிற் கொள்க
மருவியமூன் றாமாதந் தோன்றிற் சூலம்
தேங்குமிரு விழிசிவந்தே யிருண்டு காட்டுஞ்
செங்கமல வளையமுடன் கொட்டி தன்னில்
ஒங்குகிழங் கினைநீரை வார்த்த ரைத்தே
யுறுபசுவின் பால்கலந்து குடிக்கத் தீரும்
தாங்கியநா லாந்திங்க டோன்றிற் சூலந்
தளருதிரங் கலங்கியே கட்டி தண்ணீர் (உஙச)

வேயினிலை - மூங்கிலிலை.
பன்னை - பச்சைக் கர்ப்பூரம்

நீருடனே விழும்வயிறு வலிக்கு நோகு
நெருஞ்சியின்வே ருங்கொட்டிக் கிழங்குமானைச்
தீருறுதந் தமுநீரி லரைத்துப் பாலிற்
சிறந்திடவே குடிக்கநன்று தீரு மஞ்சாம்
வாரமுறு திங்கடனிற் சூலந் தோன்றில்
வயிறுவலித் திடுங்கீழா முதுகு நோகும்
சாரமுறு திப்பிலியுஞ் சந்தங் கொட்டி
தனிற்கிழங்கு முதிரையினிற் கணியுந்தானே

தானுமுறு மோரொன்று கழஞ்சு தாகத்
தகர்த்தரைத்துப் பசுப்பாலிற் குடிக்கத்தீரும்
..........................................................................
..............................................................

மிகுதி பிரதிகளிற் காணப்படவில்லை. பின்வருபவை, கைமுறைகளெழுதியுள்ள பிரதியொன்றிற் கண்டது.

முதன்மாத மடிவயிறு வலித்துக் காட்டு
முந்துநல்ல சந்தனத்தோ டிலாமிச் சம்வேர்
திதமான பசுப்பாலி லரைத்து மூன்று
தினங்குடிக்க லாமிரண்டாந் திங்க டன்னில்
விதமானநீர் கடுக்குங் கொட்டி கொவ்வை
வியந்திடுதா மரைமூன்றுங் கிழக்கெ டுத்துப்
பதமாகப் பசுப்பாலி லரைத்து மூன்று
பரிவுடைய நாள்களுக்குப் பருக லாமே (உஙசூ)

ஆகியமூன் றாமாத நோவுண் டாகு
மம்புயத்தின் மூலமொடு நெய்தன் மூலம்
சேகுறுசீ ரகங்கைப்புச் சரிகொண் டாவின்
நீம்பாலின் மூன்றுதின மரைத்துக் கொள்க
வாகுறுநா லாமாத நீர்க டுக்கும்
வயிறுவலித் திடுமுதிரக் கட்டி வீழும்
பாகுறுசிற் றேலமரை வராக னோடு
பகர்நெய்தன் மூலமுமான் பாற்கொண் முந்நாள் ()

நாளுடைய மாதமைந்திற் சோரி தன்னை
நயமுறவே கரைத்ததுபோற் கட்டி வீழும்
நாள்வனசங் கொட்டியினிற் கிழங்கு னோடு
நல்லாவிற் பாலின்முந் நாளுங் கொள்க
நீளுறவா றாந்திங்கள் வயிறே யூது
நெய்தன்மலர் மூலமுமுந் திரிகைப் பழத்தோ
டாளியன்மா தளம்பழமு மரைத்தான் பாலி
லருந்திடநன் றாமூன்று நாளுந் தானே (உஙஅ)

தானியலே ழாமாதம் வயிற்றிற் பிள்ளை
தான்பிறக்க நோவதுபோ னோம தற்கு
வானியனெய் தற்கிழங்கும் பூவுங் கொட்டி
வளர்கிழங்குஞ் சர்க்கரையு மோரொன் றாகக்
கானுறுநாற் கழஞ்சாவின் பாலின் மூன்று
கருதியநாட் பருகிடலா மெட்டாந் திங்கள்
ஊனடலிற் பசித்தாப்போ லிருக்கும் வாய்நீ
ருறிவிழு மகப்பெறல்போ லேயி ருக்கும் (உஙகூ)

இருக்குநல்ல சந்தனத்தோ டிலாமிச் சந்து

ரிகல்வனச முடன் கொட்டிக் கிழங்கோ ரொன்று

பெருக்கவறு கழஞ்சுபசுப் பாலின் மூன்று

பெட்புறு நாட் கொள்ளுகவொன் பதுமா சந்தான்

விருப்புறுபற் பலதீனு மெட்டாந் திங்கள்

விளம்பியநன் மருந்தாகும் பத்தாந் திங்கள்

திருக்கறுகெர்ப் பனியுடைய சுபாவ மன்றித்

தீயநோய் களின்மருந்து கைகண் டாரோ (உச0)

**மேற்படி - வேறு**

திருமதலை யுதித்தமுதற் றிங்க டன்னிற்

சிலையென்றோர் நோவுகொள்ளுங் கமல மூலம்

அருமைபெறு செங்கழுநீர்த் தண்டி னோடே

யாவரையின் வேரரைத்துக் கொடுக்கத் தீரும்

இருமதியில் வருநோய்தான் கொலையென் றாகு

மிதற்குமருந் தாவரைவேர் 1புருண்டி மூலம்

திரிமதியிற் குறையெனவாங் 2கல்லா ரத்திற்

சேர்கிழங்கு மாவரையின் வேரு மாமே (உசக)

அடுத்திடுநாற் றிங்கடனி னாரை யென்றா

மப்பையின்றன் கிழங்குடனே நாவ லின்றேல்

தொடுத்திடுபச் சரிசியுட னுண்ணந் தீருந்

தோன்றுமைந்திற் சிலையென்றோர் நொவு கொள்ளும்

படித்திடுதிப் பிலிமிளகு தண்ணீர் விட்டான்

பகர்கிழங்குங் கருங்குறுவை யரிசி தானும்

எடுத்தரைத்துக் கருப்பினுறு கட்டி கூட்டி

யினிதருந்த நன்றாக மாறிற் கேளே (உசஉ)

ஆறினிலே களியென்றா நெல்லி முள்ளி

யதினுடனே தான்றிக்காய் கரிய சீரம்

மாறின்றி யரைத்தாவின் பாலிற் கொள்க

மற்றேழிற் கழலேன்ப தொருநோ யுண்டாம்

கூறுகின்ற பசுநெய்யா மணக்கி னெண்ணெய்

குற்றமறு மெள்ளெண்ணெய் கொதிப்பித் துப்பின்

ஆறுகின்ற போதினிலே மிளகுத் தூளை

யதிற்றூவிக் கொடுத்திடநோ யகலு மன்றே (உசங)

அகலுமெட்டிற் கொலையெனலாம் வேப்பம் வேரு

மதினிலையுங் கடுக்காயு மிளகு சுக்குத்

தகவுடைய நீர்வள்ளிக் கிழங்கு தானுந்

தகர்த்தரைத்துத் தூளாக்கிக் கொடுக்கத் தீரும்

மிகவுமழ கொழுகுவிழி மடநல் லாய்கேள்

மேவுமுளை யென்றொருநோய் நாலோ டைந்தில்

பகர்மிளகு நெய்யி லுண்ட பின்னர்த் தானே

பச்சரிசி மாவாக்கிப் பகரக் கேளே (உசச)

ஏயும் மாவொடு கொட்டியின் மூல மிசைத்தேயுண்

டாயுந் தீஞ்சொன் மாமயிலாயங் கருமெண்ணெய்

நீயும் பின்னா லுண்ணுக மாறிடு மெந்நோயும்

சேயுந் நன்றா மென்றுரை செய்தார் முனிவோர்கள் (உசரு)

**நாலுமாதக் கட்டி கரைந்தால்**

வாழைப் பூவும் விளாங் காயும் சமன் கொண்டு அரைத்துக் கரைத்து கொடுக்கவும்.

## ஐந்து மாதக் கட்டி கரைந்தால்

காரைக் காயும் உளுந்தும் நனைய வைத்துத் தோல் போக்கி யரைத்துக் கொடுக்கவும்.

## ஏழு, எட்டு, ஒன்பது மாதங்களில் உடைந்தால்

மலை தாங்கியிலையும் எள்ளுப் பிண்ணாக்கும் உளுந்தும் கொடுக்கவும்.

## பிள்ளை பிறக்க

இத்தலைப்பின்கீழ் பல வேறுவகைப்பட்ட முறைகள் இந்நூற் பிரதிகளில் வெவ்வேறாகக் காணப்படுகின்றன. சிலவற்றை இங்கு குறித்திருக்கின்றோம். இவை எழுதினவர்களாற் சேர்க்கப்பட்ட னவாதல் வேண்டும்.

பருத்திக்கொட்டையும் ஈரவெங்காயமும் மிளகும் அரைத்துப் பிழிந்து நல்லெண்ணெய் கலந்து உள்ளுங்கொடுத்து வயிற்றிலும் பூசப் பிள்ளைபிறக்கும் நஞ்சும் விழும். பூசியமருந்தை உடனே கழுவிவிடவும்.

பூநாகம் அரைத்துப் பிற அடியிற் தடவப் பிள்ளைபிறக்கும். உடனே கழுவி விடவும் கழுவாதிருந்தாற் குடல் தள்ளும்.

நத்தைச்சூரி இலையரைத்துப் பாக்களவு தயிரிற்கொடுக்கப் பிள்ளைபிறக்கும்.

வெள்ளைக் காக்கணம்வேரை வாய்பேசாமற் பிடுங்கித் தலையிற் கட்டினாலும், உத்தமாகாணி வடக்குவேரை அங்ஙனமே பிடுங்கி மோதிரமாக்கிக் காற்பெருவிரலிற் போட்டாலும் பிள்ளை பிறக்கும் உடனே அகற்றிவிடவும்.

இலகம்பிசின், முத்தற்காசு, சதுரக்கள்ளிவேர், ஓமம் நீர்வார்த் தரைத்துக் கீழ்வயிற்றிற் கீழ்நோக்கிப்பூசப் பிள்ளை பிறக்கும் செத்த பிள்ளையும் விழும்.

## செத்தபிள்ளை விழ

தயிர்வேளை அரைத்து உள்ளங்காலிற் பூசினாலும் துத்திவேரை அரைத்துப் பூசினாலும் வெள்ளைப் பாஷாணம் முலைப் பாலிலுரைத்துத் தொப்பூழிற்பூசினாலும் விழும் உடனே கழுவிப்போடவும்.

தேங்காய்ப்பால்-உழக்கு பெருங்காயம்-கழஞ்சு –க ஆமணக் கெண்ணெய் இருகழஞ்சு கூட்டிக் குடிக்க விழும்.

பச்சைக்கொள்ளு ஒருசிறங்கை செங்கழுநீர்க்கோட்டம் அரைக் கழஞ்சு அரைத்துக் கொடுத்தாலும் ஆடுதின்னாப்பாலையிலை அரைத்து இளவெந்நீரிற் கொடுத்தாலும் சணல்விரை இளவெந்நீரில் அரைத்துக் கொடுத்தாலும் செத்தபிள்ளை விழும்.

## நஞ்சு விழ

கார்த்திகைக்கிழங்கு அரைத்துத் தொப்பூழிற்போட நஞ்சு விழும் உடனே கழுவிப்போடவும்.

## கெர்ப்பரத்தினாதிக் குளிகை - வேறு

இருசீரகம், திரிகடுகு, திரிபலை, ஓமம், இந்துப்பு, அதிவிடயம், கிருமிசத்துரு, குறாசாணி, செங்கழுநீர்க்கோட்டம், சாத்திரபேதி, வால்மிளகு, உலுவா, வாய்விளங்கம், அதிமதுரம், மதரப்பூ, மஞ்சள், உள்ளி, வில்வப்பழச்சதை, விளாம்பழச்சதை, மனோசிலை, சாதிலிங்கம், வெள்ளைப்பாஷாணம் - வகை – கழஞ்சு – க சிற்றாமணக்கின்பருப்பு சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு – வகை – கழஞ்சு – உ வெள்ளைப்பாஷாணம் சாதிலிங்கம், மனோசிலை,

மூன்றையும் நன்கு சுத்திசெய்து கொள்ளுக, எல்லாம் பொடி செய்து கல்வத்திட்டு முடிதும்பைச்சாறுவிட்டு ஒருநாளும் பெருந்தும்பைச் சாறுவிட்டு ஒருநாளும் ஆக இரண்டு நாளரைத்து மெழுகுபதத்தில் குன்றிமணியளவுவுருட்டி நிழலுலர்த்தி மஞ்சள்த் தூளுட் போட்டுவைத்துக் கொள்ளவும்.

பிள்ளைபிறக்க நோக்காடுகண்டு பின்நின்றுபோனால் வெள்ளை சாய்ந்தால் இலவம்பட்டயைத் துவைத்து அவித்துப்பிழிந்துநீரிற் கொடுக்கவும். பிள்ளை சிரசுதயங் கண்டுபின் நோக்காடு நின்றுபோனால் வேப்பிலை சாற்றிலிடவும், பிள்ளைகுறுக்கிட்டாலும் முதலிற் காலுதயங் கண்டுபின் தாமதம்நேர்ந்ததாலும் குன்றியிலைச்சாற்றில் வெடியுப்புக்கூட்டிக்கலக்கிவடி கட்டி அதிற்கொடுக்கவும். அல்லது மருக்காரங்காய்ச்சாற்றிலிடவும் நஞ்சுவிழ உலுவா வறுத்துப் பொடிசெய்து நல்லெண்ணெய்யிற் கலக்கி ஒருகுளிகை கொடுக்கவும் அல்லது பருத்தியிலைச் சாற்றிலிடவும் செத்தபிள்ளை விழ மாதாளம்பிஞ்சரைத்துக் கழுநீரிற் கலக்கி ஒருகுளிகை உரைத்துக்கொடுக்கவும் அல்லது பச்சைக்கொள்ளவித்துக் கோட்டத்தூளும் குளிகையுமிட்டுக் கொடுக்கவும் வேப்பெண்ணெய் கூட்டியும் கொடுக்கலாம். வயிறுவலித்தால் திரிபலைக்கஷயத்திலிடவும். அல்லது செம்முள்ளிவேர், ஆடாதோடைவேர், அமுக்கிராய்வேர், உள்ளி, மிளகு, பெருங்காயம், கோட்டம், சாரணைவேர், கடுக்காய் சமன்கொண்டு அவித்தநீரிலிடவும். சத்திக்கு குப்பைமேனிச் சாற்றிலுரைத்து உள்ளுக்கு கொடுத்து தயிர் வேலை சாற்றில் உரைத்து வலதுகாலிற்றடவும் எரிவிற்கு மேனிச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்திடவும். குத்துக்கு தோடம்புளியிலிடவும். கழிச்சலுக்கு தயிர் வேளைச்சாற்றிலுரைத்து இடதுகாலிற்றடவவும். துவாலைமறித்தால் பருத்தியிலைச்சாறும் சுக்கவித்துநீரும் கலந்திடவும். அல்லது நொச்சி கொடிக்கள்ளிக்கொழுந்து மாவிலங்கை, கொன்றை, வேம்பு தோடை, குன்றிமணி, குப்பைமேனி இவை வண்டிலவித்துப்பிழிந்து அதிற் குளிகையிடவும். பிள்ளைப்

பெற்றவுடன் கடுமையான வயிற்று வலி கண்டால் உள்ளி கழற்சித்துளிர் நொச்சி வகைபிடி-க வண்டிலவித்துப் பிழிந்து அதிலிடவும் சுரங்கண்டால் வசம்பு உள்ளி தூள்செய்து துளசிச்சாற்றில் கலக்கி அதில் குளிகையுரைத்துக் கொடுக்கவும். பெற்றவள் நாக்கிற் கெந்ததாளிக்கு சீந்தில், சிறுவழுதலை, கண்டங்கத்தரி, இருவேலி, இலாமிச்சு சமன்கொண்டு அவித்தநீரிலிடவும். இரட்டைப் பிள்ளைகளில் ஒன்றுபிறந்து ஒன்று பிறக்காமலிருந்தால் மிளகுதூள் பசுநெய்யிற் கொடுக்கவும். அல்லது மதுரம் சன்னிநாயன் கோட்டம் கடுக்காய் இவையவித்தநீரிலிடவும்.

## பிள்ளைபிறக்கவும் நஞ்சுவிழவும் பெற்றவள் கழிச்சலுக்கும்

உரைக்கும் பிள்ளை துஞ்சிடினு முயிருண் டெனினும் பிறப்பதனுக்
கரைக்குந் திப்பிலி யிந்துப்பு மப்பு தனைவிட் டரைத்தருந்தப்
புரைக்கு நஞ்சு பிள்ளைவிழும் புகலும் வயிறு கழிந்திடுகில்
தரைக்கு ளசமோ தகமுள்ளி தயங்கு முலுவா வேர்க்கொம்பே ()

## துவாலை அதிகரித்தால்

கொம்பே மிளகு மினவயரைத்துக் கூறு மெலுமிச் சம்புளியும்
நம்பிக் கரைத்துக் குழம்பாக்கி நயக்கக் காய்ச்சிக் கொடுத்திடுகில்
பம்புங் கழிச்ச றனையடைக்கும் பலகாற் றுவாலை படும்பேர்க்குச்
செம்பு நிகரு மத்திதனிற் சிறந்த பட்டை யூறிடுநீர் (உதுள)

நீரு மெருமைப் பாலிரண்டு நிறையே குறுவை நெல்லரிசி
ஆரு மாவிற்களிகிண்டி யருந்த விரண்டா நால்நாவற்
சாருந் தோலின் மூன்றாநாட் டயங்கு மிலுப்பைப் பட்டையினிற்
சீருஞ் சரியாஞ் சன்னிக்குச் சிறந்த காயஞ் செப்புவனே (உசஅ)

(புளி உப்பு நீக்கிப்பத்தியம் வைக்க)

## பெற்ற வீட்டிற் சன்னிக்குக் காயம்

செப்பு முலுவா வசம்புள்ளி சேரு மிருசீர் பெருங்காயம்
அப்பு மசமோ தகம்வெளுத்த லரிய பிசினு மிளகுசுக்கு
ஒப்புங் கான்றை சாறணை யோடுசித முருங்கை யிவைவேரும்
அப்புங் காயங் காய்ச்சியுட னருந்தத் திரா தாகிலுங்கேள் (உசகூ)

கேளே வெள்ளைச் சிலைதனைக் கிளரும் பூமத் திலைச் சாற்றில்
தாளே தோய்த்துக் காயவைத்துத் தயங்குஞ் சுக்குப் பெருங்காயம்
வேளே வெளுத்தற் பிசின் மிளகு மிகுந்த திரியைச் சுருட்டியபின்
வாளார்விழியாய்நல்லெண்ணெய் வார்த்துத்திரியிற்றயிலமெடே ()

## துவாலை மறிபட்டால் காயம்

தயிலங் காசிடை யுட்கொள்ளிற் சன்னி தீருந் தவறாமல்
மயிலே வயிறு நெருநெருத்து மறித்துத் துவாலை படாதாகில்
பயிலு மிருசீர் திரிகடுகு பகரிந் துப்புப் பெருங்காயம்
துயிலும் வசம்பு பிசினுலுவாச் சொல்லு மஞ்சள் கான்றையுமே

கான்றை நொச்சி சாரணைவேர் கடிய நிம்ப விலையவித்துத்
தோன்று நீரா லரைத்திதனைச் சொல்லுங் காயங் கொடுத்திடுகில்
ஊன்றுந் துவாலை யுடைத்துடனே யுரத்த குத்து முடன்மாறும்
ஏன்ற வீக்கக் குடிநீரை யியம்பக் கேளு மேந்திழையே (உருஉ)

## பெற்றவள் வீக்கத்துக்குக் குடிநீர்

இழைக்குங் குடிநீர் பற்படக மிதநீர் முள்ளிக் கொடிகழலின்
முளைக்குங் கொழுந்து நொச்சியினின் முதிய கொழுந்து துளசிசங்கு

திப்பிலி யிவைக ளிருகழஞ்சு சேரு மிளகு மொருகழஞ்சு
கற்புகு தண்ணீர் நாழிவிட்டுக் காய்ச்சி யுரிய தானபின்னர்

அற்புறு கருப்புக் கட்டியுட னருந்திக் குடிநீர் குடிப்பீரால்
வெற்புறு முலையாய் வீக்கமெலாம் விட்டேயேகி விடுங்காணே

(உருகூ)

### வயிற்றில் இரத்தம் சிக்கினால்

பசுப்பாலில் உள்ளியவித்துக் கடைந்து சாதிக்காயும் குங்குமப்பூவும் மேற்பொடி தூவிக்குடிக்கவும்.

### பிள்ளைபெற்றவுடன் வயிறு வீங்கினாற் குடிநீர்

எருக்கு, முருங்கை, கண்டங்கத்தரி, சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, ஓமம், குடிநீர் காய்ச்சிக் குடிக்க வீக்கம் வற்றும்.

### வேப்பிலைக் காயம்

வேப்பிலை-ங பங்கு, பாகலிலை, திராயிலை, குறிஞ்சாவிலை இவை-ஒரு பங்கு துவைத்துச் சாறு கொண்டு கடுகு, மிளகு, சுக்கு, உள்ளி, கடுக்காய் சமன்கொண்டு அரைத்துக் கரைத்துக் காயங் காய்ச்சி சிற்றாமணக்கெண்ணெயில் உள்ளி நருக்கித் தாளிதஞ் செய்து கிண்டிக் காலையிற் கொடுக்கவும்.

### குடிநீர்

பூசினித்தண்டு, சுரைத்தண்டு, முருவிலித்தண்டு, கையாந்தகரை, நீர்முள்ளி சமூலம், சிறுபீளை சமூலம், பாதிரிப்பட்டை, சிற்றமட்டிவேர், பேரமட்டிவேர், சிறுகாஞ்சோன்றி, பற்படாகம், பேய்ப்புடோல், முத்தற்காசு, இஞ்சிக்கிழங்கு-வகை-கழஞ்சு-உ. இருநாழி நீர்விட்டு உழக்காகக்காய்ச்சி மூன்றுநாட்கொள்ளப் பெற்றவள் கால்கை வீக்கம் வயிற்றுவீக்கம் முதலியன தீரும்.

## வயிற்றுவலிக்குக் காயம்

கஞ்சாங்கோரை சமூலம் ஒருகட்டுக்கொண்டுவந்து புழுமுதலியன ஆராய்ந்து நீக்கித்துவைத்து தண்ணீர்தெளித்து வேகவைத்துப் பிழிந்து ஒருநாழியும் தண்ணீர் ஒரு நாழியும் கலந்து கருப்புக்கட்டி கூட்டி நாழியாகக் காய்ச்சிவடித்து அதில் ஓமம், இருசீரகம், மிளகு, சுக்கு, உள்ளி,-வகை-கழஞ்சு-இ. அரைத்துக்கரைத்து சற்றே காயவைத்து நல்லெண்ணெயில் உள்ளிகூட்டித் தாளித்துக் கரண்டிவீதம் கொடுக்கவும்.

## குழம்பு

இருசீரகம், திரிகடுகு, உலுவா, ஓமம், வெள்ளுள்ளி-வகை-கழ-ச. இளவறுப்பு வறுத்துப் பொடிசெய்து உள்ளிநாற் கழஞ்சு வேறாகப்பொரித்துக்கூட்டி நல்லேண்ணெய் ஆழாக்கில் கருப்புக்கட்டி கூட்டி உருகவிட்டு மேற்படி தூள்தூவிக் குழம்பாகக்காய்ச்சி புன்னைக்காயளவு இருவேளையுங்கொள்ள வயிற்றுவலிவிடும்.

## சலமலம் முட்டுப்பட்டால்

பயிரி-மூன்றுபிடி. ஒருநாழி தண்ணீர் பானையில்விட்டு வேடுகட்டி, வேட்டின்மேல் பயிரியைவைத்துச் சட்டியினால்மூடி பாதிவற்ற எரித்து இறக்கி ஆறியபின் அவித்த பயிரியைப் பானையில் நீரிலிட்டுப் பிழிந்து சீனியும் சிறிது மிளகுமரைத்துக் கரைத்துக் கொடுக்கச் சலமலமுட்டுப்பாடு தீரும்.

## துவாலைசிக்கினால் குடிநீர் - வேறு

சீர்மேவு சிறுமகவை யீன்றெ டுத்த
சேயிழையார் துவாலையது சிக்கி நின்றால்
கார்மேவு சீரகமுங் கொத்த மல்லி
கறுவாநற் சதகுப்பை கராம்ப ரத்தை
ஊர்மேவு திப்பிலியு முடனே யோம

மொருசரியாய்க் குடிநீர்வைத் துவந்து கொள்ளில்
ஏர்மேவு மீசுரனார் கிருபை யாலே
யியம்பியநோ யகலுமென விசைத்தா ரன்றே (உருக)

## வயிற்றிற்சீ பொருமல் முதலியவற்றிற்கு

### காயம் - வேறு

கான்றை, நொச்சி, தோடை, மாவிலங்கை, ஆடாதோடை, எலுமிச்சை, வேம்பு, முருங்கை இவையெல்லாம் வேர் சமன்கொண்டு இடித்தவித்து, அதில் - இருசீரகம், கராம்பு, வசுவாசி, சாதிக்காய், பெருங்காயம், திப்பிலி, சுக்கு, மிளகு, கடுகு, உள்ளி, திப்பிலி, ஓமம் -வகைக்குச் சமன் அரைத்துக் கரைத்துக் காயங்காய்ச்சி இறுகினபதத்தில் பாக்களவு இருவேளையும் கொள்ளப் பெற்றவள் வயிற்றிற் சீகட்டுதல், பின்னேரங்களில் வயிறு பொருமுதல், வயிற்றிவலி, முட்டு, உழலை, நாவரட்சி, பலசுரம் சன்னி, கழிச்சல் முதலியன தீரும்.

### வயிற்றிற் சீகட்டினால்

குறிஞ்சாவேர் சீவிபிடித்தபொடி நாழிக்கு நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் குடிக்கச் சீகட்டாது.

### வயிறுபழுத்தால்

புளியமிலை இரா அடுப்பிலூறவைத்துக் காலையிற் பிழிந்து திரிகடுகு, மஞ்சள், வெண்காயம் சமன் அரைத்துப் பனங்கட்டி கூட்டிக்காய்ச்சி ஆமணக்கெண்ணெயில் உள்ளி அரிந்து தாளித்துச் சேர்த்து உள்ளும் கொடுத்து, மேலும் பூசவும்.

### சலமடைத்தால்

நொச்சியிலை, பாகலிலை, வேப்பிலை, மிளகு, சுக்கு-வகை- பிடி-க. வறுத்து இருநாழி நீர்விட்டு உரியாகக் காய்ச்சிப் பொரிகாரம் பொரித்ததூள் மேற்பொடியிட்டுக் கொடுக்கச் சலமுடைக்கும்.

விரற் பருமனுள்ள முருங்கைக் காம்பைச் சிறுகநறுக்கி இரண்டு பிடியெடுத்து நாழிதண்ணீரிற்போட்டு அதில் மிளகு ஆழாக்கு வறுத்துக் கூட்டி உழக்காகக் காய்ச்சி வடித்து சிற்றாமணக் கெண்ணெயில் உள்ளி அரிந்து தாளித்துக் கூட்டிப்புகட்ட மலசலச்சிக்கு மாறும்.

### கால்கையெரிவுக்கு

அமிர்த ஏலாதிச்சூரணம், நீற்றுப்பூசனிநெய், அயலேகியம் முதலியவற்றை உள்ளுக்குக்கொடுத்து அடியிற்கண்டதயிலம் தேய்த்து முழுகிவரப் பெற்றவீட்டிற் கால்கையெரிவு முதலியன தீரும்.

### தயிலம்

பசுப்பால-படி-க. நல்லெண்ணெய்-படி-க. கலந்து அதில் ஏலம், மதுரம், செங்கழுநீர்க்கோட்டம், செண்பகப்பூ, வெட்டிவேர்-வகை-பலம்-இ. இடித்து கையாந்தகரைச் சாற்றாலரைத்துக்கலக்கி வெயிலில் ஒருநாள் வைத்துப் பின்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து முழுகவும்.

### சுவாத காசத்தின் குணம்

சிறுமகவை யின்றெடுத்த மடநல் லார்க்குச்
செப்புசுர நீங்காதாய்க் கழிச்சன் மூச்சு
மறுகுறவே யுள்ளுழலை தவன மாகி
வயிறதுவும் பொருமியே வாய்வு தோன்றிக்
குறுகிரும னாவரட்சி தண்ணீர்த் தாகங்
கொண்டுவிழி தாமிரண்டுந் தெளிவு கெட்டால்
இறுதிசெயு மிகக்கொடிய சுவாத காச
மியம்புவிக்கல் சிலகுணத்தி லிடரே செய்யும். (உருரு)

1இருமித் தொய்வாய் நாவரண்டே யிளைத்துப் பேச்சுமூச்சுமுட்டாய்ச்
செருமி யனுங்கிக் களைதோன்றித் தியங்கி மயங்கி நெஞ்சடைத்துப்
பொருமிக் குத்தி யிட்டுமுட்டாய்ப் பொறுக்க வரிதாய் வெயர்வைசுரந்
தருவிக் காலுங் கனத்ததைக்கு மரிய சுவாத காசமிதே. (உருசு)

## மற்றொருபாடம்

பிள்ளைப் பெற்ற மடவார்க்குப் பெருத்த சுரமுந் தலைவலியாய்
உள்ளு முழலை தவனமிரைப் புற்ற கழிச்ச லுடல்பொருமல்
மெள்ளத் தொடுத்த வுண்மூச்சாய் விழியிற் றெளிவுங் செட்டிருக்கில்
துள்ளித் துடிக்க வுயிர்வாங்குஞ் சுவாத காச மெனவுரைத்தார். ()

1 - இச்செய்யுள மற்றோர் பிரதியில் கொப்பமாயிருக்குங் காலத்திற் றோன்றும் காயாசுவாதம் என்னும் தலைப்பின் கீழ் கூறப் பட்டிருக்கின்றது. அங்கு "அரிய காயாசுவாத மிதே" என்பது பாடம்.

## சிகிச்சை

### குடிநீர் - 1

கண்டங் காலி தூதுவளை கடிய வட்டி னுடன்1வாசை
கொண்ட கீழ்காய் நெல்லியின்வேர் கொத்த மல்லி திரிகடுகு
மிண்டுங் கராம்பு முத்தமிவை வேண்டுங் கழஞ்சோ ரொன்றாகத்
தண்டாதவித்துக்குடித்துவரிற் றாகந் தொய்வு சுரம்போமே. (உருஅ)

1 வாசை-ஆடாதோடை வனதுர்க்கி-கடுக்காய், 2 ஆகரி, திப்பிலி, இது ஆறுகழஞ்சென்க. 3 பூதவிர்க்கம்-பீனாறி.

## குடிநீர் - 2

சிறுமட்டி தூதுவளை நன்னாரி வீழி
சிற்றவரை நாயுருவி பைங்குராய் முள்ளி
சிறுகுறிஞ்சி யிம்பூறல் குன்றிமணி சங்கு
செறிகோவை மூக்கறைச்சி மிளகரணை நொச்சி
உறுவட்டி னொடுவிளாக் கொடுவேலி சத்தி
யுற்றசா ரணைகண்டங் காரியடர் தோடை
நறியபஞ்ச பாண்டவர்த முல்லை-வளர் பிரண்டை
நாட்டுசிறு காஞ்சோன்றி யதுபிரா யிவைவேர் (உருகூ)

ஒவ்வொன்று பிடியொன்று நாசையீ ருள்ளி
யோடு1வன துர்க்கியது விதைதள்ளி நன்றாய்
ஒவ்வொன்று முப்பலங் கரிய சரகமோ
டுற்றநற் சீரகஞ் சுக்கசம தாகம்
ஒவ்வொன்று முக்கழஞ் 2சாகரியோ ராறா
யுறுகளிப் பாக்குவெண் பிசினிவைகள் ரண்டும்
ஒவ்வொன்று நிறைகழஞ் சொன்றுமிகு தான்றி
யோரைந்து 3பூதவிர்க்க மோர்பலங் கூட்டே (உக0)

கூட்டியிவை யெலாமிடித்தெண் ணாழி நீருங்
1கோச்சாக நீருழக்குங் கூட்டிக் காய்ச்சி
வாட்டடங்கண் மடமானே குடிக்க நன்றாம்
வருகாயா சுவாதமொடு சுவாத காசம்
காட்டுயிளைப் பிருமலொடு தொய்வு மற்றுங்
சாய்ச்சல்குளி ருண்ணடுக்க மிவைக ளெல்லாம்
கோட்டியலுங் கதிரைமலை முதல்வன் பாதங்
குறுமருந் தவர்வினைபோ லொழியு மன்றே (உகூக)

## திரிபலையேனாதி

நனனாரி தூதுவளை கண்டங் காலி
நற்கோரைக் கிழங்குவட்டு மிளகு சுக்குப்
பொன்னாருங் குங்குமப்பூ முப்ப ழுங்கள
பொருந்துமிந்துப் பதிமதுர மசம தாகம்
துன்னாருஞ் சன்னிவிரை யிருசீர் தேற்றாச்
சொல்பசுவின் ரோசினையுங் கழஞ்சொவ் வொன்று
மின்னாரு மடமயிலே வறுத்திடித்து
மெண்மைபெறுந் தூளாக்கி யரைத்து மேலும் (உசுஉ)

பண்புற வரைத்தே புடம்வைத் தெடுத்ததூள்
பசுவினெய் தேன்கூட்டியே
பதமுறக் காய்ச்சியே பருகவே னாதியிற்
பற்றறும் பிணிகள்சொல்வாம்
எண்பெறு சிலேற்பனங் காயா சுவாதமு
மிளைப்புட னடைப்புமுட்டு
மிருமியே கண்டிடு வரட்சிதொய் வுழலையு
மேகிடாத் தவனமுளவும்

நண்புறா தெரிசுரங் கழிச்சலுட் டணம்வேர்வை
நாவரண் டிடுகைதானும்
நாட்டிய பெரும்பிணிக ளருமென் றாயுண்மறை
நாடியே யுரைத்திடுதலால்
திண்பெறு சிரத்தின்முக் கூட்டெண்ணெய் வைத்துமே
செப்புநற் சுவாதநெய்யுந்
தின்றிடு முலைப்பாலி லெண்ணெயும் பூசியே
சிறக்கத் துடைத்துவிடுமே (உஙகூ)

1 கோச்சாகநீருழக்கு, பசுச்சலம், காற்படி, வெள்ளாட்டுச்சலம், காற்படி

## அமிர்த ஏலாதிச் சூரணம்

அமுத வல்லி யதுகழீ யெடுத்த மாவு பச்சிலை
யானவக் கறாவ ரத்தை கண்டில் வெண்ணெய் துத்திவேர்
கமழுசந் தனத்தினோடு தேவ தாரு சீரகங்
கருட பச்சை வாய்வி ளங்க மேலமோம முந்திரி
நமதுபங் கயத்தின் மேவு மரிசி பன்னை ஞாழலு
நாட்டு நாக கேசரங் கொத்த மல்லி செண்பகத்
தமையு மொக்கு நாகணங் கோட்ட நல்ல பத்திரி
யவைகண் மூன்று சாதியின் காயினோடு பூவுமே

மேயசெங் கழுநீர் மூலம் விரும்புகச் சோலஞ் சீனி
ஆயபே ரீஞ்சு பூமி சர்க்கரை மதுரங் கன்னார்
தூயகஸ் தூரி யாவின் ரோசனை கழஞ்சோ ரொன்று
நீபிடித் தரைத்து நெய்தே னிஞ்சிநீர் தம்மிற் கொள்ளே

கொண்டிட விரும லீழை கூறுகா யாசு வாதம்
மிண்டிய சுவாத காச மேவிடும் வரட்சி சூடு
மண்டிய சுரமி ரத்த ரோகமென் புருக்கி வெள்ளை
அண்டிடா தகலு மென்றே யறைந்தன ராயுள் வேதர் (உஙச)

## சுவாதகாசக் குளிகை வேறு

சூதங் கெந்தகம் வெண்காரஞ் சொல்லு நாவி மனோசிலையும்
ஓதுந் திப்பிலி பற்படக முற்ற வரியின் றரமிவை
பேத மறவே சமன்சுத்தி பெருகச் செய்து கலுவத்திற்
கோதில் கண்டங் கத்தரியின் கொள்ளுஞ் சாற்றா லொருசாமம்
(உகூஎ)

உரைக்கு மாடா தோடையிலை யுற்ற சாற்றா லொருசாமம்
தரைக்கு ணொச்சி யிலைச்சாறு தானுஞ் சாம மிவ்வாற்றால்
அரைத்துக் குன்றி யளவுருட்டி யாவி னெய்யுஞ் சர்க்கரையும்
கரைக்கச் சுவாத காசமொடு காயா சுவாத மொழிந்திடுமே

### எண்ணெய் - வேறு

வேப்பிலை, கறுத்தப்பூவிலை, காக்கணங்கொவ்வையிலை, குன்றிமணியிலை, கிரந்திநாயன் இவை சாறு-வகை-படி-க நல்லெண்ணெய்-படி-க இருசீரகம், திப்பிலி, சுக்கு, மதுரம், அக்கறா, செஞ்சந்தனம், பூதவிருக்கம், ஏலம், இலவங்கம்-வகை-கழஞ்சு-ச அரைத்துக்கரைத்து ஏழுநாளூறிப் பதத்தில் வடித்து தலைக்கும்வைத்து உள்ளுங்கொடுக்கவும்.

### காயம்

இருசீரகம், ஓமம், திரிகடுகு, கராம்பு, உலுவா, சதகுப்பை, கறுவா, உள்ளி, பெருங்காயம், தூதுளைவேர், இயங்கம்வேர், ஈசுருமூலிவேர்-வகை-பலம்-வ இடித்து முருங்கைப்பட்டைச் சாற்றாலரைத்துக் காயங்காச்சிப் பாக்களவு கொடுக்கச் சுவாதகாசம் கழிச்சல் முதலியன தீரும்.

### சுவாதகாசம் காயாசுவாதம் இவற்றிற்காணும் விக்கலுக்கு

நாவற்றுளிர், மாந்துளிர், பச்சையிஞ்சி, ஓமம், ஒவ்வொருபிடி நாழிதண்ணீரிலிட்டு உழக்காகக் காய்ச்சித் தேன் ஏலம் திப்பிலி குங்குமப்பூ இலை மேற்பொடிதூவிக் கொடுக்க விக்கல் தண்ணீர்த்தாகம் நாவரட்சிதீரும்.

### மயக்கம் சன்னி கண்டாற் புகை

மிளகு, வசம்பு, சுக்கு, வெளுத்தற்பிசின், கெந்தகம், நிலவேர், பொடித்துப் புகை காட்டவும்.

## தைலம்

உள்ளி-பல-ச. கடுகு-பல-இ. மிளகு, சுக்கு, வசம்பு-வகை-பலம்-வ. வேப்பிலைச் சாறு விட்டரைத்து உலர்த்திப் பின் பசுநெய் விட்டரைத்துச் சீலையிற் பூசிப் பந்தம் சுற்றி வேப்பெண்ணெயிற் சுட்டத் தயிலமிறக்கி காசிடை இஞ்சி தேன் முலைப்பாலில் உள்ளும் கொடுத்துப் பூச உட்குத்துப் புறவீச்சு முதலியன தீரும்.

இந்நோய்க்கு இவையேயன்றி முன் காயாசுவாதத்திற் கூறிய சிகிச்சை முறைகளும் ஆவனவாம்.

## பைத்தியம்

பிள்ளைப் பெற்ற பெண்களுக்கு கெர்ப்பப்பையிற் சேரும் அழுக்கு முதலியவற்றாலும், பிற கோளாறுகளாலும் ஒருவகைப் பைத்தியம் காண்பதுண்டு. அதற்கு இரைக்குடல், கெர்ப்பப்பை, யோனி முதலியவற்றைச் சுத்தி செய்வதோடு, அமுத ஏலாதிச் சூரணம், நீற்றுப்பூசினிநெய், நறுவிலிநெய், முக்கூட்டெண்ணெய் முதலியவற்றாலும் சிகிச்சைபுரிக.

## பலநோய்க்கும் கறுப்புச் சூரணம் - வேறு

உரைபெறு சுக்கெண் கழஞ்சுதோல் போக்கி
யோட்டினிற் கருகிட வறுத்தே
யுற்றிடுங் கரிய சீரகந் தானு
மோதுமெண கழஞ்சது வறுத்து
வரைபெறு காந்த மறுகழஞ் சதுவும்
வறுத்திட நன்றதா மிலிங்கம்
மறுவறச் சுத்தி செய்திடு கெந்தி
வகைக்கிரு கழஞ்சது வாகப்
பொரியுறு காரம் பொரித்திரு கழஞ்சு
புகன்றிடு சூதமோர் கழஞ்சு

பொற்பு றநன்றா யரைத்திடக் கறுக்கும்
பகட்டிடு மிதற்கனு பானம்
திருவுறு மகவை யீன்றநல் லார்க்குச்
சேர்ந்திடு மிஞ்சிசா ரணையுஞ்
செப்பிடு முள்ளி யவித்தநீ ரதனிற்
சேர்த்தருந் திடவுநன் றாமே (உகக)

நன்றி டுற்றி: குத்துக் கொளுவலு
நாடி டுங்குளிர் கூதலு மாறிடும்
ஒன்று முள்ளியுந் தேனுங் கலந்துமே
யுண்ணச் சத்தி கழிச்ச லசீரணம்
பொன்றி டுஞ்சிக்கி நிற்குந் துவாலையும்
போகு மேற்ற வனுபானத் தோடுணில்
என்று மாமுனி வோருற் றுரைத்தன
ரெண்ணு நோய்பல பானத்திற் றீருமே (உஎ0)

## வயிற்றுப்புண் முதலியவற்றிற்கு உள்ளிப்பாகு

வெள்ளையுள்ளி பலமாறு தோடு போக்கி
விளங்குபசு லின்பாலி னாழி யொன்று
கள்ளமற வேயவித்துக் கடைந்து சுக்குக்
கராம்புவசு வாசிக்குலக் காயோ டேலம்
தள்ளரிய திப்பிலிநன் மிளகு கோட்டஞ்
சாதியின்றன் பத்திரியுங் குங்கு மப்பூ
உள்ளபடி கழஞ்சிரண்டு பொடித்துத் தூவி
யுற்றநறுந் தேன்விட்டுக் கடைந் திறக்கே (உஎக)

## நீர்வள்ளிநெய்யும் குழம்பும்

நீர்வள்ளிக் கிழங்கின் சாறு நெறியசெவ் விளநீர் தானும்
ஓரொன்று நாலு நாழி யுறுதெங்கின் பூவிற் சாறு
பாருறு மிரண்டு நாழி பருத்தியின் விதையிற் சாறு
சேருறு நறுநெய் தானு மொவ்வொரு நாழி சேரே (உஎஉ)

சேருறு நத்தைச் சூரி நன்னாரி செங்கத் தாரி
பாருறு முத்தற் காசு களப்பன்னை 1கிலையி னாகும்
நேருறு முரிசோ ரொன்று நிறைபொரு பல மிடித்து
நீருறு குறுணி யெட்டொன் றாக்கியே யிறுத்துக் கூட்டே (உஎங)

கூட்டுசெண் பகப்பூ வுள்ளி கோட்டநற் குலக்காய் வாசி
தேட்டுறு கராம்பு சுக்குத் திப்பிலி மிளகோ டேலம்
நாட்டுசெங் கடுக ரத்த சந்தன மோம மின்னம்
கோட்டமில் கரிய சீரங் கூட்டுமொவ் வோர்க ழஞ்சே (உஎச)

பதத்தினில் வடித்த ருந்தப் புண்பாடு வரட்சி சூடு
கதித்திடு மிரும நீருங் காட்டுநற் குழம்பாச் செய்யும்
விதத்தினை விளம்பு வன்கேள் மேவிய சாற்றி னோடு
மதித்தவேர்பிடியொவ்வொன்று வருகற்க மிருக ழஞ்சே (உஎரு)

செப்பிய நறுநெய் நாழி யரையுடன் றேன்கால் கூட்டித்
துப்புறு கரும்பின் பாகுஞ் சொல்லுகற் கண்டு தானும்
முப்பலந் தூவிக் கிண்டி முறைமெழு காம்ப தத்தில்
அப்படி யிறக்கித் தின்ன வறைந்தநோய் விலகு மன்றே (உஎசு)

## இஞ்சிப்பாகு வேறு

இஞ்சிச்சாறு, செவ்விளநீர், பசுப்பால்-வகை-படி-க. மாதுளம்பழச்சாறு கருப்பஞ்சாறு-வகை-படி-இ. உள்ளிச்சாறு-படி-வகை ஒன்றாய்க்கலந்து ஏலம், இலவங்கம், கராம்பு, சதகுப்பை, திரிகடுகு, இருசீரகம், அதிவிடயம், மல்லி, மாயாக்காய், கடுக்காய், குறாசாணி, சிற்றரத்தை, பேரரத்தை, அதிமதுரம், கைப்பு, களிப்பாக்கு, கடுகுரோகணி, ஓமம், கறுவா, நறுக்குமூலம், உலுவா, வசம்பு, கோட்டம், நற்சந்தனம், செஞ்சந்தனம்-வகை-கழஞ்சு-உ. வால்மிளகு, சாதிக்காய்-வகை-கழஞ்சு-ச. அசுவகந்தி, நிலப்பனை, கோரை, நன்னாரி, நத்தைச்சூரி-வகை-கழஞ்சு-உ. குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கல்ப்பூரம், பாற்கெருடபச்சை-வகை-கழஞ்சு-க. பொடிசெய்து தூவிப்பாகுபதத்தில் பச்சைவெண்ணெய்-படி-க. விட்டுக்கிண்டிப்பின் தேன்-படி-இ. முந்திரிகைப்பழச்சாறு-படி-இ. கூட்டி மெழுகுபதத்தில் இறக்கவும். பிரமாணம் கொட்டைப்பாக்களவு. வயிற்றுப்புண், வெளுப்பு, அசதி, இருமல், வெள்ளைசாய்தல், எலும்புருக்கி, முதலியன தீரும்.

## சீரகநெய்

பெருங்காயம்-ச. வசம்பு-உ. திப்பிலி-ச. சுக்கு-அ. கடுக்காய்-கஉ. மிளகு-ககூ. கோட்டம்-உ0. ஓமம்-உச. நற்சீரக-உஅ. கழஞ்சுவீதம் இடித்து அரித்து நறுநெய்யிற் கொதிப்பித்து நக்க செமியாமை சத்தி கொளுவல் தீரும்.

## வெல்லஉண்டை

வெல்லம்-கழ-உ. இரசம்-கழ-கூ. கெந்தி-கழ-உ. சாதிக்காய், கராம்பு, வசுவாசி, திப்பிலி, அக்கறா, குறாசாணி, சூடன், வாலுளுவை, இருசீரகம், கோட்டம், அபின்-வகை-கழஞ்-க. சீதுளாய்ச்சாற்றாலரைத்துக் கொடுக்க பிள்ளைபெற்றவளுக்குவரும் வாதம் முதலியன தீரும்.

*1 சிலையினாகும் முரிசு - கல்முரிசு*

### முலைக்குத்துக்கு

நாயுருவிவேரும்வசம்பும்தேன்வார்த்தரைத்துப்பூசமுலைக்குத் மாறும். பேய்ப்பாற்சோற்றிவேர் ஒருபிடி, மிளகு பத்து, வெள்ளுள்ளிப்பூடு ஒன்று அரைத்து எண்ணெயிற் கொதிப்பித்துப்பூச மாறும்.

தலையொடு இடித்து வறுத்து ஆமணக்கெண்ணெயிற் குழப்பிப் பூச மாறும்.

### பால்சுரக்க

பசுப்பாலுடன் ஆலம்பால் கலந்து காய்ச்சிப் பிரைகுத்திவைத்த தயிர் வார்த்துண்ணப் பால்சுரக்கும் பன்னிரண்டு நாட் தின்னவும்.

### முலைப்புற்று முதலியவற்றிற்கு இரட்சை

மாதுகேண் முலையிற் புற்று வளர்முலைக் கிரந்தி குத்துத்
தீதுறு பிளவை சொற்கத் தசுகுணி பலவுந் தீர
வாதைசேர் முலைக்கு நாலு புறத்திலும் வளமாய்ச் சுட்டு
மீதுறு மார்பி னேரா யளந்து நால் விரலிற் சூடே (உளஎ)

சூடெலாம் பொட்டாய்ச் சுட்டுத் தொடரெட்டிப் பட்டை மஞ்சள்
கூடவே யரைத்துச் சூட்டில் வியாதியிற் குலவப் பூசி
ஈடுற மூன்று நாளு மிப்படிப் பூசிப் பின்பு
நீடுநீர்ப் பூலாப் 1பன்ன நெடுவசம் புள்ளி மஞ்சள் (உளஅ)

மஞ்செனுங் குழலாய் தான்றி வளர்புற்று மண்ணுங் கூட்டித்
தஞ்சமா முருங்கை வேரிற் சாறுவார்த் தரைத்துக் காய்ச்சி
மிஞ்சவே பூசிப் பின்பு முருங்கையின் விரைகருஞ்சீர்
விஞ்சுநெற்பொரியோரொன்றாங்குழக்கதாய்விரைந்துவாங்கே. ( )

வாங்கியே யிடித்துத் தூளோர் பிடிவளர் பனையின் கட்டி
ஆங்கரைப் பிடியு மீர வுள்ளிச்சா றதனி னோடே
பாங்குறக் குழைத்து தின்னப் 2பறம்பினோய் பலவுந் தீரும்
பூங்குழன் மடவா யுப்புப் புளிநீங்கிப் புசிக்க நன்றே (உஅ0)

நன்றிசே ரிம்ம ருந்து நவையற வெட்டு நாளும்
தின்றிட மாறா தாகிச் சியல்வரிற் கருஞ்சீர் நன்னார்
துன்றிய வெருக்குக் கான்றை துடரிபா வட்டை வீழி
வென்றநற் குலததிற் காணி சிறியதம் பலைகி ளாவேர் (உஅக)

வேரிவை சமன்றூளாக்கி வெளிறுகுந் திருக்கங் கைப்புப்
3பாரிவேம் பாட லேலம் பகர்களிப் பாக்குத் துத்தம்
தாரில்செவ் வள்ளி யோம மிலவங்கஞ் சமன்றூள் செய்து
சேருமெட் யிலங் காய்ச்சித் திகழ்பதத் திறக்கி யாற்றே (உஅஉ)

ஆற்றியே தூள்கடுவி யருங்கலைக் கூட்டிப் புண்ணில்
ஏற்றமாந் 1திவாவிற் போட்டங் கிரவினிற் பனையிற் பன்னம்
போற்றியே வறுத்துக் கட்டிப் புகல்வெட்பா லைக்கொ ழுந்து
தோற்றுழக் கரிசி கூட்டிச் சுரபியின் பாலிற் கொள்ளே (உஅங)

கொண்டிட முலையிற் புற்றுக் குணம்வருஞ் சுரக்கும் பாலும்
மிண்டுமா வரைநன் னாரி வேர்பாலி லரைத்துப் பூசு
கண்ட2குந் தம்வேர் சுக்குச் சாய்ந்தநீர் வார்த்த ரைத்து
மண்டுவீக் கத்திற் பூச வளர்முலை வாதை போமே. (உஅச)

*1-பன்னம்-இலை 2-பறம்பு-முலை*
*3-பாரி-கோட்டம்*

## சுவாதகாசம் பயித்தியம் முதலியவற்றிற்கு முக்கூட்டெண்ணெய்

எருக்கலை சிவதை யுவாய்தயிர் வேளை
யமுக்கிராய் சன்னிக ணாய
னெலுமிச்சை புங்கு சித்திர மூலி
காக்கணங் கொவ்வைகன் முரிசு
பருத்திகாற் றோட்டி கொடிக்கழ றில்லை
மயிலடிக் குருந்துமா விலங்கை
3பரிதரு வாலி சிங்கிலி கண்டங்
கத்தரி யுத்தமா காணி
4விரித்திடு பூடு நிலக்குமிழ் கோரை
யியங்குசெங் கத்தாரி சிவனார்
வேம்பிரு வேலி யரமுறி துளசி
தூதுளை சாயவே ரிராச
முருக்கிரு முட்டி கான்றை5யீர் தோடை
பெருமருந் தவுரிநன் னாரி
முருங்கைகுத் துக்காற் சம்மடி குறிஞ்சா
6வுசிர்களப் பன்னைகா லடக்கி (உ அரு)

அடக்கிடு நொச்சி கள்ளிவேர் கொடியின்
மல்லிகை முதுகுறுந் தொட்டி
யருமணி யுறுதக் காளியும் வாகை
வேரொரு பலமதா யிடித்துக்
குடித்திடு தண்ணீர் பதக்கிரு படியாய்க்
குறுக்கியே யுத்தமா காணி

1-திவா-பகல் 2-குந்தம்-குருத்து
3-பரிதருவாலி-குதிரைவாலி 4-விரித்திடு பூடு-சாரணை
5-ஈர்தோடை-ஆடாதோடை, தோடை 6-ர்சிர்-இலாமிச்சு.

கூறிடு நொச்சி காக்கணங் கொவ்வை
பாண்டவர் முல்லைகன் முருசு
படித்திடு மாடா தோடைகர்ப் பூர
வள்ளிநற் கிரந்திக ணாயன்
பருத்திபேய்ப் பருத்தி நாவியிற் றண்டை
பகர்சிறு குறிஞ்சிமா விலங்கை
தொடுத்திடு சிவதை யுறுதயிர் வேளை
யுடன்முசு முசுக்கை 1 காலடக்கி
சொல்கறுத் தப்பூ வேனுமிவை யிலைச்சா
றுடன்வரு கங்கையின் மீட்டான் (உஅங)

சொற்றகுவேரிற் பிழிந்திடுஞ் சாறுந்
தோகையே யொவ்வொரு படியாய்ச்
சூழெருக் கலைவேர்ச் சாறிரு படியுந்
தொகுத்தபி னெள்ளுட னிம்பம்
மற்றுமே ரண்ட மிவையினிற் றியிலம்
வகைக்கிரு படியதிற் கற்கம்
வசம்புமுக் கடுகு சீரக மிரண்டு
வருகுலக் காய்வசு வாசி
திற்பலி மூலஞ் சாத்திர வேதி
திற்பலி வெளுத்தலிந் துப்புத்
தேவர்க டாரு பச்சைகுந் திருக்கங்
கடுகுவெண் கோட்டநா கம்பூப்
பொற்புறு மிருகச் சோலமீ ருள்ளி
யிலவங்க மேலமீ ரரத்தை
போற்றுறு காயங் கராம்புசெஞ் சந்தம்
புகல்கடு ரோகணி மாஞ்சில் (உஅஎ)

1-காலடக்கி-வாதமடக்கி

அறுவகை யரிசி சன்னிக ணாய
னுடன்மர மஞ்சள்செவ் வள்ளி
யருஞ்சிறு தேக்குச் சதகுப்பை யுள்ளி
யானையின் றிப்பிலி துரிசும்
உறுபெருங் குரும்பை யோடதி மதுர
முஞ்சிறு மூலமு மாக
வொன்றொரு கழஞ்சு பொடித்ததூடுவி
யூறிட வெட்டுநா ளடுப்பில்
நிறைபடு சரக்கு மிகுந்திடி லெண்ணெய்
மூன்றுமோ ரளவதாய்க் கலந்து
நேர்பெற விட்டு வடித்துமேற் பொடிகோ
ரோசனை குங்குமப் பூவும்
நன்றபெறு புனுகு சட்டமும் பொடிதூய்
முழுகிமேற் பூசியே யுள்ளும்
நக்கிட வாதம் பயித்தியஞ் சன்னி
யாதிய நீங்கிடு நன்றே.

கெர்ப்பரோக நிதானம்,

முற்றிற்று.

## (மூன்றாவது)

## பாலரோகநிதானம்.

பாலர் பிணியிற் குணம்பேசும் பாட்டு மருந்து செய்முறையும்
காலக் கழிப்பு நீர்ச்சொரிவுங் கட்டுஞ் சிலவே ரவையுடனே
கோலக் குழையு மெண்ணெயுடன் குணத்தின் படியே கொள்
சீலக் குருவிள நாயகனார் சித்தித் தார்சுஞ் சீவியெனவே

### பிள்ளை பிறந்த உடன் எண்ணெய் பிசைய

கோடகசாலையிலே ஆய்ந்தெடுத்து ஒருபிடி நல்லெண்ணெயிது தலையிலும் வார்த்து நாக்கிலும் தடவக் கிரந்தி கொள்ளாது.

### பிள்ளை அழுது முலைகுடியாதிருந்தால்

வசம்பு தோல்போக்கி வாழைப்பூச் சாற்றிலரைத்து அடிவயிற்றில் பூசவும்.

கருங்கற்றாழஞ்சாறு ஒருபங்கும் ஈருள்ளிச்சாறு இரண்டு பங்கும் கலந்து காய்ச்சி கடுக்காயும் கோரோசனையும் பொடித்துத்தூவித் தடவவும்.

### மலசலங் கட்டினால்

சிறுபீளைவேரும் அதிமதுரமும் அரைத்து முலைக்கண்ணிற் பூசிப் பால் கொடுக்கவும்.

நாயுருவிவிரையும் கடுக்காயும் சமன்கலந்து ஒருபங்கும் கோரோசனை ஒருபங்கும் கூட்டிப் பொடித்து முலைப்பாலிற் புகட்ட வயிறு விடும்.

### வயிறுபொருமினால்

கடுக்காய் விரைநீக்கி அமுக்கிறாயிலைச் சாற்றாலரைத்து வயிற்றிற் பூசவும். வாழைப்பூச்சாறு குழம்பாகக்காய்ச்சி வயிற்றிற்பூசவும்.

### பிணிதொடாமல் இருக்க

ஒருமிளகும் அதனிடை அக்கறாவும் வசம்பும் அரைத்து முலைப்பாலிற் கலக்கி, முதல்மாதம் முழுக்காட்டிய மறுநாட் புகட்டவும். இப்படி மாதந்தோறும் ஒவ்வொரு மிளகு ஏற்றி முன்போற் கொடுத்து வர நோயணுகாது.

### நாக்கிரந்திக்கு

செங்கத்தாரிவேர், நன்னாரிவேர், கருஞ்சீரகம் இயங்கம்பழச் சாற்றிலூறவிட்டு அரைத்து நாக்கிற் தடவவும்.

மதுரம், திப்பிலி, கடுக்காய், கருஞ்சீரகம், ஈருள்ளி, வசம்பு, காவிளாய்வேரி, சிறுபீளைவேரி பொடிசெய்து நல்லெண்ணெயிற் கொதிப்பித்துப் பூசவும்.

### செங்கிரந்தி கருங்கிருந்தி இவற்றின்குணம்

செங்கிரந்தி யுடல்சிவக்கு மிடறு கட்டுஞ்
செயலற்றுச் சோருமன்றி யுதர மூதும்
துங்கமுற மலங்கட்டும் பாலுண் ணாது
தோன்றுமைந்து தினங்கழியி னன்மை சாரும்
பங்கமுறு கருங்கிரந்தி கறுத்துக் காட்டும்
பகரும்வாய் வரண்டுமிகக் குரலுங் கட்டும்
பொங்கிமிக வயிறூதி மலமுங் கட்டும்
பொல்லாத நோயிதெனப் புகன்றா ரன்றே

### சிகிச்சை ஏனாதி

நன்னாரிவேர், கர்ப்பூரவள்ளியிலை, கஞ்சாங்கோரை, குன்றிமணியிலை இயங்கங்கொழுந்து இவைசாறு கொண்டு இருசீரகம், உள்ளி, திப்பிலி கோரோசனை பொடித்துத்தூவிக் கருப்புக்கட்டி கூட்டிக் குழம்பாகக்காய்ச்சி நாக்கிற்றடவவும்.

ஈருள்ளி, கர்ப்பூரவள்ளியிலை, குன்றியிலை இவை சாறுபிழிந்து கடுக்காய், திப்பிலி, கோரோசனை பொடித்துக் கூட்டிக் குழம்பாக்கி நாக்கிற்றடவவும். மலங்கழியாவிடின் கடுகுரோணி கருஞ்சீரகம் கூட்டவும்.

முன் 88-ம் பக்கத்திற் கூறிய செம்பரத்தம்பூ எண்ணெய் தாய்க்கும் பிள்ளைக்கும் கொடுத்து மேலும்பூச செங்கிரந்தி, கருங்கிரந்தி, செவ்வாப்பு, கருவாப்பு, செங்கரப்பன், கருங்கரப்பன் முதலியன தீரும்.

### கிரந்தி பலவுக்கும் எண்ணெய்

நிலக்கடப்பமிலை-படி-உ. உரித்த வெள்ளுள்ளி படி-உ. இரண்டையும் கலந்து மூன்று முறை துவைத்துப் பிழிந்து வடிகட்டி. ஆமணக்கெண்ணெய் இரண்டுபடியிற்கலக்கி செம்முள்ளியிலை, நொச்சிக்கொழுந்து, ஆனாக்கொழுஞ்சிக்கொழுந்து, செப்புநெருஞ்சி, மணித்தக்காளி, செங்கத்தாரிப்பட்டை, கலியாணமுருக்கிலை, அவரை, சிறுசெருப்படி, கற்றாழஞ்சோறு, கருநொச்சி, கொட்டைக்கரந்தை, தூதுவளை-வகை-படி-க. அல்லது எண்ணெய்க்கு ஏற்ற அளவிற் கூட்டவும். கோட்டம், செண்பகப்பூ, ஏலம் இலவங்கம், கம்பிப்பிசின், திப்பிலிமூலம், மதுரம், வெளுத்தற்பிசின், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், கடுக்காய், வெள்ளுள்ளி, மிளகுவகைக்கு – வராகனிடை - க, பொடித்தூவி இரண்டுநாள் வெயிலில் வைத்துப் பின் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து பிள்ளைக்கும் தாய்க்கும் கொடுத்து மேலும் பூச முன்சொல்லிய வியாதிகள் தீரும். இந்த எண்ணெய் கெர்ப்பமாயிருக்குங்காலத்தில் பத்துமாதமும் - கூ நாள்வீதம் கொடுத்துப் பிள்ளை பிறந்த உடன் பிள்ளைக்கும் தாய்க்கும் கொடுக்க கிரந்தி தோன்றாது.

### செவ்வாப்புக்கு

சேருமுடல் சிவத்தலது செவ்வாப் பாகுஞ்
செம்பரத்தை தனிற்பூவுஞ் செங்கத் தாரித்
தூருடனே தேற்றாவே ரதனிற் பட்டை
தொகுமிருசீ ரகமேலங் கடுக்காய் திப்பில்
நேரியவெள் ளெண்ணெய்தனிற் பொடித்துத் தூவி
நிகழ்வெயிலில் வைத்துண்டு மேலும் பூசத்
தீருமது செவ்வாப்புச் செங்கி ரந்தி
செம்முள்ளி யிலைபிசைந்து குளிக்க நன்றே

### குளிப்பாட்ட

குன்றிமணியிலை, அவுரியிலை, ஆவரையிலை, சிற்றவரையிலை, இயங்கமிலை – வகைக்கு – ஒருபிடி குளிர்ந்த தண்ணீரிற் பிசைந்து குளிப்பாட்டச் செவ்வாப்புத் தீரும்.

### கருவாப்புக்கு

கருகுவது டம்பெல்லாங் கருவாப் பாகுங்
கவின்கிழங்காய் நெல்லிகுன்றி பொன்னாங் காணி
உரியதுளி 1ராகரிசீ ராகமி ரண்டு
முற்றவெள்ளி லெண்ணெய்தனிற் பிசைந்து பின்னர்
வருவெயிலில் வைத்துண்டு மேலும் பூச
மாறிடுமா வரையுடனே கோவைப் பத்ரம்
செருவுறவே பிழிந்துகுளிப் பாட்டி வந்தாற்
செவ்வாப்புக் கருவாப்புத் தீருந் தானே

### ஈருள்ளியெண்ணெய்

ஈருள்ளிச்சாறு, நல்லெண்ணெய், வகை-படி-க. கிரந்திநாயன், செம்பரத்தமிலை, செம்பரத்தம்பூ, கறுத்தக்காக்கணமிலை,

கறுத்தக்காக்கணம் வேர் இவைதனித்தனியிடித்துப் பிழிந்தசாறு வகை-படி-இ. கலந்து அதில் இருசீரகம், வசம்பு, கோட்டம், மதுரம், அக்கறா, ஓமம், கடுக்காய், மாயாக்காய், தான்றிக்காய் - வகை – கழஞ்சு – க. பொடித்துத்தூவி மெழுகுபதத்தில் வடித்து உள்ளும் புகட்டி மேலும் பூச செவ்வாப்பு, கருவாப்பு கிரந்திவகை முதலியன தீரும்.

### கோரோசனைக் குளிகை

கோரோசனை, இருசீரகம், மாயாக்காய், திப்பிலி, சாத்திரவேதி, அக்கறா, கோட்டம், கராம்பு, சுத்திசெய்த வாளம் - வகை – கழஞ்சு-க. கறுத்தப்பூவிலைச்சாறு விட்டரைத்துப் பயறளவு உருட்டி நிழலுலர்த்தி முலைப்பால் கர்ப்பூரவள்ளிச்சாறு இவற்றில் கொடுக்க முற்கூறிய நோய்கள் தீரும்.

### செங்கரப்பன் குணம்

பிள்ளையுங் கனத்து வீங்கும் பிரண்டையின் பின்னல் போல
உள்ளமுங் கன்றிச் சீறி யுடம்பினுஞ் சிவந்து காட்டித்
துள்ளியே கையிற் றங்காத் துணுக்கெனச் சுழலும்பிள்ளை
கள்ளமாய் வயிற்றிற் காலிற் கட்டுஞ்செங் கரப்பன் காணே (ர்கூர்)

இக்குணங்களில் உடம்பு கறுத்திருப்பது கருங்கரப்பன் என்பதறிக.

### சிகிச்சை சுரசம்

செங்கத் தாரி புல்லாந்தி சிறிய கிளாவேர் செஞ்சந்தம்
அங்கப்படியே யரைத்தொன்றா யதனைப் பிழிந்துள் ளுங்கொடுத்துப்
பங்கப் படாதே யம்மருந்து பற்றாய்ப் பூசி வருவீரேற்
சங்கத் தமருஞ் செங்கரப்பன் றணிந்தே யகலுங் கண்டீரே (ர்கூகூ)

கண்டோங் கொடிமல் லிகையிலையைக் கடிதாய்ப் பிழிந்துள் ளுங்கொடுத்து
மிண்டா துடனே பூசிவரில் மீளுமிதுநாங் கைகண்டோம்
பண்டார் பஞ்ச பாண்டுமுல்லை பகரு நாகை யுள்ளியுடன்
கொண்டேயவித்துப் புகட்டிவரிற் கொடியகரப்பன்மாறிடுமே (ர்கூச)

பாகலிலையு மிளகுடனே பரிவாயரைத்துப் பிழிந்துடனே
தாகத்துறவே பருக்கிவரிற் றணியுஞ் செய்ய கரப்பணிவை
வேகத்துடனே மீறிவரில் விடாம லிந்த மருந்து செய்யப்
போகத் துறுசெங் கரப்பனிவை பொறுத்தே போகும் கண்டீரே ()

**புங்கம்வே ரெண்ணெய்**

புங்கம் வேரைத் துருவிநன்றாய்ப் பொடியாய்த் துவைத்து நல்லெண்ணெய்
தங்க மாக வொருகொத்துத் தனியே விடடுப் பிசைந்ததிலே
துங்க மான வசம்புள்ளி தூய கடுக்காய் மிளகேலம்
சங்கமான தான்றிநெல்லி சாற்றுமிருசீ ரகங்கோட்டம். (ர்கூகூ)

கோட்ட மில்லாச் செஞ்சந்தங் கோதில் கராம்பு வசுவாசி
நாட்டு மாயா விலவங்க நல்ல கைப்புக் களிப்பாக்குக்
காட்டில் வள்ளி திப்பிலியுங் கடிய பூத விருக்கமுடன்
கூட்டுமுலுவாக் கொத்தமல்லி குலவு மாஞ்சில் செண்பகப்பூ. (ர்கூஎ)

பூர்க்கு மகில்நா கம்பூவும் பொருந்துஞ் செம்ப ரத்தையிற்பூக்
கார்க்குஞ் சரக்கொன்றி ருழஞ்சாய்க் கடிதாயிடித்துப் பிசைந்தொன்றாய்ச்
சேர்க்குங் கலத்தி லுடன்வெயிலிற் றிடமாய் வைத்துப் பதத்தெடுத்து
வார்க்கு மெண்ணெ யுள்ளருந்தி வரச்செங் கரப்பன் மாறிடுமே ()

### செங்கத்தாரி யேண்ணெய்

செங்கத் தாரி சிறுகிளாச் சிவந்த பூலா வேருடனே
புங்கம் வேர்நற் கருஞ்சூரை பொருந்து மிலைவே றொருநிறையாய்த்
தங்கு மிருசீ ரகங்கோட்டஞ் சாற்றுங் கடுக்காய் செஞ்சந்தம்
சங்க மிளகீ ருள்ளியுடன் சாதி கராம்பு வசுவாசி (ர்கூகூ)

வாசி மாயாத் திகளிலவம் வருசெவ் வள்ளி திப்பிலியும்
பேசு மதுரங் கொத்தமல்லி பெருத்த கைப்புக் களிப்பாக்குத்
தூய நெல்லி சதகுப்பை துகடீ ரேலஞ் செண்பகப்பூக்
காயுந்திலவெண்ணெயிற் கொதித்து வார்க்கக்கரப்பன்மாறிடுமே ()

### கொடிமல்லிகை யெண்ணெய்

கொடிமல் லிகைவேர் தனைப் பிடுங்கிக் கோதில் செஞ்சந் தனம்வசம்பு
பொடியா யிதனைத் தூளாக்கிப் பொருந்துந் திலத்தி லெண்ணெய்நன்றாய்க்
கடிதாய்க் காய்ச்சிக் கொதிபதத்திற் கலந்தே தூவி யுள்ளருந்திற்
கெடியா யோடுஞ் செங்கரப்பன் கேடில் கதிர்முன் பனியெனவே ()

### புடைகரப்பன் குணம்

புடைத்த கரப்பன் கிரந்திசெய்யும் பெரிய குணத்தைப் புகன்றிடுகிற்
படைத்த சரீர முழுதெங்கும் பரந்தே கனத்துத் திரண்டெழுந்தே
அடைத்துச் சிலநாட் சென்றதற்பி னதிகமாகச் சியல்கட்டி
உடைத்தே புண்ணா மென்றுரைத்தா ருணர்ந்தேகலைக ளறிந்தோரே.

### சொறி படுவன்குணம்

சொறிந்திடும் படுவன் செய்யுங் குணந்தனைச் சொல்லவேண்டிற்
செறிந்திடு முடம்பு முற்றுந் தினவதாய்த் தடித்து வீங்கி
நிறைந்திடக் கிரந்தி சேரி னீட்டிக்கு மதுதா னின்றேற்
பரிந்துடன் மருந்தான் மாறு மெனவுநூல் பகர்ந்த தாமே. (கூ0கூ)

### படுவன்குணம்

படுவனின் குணந்தான் செய்யு முபாதியைப் பகர வேண்டில்
வடுவது விலாவி னெஞ்சில் வகுத்திடு முகத்தின் மூக்கில்
நடுமுது கினில்வ யிற்றில் நாடிய மறுதா னத்தும்
அடுகண மெனவே குத்தி யடர்ந்து கொப்புளம தாமே. (கூ0௪)

### கொள்ளிக் கரப்பன்குணம்

கொள்ளிக்கரப்பன்செய்குணத்தைக்குறித்தே யரைக்கிற் சரீரமெங்கும்
புள்ளிப் படவே திரண்டெழுந்து புடைத்துப் பரந்து கருகிவரும்
வெள்ளைக் கயலை மாவடுவை வேலைக் கடலை வடிவாளைக்
கள்ளக்கடுவைக் கலைமானைக் கறுக்குங் கருங்கட் காரிகையே

### கொள்ளிக்கரப்பன் அசாத்தியக்குறி

கொத்துங் கொள்ளி யசாத்தியமாங் குணத்தை யறிந்து கூறிடுகில்
எத்தும் வயிறு தான்வீங்கு மிருமி யடைக்கு மிளைப்புண்டாம்
கத்துங் குரலு மரிவுண்டாய்க் களைத்தே விக்கல் தோன்றிடுகிற்
பத்தும் பலது மோதுவதென் பாலன் பிழைப்ப தரிதாமே. (கூ0கூ)

### கொப்புளக்கரப்பன் குணம்

தடம்பெறு சரீர நொந்து தலைவலித் திருமிக் காயும்
நடம்பெறு மங்க முற்று நயமில்கொப் பளம்பிறக்கும்
விடம்பெறு விழிசி வக்கு மேவமிக் குணம்வி ளம்பில்
குடம்பெறு கொங்கை நல்லாய் கொப்புளக் கரப்ப னாமே (கூ0எ)

### வாப்புளிக்கரப்பன் குணம்

மாசிலாச் சிறுவன் மேனி பாலையாம் விழிநீர் சோரும்
வீசியே குளிர்ந்து சிறி விதமுறப் பாலெடுக்கும்
கூசியே குழியுங் கண்ணுங் குணாகுணம் பலவுஞ் செய்யும்
சாசிலான் வயிறு மூதிக் கழிந்திடும் வாப்பு ளிக்கே (கூ0அ)

### 3. பறவையின் குணம்

காய்ந்துதலைக் குத்திருமி மிடற ரிக்குங்
கண்பிளை கொண்டுமிகச் சிவக்கு மன்றி
வாய்ந்தவயிற் றினிற்புண்போ னோவுண் டாகும்
வந்துதடித் துத்தடித்துச் சொறிந்து மாறும்
ஆய்நதிடிவிக் குணம்பறவை செயுங்கு ணந்தா
னறிகவென விளம்பினா ரலைசூழ் பூவிற்
றோய்ந்தகலை நூற்பரப்பை பாய்ந்து மாயைத்
தொடர்பகற்றி யருள்பெற்ற தூயோர் தாமே

### சிரங்கின் குணம்

சிறுவனுறுங் கைத்தலத்திற் புறங்கை தன்னிற்
சேருமரை முதலான மறுதா னத்தில்
விறுவிறெனச் சொறிந்துதண்ணீர் கட்டிப் பின்பு
மிகுத்ததின வுண்டாக்கும் விளம்பு கிற்றால்
இறுகுமிடை சிறுகுநுதல் வரைநேர் கொங்கை
யிருவிழியும் பயினமலை யிகலு நல்லாய்
கறுவுதல்சே ருஞ்சிரங்கின் குணமீ தென்று
கட்டுரைப்பர் மறையுணர்ந்த காட்சி யோரே

### சிரங்கின் மகோதரக் கரப்பன் குணம்

சிரங்கின்மகோ தரக்கரப்பன் செயுங்கு ணந்தான்
றினவடங்கி வீங்கிமல சலமும் வற்றி
உரம்பயிலு முதரமுற வுள்முட் டாகி
யுவாதிமிகுந் தரிகுரலாய் மிடறும் விக்கி
வரம்பயிலு மூச்சுமிகு சுவாத முண்டாய்

வாப்புளிக்கிரந்தி – என்றும்பாடம். பசலை – தேமல்.

வாயுமிகுந் தூண்மறந்து தாக மிஞ்சி
இரங்குறவே களைசோக மிகுதி யுண்டா
யிராக்காலத் ததிகரிக்கு மியம்புங் காலே

## வேறு

## கிரந்தி கரப்பன் முதலியவற்றுக்குப் பொதுச் சிகிச்சை

### கிரந்தியெண்ணெய்

வீழி, நன்னாரி, தூதுவளை, கோழியவரை, சிற்றமட்டி, கிரந்திநாயன், கருவேம்பு, செங்கத்தாரி, கான்றை, கல்முரிசு, களப்பன்னை, தக்காளி கறுத்தக்காக்கணம் இலைவேர். கோழியவரை, கறுத்தக்காக்கணம், கருவேம்பு, பருத்தி, வல்லாரை, முசுமுசுக்கை, கிரந்திநாயன் இவையிலை செம்பரத்தம்பூ - வகை – பிடி – க. இருசீரகம், ஓமம், பூதவிருக்கம், நாகம்பூ, செவ்வள்ளி, மிளகு, வசம்பு, கைப்பு, களிப்பாக்கு, செஞ்சந்தனம், கோட்டம், கடுகுரோணி, வெட்பாலை, ஏலம், இலவங்கம், சாதிக்காய், சடாமாஞ்சில், உள்ளி – வகை – கழஞ்சு – உ. வேர், இலை, சரக்குகள் வெவ்வேறாயிடித்துத்தூள்செய்து நல்லெண்ணெய் வெற்றிலை வெடிபதத்தில் கொதிப்பித்து இறக்கி முதலில் வேர்த்தூளும், பின் சரக்குத்தூளும், அதன்பின் இலைத்தூளும் தூவி ஆற்றி உள்ளும் புகட்டி மேலும் பூசித் தலையிலும்வைக்க கிரந்தி வகை – கரப்பன் வகை எல்லாம் தீரும்.

### செம்பரத்தம்பூ எண்ணெய்

செம்பரத்தம்பூ - உரு. செங்கத்தாரி, தேற்றாவேர் - வகை – பலம் -வ. திரிபலை, செஞ்சந்தனம், வேம்பாடல், கோட்டம், செவ்வள்ளி, வசம்பு, மஞ்சள், மிளகு, வசுவாசி, இருசீரகம், திப்பிலி, மதுரம், சாதிக்காய், ஏலம், இலவங்கம்É மாயாக்காய், பூதவிருக்கம், நாகம்பூ, கிருமிசத்துரு, ஈருள்ளி, வலம்புரி, வெளுத்தற்பிசின், செண்பகப்பூ, கராம்பு – வகை – கழஞ்சு – க. முன்போற்கொதிப்பிக்கவும்.

### செம்பரத்தம்பூ எண்ணெய் - உ

வேலிப்பருத்தி, பொடுதலை, முருங்கை, முருக்கு, குப்பைமேனி, கர்ப்பூரவல்லி, செருப்படிநாயன், ஈருள்ளி, மாதாளங்காய், செம்பரத்தம்பூ - இவை – சாறு நல்லெண்ணெய் - வகை – படி – உ. இருசீரகம், ஓமம், திரிபலை, திரிகடுகு, கோட்டம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கல்நாவ, சாத்திரவேதி, ஏலம், இலவங்கம், செஞ்சந்தனம், பூதவிருக்கம், வெள்ளுள்ளி – வகை – கழஞ்சு – உ. நாயுருவி, பருத்தி, வட்டு, துதுவளை, வெள்ளைக்காக்கணம், கீழ்க்காய்நெல்லி, இவைவேர் - வகை – பிடி – க. சீனப்பாகு – பலம் - க. சூதம் கழஞ்சு – உ. எல்லாம் அரைத்துக் கரைத்து நாலாநாள் மெழுகு பதத்தில் வடித்து உள்ளுந் தின்று மேலும் பூசித் தலையிலும் வார்க்க சூலை, கிரந்தி, புண், குட்டம் மசறிநோய், கெந்ததாளி, கிரந்திவகை, கரப்பன்வகை காய்ச்சல், வீக்கம், மாந்தம் முதலியவை தீரும் கெர்ப்பனிக்கு பத்து மாதமும் கொடுக்க அழிகருப்பம் முதலியன நீங்கும்.

### ஈருள்ளியெண்ணெய்

ஈருள்ளிச்சாறு, கையாந்தகரைச்சாறு, எலுமிச்சம்புளி, நல்லெண்ணெய் - வகை – படி – உ. இயங்கமிலைச்சாறு, கர்ப்பூரவள்ளிச்சாறு – வகை – படி – க. செஞ்சந்தனம், இருசீரகம், மஞ்சள், ஏலம், திரிகடுகு, இலவங்கம், மல்லி, உள்ளி, கராம்பு, மாயாக்காய், செவ்வள்ளி, சாதிக்காய், வசுவாசி – வகை – கழஞ்சு – உ. மெழுகுபதம் வடிக்கவும். முன்சொல்லிய ரோகங்கள் தீரும்.

### பிள்ளைகொல்லுங் கிரந்தியெண்ணெய்

பஞ்சபாண்டவர் முல்லை, பருத்தி, முசுமுசுக்கை, முருக்கு, கோழியவரை - இவை சாறு நல்லெண்ணெய் - வகை – படி – உ. கிளுவை, அத்தி, உதி, புங்கு, வேல், இலுப்பை, செங்கத்தாரி, கயட்டை, இலந்தை, நாவல் - இவை – பட்டை – வகை – பலம் - ர். இடித்துப் பதினாறுபடி தண்ணீர்வைத்து எட்டொன்றாயிறுத்த கஷாயம் இவையெல்லாம் கலந்து அதில் களப்பன்னை, தூதுவளை,

கிரந்திநாயன், கல்முரிசு, கண்டங்கத்தரி – இவை வேர், செம்பரத்தம் பூ, மாதுளம் பூ, மாதுளம் பிஞ்சு - வகை – பிடி – க. சீனப்பாகு – பல – உ. திரிகடுகு, இருசீரகம், உள்ளி, மஞ்சள், சாதிக்காய், கடுகு, வசுவாசி, கல்நார், கராம்பு, வலம்புரி, இடம்புரி, வசம்பு, கைப்பு, களிப்பாக்கு, கடுக்காய், ஓமம், மதுரம், ஏலம், இலவங்கம், மாயாக்காய், பூதவிருக்கம், தெஞ்சந்தனம், மல்லி, இரசம் - வகை – கழஞ்சு – உ. அரைத்துக் கரைத்து ஏழாநாள் மெழுகுபதத்தில் வடித்து மேலும்பூசி உள்ளுங் கொடுக்க முற்றிவெடித்த கிரந்திப்புண்கள், பலவகைக் கரப்பன் குட்டம் முதலியன தீரும்.

## கிரந்தி யெண்ணெய்

சொலத்தகு மிருசீ ரகம்வசுவாசி தூயநல் லிலவங்க மேலம்
நலத்துறுகோரோ சனைவலம் புரிக்காய் நாகையிலுள்ளிபீ நாறி (காப்
பெலத்துறு கராம்புதிப்பிலி வெளுத்தற் பிசின்சடை மாஞ்சின் மாயாக்
வலத்துறுசிவந்தசந்தனங்குலக்காய்வகுத்திடுமக்கறா வகைக்கே.()

வகைக்கொரு கழஞ்சுநிறுத்திடுவேர்கண் மயிலடிக் குருந்துகன் முரிசு
தொகுத்திடு செங்கத்தாரிவேர் புங்குசொன்னிலக் குமிழ்களப்பன்னை
வகுத்திடுசிறுகாஞ்சோன்றிவேரிவைகள்வகைக்கொரு பிடியது வாகப்
பகுத்திடுசரக்கும்வேரும்வெவ்வேறாய்ப்பரிவடனிடித்துமாவாக்கே.

ஆக்குமென் ளெண்ணெய் வெற்றிலை வெடிக்கு மரும்பதத் திறக்கிவேர்த் தூளைத்
தாக்கிடு பின்னைச் சரக்கினிற் றூடு யாற்றியே தலையினில் வைத்து
நாக்கினிற் றடவி யுடம்பினும் பூச நவின்றிடுங் கிரந்திசெங் கரப்பன்
போக்கிடுங் கரியகிரந்தி செவ்வாப்புப் புண்களு மகலுமென் றுரைத்தார் ()

## புங்கம்வேர்க் கொதியெண்ணெய்

உரைபெறு செங்கத் தாரிவேர் புங்கி லுற்றிடு வேரதி மதுரம்
நிரைபேறு மிருசீ ரகமில வங்க நேர்திரி கடுகு செஞ் சந்தம்
வரைபெறு பூத விருக்கமீ ரரத்தை வசம்புநல் லுசிர்வலம் புரிக்காய்
தரைபெறு மேலமகில்சதகுப்பைசார்ந்திடுகராம்புவெண் பிசினே. ()

பிசினொடு சிவந்த வள்ளிகச் சோலம் பேசிடு முள்ளியீ ருள்ளி
கசிவுறு மாஞ்சி றன்னுடன் கடுக்காய் கைப்பத னொடுகளிப் பாக்கு
கசிவுறவிடித்துப்பொடித்திடு தூளை நாடுமெள் ளெண்ணெயின் முன்போல்
இசைவுடன் கொதிப்பித்திடவருங்கிரந்தியினமெலாநீங்கிடு மினிதே ()

## சூரியபுட எண்ணெய்

இனித்திடு குன்றி மணிகருப் பூர வள்ளிநற் பிரமிவல் லாரை
வனத்தினிற் படருந் தூதுளை கொன்றை வருமுசு முசுக்கையு நீல
இனத்தினையுடையகாக்கணநிலத்திற் பாகனல் லிலையுடன் வேர்கள்
கனத்தினைப் பொருவங்கூந்தலா யுலர்த்தி யிடித்துமேற் கராம்பு செவ்வள்ளி.

மல்லிமுக்கடுகு திப்பிலிமூலம் வருகுலக் காய்வசு வாசி
சொல்லுமீ ருள்ளி யேலம்வெட் பாலை சுகந்தரு சீரக மிரண்டு
நல்லவெண் கோட்ட மக்கறாக் கிருமி சத்துரு வரத்தைசெஞ் சந்தம்
வெல்லுறு மாயாக காயச மோதம் வெண்பிசி னொடுமல நாறி. (கூகஅ)

இவையொரு சமனா யிடித்ததூளிருபங் கிலையினிற் றூளொருபங்கு
சிவையினிற் றூளோர்பங்குவெவ் வேறாய்த் திலத்துறு
மெண்ணெயிற் கலக்கிக்
கவையுடன் வெயிலின் மூன்றுநாள்வைத்துக்கடுகியே புகட்டிமேற்பூச
நவையுறுகிரந்தி கரப்பனே யாதி நசித்திடுமென்றன் நல்லோர். ()

## கொதியெண்ணெய்

செங்கத்தாரி, இருதுடரி, விட்டாடி, கருஞ்சூரை, புல்லாந்தி, நன்னாரி, கொன்றை, இம்பூறல் - இவை – வேர் செவ்வள்ளி, செஞ்சந்தனம், சாதிக்காய், கைப்பு, களிப்பாக்கு, இருசீரகம், ஏலம், கடுக்காய், மாயாக்காய், கடுகு, கராம்பு, இந்துப்பு, வசுவாசி, மிளகு, ஈருள்ளி, மல்லி, ஓமம், வசம்பு, திப்பிலி, சந்தனம், பூதவிருக்கம், சாளியா, மதுரம் - வகை – கழஞ்சு – க. செம்பரத்தம்பூ, இலை, கோடகசாலை, கர்ப்பூரவல்லி – வகை – பிடி – க. எல்லாம் தூள்செய்து நல்லெண்ணெயிற் கொதிப்பிக்கவும். தலைக்குவைத்து உள்ளும் புகட்டக் கிரந்தி வகை எல்லாம் தீரும்.

## பெருங்கிரந்தி யெண்ணெய்

தூதுளை பிரமி செருப்படி நாயன் சொன்முசு முசுக்கைவெள் ளறுகு
தாதவிழ் கறுத்தக் காக்கணம் விழி தகுகரி சாலை மால் காந்தி
கோதக லாடு தீண்டிடாப் பாலை குக்குடத் தவரையு மின்னம்
ஓதுகர்ப் பூர வள்ளியு மிவைசா றுடன்வரு தேசியின் புளியே.
(கூர்0)

இவையொரு நாழி பசுவின்பா லதுவுமெண்ணெயும் வகைக்கிரு நாழி
அவுரிகாற் றோட்டி பரிதரு வாலி யருமுசு முசுக்கைபேய்ப் பிசுக்கு
நவையறு செங்கத் தாரிகன் முரிசு நறக்களப் பன்னைநா யுருவி
குவைபெறு சடைக்காவிளை பெருங்குரும்பை குக்குடத்தவரை
நன்னாரி

சிவை வேர்.

சிறியகாஞ் சோன்றி கிரந்திக ணாயன் சேருறு விடத்தல்பொற் காணி
நறியதூதுளையோ ரிதழ்சிறு மட்டி நவில்கண்டங் காரிசொல் வட்டு
மறுவறுமாடாதோடைநற்கான்றைவயங்குகீணெல்லியுமிவைவேர்
குறைவறவகைக்குக்கழஞ்சிரண்டாகுங்கோட்டநல் லிலவங்கமேலம்.

உள்ளியீ ருள்ளி யிலவங்க மல்லி யுறுவசம் பட்டிசெண் பகப்பூத்
தள்ளருந் துரிசு சீரக மிரண்டு சாதியின் காயிரண் டரத்தை
உள்ளூறு மிரசந் திப்பிலி யோம முற்றவா லுளுவையுஞ் சிவந்த
வள்ளிவேம் பாட னற்கடு ரோணி வானவர் தாருநா கம்பூ (கூர்கூ)

சுக்குநற் கடுக்காய் கடுவெட் பாலை சுகந்தரு வெந்தய மாஞ்சில்
அக்கறா மாயாக் காய்விழா லரிசி வகைக்கிரு கழஞ்சது வாகத்
தக்கவாறிடித்துப்பொடித்ததூடுவிக்காய்ச்சியேமெழுகெனும் பதத்தில்
இகதுநேர்மொழியாய்வடிகொடுபூசியியன்முறைவழாமட்கொள்ளே

கொண்டிடக் கிரந்தி பலவகைக் கரப்பன் கூறருந்தி மிருடள் விறைப்பு
மிண்டிய மூலப் பவுந்திரங் கிரந்தி மேனிவே றாக்கியே தினவு
கண்டிடுங் குட்ட முட்டண வாதங் கடுமைசெய் திடும்பிர மேகம்
அண்டிடாதகலும்புளியுடனுப்புமகற்றவென்றுரைத்தன ரறிந்தோர்

மால்காந்தி – விட்டுணுகிராந்தி.

குக்குடத்தவரை – கோழியவரை.

அட்டி – மதுரம்.

### சென்னகரம்பழத்து நெய்

முன்னானைமுகனைப் பணிந்துசென் னகரையின் முதுபழத் துறுநெயொன்று
மொழிகுவன்சொற்றபழமாசியின்காய்வள்ளிமுதியதிரிகடுகேலமும்
பொன்னான கோட்டங் குறாசாணி செண்பகப் பூக்கராம் போமமதுரம்
புகலுமிரு சீரகஞ் சந்தனங் கொத்தமலி பொற்கடுக் காய்வசம்பு

மின்னார்கள்பயிலுமொழிமஞ்சளிலவங்கமும்வசுவாசி செஞ்சந்தனம்
வெற்றிபெறுசாதியின்காய்பூதவிர்க்கமும்மென்மைபெறுகடுரோகணி
முன்னோர்களுரையுத்தமாகாணிதுாதுவளையொடுசில்லி சூரியிவைவேர்
முதுசூதமத்தியிவைபட்டைமெற்றோலிபோக்கிமுறையொரு கழஞ்சு கூட்டே.

தேடியெ டுத்துத் தூளிடி யிட்டுத் தெளிவாக
நாடிய நத்தைச் சூரியொ டுத்தா மணிதானும்
பாடிய காற்பா சத்தொடு சில்லி பகர்சாறும்
கூடிய சுத்தா நெய்வகை நாழி கொளுவாயே.

கொண்டெடுத்த சாறுநெய்யு மளவதாகக்
கூட்டியொரு சட்டிதனிற் காய்ச்சும் போது
வண்டுவிழுந் திசைபயிலுங் கூந்த னல்லாய்
வற்றிவரு நேரம்பார் தீர வுள்ளி
விண்டபடி யிரண்டுபிடி யரிந்தே யிட்டு
மிகுத்தபொன்னி னிறமாகச் சிவந்த வாறே
பண்டுரைத்த தூடுவி யிறக்கி மேலாம்
பத்தியத்தோ டருந்திநெய்யை மேலும் பூசே.

சொற்றபழம் - மேற்கூறிய சென்னகரம்பழம்
சில்லி – சிறுகீரை சூரி – நத்தைச்சூரி
சூதம் - மாம்பட்டை காற்பாசம் - பருத்தி.

பூசியரு மதலைக்கு முட்பு கட்டப்
புண்புரைகள் வெகுகிரந்தி சொறிசி ரங்கு
மாசுடைய வொடுகரப்பன் புடைக ரப்பன்
வாய்வயிற்றிற் புண்கெந்த தாளி யாப்புத்
தேசுடைய வுடலதனை வீங்கச் செய்யுங்
தீமைபெறு கரப்பனுடன் வெகுக ரப்பன்
வீசுபுகழ்ப் பரராச சேக ரன்முன்
மிடியெனவே யகலுமிது மெய்மை யாமே

**சென்னகரம்பழத்து நெய் - வேறு**

மாதுளங்காய் சிறுகீரை கறுத்தப் பூவின்
வளருமிலை கர்ப்பூர வள்ளி குன்றி
தூதுளம்வே ரதின்பழமு மிவைவெவ் வேறு
துவைத்தெடுத்த சாறுவரு பசுவி னெய்யும்
நீதியுட னோரொன்று நாழி கூட்டி
நேரியசேங் கொட்டையதி விடய மோமம்
கோதகலும் வசுவாசி யூசிக் காந்தங்
குறாசாணி தற்கோல மாயாக் காயே

காயுடனே யீருள்ளி சுக்கு மஞ்சள்
காராம்பேல மக்சறாச் சிவந்த வள்ளி
நோயுடனே பரிகரிக்கு முலவா வோடு
நுவல்கறுவாத் துவர்ச்சந்த மதுரஞ் சாதி
மேயகிரு மிக்குற்ற பகையு மல்லான்
மிகுமதுர மிலவங்கம் வசம்பு நற்சீர்
நீயுடனே வகைக்கிரண்டு கழஞ்ச தாக
நிறுத்திடித்து மாம்பட்டை தனைய வித்தே

அவிந்துற்ற நீரதனா லரைத்து முன்ன
ரறைந்தநெய்யிற் கலக்கிமெழு காம்ப தத்தில்
சிவந்துற்ற நெய்வடித்துக் கொண்டு தாயுஞ்
சிசுவுமுண்டு மேற்பூசச் செங்கி ரந்தி
நிவந்துற்ற கருங்கிரந்தி சிவந்த வாப்பு
நிகழுமற்றைச் சொறிகரப்ப னாதி யெல்லாம்
குவிந்துற்ற முலைமடவாய் தீரு மென்று
குறித்தனர்மெய்ப் பொருளுணர்ந்த கொள்கையோரே

### கிரந்தித் தொய்வுக்கு ஏனாதி

புங்கம் வேர் துருவிப் பிழிந்த பால், கஞ்சாங்கோரைச்சாறு, விட்டுணுகிராந்திச் சாறு, முலைப்பால், வகைக்கு-மாகாணி-க, திரிகடுகு, கோரோசனை, கற்பூரம், கற்கண்டு, நெய், தேன்-வகை-கழஞ்சு-ங, ஏனாதி காய்ச்சிப்புகட்ட கிரந்தித் தொய்வு,ஈழை, இருமல் தீரும். முலைப்பால் கூட்டியும் கொடுக்கலாம்.

### கிரந்தி விரேசனம்

பிள்ளைக்கற்றாழஞ் சோற்றை ஒரு சட்டியிலிட்டுக் கறுத்தப்பூ இலைச்சாறும் கடுக்காயும் திப்பிலியும் பொடித்துக்கூட்டி வெயிலில் வைக்க நீராகும். ஒருசங்கு புகட்ட மலக்கழியும் கிரந்தி இருமல் செங்கரப்பன் தீரும்.

## மாந்தம் - வரலாறு

அன்னமும் பாலு நெய்யு மடைவிலாப் பழமும் வித்தும்
பின்னையும் பயறு தேங்காய் பெரியதோர் கதலிக் காயும்
தின்னவே கால்கு ளிர்ந்து தீயென வெதுப்பங் கண்டால்
உன்னுதற் பால கர்க்கு மாந்தமுற் றிடுமென் றாரே (௩௩)

அன்னமுலைப் பாலுண் டதின்மேலா வின்பாலை
உண்ணில் வயிற்றி னுரைசீதம் - பின்னைத்
திரண்டு பெருந்திரையாஞ் சேயிழையீர் கேளீர்
மருண்டுளையு நாளும் வயிறு. (௩௪)

அன்னை முலையா ளறைக்கீரை யேவிரும்பி
உண்ணமுலைப் பால்குளவி யுண்டக்கால் - சின்னச்
சீதமாய் முற்றிப் புழுவாய்ச் சிரங்குபற்றும்
வேகமாய் நிற்கும் விதி (௩௫)

## மாந்தத்தின் பொதுக்குணம்

துடித்திடக் கால்கு ளிர்ந்து துணுக்கெனக் கழிச்ச றோன்றி
அடிக்கடி யழுது பிள்ளை யலர்ந்துகண் சோரு மாகிற்
கடுத்திடு மாந்த மென்று கழறின் ராயுள் வேதர்
படித்திடு வகையு மேற்ற சிகிச்சையையும் பகர லுற்றாம்

## மாந்தம் மிகுந்தகுணம்

வாய்வெந்து சுரம தாகி வந்திடு மிரும லுண்டாய்
நோய்வந்து சுழிய வாங்கி நுவறலை வலிக்கு மீற்றிற்
போய்வந்து கடுப்புக் காணிற் பொறுத்துப்பி னிரத்தங் காணும்
வேய்வந்த தோளி னாளே மிகுத்திடுங் குணங்க டாமே
துணுக்கென வலிப்புத்தோன்றி – என்றும் பாடம்

சிறியவன் வயிறு போகுஞ் சினந்திடு மஞ்சிப் பார்க்கும்
கறியுட னுண்ட தாயார் கையிலு மழுத னுங்கும்
அறிவழிந் துடம்பு காயு மரைக்குக்கீழ்க் குளிர்ந்தி ருக்கும்
வெறிவிரற் கால்கை வீங்கு மிகுமாந்த மென்று தேரே

### சிகிச்சை சுரசம்

உள்ளியும் வசம்பும் வேலிப் பருத்திபேய் மிரட்டி யொன்றாய்த்
துள்ளவே வெதுப்பி யந்தச் சுரசத்தை வாங்கி மேலே
அள்ளியே பூச மற்று மருந்திட மிகுந்த மாந்தம்
நள்ளிருள் கதிரைக் கண்ட தாமென நாச மாமே

### பொடுதலைக்குளிகை

சுக்கொடு மிளகு திப்பிலி யோமஞ் சொல்கருஞ் சீரகங் காயம்
பக்குவ மாக வகைக்குநாற் கழஞ்சு பகர்ந்திடு வசம்பொரு மூன்று
மிக்சவைங் கழஞ்சு சாரணை யினில்வேர் மிகுகடுக் காய்பதி னைந்து
தொக்கிடு வேலி பொடுதலையோடு தும்பையின் கொழுந்தொருபிடியே

இருந்திடு கொழுந்தும் வேரொடு சரக்கு மியம்பிய முறைவழுவாமற்
பரிந்துவெவ் வேறாய் வெதுப்பியொன்றாகப் பகர்பெருந் தும்பையின் சாற்றாற்
பொருந்தவோர் சாமமரைத்திடு பின்னர்ப பொடுதலையினில் வருசாற்றல்
மருந்தினையரைத்துக்குன்றியினளவாயுருட்டிமேல்வகைபுரிசெயலே

செயல்புரி சிறுவர்க் குற்றிடு மாந்தஞ் சேர்ந்திடு மசீரணங் கழிச்சல்
மயலுறு சுரமு நீங்கிடு மேற்ற வகையனு பானத்தி லீயக்
கயல்பொருவிழியாய்நோயொடுவயதுங்கண்டுநன்மருந்தினை யேற்ற
இயல்புறுமளவிற்கொடுத்திடநன்றாமென்றனர் முறையுணர்ந் தோரே.

## பால்மாந்தத்தின் குணம்

மாந்தஞ் செய்யும் குணமுரைக்கில் வயிறு பொருமி யிரைவுண்டாம்
ஆந்தை போலக் கண்விழிக்கு மன்னைமுலைப்பால் வாந்திக்கும்
வேயந்த வேப்பம் பூப்போல விதமாய்க் கழியுந் தாகமிகும்
ஏந்து தனத்து மடநல்லா யியல்பா யுலரு மிளைப்புண்டாம்

கண்ணுங் குழியுஞ் செவிதாழுங் கருத்து மயங்கிக் குழைவுண்டாம்
புண்போ லுதர மிகநொந்து புளித்துக் கழியும் வயிறூதும்
பண்ணின் மொழியாய் பான்மாந்தம் பகருங் குணங்க ளிவைதீர
எண்ணார் மேதி நெய்தன்னா லியன்ற சிகிச்சை யினி துரைப்பாம்

## சிகிச்சை மேதிநெய்

கோதைகேண் மாந்த நெய்யைக் குலமேதி நெய்யு ழக்குப்
போதுசார் வாழை யீர்க்குப் பொடுதலை யிவைசா றொப்பாம்
மீதுயர் கற்க மேலம் விழால்வசம் புடன்வெள் ளுள்ளி
ஓதிய மதுரஞ் சீர முறதிரி கடுகீ ரைந்தே

வாட்டமில் வகைக ளெல்லாம் வகைக்கரைக் கழஞ்ச தாகக்
கூட்டியே யரைத்துக் கூறு நெய்யினிற் கலந்து காய்ச்சி
மூட்டியே மெழுக தென்னும் பதத்தினு முதிர வெந்து
நாட்டியே வடித்துப் பின்னை நல்லனு பானங் கேளே

கச்சின் முலைப்பா லதினுடனே கழறு நெய்தான் காசளவு
வெச்சோ டிட்டங் குள்ளேகொள் விளம்பு முட்டா யிருக்குமெனில்
நச்சும் பொடுதலை தன்சாற்றி னயந்தே புகட்ட வதற்பின்பு
மெச்சு முள்ளங் காலுச்சி விரும்பித்தடவ மாந்தம்போம்

### போர்மாந்தத்தின் குணம்

பொருமுங் கழியும் புண்போலப் போத மிகவும் வலியுண்டாம்
மருவி முலையுமுண்ணாது மயங்கும் வெருவுஞ் சத்திசெயும்
உருவுங் குன்றுங் கைகால்க ளோய்ந்து குளிர்ந்து துயரமுண்டாம்
புரவ நெரிக்கு மிவைகண்டாற் போர்மாந் தத்திற் குணந்தானே

### போர்மாந்தத்தில் அசாத்தியக்குறி

ஏற்றமாய்க் கழிந்து சோரு மிடையிடை சுரமுந் தோன்றும்
தோற்றவே யுடலு ருக்குந் தோன்றிடும் விலாவெ லும்பு
மாற்றருஞ் சத்தி யுண்டாய் விழிகளு மலர்ந்து மூடும்
சாற்றுமிக் குணங்க ளுண்டே லசாத்திய மென்று தேரே

மந்தமா முடம்பு வற்றி வயிறொக்க நரம்பு தோன்றி
விந்தையாய் மலங்க ழிந்து விட்டுவிட் டேற்றங் கொள்ளும்
உந்தியிற் கடுத்துச் சீத மொழுகியே புறங்கால் வீங்கும்
விந்தைசேர் மாந்தஞ் செய்யும் விதமஃ துயிரை வாங்கும்

### சிகிச்சை குடிநீர்

நிம்ப நுணாச்சூத மெகி னத்தி னோடு
நிர்க்குண்டி கொடுவேலி யுத்த மாணி
கொம்புற்ற விவையெலலா மீர்க்குக் கூட்டிக்
கொண்டுள்ளி வசம்பொடு தலையு மோமம்
துன்பமறு மிருசீர நாகவல்லி
சுகமாகச் சமனிடைநற் கஷாயம் வைத்துக்
கும்பநிக ருந்தனத்து மடநல் லாரே
குடிப்பாட்ட மாந்தமது குறைத்து போமே

சூதம் - மா, எகினம் - புளி

உத்த மாணி பொடுதலையு முவந்த வசம்பு நாயுருவி
சித்த மாவின் றுளிர்நாவற் சேர்ந்த துளிரு மிவையல்லாற்
சுத்தச் சுக்கு மோதகமுஞ் சொல்லும் வெள்ளை யுள்ளியுடன்
நித்தங் குடிநீர் குடிப்பீரா னேர்போர் மாந்தம் வேரறுமே

**நெய்**

மங்காத பேய்ப்பருத்தி பெரிய தும்பை
வளர்முருக்குப் பொடுதலையு முருங்கை யோடு
தங்காம லிவையெல்லா முழக்குச் சாகளு
சரிசமனாய் நிறுத்ததனைச் சேர்த்துக் கொண்டு
கிங்கார மஞ்சடிரி கடுவெள் ளுள்ளி
சேருமிக மேதிநெய்யிற் சேர்த்துக் காய்ச்சிப்
பங்கான பாக்களவு நக்கும் போது
பறந்துபோ மாந்தமது பரிவாய்த் தானே

**முலைப்பாலே ரண்டெண்ணெய்**

போர்மாந் தத்தி லெண்ணெய்க்குப் புகலே ரண்ட நெய்யுழக்குத்
தார்சேர் முலையின் பாலுடனே சாற்று மாவின் பாலுழக்கு
நீர்சேர் கொன்றை தனிற்பட்டை நிகழ்த்தும் வேலை தனின்மூலம்
வேர்சேர் வசம்பு வெள்ளுள்ளி வெட்பாலரிசி தான்கூட்டே

கூட்டிவகைக்குக் கழஞ்சிரண்டு கொண்டேயரைத்துக் கரைத்துவெந்து
நாட்டு மெழுகு பதம்பார்த்து கலமா யிறக்கி வைத்ததற்பின்
ஊட்டு மெண்ணெய் காசளவா யுவந்து முலைப்பால் சேர்த்தருந்தக்
காட்டுங் கொடிய போர்மாந்தங் தீருமென்று கழறினரே

## குண்டலாதியே ரண்டெண்ணெய்

பொன்னாங் காணி முசுமுசுக்கை புதிய தாளி பழம்பாசி
சொன்னா ரியங்கு தூதுவளை தோன்றுங் குமரி மடற்சாறு
முன்னா யோரொன் றொருநாழி முதிராமணக்கி னெய்நாழி
மின்னே சீவகஞ் சிவதையுடன் மேவு முரொணி தான்கூட்டே

கூட்டிக் கலந்து மெழுகுபதங் குறுகக் காய்ச்சி வடிகொண்டு
நாட்டுங் காசி னிடைபுகட்ட நன்றாய் மலமுங் கழிந்திளகும்
பூட்டுஞ் சிலைநேர் நுதலணங்கே போர்மாந்தத்தின் சுரமதனை
வீட்டு முடலுந் தேறுமென மெய்மை யுணர்ந்தோர் விளம்புவரே

## கொதியெண்ணெய்

அரத்தை குப்பை திரிகடுக மான கடுக்காய் மோதகமும்
உரத்தவசம்பு வெளுத்தலுட னுள்ளி கருஞ்சீர் மரப்பட்டை
நருக்கி யெண்ணெய் தனைக்காய்ச்சி நல்ல மருந்துப் பொடிதூவிப்
பருக்கி மேலுந் தான்பூசப் பதைத்தே மாந்தம் பற்றறுமே

## மாந்தமயக்கத்துக்குத் தைலம்

பார்மே னொச்சி பொடுதலையும் பருத்தி வேலி மாவிலங்கை
நீர்சேர் திருகு கள்ளியுவாய் நீண்ட வேலி முத்தெருக்கு
நேர்சேர் கொழுந்தொன் றோர்கழஞ்சு நிம்பவெண்ணெய் தனிற்காய்ச்சி
ஏர்சே ருடலிற் பூசுவிரான் மயக்க மாந்தம் பிரிந்திடுமே

மரப்பட்டை - பீநாறி

பருத்தி வேலி – வேலிப் பருத்தி வேலி – கொடுவேலி வசவு – வசம்பு

### மாந்தவில்லை

சீர்பெரு மிளகுள்ளி திப்பிலி யிருசீரம்
பேர்பெறு வசவோடு பொடுதலை யிவையல்லால்
ஏர்பெறு மாவுற்ற வித்தொடு கருநிம்பத்
தேர்பெறு மிலைகூட்டி யரைசுடு நீர்விட்டே

விட்டரைத்து வில்லைதட்டி வெந்நீ ரனுபானத்
திட்டுவரப் போர்மாந்த மேகுங்காண் - திட்டமுடன்
மாந்தங் கழிச்சல் வயிறுதனிற் பொருமல்
ஏய்ந்தசத்தி யுந்நீங்கு மே

### விஷமாந்தத்தின் குணம்

தாகித்துக் கிறுகி றுக்குஞ் சடக்கென வீங்கும் வாடும்
தேகத்தி னுறுப்ப தெல்லாஞ் சேரவே யுளைந்து குத்தும்
வாகுத்து முதரத் துள்ளே மலம்விடு மடைத்துக் கொள்ளும்
பாகொத்த மொழிநல் லாளே பகர்விட மாந்தந் தானே

### விஷமாந்தத்தின் அசாத்தியக்குறி

குறிபல கூறக் கேண்மின் குளிர்ந்துமெய் வெதும்பித் தோன்றும்
பெறுமொரு புறத்திற் காயு மறுபுறங் குளிர்ந்து நிற்கும்
பிறமது குளிர்ந்து நின்று பின்னுடல் பெரிதாய் வீங்கும்
செறுமலங் கடுத்து மேலுஞ் சேரவே கழியுங் கண்டாய்

கண்டிடாய் விடுநீர் மெத்தக் கடுத்துமே கழிச்சன் மிஞ்சில்
பண்டையோ ருரைத்த வண்ணம் பலமொழி பிதற்றிச்சோரும்
விண்டிடா நாவும் பல்லு மீரலும் வெளுத்துக் காணும்
கொண்டதோர் மாந்தந் தன்னிற் குறியசாத் தியமா மன்றே.

### தொங்கல் மாந்தம்

வலித்திடும் பொருமி வெப்பாய் மாக்கரைத் ததுபோ னீராய்ச்
சலித்திடக் கழித்தோங் காளத் தங்கிடா தெடுத்துச் சோரும்
கலித்திட வயிறு கூப்பிட் டழுதிடுங் களக ளக்கும்
கலித்திருத் தொங்கன் மாத்தஞ் செய்குண நவிலுங் காலே

### நெய் மாந்தம்

மயக்கிடும் வலித்துச் சோரு மாறிடு மோங்கா ளிக்கும்
உயிர்ப்பறக் கழிந்தே பூதி யுண்முட்டாய்ப் பொருமி யேறும்
செயிர்ப்புறத் திமிர்க்குங் காயும் தின்மறந் திடுந்தா கிக்கும்
மயிர்ப்புற வெண்ணெய் நெய்பா லவலிறைச் சியினின் மாந்தம்

### பழமாந்தம்

பொருமிடும் வலிக்குங் காயும் பொற்புறு தாளும் வீங்கும்
உருமிடும் வயிறு மூதி புவர்ந்திக்குந் தாக முண்டாம்
செருமிடுங் கால்கா யாது திமிர்த்திடுத் தொய்வுண்டாகும்
மருவிடும் பழத்தின் மாவில் வந்திடு மாந்த மன்றே.

### இவற்றின் அசாத்தியக்குறி

ஏற்றமாய்க் கழித்து சோரு மிடையிடை சுரமுந் தோன்றும்
தோற்றவே யுடலுருக்குநீ தோற்றிடும் விலாவெ லும்பு
மாற்றருஞ் சத்தியுண்டாம் விழிகளு மலர்ந்து மூடும்
சாற்றுமிக் குணங்கள் கண்டா லசாத்தியய மென்று தேரே

### அக்கினி மாந்தம் முதற்குறி

உண்டியிற் பொரும லாலு முண்டன்னம் வீழ்த்த லாலும்
கொண்டுதான் கழிந்த தண்ணீர் கொதிப்புடன் வெடிப்பி னாலும்
மண்டியே வெளுத்துக் காய மலங்கெட வுலர்த லாலும்
கண்டிடுங் குறிக ளங்கி மாந்தமாய்க் கழறும் வேதம்

இச்செய்யுள் "போர்மாந்தம்" என்ற தலைப்பின் கீழும் வந்துள்ளது.

### குணம்

மலமுங் கழியுங் கிறுகிறுக்கும் வரண்டால் வயிறு வலித்துளையும்
சலமு மிகுந்து கழித்திருக்குஞ் சற்றே யிரத்த மலத்துள்விழும்
பெலமுங் குறைந்து நயனமுகம் பேதப் படவே வெளுப்பேறும்
அலையுங் குணங்க ளிவைகண்டா லக்கினி மாந்த மெனலாமே

வந்து மிகுந்து பசியெழுப்பி வயிறு மழற்றி மந்தித்துச்
சிந்தை தன்னி னினைத்தவேலாந் தேடுங் கொள்ள வொட்டாது
இந்தக் குணங்க ளுண்டெனனி லிதுவே யக்கினி மாந்தமென
அந்தப் படியே யாயுண்மறை யருளிச் செய்த துணர்ந்து கொள்ளே

### வாயு மாந்தம்

வாயுவும் பொருமி யேறி வயிற்றினி லடசிக் குத்தித்
தேயுவை யடைத்து மூடித் தீன்மறக் தருவ ருக்கும்
பாயுநீர் மலம்வ ரண்டு பசியிலா திருக்கு நாளும்
மீயுயர் வாயு மாந்தம் செய்குணம் விளம்புங் காலே

### பேய் மாந்தம்

அடிக்கடி சோர்ந்து வீழு மலகைபோல் விழித்துப் பார்க்கும்
குடித்தபா லெதிரெ டுக்குங் குமிறியே வயிறு போகும்
நடுக்கவே யுவாந்தி செய்யு நகைதரு நுரைநீர் வீழும்
வடத்துறு கொங்கை நல்வாய் வகுத்தபேய் மாந்த மன்றே

இந்நோய்க்கு வரட்பூலாக் கொழுந்து பாக்களவு அரைத்து வெந்நீரிற் கொடுக்க நன்று.

## சிகிச்சை

### கருக்குக் குடிநீர்

உப்புவேப் பிலைவ சம்போ டுள்ளியுங் கருக்கி யொன்றாய்
அப்புவிட் டவித்த நீரை யளவதா யுட்பு கட்டத்
தப்பிலா மாந்த மெல்லாந் தறுகிடா தகலு முள்ளி
மெய்ப்படி சுட்டுக் கொள்ளில் விட்டிடு மாந்த மன்றே

வேர்க்கொம்பு வசம்போ டுள்ளி விளம்பிய கடுக்கா யிந்துப்
போர்க்கருஞ் சீர்வேப் பங்கூ ரிதமிள கசம தாகம்
சீர்க்கடு வுலவா மல்லி திப்பிலி யிவைக ளெல்லாம்
கார்ப்பெரு மரிசி கூட்டிக் கருக்கிநீர் குடிக்கப் போமோ

உத்தமா காணி நொச்சி நுணாச்சரு குடன்வேப் பங்கூர்
மெத்திய வசம்போ டுள்ளி வேர்க்கொம்பு கடுக்காய் கூட்டிச்
சுத்தமா யவித்துட் கொள்ளத் தொலைந்திடு மாந்த மன்றிச்
சித்தமாங் கொட்டை யுப்பு வசம்புடன் றின்னப் போமே

எருக்கலை வாட்டி நீரை யருந்திட விதமா மன்றி
உருக்குள்ளித் தயில முண்ண வுடனறு மாந்தங் கண்டாய்
பொருக்கெனவுள்ளியுப்புப்பொறுக்கும்வேப் பிலையோ டொன்றாய்த்
திருக்கிளர் வெந்நீ ருண்ணத் தீர்ந்திடு மாந்தந் தானே

### கொதியெண்ணெய்

பொற்புறுசீ ரகமிளகு கடுக்கா யுள்ளி
புதுவசம்பு கோட்டமில வங்கஞ் சுக்கு
அற்புறுதிப் பிலிகருஞ்சீர் தேவ தார
மடுத்தசரக் கொன்றிரண்டு கழஞ்சு வாங்கி
நிற்புறுசிற் றவரையிலே யுத்த மாணி
நிலவியவோ ரிதழின்றா மரைச மூலம்
எற்புறுநல் லெண்ணெயினிற் கொதித்து வார்க்கி
லியன்மாந்தம் வலிகழிச்ச லிளகிப் போமே

## வாழைப்பூ நெய்

புல்லாந்தி தனிற்கொழுந்து நாவற் பட்டை
பொருவருமால் விழுது மலை தாங்கி யிலையும்
செல்லாரு மிரசவா ழைப்பூ வொன்றாய்ச்
சேர்த்துநன்றாய்த் துவைத்தெடுத்த நீரோர் நாழி
சொல்லாரு மிஞ்சியுள்ளி சுக்குக் கோட்டாஞ்
சுகமான கொத்தமல்லி நெல்லி யோமம்
நல்லோர்சீ ரகமிரண்டு திப்பி லிந்து
நாடுமதி விடயமிங்கு நறுநெய் கூட்டி

கூட்டுச்சரக் குள்ளியிஞ்சி யதிக மாகக்
குறித்தசரக் கோரொன்று கழஞ்சு வாங்கி
நாட்டியரைத் துப்பதத்தில் வடித்த நெய்யை
நாடோறு மரிந்திவரிற் கழிச்சன் மாந்தம்
ஈட்டியவெப் புக்கழிச்சல் கிராணி தொங்க
விதமாகு மக்காங்க ளிந்த நெய்யிற்
தேட்டமுறத் தீர்ந்திடுமே யுண்மை யாகச்
செப்பினார் வாழைப்பூ நெய்யி தன்றே
(மற்றுமொரு பிரதியின்படி)

## கட்டுமாந்தத்துக்கு

கட்டி போல வயிறது கண்டிடில்
விட்ட பொன்னா விரைவேர் மிளகிவை
கொட்டு றாதரைத் துக்குளிர் நீரிலே
கட்டு மாந்தம்போங் காணப் பருகிலே

இங்கு - பெருங்காயம்

## நீர்மாந்தத்தின் குணம்

மலம் கொக்கின் மலம் போலச் சிறுத்துக்கழியும் வயிறு பொருமும் சலம் கடுக்கும் ர்டம்பு குளிர்ந்திருக்கும்.

## சிகிச்சை

வசம்பும் சுக்கும் தோல் சீவிச் சுட்டு மாவாக்கித் தேனிற் கொடுக்கவும்

## உண்டை

வேம்பு, நொச்சி, குப்பைமேனி, நுணா, பேய்மருட்டி, தும்பை, வரட்பூலா வகைக்கு ஒருபிடி வெதுப்பிச் சாறுபிழிந்து, உள்ளி. வசம்பு, மிளகு, ஓமம் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி சிறிய சுண்டைக் காயளவு உருட்டி வெந்நீரிலிடவும்.

## துவாலை

வேலிப்பருத்தியிலை, கஞ்சாவிலை, குன்றியிலை, வசம்பு, ஒருள்ளிப் பூடு, கருஞ்சீரகம், வெளுத்தற்பிசின், சுக்கு, வெண்காரம் அரைத்துக் கொதிக்கவைத்து, உச்சி, வயிறு, உள்ளங்கால், உள்ளங்கை இவ்விடங்களிற் பூசுமாறும்.

## மேனியெண்ணெய்
## (மாந்தம் பதினெட்டுக்கும்)

குப்பைமேனி, திராய், சிற்றிலைப்பாலாவி, கஞ்சாங்கோரை, சிவதை, நன்னாரி-இவை சமூலம், எருக்கலம்வேர், முருங்கைவேர், கோரைக்கிழங்கு- இவையெல்லாம் பழத்தேங்காய் துருவின பூவுடன் கூட்டித் துவைத்துப் பிழிந்து நல்லெண்ணெயுடன் கலந்து அதில் இரு சீரகம், உள்ளி, ஈருள்ளி, இஞ்சி, கிருமிசத்துரு, சுக்கு, சுத்தசெய்த வாளம் அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடிக்கவும் காசிடை கொடுக்க மாந்தம் 18ம் தீரும். உப்புப் புளிதவிர

## முலைப்பாலெண்ணெய்

ஆமணக்கெண்ணெய், நறுநெய், முலைப்பால் சமன் கலந்து திப்பிலி, நற்சீரகம், சுக்குஅரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில் வடிக்கவும் காசிடை கொடுக்கவும் தாய் உப்புப் புளி மறக்க மாந்தம் கணை முதலியன தீரும்.

## வாழைப்பூ நெய் - வேறு

உரைபெறு மிரச வாழையின் பூவு முறுமலை தாங்கியி னிலையும்
வரைபெறு வெள்வேல் சம்புபல் லாந்தி வகுத்திடு பட்டையிம் மூன்றும்
பரிவுறு மிஞ்சி துவைத்திடு காறும் பசுவுறு நெய்யுமோர் நாழி
நிரைபெறக் கலந்து காய்ச்சியங் கதனி னெல்லியின் காயதி மதுரம்

சீரக மிரண்டு கரியகுந் திருக்கந் திப்பிலி யுள்ளியி ருள்ளி
வேர்பெறு சுக்கு மதியினி லுப்பு விடயநல் லேலம்வெண் காரம்
பார்பெறு மல்லி கராம்பச் மோதம் பகர்குலக் காய்வசு வாசி
சீர்பெறு கைப்பி னுடன் களிப் பலக்குச் செவ்விய கோட்டமீர் கழஞ்சே

அவையெலா மிடித்துப் பொடித்தது டூவி யடுப்பினிற் காய்ச்சிநற் பதந்தான்
நவையெலா மகற்றும் மொழுகென வடித்து நக்கிட மாந்தமக் கரங்கள்
இவையெலா மகற்றும் வாயினிற் கிரந்தி யேக்குங் கழிச்சலு மகலும்
புவியெல்லாம் புழேந் தமிழறி முனிவன் புகன்றனன் மறைதெரிந் துணர்ந்தே

சம்பு – நாவல் நீர்ரேட்டி – பொன்னா முசுட்டை
அம்மான் பச்சரிசி

வேலிப்பருத்தி, கொன்றைவேர் பிரயிசமூலம், பொடுதலை, வெற்றிலைக்காம்பு அரைத்து முலைப்பாலில் வெந்நீரிற் கொடுக்கவும்.

### வெண்காயக்குளிகை

உள்ளிபல மிரண்டுடனே யக்க ராவு
மோதரிய சிற்றேல முலுவா நற்சீர்
கள்ளினிறமாங்கருஞ்சர் சாதிக் காயுங்
கடுக்காயு முடனோமங் கூகை நீறு
தள்ளரிய பொரிகாரம் வெளுத்த லிந்து
சன்னிவிரை சதகுப்பை மதுர மிஞ்சி
உள்ளதொரு சிற்றரத்தை கராம்பு ரோணி
யுற்றநல்ல வசுவாசி காயங் கூட்டே

கூட்டு கொத்த மல்லிசா ரணையின் வேருங்
கொண்டுநிறை யிவையெல்லாங் கழஞ்சு வீதம்
கூட்டியுத்த மாகாணிச் சாறு தன்னாற்
குணமாக நாற்சாம மரைத்தே யுண்டை
கூட்டுபா வட்டங்கா யளவ தாகக்
கூறரிய வெந்நீரி லுரைத்துட் கொள்ள
நாட்டியுள்ள மாந்தவகை கழிச்சல் வாயு
நாடாது நீங்குமென நவின்றிட் டாரே

### மாந்தசன்னியின் குணம்

பெருத்திடும் வயிறு மூதிப் பெலமுற வலிக்குங் காயும்
வருத்திடு மயக்கி யேறி வயமறத் திமிர்த்துச் சோரும்
அருத்திடு மன்னஞ் செல்லா தயர்ந்திடுந் தாக முண்டாம்
உருத்திடு மாந்த சன்னி செய்குண முரைக்குங் காலே

## சிகிச்சை

### கொதியெண்ணெய்

தக்காளி தூதுவளை குதிரை வாலி
சன்னியின்வே ரவுரிதுளாய் பொன்னாங் காணி
மிக்காரும் பெருமருந்து மணித்தக் காளி
மிடுக்கான நொச்சிதிலு கிலுப்பை சீந்தில்
தொக்காரு மின்பூறல் சிற்ற மட்டி
தூயமயி லடிக்குருந்து நத்தைச் சூரி
திக்காருங் கன்முரிசு பேர மட்டி
செப்பியவேர் முசிற்றுமுட்டை நிலத்தினாகம்

வேர்க்கொம்பு கொத்தமல்லி சன்னி நாயன்
விளம்புசத குப்பையுள்ளி கோட்ட மேலம்
ஏர்க்குமிரண் டரத்தை நற்சீர் வெளுத்தல் காய
மிலவங்கஞ் செண்பகப்பூ வசம்போ ரொன்று
தீர்க்கமுற வொருகழஞ்சா யிடித்த தூளைத்
தெளிவெண்ணெய் தணிற்கொதித்துச் சிரத்தேவைக்கில்
கார்க்குமந்த சன்னிமுதற் சன்னி யெல்லாம்
கலைந்தெகு மெனவேதங் கழறு மன்றே

### குடிநீர்

வேர்க்கொம்பி னுடனிலவே ரரிசி கூட்டி
மேன்மையுற வறுத்ததனைப் பொட்டுக் கட்டி
ஏர்க்கவதி னீர்விட்டுக் காய்ச்சி நன்றா
யிருநேர முங்குடித்து வருவீ ராகில்
தீர்க்கமுறு மாந்தசன்னி யிருமல் சேடந்
தீர்ப்பதற்குக் கைகண்ட குடிநீர் ராகும்
கார்க்கரிசி தனைவறுத்துத் தெளிவாய்க் கொள்ளிற்
கலைந்தேகுஞ் சன்னிபதி னெட்டுங் காணே

## பொடி

நன்னாரி தூதுவளை வட்டு வேளை
நாட்டுசெங்க ளப்பன்னை யிவைவே ரின்னம்
சொன்னார்கன் முசிறரிசி நிலவேர் திப்பில்
சுறுக்கான மிளகுவசம் புடன் கருஞ்சீர்
பொன்னா வெச்சோடு காட்டித் தூளாய்ப்
புனரையின்றன் பழமவித்த நீரிற் றானே
முன்னாக வேயரைத்து வெதுப்பி யுண்டான்
மொழிமாந்த சன்னிமுரிந் தேகு மன்றே

## சிற்றமட்டிக் குளிகை

சீரக மிரண்டினொடு மோதகந் திப்பிலி
சிறந்தநற் சுக்குமிளகு
செல்வசம் புள்ளியுஞ் சீர்பெருங் காயமுஞ்
சேர்குப்பை மேனியுடனே
ஊர்தனின் முதலியோ டுத்தமா காணியு
மோசைபெறு சிற்றமட்டி
யொக்கவே யிவைவேர்கள் சமனா நறுக்கியே
யோரளவு கூட்டிவெந்த
நீர்விட்ட டரைத்தபின் னொருபங்கு நேர்வாள
நிலைமைதவ றாதுகூட்டி
நிகழமறு பங்கதனை நன்மருந் தாகவுந்
நேரவரை மிளகினளவாய்ச்
சீர்பெறுங் குளிகைதனை யேநிழ லுலர்த்தியே
செப்பதனி லிட்டுவைத்துச்
சிறுபால ருக்குற்ற மாந்தவகை முதலான
தீருமனு பானமடைவே

ஏற்ற அனுபானங் கூட்டுக என்பது கருத்து சரக்குகள் ஒரு கழஞ்சாயின் பாதிக்க சுத்திசெய்தவாளம் ஒரு சழஞ்சு கூட்டுக.

**மாந்தசன்னிக் குளிகை - வேறு**

மாந்தசன்னிக் குளிகைதனை யுரைப்பக் கேண்மின்
வளமான சாதிலிங்க மிருசீ ருள்ளி
போந்தபெருங் காயமுடன் கராம்பு வாசி
பொலிவுபெறுஞ் சாதிக்காய் சீனக் காரம்
வாய்ந்தசுக்குத் திப்பிலியுங் கிருமி சத்ரு
வனருமிலைக கள்ளிமுகி ழசம தாகம்
ஏந்துதன மங்கையரே கழஞ்சொல் வொன்றா
மேலமொடு நேர்வாள மிருக ழஞ்சே

யங்காகி கெலுமிச்சம் புளியும் விட்டுப்
பரிவாக வரைத்துப்பா வட்டங் காய்போல்
மங்காம லுருட்டிகிழ துலர்த்திச் செப்பில்
வைத்திருந்தா லனுபான வகையைக் கேளும்
பெங்காத பால்மாந்த குணத்தைச் சொல்லிற்
பிள்ளைமுலை யுண்ணாது காய்ச்சல் சத்தி
அங்காகி லொருகுளிகை யிளவெந் நீரி
லருத்திடுவா மிந்நோய்க ளகன்று போமே

இந்நோய்போங் கல்மாந்த குணத்தைச் சொல்லி
னியல்பாக வயிறழுது பொருமி யெங்கும்
வன்னோய்போ லேபுலருங் குளிகை யொன்று
வாங்குதித்தில் வெல்லமதில் வழங்க மாறும்
பொன்னாரு மடமானே யூது மாந்தம்
பொருந்துகுணங் காய்ச்சலொடு வீக்கம் பொல்லா
திந்நோயென் றெலுமிச்சம் புனியி னோடே
யிட்டிடுவா யொருகுளிகை யேற்கத் தானே

ஏற்றசிலேற் பனசன்னி மாந்தம் வந்தா
லிக்குணங்கேள் காய்ச்சல்குளிர் வரட்சி நெஞ்சு
கார்க்கிலதற் குக்குளிகை யொன்று தேனிற்
கரைத்துண்ணக் கொடுமாறுஞ் சன்னி மாந்தம்
ஆர்க்குமொரு பிள்ளைதனக் குளதே யாகி
லரிதான காய்ச்சல்குளிர் திடுக்காட் டந்தான்
வேர்க்கொம்பு தனையவித்த நீரிற் றானே
விதம்படவே குளிகையொன்று விரைந்திடாயே ()

ஒன்றியதோர் புழுமாந்த குணத்தைத் தானே
யுரைத்திடுகில் வயிறூதும் பொருமும் வாயாற்
கன்றியதோர் கிருமிவிழு மலச லங்கள்
காகட்டாது குளிகைபழப் புளியி னோடே
தின்றிடுகிற் றீருமே செமியா மாந்தஞ்
செய்குணங்கேள் முலைப்பாலைத் தேடிடாது
வென்றிடுகின் மிளகவித்த நீரிற் றானே
விதம்படவே குளிகையொன்று விரைந்திடாயே ()

மெலிந்திட்ட வலிமாந்த குணத்தைக் கேளு
மேலிருகால் கரம்வீங்குந் தலையி டிக்கும்
மலிந்திட்ட றுரைவீழும் வாயி னாலே
வயிறுபொரு மும்வசம்பு மிளகோ டுள்ளி
வலிந்திட்ட திப்பிலியு மவித்த நீரில்
வளமான குளிகையொன்று வழங்கத் தீரும்
அலைந்திட்ட கனிமாந்த குணத்தைத் தானே
யறைந்திடுகி னீலமுறு மங்கந் தானே

நீலமுறும் வயிற்றாலே நுரையும் வீழு
நிசமான வுள்ளிவேர்க் கொம்பி னோடு
கோலமுறு திப்பிலியு மசம தாகங்
குடிநீரிற் குளிகையொன்று கொடுக்கத் தீரும்
ஆலமுறு மானாக மாந்தம் வந்தா
லக்குணங்கே ளடிக்கடியே சீறும் விக்கும்
சீலமுறு முலையுண்ணாச் சுரம்வேர்க் கொம்பு
திகழ்வசம்பு மவிகுளிகை செலுத்தி டீரெ

செலுத்தியபி னமர்மாந்த குணத்தைக் கேளுந்
தெளிவாகக் கண்முளிசுங் காய்ச்சல் சேரும்
வலுத்ததுமல சலமடைக்குங் கடுக்கா யேல
மலிவான மிளகுதுரி சிலவங் கந்தான்
பெலத்தமருந் துடனேதிப் பிலியுங் கூட்டிப்
பிசகாம லெலுமிச்சம் னரைத்துட் கொண்டா
உலர்தியநற் குளிகையுட னரைத்துட் கொண்டா
லோடுமமர் மாந்தமென வுரைத்த வெல்லாம்

எனவுழத்து மாந்தமதின் குணத்தைக் கேளு
மியல்பான தலைநடுங்கு மலம டைக்கும்
கனவுழத்தி காய்ச்சலொடு வீக்கங் காட்டுங்
கருதுமருந் துற்றசிறு சீந்திற் சாறும்
மனமுறுநல் லெள்ளெண்ணெய் குளிகை யொன்றும்
வைத்திடவே மாறுமது வாத சன்னி
எனவுரைத்த மாந்தமுறுங் குணங்கடன்னை
யிசைத்திடுவன் றனித்தனியே யின்ப மானே

இன்பமா யுரைத்திடக்கேள் காய்ச்சல் தூக்க
மிசைக்குமடிக் கடிமயக்குங் குளிர்ச்சி வேர்வை
துன்பமாய் வரிற்கடுகு மெருங்கா யந்தான்
சுக்குமிள கவிநீரிற் குளிகை கூட்டி
அன்பதாய்க் கொடுத்திடுகின் மீளுங் சோழை
யானசன்னி மாந்தமின் குணத்தை யாயில்
வன்பதாய்க் காய்ச்சலுடன் மூச்சுக் கொள்ளும்
வயிறூதிப் பொருமிமல மடைக்குந் தானே

மலமடைக்குஞ் சறளிகொள்ளு யிளைக்கும் வேர்க்கு
மாறாம னெஞ்சிடிக்குஞ் சேற்ப முண்டாம்
சலமடைக்கு மிதற்குமருந் தொன்று கேண்மின்
றக்கோரே வெள்ளையுள்ளி யசம தாகம்
பெலமுடைக்குங் கடுக்காயுங் கறுவாத் தோலும்
பேசுசுக்கு மதியினுப்புப் பெருஞ்சீர் தானும்
செலமுடைக்குந் துருசுவசம் புடனே மேனி
சேரிலையு மொவ்வொர்நிறை தேடிக் கொள்ளே (சOர்)

தேடிக்கொண் டெள்ளிலெண்ணெய் குளிகை தானுஞ்
சேர்த்தரைத்தே யிம்மருந்து திடம தாக
நாடிக்கொண் டிதையறிந்து நேரந் தானு
நல்கியிடிற் றியாலமது மூன்றாய் நாட்டும்
கோடிக்கொண் டிருந்தசிறு பிள்ளை மாந்தங்
குணமாகு மனுபானங் குறித்துச் செய்தால்
வாடிக்கொண டிருந்தவிடை மானே கேளாய்
மற்றிதுபோன் மருந்துமா மலைதனி லுமிலையே (சOகூ)

## நீர்ப்பாட்டின் குணம்

தண்ணீர் நிறைந்த குடமுடைந்தா லென்னக் கழியுந் தாகமுண்டாம்
உண்ணீர் விழியுஞ் சொருகிவிறைத் துடனே வேர்த்து நாவரளும்
புண்ணீர்ந் தெனவே வயிற்றுவலி புரட்டிப் பிரட்டிச் சொகிக்கும்
கண்ணேர் பரண்டை வலித்துளைந்துகளை யாய்மயக்கு நீர்ப்பாடே (சOச)

## நீர்ப்படுவன் குணம்

உரமாய் வயிறு வலித்தூதி யுடனே கழிந்து சோகித்துப்
யரமாய் வறுகிச் சியலிரத்தங் கழிந்தே பக்ர்நாக் கொன்னிக்கும்
திரமாய் நீர்போல் விறைத்தேறித் திமிர்த்தேமயக்குங் களையுண்டாம்
சரமே போலு நீர்ப்படுவன் சதிக்குங் குணங்க ளிவையாமே (கOரு)

## செரியாப்படுவன் குணம்

பொருமி வயிறு புளித்தெழும்பிப் புகைந்தே வலித்துச் சோகித்துச்
செருமி யூதிச் சத்தித்துத் தீனை மறந்து துயரித்தே
அருவிக் கழிந்து வயிறழுதே யதிக மாகத் தாகிக்கும்
மருவிச் சரீர தனைக்கெடுக்கு மாயச் செரியா மையின் படுவன் (சOகூ)

## ஈரற்படுவன் குணம்

ஈரற் குலையை வறுகி நொந்தே யெரிந்து புகைந்து வலியுண்டாய்ச்
சோரத் கழியுந் துயர்செய்யுஞ் சுருட்டி யுடலைக் கூனுவிக்கும்
மாரச் சரீரங் குனிந்தேறிப் பார்வை குறைந்து நாவரளும்
தீர மயக்கி விறைத்தேறுந் திடனா மீரற் படுவனிதே (சOஎ)

## இரத்தப்படுவன் குணம்

வயிற்றை வலித்துப் பொருமி நொந்து வறுகிப் புரட்டிச் சோகித்தே
உயிர்ப்பை யனித்தோங் காளிக்கு முதிரங் கழிந்து தாகிக்கும்
பயிர்ப்பிற் சரீரங் குளிர்ந்தேறிப் பதறி விறைத்து வேர்வையுண்டாம்
செயிர்ப்பிலிரத்தப்படுவனிதுதிண்ணங்கொலைசெய்தி மென்பர்

## சிகிச்சை

## உள்ளித்தைலம் - ஒத்தணம்

உரித்தே யுள்ளி தணையரைத்திட் டுடனே சீலை தனிற்பூசி
எரித்தே விளக்கிற் காச்சிவடித் திதமாயருந்திச் சிரத்தில் வைத்துப்
பரித்து நீறு குழைகொண்டு பார்த்து வேம்பி னிலையைவறுத்
தரித்துப் பொட்டாய்ப் பிடித்துவரி லகலுநீர்ப்பாட்டுடன் படுவன்

## தாகத்துக்குக் குடிநீர்

நீர்கரை மணல்கொணர்ந் துரிய சட்டியிற்
கார்க்கமாஞ் சருகுடன் கலந்தெ ரித்துப்பின்
கூர்க்கநீர் விட்டது குறுகக் காய்ச்சியே
பர்க்கநீர் வடித்துடன் பருகிற் றாகம்போம்

## கருக்குக்குடி நீர்

பருத்தி விறகு, பச்சோலை, பருத்த வேர்க்கொம், பீரவுள்ளி
எரித்த கரியி னீர்விட்டே யிதமாய்க் காய்ச்சி வடித்தருந்தில்
உரித்தா முழலை நாவரட்சி யுடனே யகலு மதுவன்றிக்
கருத்தா லோதி நீர்கொடுக்கிற் கழிச்ச றாக மகன்றிடுமே

## நீர்ப்பாட்டுக்கு

சோற்றைச் சமைத்து வறுத்ததனைத் தூய நீர்விட் டுறக்காய்ச்சி
மாற்றி வடித்துக் குடித்துவரின் மாறு நீர்ப்பாட்டுடன் கழிச்சல்
போற்று முள்ளி வேர்க்கொம்பு பொருத்து முத்தா மணிச்சாற்றை
ஊற்றி யரைத்துதக் கொதிக்கவைத்தே யுடனே பூசிக் சிரத்தில்வையே ()

## குடி நீர்

மாங்கொட்டை வசம்பு சுக்கு மதித்தவெள் ளுள்ளி கூட்டிப்
பாங்கிட்டு வறுத்து நன்றாய்ப் பரிந்துநீர் விட்டுக் காய்ச்சித்
தாங்கிட்டு வடித்தே யுண்ணிற் றணியுநீர்ப் பாட்டு மாந்தம்
ஓங்குவேப் பிலைகருக்கி யுடன்காய்ச்சிக்குடிக்கப் போமே(சகசூ)

## நீர்ப்படுவனுக்கு

அரிசியை வறுத்து நன்றா யவித்தநீர் தனைக் டிக்க
உரியவேப் பிலைது வைத்தே யுடன்வறுத் தொற்ற நன்றாம்
பொருவருங் குளிகை சுக்குப் பொடியுடன் கலந்து தேய்க்கத்
தெரிவரு மூன்று நாளுஞ் சென்றபின் நீரு மன்றே (சகக)

உத்தமா காணி நொச்சிச் சருகுடன் வறுத்தே யொற்ற
நித்திய சாம்ப லொற்று நிதானமாய்ப் பிடிக்க நன்றாம்
சுத்தமாய் மூன்று நாளுஞ் சுகவெந்நீர் குளித்த லாகும்
புத்தியா லறிந்து செய்யிற் பொறுக்குநீர்ப் படுவன் றானே (சகரு)

சரீரம் விறைத்து வேர்க்குமெனிற் றானே கொண்மாப் பிடிக்கநன்றாம்
தரியா தென்னி லெருக்கலைவேர் தானே பிடுங்கி யிடித்தவித்துப்
பரிவா லொற்றுப் பிடித்துவரிற் பகரும் வேர்வை விறைப்பேகும்
பிரியாதிதற்கும்வேர்க்கமெனிற்பேராக்குணமென்றறிந்துகொள்ளே

ஓதிநீர் கொடுக்கல் என்பதை நீரோதிக் கொடுக்கல் என மாற்றுக – நீரோதும் முறையும் மேற் கூறிய நீறுகுழை கொண்டு பார்க்கும் முறையும் பிரதிகளிற் கூறப்பட்டிருப்பினும் இங்கு சேராது நீக்கினேம்.

## தாகத்திற்குக் குடிநீர்

மாம்பூ விரண்டு பிடிபிடுங்கி மணலுங் குளத்திற் கரையள்ளிக்
காம்பு கூட வறுத்தொன்றாய்க் காய்ச்சிக் குடிநீர் குடித்துவரில்
தேம்பு தாக நாவரட்சி திடனாய்மாறுங் கைகண்டோம்
சோம்பு கழிச்சன் மாறாதேற் சுக்குக் களியு நன்றாமே (சகஎ)

இஞ்சி யுறட்டி யதுமாகு மிதமாய்க் கழிச்சன் மாறிவிடும்
மிஞ்சிக் கமியி லிஞ்சி நெய்யு மிளூ மருந்தி வருவீரேல்
அஞ்சு விதமா நோய்களுக்கு மடுக்கு மிந்த மருந்தெல்லாம்
வஞ்சிக் கொடியே பலகாலு மதித்தே யாய்ந்து மருந்துசெய்யே (சகஅ)

## ஓங்காளத்துக்கு

இஞ்சிக் கிழங்குஞ் சீரகமு மியல்பா யரைத்துத் தேன்விட்டு
மிஞ்சக் காய்ச்சி யருந்திவரின் மீளுஞ் சத்தி யோங்காளம்
தஞ்ச மாகுஞ் சாதிக்காய் சாற்றுஞ் சுக்குச் சீரோமம்
கொஞ்சமாகவறுத்திதனைப்பொடித்துத்தேனிற் கொள்ளுகவே

## தாமரைவளைய ஏலாதிக்குளிகை

ஏலம்வெண் கோட்டஞ் சாத்திர வேதி யிலவங்கஞ் செண்பக மொக்கு
மாலுறு குலக்கா யுருத்திர மணியு மருவுகோ ரோசனை மதுரம்
வேலைநேர் விழியாய் பூமியினாக மேவிய முசிறினின் முட்டை
வாலியமன்கொம்போடுசெங்கழுநீர்வருகிழங்கொவ்வொருகழஞ்சே

தாமரை வளையச் சாறுகொண் டரைத்துச் சாற்றுபா வட்டையின் காய்போல்
தோமற வுருட்டி யேநிழ லுலர்த்திச் சுகவனு பானத்தி லீய
ஆமுறு தாக நாவினில் வரட்சி யவற்றொடு மிகுசுரந் தோக்ஷம்
பூமலிகுழலாய்மாந்தமக்கரங்கள்மொருமுநீர்ப்பாடி வைபோமே

## மிருத்தியாதிக் குளிகை

போமதி மதுரங் கோட்டமோ டாரம் புகலிரு வேலிலா மிச்சு
நாமமார் முத்தற் காசுநன் னாரி நற்கிலு கிலுப்பைசெங் கழுநீர்
பூமலி பங்கம் பாளைவேர் சுக்குப் பொருந்முந் திரிகைபே ரீஞ்சு
காமுறுவிழிசேர்கலையினிற்கொம்புங்கருதுகோரோசனைஞாழல்

அவற்றொடு காண்டா மிருகத்தின் கொம்பு மாரலின் கிழங்குபூ நாகம்
குவித்துறு முசிறி னரிசிசெண் பகப்பூக் கூறிய திப்பிலி தேவர்
உவப்புறுதாரம்பசியகர்ப்பூரமொன்றொருகழஞ்சுகொண் டிவற்றைத்
தவத்துறுமுனிவர்கூறியவண்ணந்தகுமுலைப்பாலினி லரையே

அரைத்திடுமெழுகுபதத்தினின்முர்க்கத்தளவுறவுருட்டி நன்மருந்தை
உரைத்திடு நோய்கட் கேற்றனு பானத் தோடுண மாந்தமக் கரங்கள்
பருத்திடு வாத பித்தசேற் பனத்திற் பகர்சுரஞ் சன்னியுட்குத்து
விரைக்குழன்மடவாய்தீருமென்றாயுள்வேதியருரைத்தனர் தெரிந்தே

## வாதமாந்த வலிப்பின் குணம்

கைகால் குளிர்ந்து தரம்பொருமிக்
        கண்ணும் வெளிக்கப் பார்வையுண்டாம்
மெய்தான் வேர்வை முகந்திருக்கும்
        விறைத்தே வலிக்கும் பலவிதமாய்ப்
பொய்யா மேப்பங் கொட்டாவி
        புன்க ணாசி நீர்வடிதல்
மையார் குழலா யிவைகண்டால்
        வாத மாந்த வலிப்பாமே

முர்க்கம் - பயறு குளிர்ந்து உதரம் பொருமி எனப்பிரிக்க உதரம் - வயிறு

### பித்தமாந்த வலிப்பின் குணம்

வாந்தி பிராந்தி மூச்சுழை வலுவாங் குரலுஞ் சீரணித்துக்
காந்தல் சோபம் வேர்வையதாய்க் கைகால் குளிர்ந்து கடுப்புண்டாம்
சேர்ந்த பஞ்ச விந்திரியஞ் சீர்கெட் டிருக்கும் பலவிதமாய்ப்
பேர்ந்து குன்றி வலியுண்டாம் பிதத் மாந்த வலிப்பிதுவே

### சிலேற்பனமாந்த வலிப்பின் குணம்

மெய்யுங் குளிருஞ் சிலிர்த்துவரு வாய்நீர் வீழு மோங்காளம்
கையுங் காலுந் தினவாகுங் கனத்தே வயிறு தான்பொருமும்
பையப்பேசு முடல்பெரிதாம் படுமேன் மூச்சுச் சிறிதுறங்கும்
செய்யவலியாஞ் சிலேற்பனத்திற் செப்ப மாந்த வலிப்பிதுவே

### சிகிச்சை

### பெருங்காயக் குளிகை

செப்பும் வெளுத்தல் வசம்புள்ளி திறமாங் காயம் பீநாறி
தப்பின் மாயாக் காயினுடன் சாற்று மிளகு சுக்கோமம்
துப்பா ரிலுப்பை யரைப்புடனே சொல்லும் வேம்பின் பிண்ணாக்கும்
ஒப்பாய் வேலிப் பருத்தியினி லுற்ற விளைச்சாற் றினிலரையே
(சர்அ)

அரைத்துத் தூதின் பழமளவா யாகு முண்டை நிழலுலர்த்தி
உரைத்து வேம்பி னெண்ணெயினி லிடவே யோடு மாந்தவலி
தெரிக்க நாவ னொச்சியோடு செங்கத் தாரி முடிதும்பை
வரைக்குணொச்சி துடரிபொடு தலைநற் துளிர்க லசித்திடுமே
(சர்கூ)

அவிந்த நீரி லுரைத்திட்டா லகலும் பொருமல் கழிச்சலொடு
நிவந்த குத்துக் கொழுவுதலு நீங்கும் விடஞ்சேர் மாந்தமதும்
தவந்தா னியற்றுந் தமிழ்முனிவன் சாற்று மறையின் மொழிப்படியே
குவிந்த தனத்து மடநல்லீர் குறித்துச் செய்ய வல்லீரே

வல்லவிம் மருந்து தன்னிற் பாதிக்கு வாளங் கூட்டி
ஒல்லுநன் முறைய தாக வுக்தமா காணிச் சாற்றால்
வல்லவா றரைத்து ழுந்தி னளவதாம் வகையு ருட்டிச்
சொல்லிய நோய்க்குப் பேதி வேண்டிடிற் கொடுக்க நன்றே

## பெருங்காயக் குளிகை - 2

வல்லிருசீ ரகமதுர மிளகு சுக்கு
வகுத்ததிரி பலையோம முள்ளி காயம்
மல்லிசன்னி விரைகோட்ட முயிற்று முட்டை
வருநிலவேர் சமன்கொண்டு மங்கை பாலால்
சொல்லுமுறை யரைத்திலகம் விரையே போலச்
சுகம்பெறவே யுருட்டிநிழ லுலர்த்தி யிஞ்சி
நல்லமுலைப் பாலொடுதேன் கூட்டியீய
நாடாது பொருமல்குத்துப் பொறுப்பும் போமே ()

போகு மாந்தம் பொருமல் கழிச்சலுக்
காகு மோமம் வறுத்தவி நீரிற்றேன்
நாகை யுள்ளி ருள்ளி நவில்சமன்
தோகை பாலி லரைத்துக் கலக்கியே

கூறு நன்மருந் திட்டு கொடுக்கவே
சீறு மாந்த வலிப்புச் சுரமொடு
வீறு சன்னி யிரும லடைப்பிவை
மாறு மென்று வகுத்தனன் மாமுனி

## மாந்தக் குளிகை

மாந்தி மதினோய் பலகற்று மாந்தக் குளிகை வகுத்திடுவன்
வாய்ந்த வுள்ளி மிளகோமம் வசம்ப கருஞ்சீர் பெருங்காயம்
போந்த வரத்தை சிறுதிப்பில் பொலியு மாங்காய் தனிற்பருப்பு
வேய்ந்த வடைகாய் தனிலெடுக்க நன்றாமியற்றும் விதங்கேளே
(சகூரு)

கேளீர் காய மொன்றொழித்த வெல்லா மரைத்து வில்லைதட்டி
மாள வுப்புக் கவசித்து மருநதைச் சுட்டு வெந்தபின்பு
மீளக கவசந் தனைநீக்கி விளம்புங் காய மதனோடு
நீளு மம்மி தனிலிட்டு நிகழ்த்தும் பொடுதலை தன்சாற்றால்

அரைத்துத் தூது வளங்காயி னளவா யுருட்டி யனுபானத்
துரைத்தே யிட்டான் மாந்தவகை யெல்லாந் தீரு முண்மையிது
கரைத்துக் கொடுக்கு மொருகுடிநீர் கராம்பீ ருள்ளி மாயாக்காய்
பருத்திப் பஞ்சு மாதளையின் பிஞ்சும் பூவும் வசுவாசி

மதுர மோம மிவையெல்லா மளவா யெடுத்துப் பொடிசெய்து
சதுரம் பெறுநீர் விட்டவித்துத் தானே புகட்ட வக்கரங்கள்
கொதிநீர் போல வருங்கழிச்சல் குடலி லவியல் மாந்தவகை
இதமா மென்றே யாயுண்மறை யிசைத்த வுண்மை
யறிந்துகொள்ளே

## கொதியெண்ணெய்

முப்புர மெரித்த மூலி முதிர்ந்தவீ சுரனார் மூலி
தப்பறு மவுரி நத்தைச் சூரியின் பூறல் ‡குந்தம்
செப்புறு †வாசை நொச்சி பரிதரு வாலி வேர்கள்
ஒப்புறு மதுரங் கோட்டஞ் செண்பகப் பூவே யோமம்

†முப்புரமெரித்தமூலிடசிவனார் வேம்பு ‡குந்தம் - குருந்து வாசை - ஆடாதோடை

சன்னியின் விரைவ சம்பு சார்சிறு தேக்க ரத்தை
துன்னுவெண் பிசின்க ருஞ்சீ ரகநில வேர்மு யிற்றின்
மன்னிய முட்டை யெல்லாம் வகைசமன் பொடித்துக் கொண்டு
பன்னுமெள் ளெண்ணெய் தன்னிற் கொதித்திட வலிகள் போமே()

**பொடுதலையெண்ணெய்**

வெள்ளையுள்ளி பெருங்காயம் வெளுத்தலுடன் றிப்பிலியும்
உள்ளகடுக் காய்மிளகோ டுறுவசம்பு சமன்கொண்டு
கள்ளூறுமுந் தமாகாணி காட்டுப்பொடு தலைதுவைத்துக்
கொள்ளவரு சாற்றரைத்து நிம்பவெண்ணெய் கொதித்திடுமே

கொதிக்கவைத்து மெழுகதெனுங் கூர்ப்பதத்தி லேவடித்து
விதித்தபடி யுட்புகட்டி மேற்பூசி யுச்சியிலும்
மதித்துவைக்க மாந்தவலி மறாக தலைக்கனப்புக்
குதித்தோடிப் பொகுமெனக் குறியமுனி யுரைத்தனனே

**அக்கரம்**

சோதிசேர் கைலை மீதிற் சொல்லரு மமல மூர்த்தி
நீதிசேர் நந்திக் கந்நா ணிகழ்த்தியவாயுள் வேதத்
தோதிய வக்க ரத்தி னுறுகுணஞ் சிகிச்சை யாவும்
தீதிலா வுலகின் மீதேத யறிங்வா செப்ப லுற்றாம் (சசகூ)

**அக்கரத் தொகுப்பு**

கறுப்புடன் சிவப்பு வெள்ளை காட்டு முள்ளீரல் வாயிற்
பொறுத்திடு மக்கரங்கள் போந்தவக் கரத்தின் மேவிச்
செறுத்திடு சுரமுஞ்சன்னி சேருமக் கரக் கிரந்தி
ஏறுத்திடு குணஞ்சி கிச்சை யோதுவ றுணர்ந்து கொள்ளே

## கறுத்த அக்கரத்தின் குணம்

மந்திக்குந் தலைக்குத் துண்டாம் வயிற்றினிற் பொருமிக்காவும்
வந்திக்கு மிடுமி முட்டாய் மயக்கிடும் வயிற்றினோவாம்
அந்திக்கு மதரம் புண்ண மனுங்கிடு மோங்காளிக்கும்
கந்திப்பச் சிலைச் சாறேபோற் கரியியெனக் கழிச்சலுண்டே

உண்டியு மறந்து மேனி கருகியுள்ள வியலுண்டாய்
மிண்டிரு மிரவினாளு மிடுக்கிடுந் சோகஞ் செய்யும்
கொண்டிரும் வரட்சி தாகங் குளிருட நடுக்க முண்டாம்
கண்டிடுங் கறுத்தத்தீய வக்கரங் கடினமாமே

## சிகிச்சை

### குடிநீர்

கரியசீரக மிளகு நாகை யுள்ளிபிரமி
கர்ப்பூர வள்ளிசிறு காஞ்சோன்றி திப்பில்
உரியதொரு வல்லாரலிவை சரக்கு நிறையா
யுடன் காய்ச்சி யந்திசந்தியுட் கொள்ளு வீரேற்
மெரிய கறுத் தக்கரமும் பறவையொடு வெப்பும்
பேசரிய விஷகிரந்தி யவியன் மிகுமாந்தம்
அரியசுர மிவைய னைத்து மகன்று விடு மென்றே
யாயுண்மறை யறைந்தபடி யறிந்து செயநன்றே ()

†உள்ளீரம் வாயிற் பொறுத்திடுமக்கரங்கள் - என்பதற்கு உள்ளக்கரம்
†வக்கரம் வாயக்காம் எனப்பொருள் கொள்ளுக.

### அரைமருந்து

திற்பலி யிருசீ ரோமந் திகழதி மதுரமேலம்
பொற்புறு நாகையுள்ளி புகவில வங்க மாயாச்
சொற்பெறு கராம்பு வாசி தூயசா திக்காய் கோட்டம்
சிற்புறு மரத்தைசுக்குச் சீருள்ளி கடுக்கா யிந்து

இந்து செவ்வள்ளி பூத விருக்க மோடியல் செஞ்சந்தம்
மூத்த வொன்றொரு கழஞ்சாய் முதிர்வள்ளிச் சாற்றாரைத்துக்
கந்த மாண் பனையின் வெல்லங் கலந்துமே யருந்து வீரேற்
றொந்தவக் கரங்க சொல்லாந் துணிந்துட னகலுந் தானே

### தூதுவளைநெய்

தூதுவளை நன்னாரி கண்டங்காலி
தூயவாடா தோடை வட்டின் வேரும்
தீதறு சீரக மிரண்டு திப்பில் கோட்டந்
திகழேல மதி மதுரங் கடுக்காய் சுக்குப்
பேதமறு நாகையுள்ளி யசம தாகம்
பேணியொரு கழஞ்சு கொண்டே யிடித்து மாவாய்க்
கோதறுதூதுளையிலைக்காய் துவைத்த நீரிற்
குறித்தரைத்தே நெய் வெதுப்பிக் கொள்ளப் போமே

### செங்கத்தாரிநெய்

செங்கத்தாரி தூதுவளை சிறந்த கண்டங் காலி வட்டுத்
துங்கமாரின் பூறனன்னார் தூதி னிலை காய் வல்லாரல்
தங்கமார் காப்பூரவள்ளிச் சாறு மிவையோர் சரிகொண்டே
பங்கமறுநற் பசு நெய்யும் பகரு மிருசீர் ரக மேலம்

ஏலமதுர மீரவுள்ளி யிலவங் கந்திப் பிலிமிளகு
சாலுங் கடுக்காயிந்துப்புச் சாதிக்காய் செவ்வளி கோட்டம்
கோலமது வேருடன் சரக்குக் கூட்டி வடித்துட் கொள்வீரேல்
பாலர் சிரந்தியக்கரமும் பகரு மவிய லிவை போமே

செங்கத்தாரி முதல் நன்னாரிவரைக்கும் வேர் தூதுவிளயிலை காய் - வல்லாரல் - கர்ப்பூரவள்ளி - இவைசாறு சாறுகளையும் நெய்யும் வகைநாழி – க – வேரும் சரக்கும் - வகை கழஞ்சு-க கூட்டி வடிக்க.

**கொதிவெண்ணெய்**

நன்னாரி தூதுவளை பொன்னாங் காணி
நல்லபெரு மருந்தவுரி குதிரை வாலி
பொன்னாருங் கிலுகிலுப்பை மணித்தக் காளி
பொருந்துமயி லடிக்குருந்து சிற்ற மட்டி
மின்னாரு மின்பூற லமுக்கி ராய்வேர்
மிக்கதுளாய் நற்சீந்தில் சன்னி யின்வேர்
சொன்னாரோர் நிறைகோண்டே யிடித்து மாவாய்ச்
சோராமற் சரக்குச்செங் கழுநீர் கோட்டம்

கோட்டமுள்ளி சதகுப்பை வசம்போ டேலங்
கொத்தமல்லி யீரரத்தை செணிபக கப்பூ
நாட்டுசன்னி விரையிலவங் கம்வெ ளுத்த
னற்சீர கஞ்சரக்குக் கழஞ்சோ ரொன்றாய்
ஈட்டுநில வேருடனே முசிற்று முட்டை
பியல்பான தெளிவெண்ணெய் கொதிக்கக் காய்ச்சிப்
போட்டுநீரினிலிறக்கித் துளாவி யெண்ணெய்
பொருத்தவே யக்கரங்கள் பொறுக்குந் தானே

### சிவத்த அக்கரத்திக் குணம்

அன்ன த்தைமறக்குங் காயு மனுங்கிடும் வயிற்றி னோவாம்
பொன்னொத்த மேனி தானும் பொருமிடும் வாயிற் புண்ணாம்
வன்னத்தின் மஞ்சள் போல மலஞ்சலங் கழிந்து சோரும்
மின்னொத்த விடையாய் செய்யவக்கர மிரும லுண்டே (சருரு)

### சிகிச்சை

### குடிநீர்

பிரமிசிறு காஞ்சேரன்றி வல்லாரல் வள்ளி
பெருத்தகடுக காய்மிளகு திப்பிலியீ ருள்ளி
மருவுகருஞ் சீரோம மதுரமொரு நிறையாய்
வைத்தவித்துக் குடித்துவரின் மந்தமுடற் கொதிப்புப்
பொருமல்சிவத் தக்கரம்வெப் பிருமலுடன் கிரந்தி
பொறுக்குமென வேயாயுண் மறைபுகன்ற தாகும்
தெரிவருநற் கொதியெண்ணெய் சிரமதனிற் பொருத்திச்
சிறந்திடுநெய் யுங்கொடுக்கச் செப்பினாக ளன்றே ()

### நெய்

தூதுவளை வேரிலைகா யொடுசெங்கத் தாரி
தூயகண்டங் காலியுமின் பூறலுநன் னாரி
மாதுவளர் வல்லாரல் கர்ப்பூர வள்ளி
மதுரந்திப் பிலிமிளகு கடுக்காய்நற் சீரம்
சீதமிகு மீரவுள்ளி யிலவங்கங் கோட்டஞ்
சீரேலங் கொத்தமலி செப்பமொரு நிறையாய்ப்
பேதமறு பசுநெய்யில் வடித்தருந்தி வரவே
பெருந்தசுரங் கழிச்சலுட ணக்கரங்கள் போமே ()

வள்ளி – சாத்தாவாரி ¶ கொதியெண்ணெய் - கறுத்த அக்கரத்தின் சிகிச்சையிற் கூறப்பட்டுள்ளது.

### வெள்ளையக்கரத்தின் குணம்

காய்ந்திடும் வயிறு மூதிக் கழிந்திடும் வெள்ளை யாக
ஆய்ந்திடும் வயிற்று நோவா யனுங்கிடும் வாயிற் புண்ணாம்
எய்ந்திடுந் தாக முண்டா மிருமிடுங் கால்கா யாது
சாய்ந்திடும் வெள்ளையான வக்கரஞ் சாற்றுங் காலே (சருஅ)

### சிகிச்சை

### குடிநீர்

கொடிமல்லிகையிலைபூக் கர்ப்பூர வள்ளி
கோதில்சிறு காஞ்சோன்றி மிளகிருசீ ரகமும்
படிமேவு வல்லார லீரவுள்ளி திப்பில்
ப்ஞ்சவர்கண் முல்லையிலை கூட்டி யொன்றாயவித்த
குடிநீரை யந்தி சந்தி வடியிட்டுக் கொடுத்துக்
கூறுமரை மருந்து மிவை விடாது தினஞ் செய்தால்
கடிமேவு மக்கரங்கள்விய லிளவ மாறிக்
கழிச்சலும் விட்டகலு மெனக் கழறு மரு மறையே ()

### நெய்

கோட்ட மதி மதுர நெல்லி முளியசம தாகங்
கொத்தமல்லி தான்றியிரு சீர் சிவந்த சந்தம்
நாட்டமுறு நிலவினுப்பு மிளகு சிறு திப்பில்
நற்கடுக்காய் மாயாக்கா யேல மொடு சுக்குக்
கூட்டுமதி விடயமகி லிலவங்கஞ் சாதி
குலமான செவ்வள்ளி கொடி மல்லிச்சாறும்
ஈட்டுநறு நெய்யதனில் வடித்தருந்தி வரவே
யிசைவான வக்கரங்க ளிளகிய கன்றிடுமே

### உள்ளக்கரத்தின் குணம்

தலையினை வலிக்குங் காயுந் தகுமுடல விந்து புண்ணாய்ச்
சிலையென வயிறுமூதிச் செருமியுள் ளனுங்கி முட்டாய்
நிலையெனக் கால்கா யாது நெய்ப்பற்றாய்ச் சியலாய்ச் சுண்டாய்
உலைவுறக் கழிந்து நாறு முள்ளிவக் கரந்தான் றீதே (சகக)

### சிகிச்சை

### குடிநீர்

பிரமிசிறு காஞ்சோன்றி வல்லாரல் வள்ளி
பெருத்த கடுக்காய் மிளகு திப்பிலிகக் கேலம்
உரியவிலை யொன்ருக்கி யவித்துடனே குடித்தே
யுள்ளருந்தி யரைமருந்து முடனரைத்துக் கொண்டே
சிரமதனிற் கொதியெண்ணெய் திடமாகப் பொருத்திற்
றீர்ந்திடு முள்ளவியல் சுரமென முனிவ ருரைத்தார்
பொருவருமக் கரங்களிவை மந்தமொடு வெப்பிற்
பொருந்தி வருஞ் சன்னி சுரம் பேணிவகை புரியே. (சகூஉ)

### நெய்

தூதுவளை வேரிலைகாய் தூயகண்டங் காலிவட்டுத்
தாதுவள ரின்பூறல் தங்கு செங்கத் தாரி
தீதீல் வள்ளி காஞ்சோன்றி திகழ் பிரமி வல்லாரல்
மாதிரு சீரக மேல மதிமதுர மீர வுள்ளி. (சகூங)

உள்ளசமோ தகமிளகு வுரிய கடுக்காய் திப்பில்
கொள்ளுமில வஞ்சாதி குலவுநறு நெய்யதனில்
மெள்ளவடித் தந்தி சந்தி வெதுப்பியருந்திடு வீரேல்
உள்ளவிய லக்கரங்க ளுடன் கழிச்ச லகன்றிடுமே (சகூச)

## 5. ஈரலக்கரத்தின் குணம்

கடுத்திடுங் கழியுங் காயுங் கடினமா மிரவின் மீண்டும்
கொடுத்திடு மசனஞ் செல்லாக் குளிருட னடுக்கமுண்டாம்
விடுத்திடாச்சிய லிரத்தம் விழுந்திடுமுக்கிச் சோரும்
தடுத்திடா வீரன் மீதி லக்கரங் கடினமாமே (சகூரு)

### சிகிச்சை

### நெய்

தூதுவளை வேரிலைகாய் பூக் கண்டங்காலி
தூயவட்டுப் புல்லாந்திவேர் செங்கத்தாரி
மீதுவளர் காஞ்சோன்றி வல்லாரல் பிரமி
மிக்க வள்ளி நாயுருவி யிருசீரமேலம்
தாதுவளரதி மதுர மீருள்ளி மிளகு
சாதிக்காய் மாயாக்காயொடு கடுக்காய் தான்றி
ஓதியதிப்பிலி யுலுவா நெல்லிக்காய் கோட்ட
முடனரத்த சந்தமச மோத யில வங்கம்

உடன்சரக்குச் சாறிலைவே றொன்றாய்க் கூட்டி
யுரிய நறு நெய்யதனில் வடித்துக் கொள்ளில்
திடமுறவே கொதியெண்ணெய் சிரத்தில் வைத்துக்
தினம்வெதுப்பி நெய்யருந்திற் றீர்வி யாதி
விடமுறுமுள் ளக்கரம்வெப் பிருமல் காய்ச்சல்
விஷகிரந்தி கழிச்சலிவை விட்டே யேகும்
குடமுனிவ னுரைத்தபடி குறித்துச் செய்யிற்
கூறுபிணி யெலாம்பொறுக்குங் குறிக்கொ ணீயே. ()

### வாயக்கரத்தின் குணம்

இருமிடும் வாயிற் புண்ணா மிளகித்தொப் புளம தாகி
மருவிடும் வயிறுமூதி மந்தித்துக் குளிர்ந்து காயும்
வெருவிடு மன்னஞ் செல்லா வீங்கிடு முகமும் வாயும்
மருவிடும் வாயிற் றோன்று மக்கரம் வகுக்குங் காலே (சகூஅ)

### சிகிச்சை

### நெய்

திப்பிலி யிருசீ ரோமஞ் செஞ்சந்தங் கடுக்காய் நெல்லி
பொற்புறு மிலவ மேலம் பொருந்திய கோட்ட மாயாச்
சொற்பெறு முலுவாத் தான்றி தூயதி மதுரம் வள்ளி
கிற்புறு சரக்கு நேராய் நெய்யினிற் கொதித்துக் கொள்ளே.
(சஙகூ)

### அக்கர சுரத்தின் குணம்

கஞ்சியை மறக்குங் காயுங் கடினமாய்த் தலைக்குத் துண்டாம்
விஞ்சியே யிருமித் தொய்வாய் மிடுக்கிற வயிற்றி னோவாம்
கெஞ்சியே யழற்றி வாயுங் கேவல மணுங்கிப் புண்ணாம்
வஞ்சியே யக்கரத்தில் வருசுரம் வகுக்குங் காலே. (சள0)

### சிகிச்சை

### குடிநீர்

கர்ப்பூர வள்ளிசிறு காஞ்சோன்றி மிரமி
கதித்திடுவல் லாரலிவை கலந்துசரி யெடுத்தே
சொற்பரவு மதிமதுர மிளகுதிப் பிலியுந்
தூயகடுக் காய்மதுர மீருள்ளி கருஞ்சீர
நற்பாரி லிவையவித்து நாலொன்றாய்க் குறுக்கி
நாடோறு மந்திசந்தி குடித்துவரு வீரேற்
பொற்பாரக் கரசுரமா கிரந்தியொடு வெப்புப்
பொருந்துபற வைச்சுரமும்பொடி பொடிந்து போமே ()

### நெய்

கண்டங் காலியின் பூறல் கதித்த செங்கத் தாரிவட்டுத்
துண்டார் தூது வளையிலைகாய் துலங்கு பிரமி வல்லாரல்
அண்டார் பூரவள்ளியுட னரிய சிறுகாஞ் சோன்றியிலை
கொண்டே யிருசீ ரகமேலங் கோதின் மதுர மிலவங்கம். (சளர்)

வங்க மிருசீ ரகத்தினொடு வகுத்த கடுக்காய் திப்பிலியும்
துங்க வசமோ தகமுலுவாத் தூய மிளகு நறுநெய்யிற்
தங்க மாக வடித்தருந்தித் தகுமோர் வெதுப்பப் பத்தியமாய்
அங்கம் பறவைச் சுரத்துடனே யடுத்தக் கரத்தின் சுரம்போமே. ()

### அரைமருந்து

திற்பலி யிருசீ ரோமந் திகழதி மதுர மேலம்
பொற்புறு நாகை யுள்ளி பொருந்திய சாதிக் காயும்
சொற்றவாண் பனையின் வெல்லந் தூயவிந் துப்பங் கூட்டி
அற்புற வள்ளிச் சாற்றி லரைத்துணக் கரங்கள் போமே.

### அக்கரசுரசன்னியின் குணம்

அலத்திடு மிருமிக் காயு மதிகமா யிரவின் மிண்டிக்
கலத்தினிற் கஞ்சி கொள்ளாக் கடுமையாய்ப் பிதற்றிப் பேசும்
உலர்த்திடுங் கிடைகொ டாதா முரத்திடக் கழியிற்சன்னி
பெலத்திடு மக்க ரத்திற் பெருஞ்சுர சன்னி யாமே.

சுரத்துட னடுக்க முண்டாய்த் துயர்செயு மனுங்கிச் சோரும்
உரத்திடு மயக்கி யேறி யுவாதியாய்ப் பேசி டாது
சிரத்தினிற் கனத்திடித்துத் திமிர்த்திடுந் தீமை செய்யும்
வருத்திடக் கரத்தின் மேவி வருஞ்சுர சன்னி யாமே.

வள்ளி – கர்ப்பூரவள்ளி

## சிகிச்சை

### கொதியெண்ணெய்

நன்னாரி கிலுகிலுப்பை செங்கத் தாரி
நற்சிவதை யியங்குபுங்கு முத்தற் காசு
சொன்னார்கன் முரிசுகளப் பன்னை நொச்சி
சொற் குதிரைவா லியிரு வேலி வேரும்
பன்னாரு மெருக்கவுரி யமுக்கி ராய்வேர்
பகர்தூது வளையிலா மிச்சுக் கோட்டம்
மின்னார்செஞ் சந்தனம்வேர்க் கொம்போ டுள்ளி
மிகுந்தசத குப்பையகில் தேவ தாரம்.

தார்செறிவு மரமஞ்சள் கடுகு ரோணி
சன்னிவிரை வசம்பரத்தை கொத்த மல்லி
ஏர்செறிசெண் பகப்பூவோ டேல மோரொன்
றிருகழஞ்சு வேருடனே யிடித்து மாவாய்க்
கார்செறியுந் திலத்திலெண்ணெய் நிம்ப வெண்ணெய்
கலந்துகொதித் திடக்காய்ச்சி மருந்தைக் தூவிச்
சீர்செறியுஞ் சிரத்தில்வைத்துப் பொருத்த நாளுந்
தீர்ந்திடுமக் கரசுரத்திற் சன்னி தானே,

### கொதியெண்ணெய் - உ

குருந்துமயி லடிக்குருத்து நற்குதிரை வாலி
கோதின்மணித் தக்காளி நன்னாரி யவுரி
மருந்துநொச்சி கன்முரிசு சன்னியள நாயன்
மருவுதுளாய் தக்காளி யசுவந்தி யினில்வேர்
திருந்துகிலு கிலுப்பைபெரு மருந்தினொடு சீந்தில்
திகழ்தூது முயிற்றுமுட்டை நிலத்தினில்வேர் நேராய்ப்
பொருந்துசத குப்பையுள்ளி வெண்கோட்ட மேலம்
பொற்புறுசுக் கிலவங்கங் கொத்தமல்லியரத்தை

அரத்தைசன்னி வசம்புமஞ்சள் வெளுத்தல் காய
மரிசநற்சீர் செண்பகப்பூக் கழஞ்சோ றொன்றாய்
உரைத்ததெளி வெண்ணெய்தனிற் கொதித்து வார்க்கி
லோடிவிடு மக்கரத்தின் சன்னி யெல்லாம்
பரத்தினிலே கைகண்டோ மிந்த வெண்ணெய்
பதறாமற் கொதித்ததனைப் பொருத்த முன்னம்
சிரத்தினின்முக் கூட்டெண்ணெய் பொருத்திப் பின்னர்த்
திரும்பாதே யிந்தவெண்ணெய் செய்ய நன்றே.

**ஏனாதி**

நன்னாரி தூதுவளை யாடா தோடை
நல்லவட்டுக் கத்தரிவேர் நிலத்தி னாகம்
சொன்னார்சுக் கதிமதுரங் கடுக்காய் நற்சீர்
தூயமல்லி மிளகிந்துப் பேலங் கோட்டம்
மின்னாருந் திப்பிலிநல் லசம தாக
மிக்தொரு நாகையுள்ளி மிகாமற் கூட்டிப்
பொன்னார வறுத்தாடா தேடைச் சாற்றிற்
பொருந்துநெய்யிற் கொதிக்கவைத்துப் பொறுத்துண்பீரே

பொறுக்குமிந்த வேனாதி தனையுள்ளே கொண்டு
பொருந்துநில வோசுக்கு மரிசியுடன் பொரித்து
நறுக்கிடுவெள்ளைச் சீலைதனிற் பொட்டாகக் கட்டி
நாடோறு மருந்திவரத் தீர்கின்ற வியாதி
இறுக்குசிலேற் பனசன்னி சுரமுதல தாக
வேகிவிடு மக்கரத்தின் சுரசன்னி யீறாய்ச்
சறுக்கியகன் றோடுமென வாயுண்மறை முன்னஞ்
சாற்றியது தவறாமற் செயநன்று காணே.

### அக்கரத்தின் பொதுக்குணம்

பொருமலுங் கழிச்சலும் புண்ணும் வாயினிற்
செருமலும் வயிற்றினி னோவுஞ் சேர்ந்திடும்
இருமலுங் காய்ச்சலு மெரிவுங் கூதலும்
தரும்பெரு மக்கரந் தலைக்கொ திப்புமே.

கறுப்பதாய் வெள்ளையாய்க் கரியின் பச்சிலை
உறுப்பதாய்ச் சிவப்பதா யுதிரச் சீதமாய்
இறுப்பநெய் யெண்ணெய்பா லெனக்க ழிந்திடிற்
செறுப்பதக் கரக்குணக் கழிச்சல் செப்பிடே.

கூறிய வாயுடல் குதங்கள் குய்யங்கள்
நாறியே புண்ணதாய்ப் பூத்து நாவரண்
டூறிய மூலமுந் தள்ளி யுள்ளிவிந்
தேறிய சத்தியோ டிருமிக் காயுமே.

### அக்கரக்கிரந்தி வெப்பின் குணம்

கொதித்திடும் வெதும்பிக் காயுங் குமிறியே வயிறு மூதி
மதித்திடும் வாயிற் புண்ணா மந்தமாய் வயிறுங் காயும்
கதித்திடுங் கால்கா யாது கஞ்சியு மறந்த னுங்கும்
விதித்திடக் சுரக்கி ரந்தி வெப்புச்செய் குணமி தாமே.

காய்ச்சலொடுதலைவலியும் இருமலும் அனுக்கமும் காணும் சத்தி கழிச்சல் உண்டாகும் வாய்பூத்துப்புண்ணாம் உடலவியும் சிவக்கும் கழிச்சல்நாறும் பலபேதமாய்க்கழியும் இவை அக்கரத்தின் பொதுக்குணமென்பது.

## பொதுச்சிகிச்சை

### அக்கர சஞ்சீவிமாத்திரை

அமரர்தமைச் சிறையினில் வைத் தரசு செய்த
வவுணர்கோன் றன்மார்பி லருள்வேல் விட்ட
திருமுகமா றுடையபிரான் பதாம்பு யத்தைச்
சிந்தித்து வணங்கியருள் பெற்றுக் கொண்டு
பெருமையுறு மக்கரசஞ் சீவி யென்னும்
பெயருடைய மாத்திரையைப் பேசக் கேண்மின்
அருமையுறு கஸ்தூரி யொன்று ஞாழ
லதுவிரண்டு கோரோச னையு மூன்றே.

ஏலந்நா லொடுமதுர மைந்து சுக்கு
மிரிசந்திப் பிலியுமிவை யாற ரத்தை
சீலமுறு சாதிக்கா யோமஞ் சோம்பு
செப்புகருஞ் சீரகமேழ் கோட்ட மெட்டுக்
கோலமுறு நாலுமைந்து மக்க ராவாங்
கூறுசிறு தேக்கதுவு மையி ரண்டு
நாலிலுறு நாலதெல்லாங் கழஞ்சு வீத
நாடுமுலைப் பால்விட்டே யரைத்து ருட்டே.

அரைத்துருட்டிப் பயறளவாய் நிழலு லர்த்தி
யருமுலைப்பால் தேன்கூட்டிக் குளிகை யீய
உரைத்தவத்தி சுரஞ்சன்னி நாவிற் புண்ணு
முதரத்தி லவியலொடு கிராணி மாந்தம்
பெருத்தவக்க ரசசுரமும் பறவைத் தோஷம்
பேசுகணை பலதோக்ஷ மான வெல்லாம்
உரத்தகதி ரவன்முன்னர்ப் பனியே போல
வோடிவிடு மெனமுனிவ ருரைத்தாரன்றே.

### அக்கராக் குளிகை

கோரோ சனையே சாதிக்காய் கோட்ட மேலஞ் செண்பகப்பூ
நீரார் செஞ்சந் தனமானி னீண்ட கொம்பு பூநாகம்
பேரார் முயிற்று முட்டையுடன் பேசுங் கணிதவேதியதும்
பாரா ருருத்தி ராக்கமில வங்கப் பட்டை கன்னாரே.

நாரும் வகைக்குக் கழஞ்சொன்று நலஞ்சே ரக்க றாவிரண்டு
சேருங் கழஞ்சு முலைப்பாலிற் சேர்த்தே யரைத்துப் பயறளவாய்
நீருங் குளிகை முலைப்பால்தே னினைவாய்க் கூட்டிக் கொடுத்திடுகில்
தீருங் கழிச்ச லக்கரத்திற் சேருஞ் சன்னி யவியல்சுரம்.

### அமுதாதிக்குளிகை

அதிமதுரஞ் செண்பகப்பூ வேலங் கோட்ட
மரியவெட்டி யிலாமிச்சுப் பச்சை மாஞ்சில்
விதிமருவு கராம்புடனே கணித வேதி
விளங்குநற்கோ ரோசனையுங் கழஞ்சோரொன்றாம்
பதிமருவு வெட்டியின்வே ரவித்த நீரிற்
பதனமுற வரைத்துருட்டு குன்றி போல
மதிநுதலார் தமதுமுலைப் பாலி லீய
மாறிவிடு மக்கரங்கள் வரட்சி வெப்பே

### நெய்

தூதுவளை நாயுருவி முசுமு சுக்கை
சொல்லுமிவை சமூலங்கர்ப் பூர வள்ளி
தாதுவளர் வல்லாரல் பிரமி யோடு
தகுமாடா தோடைகொன்றை கறுத்தப் பூவின்
மீதுவள ரிலையுடன்வேர் சரக்கீ ருள்ளி
மிளகுசுக்கு வசம்பிருசீ ரகமா யாக்காய்
போதுவளர் நெல்லிக்காய் கடுக்காய் கோட்டம்
புகன்மதுர மக்கரவோ டோம மல்லி

ஒருபிடி யிலையும் வேருமுறுசரக் கொருக ழஞ்சு
தருபசு நெய்யிற் காச்சித் தகுமுறை யுட்பு கட்டி
உருவுறு மேலும் பூச வொழியுமக் கரங்கள் வெப்புப்
பொருமலுங் கழிச்சன் மாந்தம் போகுமென் றுரைக்கும் வேதம். ()

### நெய் - உ

உரைக்கு மேலம் வசுவாசி யோம மிருசீ ரகமிளகு
கரைக்கு மஞ்ச டிப்பிலியுங் கராம்பு கோட்டம் பீநாறி
விரைக்கு மிலாமிச் சக்கறா மேவுங்கடுக்கா யதிமதுரம்
இருக்குங் கன்னார் கொத்தமல்லி யிசைந்த செஞ்சந்
தனம்வசம்பே. ()

ஏயும் வெளுத்த லிருவேலி யிவையோர் கழஞ்சு பொடிசெய்து
காயு நெய்யி லீருள்ளி காட்டு முத்த மாகாணி
மேயு மிலையும் பூவுமரிந் திட்டே யுள்ளி பொன்னிறமாய்
ஏயு நேரங் கீழிறக்கி யிசைத்த சரக்கின் பொடிதூவே.

தூவி யாற்றி யுட்கொடுத்துச் சொல்லு முடம்பின் மேற்பூச
மேவு மாந்த முடம்பிலுறு மெலிவு கழிச்ச லக்கரங்கள்
நாவி லுறும்புண் ணுள்ளவிய னவிலுந் தாக மிளைப்பீழை
யாவுஞ் சோகை தோஷவகை யகலும் வயிற்றுக் கடுப்பதுவும்.
(சகூஎ)

### கொதியெண்ணெய்

அகலும் படிக்கோர் கொதிணெய்ணெ யரத்தை மல்லி யீருள்ளி
புகலுங் கடுக்காய் வசம்போமம் பொன்னி னிறமாஞ் செவ்வள்ளி
மிகவுஞ் சிவந்த சாதிலிங்க மேவு மதுரந் திரிகடுகு
தகவு முள்ளி யிலவங்கஞ் சன்னி நாயன் பீநாறி (சகூஅ)

நாறுங் காயம் வெண்கார நவிலும் வெளுத்தல் சதகுப்பை
கூறு மடவி கச்சோலங் குலமா மஞ்சள் செஞ்சந்தம்
வேறு மேலங் கழஞ்சொன்று வேர்கேள் வில்வம் நன்னாரி
ஊளறுங் கோரை சீதேவியுரைக்குஞ் சிவதை மால்காந்தி (சகூகூ)

காந்தும் வீழி வவ்விலொட்டி கண்டங் காலி முசுமுசுக்கை
ஏய்ந்த வட்டுத் தூதுவளை யிலாமிச் சவுரி நீர்ப்பூலாச்
சேய்ந்த செங்கத் தாரிநிலக் குமிழ்பேய்ப் பலவன் சம்மட்டி
ஆய்ந்த கரிய காக்கணவ ¶னறலின் வள்ளி நிலப்பனையே.
(ரு00)

நிலத்தின் மருவு சாரணையு நிகழுங் கிரந்தி நாயகனும்
பலத்தின் மருவு கிலுகிலுப்பை பகரு மிவைவேர் பிடியொன்று
தலத்தின் மருவு மிருவேலி சாருங் கரிய காக்கணவன்
குலத்தின் மருவு செவ்வரத்தை கொள்ளும் வீழி யிவையிலையே.

இலையும் பூவுஞ் செவ்வரத்தை யிலைவேர் சரக்கு வெவ்வேறாய்
நலியவிடித்துப்பொடிசெய்துநல்லெள்ளெண்ணெய்நிம்பெண்ணெய்
மலியக் கலந்து காய்ச்சியிலை வெடிக்கும் பதத்திற் கீழிறக்கி
வலியவேர்த்தூள்சரக்குத்தூள்வகைசேரிலைத்தூண்முடிவிலிடே.

இட்டே யுள்ளும் புகட்டியுடம் பிசையப் பூசித் தலைதனிலும்
மட்டாய்ப் பொருத்த வக்கரத்தில் வந்தசன்னி சுரம்வீக்கம்
முட்டும் வலியிற் சன்னிசுர முதிர்ந்த மரந்த சன்னியதும்
விட்டே தீரு மெனவாயுள் வேதம் விதித்த விதியாமே. (ரு0கூ)

(ரு0க)மால்காந்தி – விட்டுணுகிராந்தி
சம்மட்டி – குத்துக்காற்சம்மட்டி ¶அறலின்வள்ளி – சாத்தாவாரி

## அக்கரத்தின் பேதம்

### வெள்ளை யக்கரத்தில் வெப்புக் குணம்

வாயுபுண் ணாகி யிளைப்பிருமல் வந்து மயக்கந் தூக்கமுண்டாம்
காயம் வெளுக்குங் கண்வெளுக்குங் கனக்கு முடம்பு மிகக்குளிரும்
தாயார் முலையுண் டுறங்காமற் றளரு மலமும் வெளுப்பாகும்
வாயார் நாக்கு மாசனமும் பூர்க்கும் விக்க லெடுத்திடுமே. (ரு0ச)

### கறுத்த அக்கரத்தின் வெப்புக்குணம்

கறுக்கும் பல்லு நாக்கதுவுங் கண்ணு மலமுங் கறுப்பாகும்
மறுக்கும் வலிக்கும் வயிறூதும் வயிறுகழியு முவாந்திக்கும்
உறுப்பெல் லாநோ முடல்கனக்கு முள்ளே மெத்த மலங்கட்டும்
கறுத்தக் கரத்தின் வெப்பிதென்று கண்டாலறிந்து கொள்வீரே. ()

### சிவத்த அக்கரத்தில் வெப்புக்குணம்

இதமாய் வெதும்பும் வயிறுளையு மிளகுஞ் சீதம் பச்சைமஞ்சள்
அதுவாய்மேனிசிவந்திளைக்குஞ்சலமஞ்சணிக்குங் கோபமுண்டாம்
விதமாம் வேர்க்கு முவாந்திபண்ணும் வீக்கந் தூக்க மயக்கமுண்டாம்
மதமா யிருந்த வுடல்புலர்ந்து வாயுபுண் ணாகு மலஞ்சிவக்கும்.
(ரு0சூ)

### அக்கரப் படுவன்குணம் - மருந்து.

வலிக்குங் கழியும் வயிறெரியும் வாய்நீ ராக வுவாந்திக்கும்
நலிக்கு முடலு மெண்சாணு நடுக்கு மிதுவக் கரப்படுவன்
பலிக்கு மசமே தீண்டாத பாலை யிலைபொன் முசுட்டையிலை
மலிக்கும் பிடிநீர் நாலுபங்கு வற்றி நாலொன் றாய்க்குடியே.
(ரு0எ)

மேற்கூறிய மூன்றும் அசாத்தியம். அக்கரப்படுவன் ஒன்றும் கட்டசாத்தியம்.

## சிகிச்சை ஏரண்டத் தயிலம்.

நாயுருவி யரிசிமுத்தற் காசி யங்கி
னற்கொழுந்து பெருமருந்து கிரந்தி நாயன்
தூயதொரு நெய்க்கொட்டான் பழம ரைப்புத்
துரிசுவசம் பரத்தைகடுக் காயிந் துப்பு
நேயமுறு கராம்பிவையொன் றரைக்க ழஞ்சு
நேர்வாளஞ் சுத்திசெய்து வறுத்து நெய்யில்
ஆயவிசை முப்பதுகொண் டரைத்தே ரண்ட
மதிற்றயிலத் தொடுகலக்கி யடுப்பிற் காய்ச்சே. (ரு0அ)

## சூரிய புடஎண்ணெய்

காய்ச்சிவடித் துட்புகட்ட வக்க ரத்திற்
கடுமைதரு நாலுவகை வெப்புந் தீரும்
மூச்சடரு மிளைப்புக்கு மருந்து கேண்மின்
முதியகாக் கணங்கொவ்வை கிரந்தி நாயன்
பேச்சுதவு குன்றிமணி யாம ணக்குப்
பேருந்நா யுருவியொடு சிறுநெ ருஞ்சி
ஆய்ச்சிதரு வெண்ணெயுண்ட மாலின் காந்தி
யவையிலையோர் பிடித்துவைத்தே யெள்ளி லெண்ணெய்.

கூட்டியதி னன்னாரி செங்கத் தாரி
குலவுதூதுளையின்வேர் சீனக் காரம்
கோட்டமதி மதுரமக்க றாக்க டுக்காய்
குலக்காய்செஞ் சந்தனமு மாயாக் காயும்
நாட்டுகராம் பொடுகருஞ்சீ ரகம்பீ நாறி
நற்றூது வளம்பூவும் பழமு மல்லால்
சூட்டுமா தளங்கனியிற் றோலு மெல்லாந்
தூளாக்கி யெண்ணெயினி லளவிப் பின்னை (ருக0)

நெய்க்கொட்டான் பழம் - புனலைப்பழம்.

## குடிநீர்

வல்லிரவி முகந்தன்னின் மூன்று நாட்கள்
வைத்தெடுத்தே யுட்புகட்டித் தலையில் வார்க்கச்
சொல்லியவக் கரமிளைப்புத் தொய்வு மாறுஞ்
சுகந்தருநற் குடிநீர்கேள் கராம்பு நற்சீர்
நெல்லியின்காய் திப்பிலியக் கறாக்க டுக்காய்
நிகழேல மாயாக்காய் சிவந்த சந்தம்
மல்லியிவை யோரொன்று கழஞ்சு தூது
வட்டுவே ரிலாமிச்சுக் கண்டங் காலி. (ருகக)

வேரிவைநா யுருவியது சமூலங் கொண்டு
விளம்புசம னெட்டொன்றாய்க் கஷாயம் வைத்துக்
கூர்மையுடன் வடித்தருந்த வக்க ரத்திற்
கொள்வீக்கம் வெப்பிவைகள் குறைந்து போகும்
நீர்மையுடன் மற்றுமொரு குடிநீர் முத்தந்
நீடுகவிழ் தும்பைவே ரறுகின் வேரும்
சீர்மைசிறு காஞ்சோன்றிக் கொழுந்து சுக்குத்
திப்பிலிநன் மிளகுகடுக் காய்வெள் ளுள்ளி. (ருகர)

வகையொன்றுக் கொருபிடிநற் சரக்கோ ரொன்று
வருகழஞ்சு வெள்ளுள்ளி பிடியுங் கூட்டித்
தொகையொன்று நீர்கூட்டி யெட்டொன் றாக்கித்
துய்க்கவரு மக்கரத்தில் வீக்க மாறும்
நவையொன்று நாவினிலக் கரங்கள் போக்க
நற்கடுக்காய் நெய்க்கொட்டான் பழம்வெந் நீரில்
சுவையொன்ற வரைத்துநா வினிலே தேய்க்கச்
சுகம்வருமென் றாயுண்மறை சொற்ற தன்றே (ருகக௬)

## நெய்

நறுநெய்யி லதிமதுரங் கன்னா ரோம
நற்சீர கந்திப்பில் வட்டு வேரும்
மறுவறுசா ரணைவேருஞ் சமன்பொடித்து
வளமையுடன் கொதிப்பித்துக் கழஞ்சு நெய்தான்
குறைவறவே யந்திசந்தி கொடுக்க முன்னர்க்
கூறியவக் கரமூன்றுங் குணமே யாகும்
இறுதிசெயு மக்கரத்திற் சுரமேற் கொண்டா
லிசைந்தமருந் துரைத்திடுவ னின்பமானே (ருகச)

## சுரத்துக்குக் கோரோசனைக் குளிகை.

இன்பசுவின் ரோசினைநற் றுரிசு துத்த
மேற்றதிரி பலைகணித வேதி திப்பில்
துன்பறுநற் சாதிலிங்கங் கழஞ்சோ ரொன்று
சுத்திசெய்த நேர்வாள மிருபத் தைந்து
கும்பமுலைப் பாலதனிற் சாம மாட்டிக்
குன்றியள வாயுருட்டி நிழலு லர்த்தி
அன்புடனே முலைப்பாலிற் கொடுக்கப் பேதி
யாகுமது பசுவின்பான் மாற்றுக்கொள்ளே (ருகரு)

## கழிச்சலுக்குக் குடிநீர்.

கொண்டதொரு வக்கரத்திற் கழிச்சன் மிஞ்சிற்
குடிநீர்கேள் பீநாறி சிவந்த சந்தம்
மண்டிருசீ ரகம்பெருஞ்சீர் தேற்றாக்கொட்டை
மாயாக்காய் களிப்பாக்குக் கைப்பு நெல்லி
உண்டிதரு கடுக்காய்நற் சந்தி லாமிச்
சுவந்தவிரு வேலியொடு செண்ப கப்பூக்
கண்டுமொழி யெழிலணங்கே யோம முத்தங்
காய்ச்சியிவை யெட்டொன்றாய்க் குடிநீர் கொள்ளே ()

## அக்கரசுரத்திலெண்ணெய்.

சிற்றமட்டி சீதுளாய் நன்னாரி யிலைவேர்
சேரவொரு பலமிடித்து நற்றூள தாக்கிச்
சொற்றபடி யோராறு நாழிநீர் விட்டுச்
சூழவொரு படியிறுத்து நல்லெண்ணெய் நாழி
கற்றாவின் பாலினொடு சிறுவிளாச் சாறுங்
கருதிவகை யொருநாழி கலந்துமுத்த நாரி
உற்றவெட்டி வேர்சுக்கு நற்சந்து கோட்ட
முசிர்மதுர மோரொன்றுக் கொருகழஞ்சு பொடியே ()

பொடித்துக் கலந்து மூன்றாநாட் போதக் காய்ச்சி மெழுகுபதம்
வடித்துத் தலையில் வைத்திடுகின் மாறுஞ் சுரங்க ளானவெல்லாம்
தொடுத்துத் தனிவேல் விட்டவுணற் றொலைத்த குமர னருட்பதங்கள்
படித்துப் பரவுந் தமிழ்முனிவன் பகர்ந்த மொழியின் படியாமே ()

## உள்ளுரோகக்குணம்.

கொதித்திடும் வயிறுமூதிக் குளிருடன் காய்ச்ச லுண்டாம்
விதித்திடு மன்னஞ் செல்லா மேனியு முலர்ந்து வேறாம்
கதித்திடுங் கழிச்சன் மிஞ்சிக் கழிந்திடுங் கடுக்குஞ் சீதம்
மதித்திடு முள்ளு ரோகஞ் செய்குண மதிக்குங் காலே (ருகசு)

## சிகிச்சை
## தூதுவளை நெய்.

தூதுவளம் பழச்சாறு தென்னையினிற் குரும்பை
துவைத்தெடுத்த சாறுவகைக் கிருநாழி கொண்டு
மீதுவளர் நாகவல்லி மாதளங்காய் காணி
மிகுசாறு மொருநாழி நெய்யுமொரு நாழி
தீதகற்றுந் தூதுவளை வேராறு பலமாய்த்
தேடியிடித் தவித்தநர் தானுமொரு நாழி
ஓதுநவ பாண்டமதி லுறக்கலந்து காய்ச்சி
யுற்றதனி லிடுஞ்சரக்குச் சீரகமு மிரண்டே (ருர்0)

சீரகமோ தகமிளகு கராம்பினொடு கோட்டந்
திப்பிலிமா மதுரமில வங்கமது மாயாத்
தூர்செறிசிற் றரத்தைவசம் பீருள்ளி கடுக்காய்
தூயகைப்புச் சாதிக்காய் செவ்வள்ளி நெல்லி
நீர்செறியுங் கொத்தமல்லி செஞ்சந்தம் விடயந்
நேராக வொருகழஞ்சு பொடித்தபொடி தூவி
நேரவடித் தேயருந்திப் பூசிவரு வீரே
னில்லாதுள் ளுரோகமிவை நிச்சயந்தா னாமே. (ருர்க)

**ஈருள்ளிநெய்.**

ஈருள்ளி தனிற்சாறு நானாழி சங்கி
னிலைச்சாறு வல்லாரல் கர்ப்பூர வள்ளி
நீர்வள்ளி யிவைசாறு வகைக்கிரண்டு நாழி
நேரியபொன் னாங்காணி தூதுவளை குன்றி
சீர்கொள்ளு மிவைவகைக்கு நாழியொன்று சாறு
செப்பியகாக் கணங்கோவை கரியகாக் கணத்தின்
பேர்கொள்ளு மிலைச்சாறொன் றோடுகால் கோவின்
பீருமற்றை நெய்யுமிரு நாழிவகை கூட்டே. (ருர்ர)

கன்முரிசு களப்பன்னை செங்கத் தாரி
கான்றையிரு முட்டிகறுக் காய்நன் னாரி
வன்மைபெறு மிருவேலி யியங்கு தூது
வளையிலா மிச்சினொடு குதிரை வாலி
நன்மைபெறு ¶விசலிகையு மிவைவே ருள்ளி
நற்கடுக்காய் சுக்கமரர் தாரு கோட்டம்
தன்மைபெறு வெளுத்தனறும் பிசினி னோடு
தருகடுகு ரோகணியுஞ் சிவந்த சந்தம் (ருர்கூ)

கோவின்பீர் - பசுப்பால். ¶விசலிகை – கொடிமல்லிகை.

பூவிருக்குஞ் சிறுநாக மலர்செவ் வள்ளி
புகல்கணித வேதியிவை கழஞ்சி ரண்டாய்க்
கோவிருக்கும் ரோசிளைக்குங் குமப்பூ வொன்று
கொள்கழஞ்சு மெழுகுபதந் தனில்வ டித்து
நோவிருக்குஞ் சிறுமதலைக் கூட்டமுன்னே
நுவன்றவுள்ளு ரோகமொடு கணைகண் மாந்தம்
தேவிருக்குங் கதிரைமலை முதல்வன் பாதஞ்
சேருமருந் தவர்வினைபோற் றீர்ந்து போமே. (ரு௲ச)

**கோரோசனைக் குளிகை.**

கோரோ சனைபாற் கெருடபச்சை கூறுங் கன்னார் மாயாக்காய்
சீரார் கணித வேதியதுஞ் சிறக்க வோரொன் றொருகழஞ்சு
நீரார் சாதிக் காயுமரை நிகழக் கூட்டிச் செவ்விளநீர்ப்
பேரா மட்டை தனிற்சாறு பெருக விட்டே யரைத்திடுமே. (ரு௲ரு)

அரைத்தே பருத்தி விரையளவா யதனை யுருட்டி நிழலுலர்த்திப்
பருத்திப் பிஞ்சுத் தண்ணீரிற் பருக்க வுள்ளு ரோகமதில்
வருத்துங் கழிச்சன் மாறிவிடும் வந்த சுரத்துக் கிளவெந்நீர்
பருத்த கடுக்காய் நீரிலிடப் பாறு மிருமன் மலக்கட்டே. (ரு௲கூ)

**விஷக்கிரந்தியின்குணம்**

உருமிகுங் கனல்போற் காயு முண்முட்டா யனுங்கித் தொய்வாய்ச்
செருமிடும் வயிறு மூதித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
இருமிடுந் தலைக்குத் துண்டா மிரவினிற் கடினஞ் செய்யும்
பொருமிடும் விஷகி ரந்தி செய்குணம் புகலுங் காலே. (ரு௲எ)

## சிகிச்சை.

### குடிநீர்.

வல்லாரல் வள்ளிசிறு காஞ்சோன்றி பிரமி
வருமிருசீ ரகமேலந் திப்பிலிசெவ் வள்ளி
சொல்லாரு நாகையுள்ளி கொத்தமல்லி கடுக்காய்
தூயவதி மதுரமிவை சொன்னபடி யவித்தே
எல்லாரு நீர்க்குடிநீ ரந்திசந்தி குடிக்கி
லிடரான விஷகிரந்தி வெப்பிருமல் காய்ச்சல்
நில்லாது கதிரவன்முன் பனியதுவே போல
நீங்கியகன் றோடுமென நிகழ்த்துமரு மறையே. (ருர்அ)

### நெய்.

கோட்டமதி மதுரநெல்லிக் காயசம தாகங்
கொத்தமல்லி யிருசீரஞ் செஞ்சந்த மாயா
நாட்டமுறு நிலவினுப்பு மிளகுசிறு திப்பில்
நல்லகடுக் காயேலங் கராம்புமிகு சுக்கும்
ஈட்டுமதி விடயமில வங்கமொடு சாதி
யியல்பான செவ்வள்ளி யிவைசரக்கு நேராய்க்
கூட்டுசெங்கத் தாரிவட்டுத் தூதுவளை யிலைகாய்
குலப்பிரமி வல்லாரல் காஞ்சோன்றி முசுக்கை. (ருர்கூ)

கொண்டிவைத மிலைச்சாறு வேர்சரக்குச் சரியாய்க்
கோதினறு நெய்யதனை விட்டுமிகக் காய்ச்சிக்
கண்டநல்ல மெழுகுபத மதனில்வடித் தருந்திற்
கடியசுரம் விஷகிரந்தி கழிச்சலிவை யகலும்
உண்டிடுநற் கொதியெண்ணெய் சிரத்திலுறப் பொருத்தி
லுள்ளவிய லக்கரமு மோடியகன் றிடுமால்
விண்டுறுமா யுருவேதம் விளம்பியவிக் கிருதம்
விரும்பியருந் திடுகிலிவை விடுமதுகை கண்டோம். ()

### ஊதுரோகக்குணம்.

ஊதிடு முடம்பு காயு முடற்குலை கருகியாங்கே
வேதினை மிகவே யுண்டாய் வெந்திடும் வாயு நாவும்
தீதினை யூது ரோகஞ் செய்குண மிவையே யென்ப
வாதினை வரட்சி ரோக மதின்குணம் வகுக்க லுற்றாம். (ருகூக)

### வரட்சிரோகக்குணம்.

உடம்பது வரண்டு காயு முதரமு மெரிவுண் டாகும்
திடம்பெற மலமுஞ் சிக்குந் திட்டுத்திட் டெனவே முக்கும்
தடம்பெறு நாவும் பூத்துச் சளிசல மிரும லுண்டாம்
வடம்பெறு தனத்தாய் தீர வருமருந் துரைக்க லுற்றாம். (ருகூர)

### சிகிச்சை.

### வல்லாரை யேரண்டெண்ணெய்.

காணியுங் 0காளி யாரை கணைப்பூடு தகரை ¶பாசி
ஊணிய சாறு ழக்கோ டொக்கவே ரண்டத் தெண்ணெய்
தாணியுங் கடுக்கா யுள்ளி கராம்புநல் வசம்பு கோட்டம்
கேணிவெந் தயமு மேலங் கெருடபச் சையுமீ ருள்ளி. (ருகூகூ)

மதுரமிங் கிவைக ளெல்லாம் வகைக்கொரு கழஞ்சதாக
இதமுற விடித்த ரைத்தே யெண்ணெயிற் கலக்கிக் காய்ச்சிப்
பதமுற வடித்தருத்தப் பகர்ந்திடும் வரட்சி நாவிற்
கொதிதரு மூதுரோக மக்கரங் கணைகள் போமே. (ருகூச)

காணி பொன்னாங்காணி. 0காளி – மணித்தக்காளி
தகரை கையாந்தகரை. ¶பாசி பழம்பாசி
ஆரை வல்லாரை. கன்னி பிள்ளைக்கற்றாழை

## வில்வாதியேரண்டெண்ணெய்

வில்வமிலை யிற்சாறு துளசிச் சாறு
விட்டுணுவின் கிராந்தியுடன் பொன்னாங் காணி
வல்லதொரு நீர்வள்ளி பிரமி கன்னி
வகுத்திடுமீ ருள்ளிமணி சேர்தக் காளி
சொல்லியவெள் ளாட்டின்பா லேரண் டெண்ணெய்
சுகமாக வொருநாழி வகைக்குக் கூட்டி
நல்லவெள்ளைக் கெருடபச்சை கூகை நீறு
நயந்ததிரி கடுகுதிரி பலைநற் சீரம்.

சீர்செறியு மதிமதுரங் கராம்பு கோட்டஞ்
சேருங்கோ ரோசனையு மாயாக் காயும்
நீர்செறியு மேலமொடு குங்கு மப்பூ
நிகழ்த்துபதி னாறுமொரு கழஞ்சு வீதம்
ஏர்செறியும் பொடியாக்கித் தூவி வெய்யி
லின்முகத்தி னாண்மூன்று வைத்தெடுத்துப்
பேர்செறியு நான்காநா ளடுப்பி லேற்றிப்
பெட்புறவே மெழுகுபதம் வடித்துக் கொள்ளே (ருகூசா)

வடித்தவெண்ணெய் துட்டளவா யுள்ளே கொண்டு
மதித்துமேற் பூசிவர வுள்ளு ரோகம்
பிடித்துவரு மிருமல்சுரம் வரட்சி விக்கல்
பேசுசத்தி யுட்காந்த லுழலை தாபம்
வெடித்துவரு மத்திசுரங் கணையி னோடு
மேவுகின்ற வக்கரங்க ளான வெல்லாம்
துடித்துவரும் பசித்தோர்த முகம்பா ராமற்
றுய்க்குமவர் செல்வமெனத் தொலைந்து போமே. (ருகூஎ)

### நெய்

ஆலங் கொழுந்தி னிளந்துளிரு மரிய தென்னம் பூமதுரம்
கோல மிளகு சீரகமுங் கூட்டிப் பசுப்பால் வார்த்தரைத்துச்
சீல முடனே நறுநெய்யிற் றிரள வெந்து வடித்தருந்தப்
பாலே யனைய மொழிமடவீர் பருக்கும் பிள்ளை பகர்ந்தோமே. ()

### சுரசம்

†துடி ‡யட்டி சீரகங் கராம்புசாத் திரவேதி
சுத்தவெள் ளைக்கெருடனுந்
தூயமா யாக்காயி னோடுசிறு கீரைவேர்
சொல்லுவகை யெட்டு நேராய்க்
கொடிவிட்ட கோவைவிரி யீருள்ளி சாறுசரி
கொண்டரைத் தத்தண்ணீரிலே
கூசாம லிருபோது நாண்மூன்று முண்ணக்
கொடுத்துவிடின் மாறுபிணிகேள்
அடியுந்து மலசீத சோரிகுட லூதையும்
மதரநா விரிவுசுரமு
மழலுள்ளு ரோகமு மக்கரங் கணையினு
மரியபல நோய்களெல்லாம்
பொடிபடும் பத்தியங் கைப்புப் புளிப்பகல
புதல்வருக் கன்னைகாக்கப்
பொதியமலை முனிபகரு மறையிலுறை தெரிகவிஞர்
புகலவெகு புண்ணியமிதே. (ருகூகூ)

†துடி – ஏலம். ‡அட்டி – மதுரம்.

## கெந்ததாளிக்குணமும் சிகிச்சையும்

மதிநிகரு முகமானே கெந்த தாளி
வாய்சுணைத்துக் கொரள்ளுமிக மிடறு புண்ணாம்
கொதியுடனே யுடல்வெதும்பு முலையுண் ணாது
கோழைவிழும் வாய்நாறு மலமுந் தீயும்
அதுவிலகப் பழம்பாசி யீர வுள்ளி
யாரையிவை பிளிந்திடுசா றாட்டின் பாலும்
இதமுறுசீ ரகம்வெதுப்பிக் கலந்தே யூட்ட
வெண்ணுகெந்த தாளிவிரைந் தேகு மன்றே. (ருச0)

## கண்டுஷம்

பொருந்து மேல மாகிக்காய் புதிய கடுக்காய் குங்குமப்பூத்
திருந்து மாவின் சினையீர வுள்ளி நற்சீ ரகங்கூட்டி
வருங்கர்ப் பூர வள்ளியிலைச் சாற்றா லரைத்து வழித்தெடுத்த
மருந்தைநாவிற்றேய்த்திடுகில்வாயிற்சுணையும் புண்ணும்போம். ()

## வரட்சிக்கொதிப்பின் குணம்

கடுப்போ டிரத்தஞ் சீதமலங் கலந்து தானே கழிந்திருக்கும்
அடுக்கு மபானங் கீழ்வயிறு மதுதன் னுடனே சலங்கடுக்கும்
நடுக்குஞ் சுழற்சி தலைகனக்கு நயனந்தானு மஞ்சணிக்கும்
கொடுக்குமசனமுவாந்திக்குங்குடல்சேர்வரட்சிக் கொதிப்பாமே ()

## சிகிச்சை

### நெய்

முத்தற் காசு மலை தாங்கி முதிர்ந்த துத்தி நிலப்பனைவேர்
கைத்த காசுக் கட்டிநெல்லி கருங்குந் திருக்கஞ் சீரகமும்
சுத்தி மிகுநற் சாதிக்காய் துலங்கு மிலவம் பிசின் விடயம்
வைத்தேயெரித்துநெய்கொள்ளில்வரட்சிக்கொதிப் மாறிடுமே. ()

## மூலக்கொதிப்பின் குணம்

மூலங்கொதித்துக்கடுத்துளைந்துமுக்கிக்கழிந்து வெதுப்பலுண்டாய்க்
கோல வயிறு பொருமிநொந்து குமுறி யழுது வலித்தூதிப்
பால்போற் சியல்போற் பலவிதமாய்ப் பதறிக் கழிந்து சோகமிகும்
சால மூலக் கடுப்பென்று சாற்று மாயுண் மறைதெரிந்தே. (ருசச)

## சிகிச்சை

### நெய்

நாயுருவிச் சாறுடனே நாகையுள்ளி தன்சாறும்
ஏயுநறு நெய்கூட்டி யிசையவடித் தேயருந்தக்
காயுமமூ லக்கொதிப்புக் கடுப்புடனே கழிச்சலெலாம்
வாயுவெதிர் சருகெனவே வற்றியகன் றோடிடுமே. (ருசரு)

## வயிற்றுக்கடுப்பின் குணம்

இடுப்புக் கடுத்து வயிறுளைந்திட் டிளகிச் சீத மற்றிற்று
முடுக்கித்துயர முடன்மூலந் தோன்றி மலமுங் கழிந்திருக்கும்
அடுத்தோ ரன்ன மருவருக்கு மறவே யங்க மெலிந்துவரும்
தொடுக்கும் வயிற்றுக் கடுப்பென்று சொல்லுங் குணங்களிவையாமே()

## சிகிச்சை

### நெய்

பனிச்சை துத்தி மலைதாங்கி பகரும் வரட்புல் லாந்தியின்வேர்
முனித்த சுக்கோ டதிவிடய முதிருநற்சீ ரகமோமம்
தனித்த கைப்புக் குந்திருக்கந் தானே வகைக்குக் கழஞ்சாக
இனித்த நறுநெய் தனில்வடித்தே யிதமா யருந்தக் கடுப்பறுமே. (ருசஎ)

## குடிமருந்து

துத்தி யிலையும் விளாங்காயுந் துவைத்தே யெருமை மோரதனில்
வைத்து வடித்துக் குடித்துவரின் மாறும் வயிற்றுக் கடுப்புளைவு
முத்தே யன்ன விளாங்காயு முதிர்ந்த பழத்தேங் காய்ப்பாலும்
ஒத்தே வடித்துக் குடித்துவரி லோடும் வயிற்றுக் கடுப்புளைவே
(ருசஅ)

இலவம் பிசினும் விளாம்பிசினு மியல்பாம் வேலம் பிசினுடனே
நலமாய் நீர்விட் டவித்துவற்றி நாலொன் றாக்கி யசமோதம்
குலமா நற்சீ ரகம்விடயங் கூட்டி யெருமைத் தயிரதனிற்
திலமா யரைத்தே யருந்திவரிற் றீரும் வயிற்றுக் கடுப்புளைவே.
(ருசகூ)

கருவேம்பி னிலையிரச வாழைப்பூ விளாங்காய்
காய்க்கும்மா தளங்காயும் களிப்பாக்குக் கைப்புத்
தருநாவல் புல்லாந்தி யாலரசோ டத்தி
சாற்றியவே லம்பட்டை சமனிடித்தே யவித்து
வெருவாது வேர்க்கொம்பு நற்சீர மோமம்
விட்டவித்துக் குடித்துவரிற் கடுப்பிரத்தக் கழிச்சல்
சருவாது சீரகநெய் தானுமிக நன்றாஞ்
சாற்றெருமைத் தயிர்மோரும் பத்தியம தாமே. (ருரு0)

## வயிற்றுளைவின் குணம்

வருத்திடும் வெதுப்புங் காயும் வயிறுளைந் திடுந்தீன் செல்லா
துருத்திடு முறங்க வொட்டா துளமலங் கழிந்து சோரும்
பொருத்தெலாங்கழலும் புண்போற் பொறுக்கொணா நடுக்கங்கூதல்
பெருத்திடுங் கழிச்சல் சீதம் பெருவயிற் றுளைவி தாமே (ருருக)

## சிகிச்சை

### உணவுவகை.

வரகுசோ றுடனல் வெண்ணெய் வைத்தநீர்ச் சோறு மோரும்
தரமிகு மிரச வாழை தங்கிய கனியு நன்றாம்
புரமிகு முசுட்டைக் கீரை பொருந்திய கறியு நன்றாம்
உரமிகு மோருங் கூட்டி யுண்டிடி லுளைவு போமே (ருருர்)

### குடிநீர்

வெந்தயநற் சீரகமீ ருள்ளி யோமம்
விளங்குகடுக் காய்கடக சிங்கி யெல்லாம்
முந்தவொரு நிறையாக்கி யவித்துக் கொள்ளின்
முதிர்வயிற்றுக் கடுப்புளைவு சீத ரத்தம்
வந்தவரட் சிக்கொதிப்பு மாறிப் போகு
மலங்கழியப் பிரமியொடு கடுக்காய்நீரிற்
தந்திடுமா மணக்கினெண்ணெய் கூட்டிக் கொள்ளச்
சார்ந்தமலக் கட்டகலுங் கடுப்பும் போமே. (ருருகூ)

### வேறு

ஆனை கனிற்கண் ணெருபிடியு 0மசுரர் விரோதி யிளம்பிஞ்சும்
கானக் குதிரை மேற்புறணி கண்டர் வாயில் களிப்பாக்குத்
¶தாயைக் கொன்றான் சாற்றைவிட்டுத் தாகந் தணியக் கொள்வீரால்
மானைப் பொருதும் விழிமடவீர் வடுகுந் தழிழுங் குணமாமே.
(ருரச)

### கணை

கரிமுக னடியை வாழ்த்திக் கமலவா சனியைப் போற்றி
அரியசெந் தமிழ் னாலே யகத்திய முனிவன் சொன்ன
பெரியமா வியாதி யான பேசுமக் கணையின் றோக்ஷம்
தெரியவே புவியின் மீது செப்புவன் சிந்தை வைத்தே. (ருருரு)

சிந்தைவிட் டகலா முக்கட் டேவனை வணங்கிப் பாலர்
வந்தவோ ராண்டின் மேலாய் வருத்திடுங் கணையின் றோக்ஷம்
தந்திடு நரம்ப தெல்லாந் தாங்கியே யூனைப் பற்றி
உந்திடு மிரத்த மெல்லா மமுதென வுண்ணு மன்றே. (ருருசா)

என்றதோர் கணைக டாமு மிப்படி யெழுந்து பொங்கி
நின்றபேர் பதினெட் டுந்தா னிறைந்திடு மாண்டின் மேலாய்க்
கன்றிய பாலர் மெய்யிற் பன்னிரண் டாண்டு காறும்
நின்றிடு மென்று முன்னா ணிகழ்த்தினன் முனிவ னன்றே. (ருருஎ)

## கணை பதினெட்டின் பெயர்

உரமெனுங் கணைகண் முன்னோ ருரைத்தவா றுரைப்பக் கேண்மின்
சுரமெனுங் கணையு மொன்று தூங்குமக் கணையு மொன்று
நிரவிய மூல மிரத்த நீங்கரும் வரட்சிவெப்புக்
கருவுறு மனலன் வீங்கி கடியதோர் மஞ்ச ணீலன் (ருருஅ)

நீலமாங் கணையி னோடு நின்றிடு வெளுப்பு மாகும்
சாலவே சத்தி மேலுந் தப்பிலா மாந்த மேகம்
மேலதாம் வினைகள்போல மிகுந்திடுங் கழிச்சல் காசம்
ஆலாமா ரிரும லெய்ப்பு மாமிவை பதினெட் டாமே. (ருருகூ)

ஆனை தனிற்கண் - அத்திப்பிஞ்சு வடுகு – சீதம்
0அசுரர்விரோதியிளம்பிஞ்சு – வேலம்பிஞ்சு தமிழ் - இரத்தம்
குதிரைமேற்புறணி – மாம்பட்டை
கண்டர்வாயில் - காசுக்கட்டி ¶தாயைக்கொன்றான்சாறு
– வாழைப்பூச்சாறு

இச்செய்யுட்கள் இரண்டும் எல்லாப்பிரதிகளிலும் காணப்படுவனவாயினும் விரித்துக் கூறுமிடத்திற் பெயர்களும் முறையும் இதிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. எல்லாப்பிரதிகளுக்கும் இவ் வேறுபாடும் ஒத்தே-காரணம் விளங்கவில்லை.

## வாதகணையின் குணம்

நீறிடுஞ் சுரமென் மேலு நீரொடு மலமுஞ் சிக்கிக்
கூறிடுண் ணாக்குத் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணாய்
வேறுநீர்த் தாகந் தாபம் வெப்புறக் கழிச்ச லுண்டாம்
கூறிடுங் குணங்கள் வாத கணைக்குண மென்ன லாமே. (ருசா0)

## பித்தகணையின் குணம்

பித்த கணையின் குணந்தன்னைப் பேசக் கேளீர் பெய்வளையே
மெத்தப் பொசிப்பு வேண்டாது மேனி வெளுக்கும் வாய்கசக்கும்
குத்தி வயிறும் பொருமிவருங் குடலைப் புரட்டி யுவாந்திக்கும்
பத்தி வயிறுங் கழிந்திருக்கும் பரிந்தே யுடலுங் காய்ந்திடுமே. (ருசாக)

நாக்கடி பூத்து வாய்புண்ணாந் நல்லபிடரி தலைகாயும்
போக்குண் டாகும் வயிறதைக்கும் பொருமிக் கழியு நாவுலரும்
தூக்கும் போதி லரைகண்ணாய்ச் சுகமாய் நயனஞ் சிவந்திருக்கும்
மார்க்க முடனே பித்தகணை வருத்துங்குணங்க ளிவையாமே. (ருசார்)

## சிகிச்சை

### குடிநீர்

முத்தற் காசு வில்வமிலை முதியார்ர் கூந்தன் மாதளையும்
ஒத்த துளசி வல்லாரை யுடனே கொடுப்பை மருதந்தோல்
சித்த முடன்பொன் னாவிரையுஞ் சேரக் கூட்டிச் சீராக
நத்தைச் சூரி வேருடனே நன்றாய் வகைக்குப் பிடியாமே. (ருசாகூ)

பிடியே யேலஞ் சீரகமும் பெருத்த சிங்கி செண்பகப்பூப்
படியே கோட்ட மதிமதுரம் பண்பா ரிலாமிச் சிருவேலி
கடிதா யோரொன் றிருகழஞ்ச காய்ச்சிக் குறுக்கி யெட்டொன்றாய்க்
கொடுநீபித்தகணையெல்லாங்குடிபோமென்றுகூறினரே. (ருசாச)

**குடிநீர் - உ**

நவ்வற் பட்டை தூதுளம்வேர் நாடுந்துளசி வல்லாரை
செவ்வற் கதலிப் பூவிதழுஞ் சிறக்க முத்த மோரொன்று
கவ்வைப்படாதேயோர்பிடியாய்க் கலந்தேகாய்ச்சி யெட்டொன்றாய்த்
தவ்வில்சாதிக்காயுரைத்துத் தணியக் கொடுக்கிற் கணைபோமே.

**குடிநீர் - ங**

கொச்சங் காயு நன்னாரி கூறிய வாழைப் பூவிதழும்
மெச்சு மருதம் பட்டையுடன் மிகவேயீர வுள்ளியுமாம்
நச்சு நல்ல சீரகமு நவிலு மதுரஞ் சாதிக்காய்
வைச்சுக்குடிநீரெட்டொன்றாய்க் காய்ச்சி யெடுத்து வகைகேளே.

கேளீர் வெந்த நீரதனிற் கிளருஞ் சரக்கை யெடுத்தரைத்து
நாளே கலக்கித் தான்கொடுக்கி னடுக்குங் கணைநோய் கடுப்புளைவு
கோளே தீருமுண்மையிது குறித்துச் செய்ய வல்லீராய்
வாளே யனைய விழிமடவீர் வகுத்தா ராயுள் வேதியரே. (ருசாஎ)

அத்தியா லரசு மொட்டு மவற்றுடன் மருதம் பட்டை
பத்தியா யத்திப் பிஞ்சும் பருத்தியின் பிஞ்சுங் கூட்டி
நத்தமாஞ் சூரி வேரு நலமுடன் முத்தற் காசும்
சித்தியாம் பணப்புல்லொக்கச் சிறக்கநீ வறுத்து வையே (ருசாஅ)

வைத்ததோர் மருந்தி னோடு சீரகம் வருக ராம்பு
கைத்ததோர் விடயஞ் சாதிக் காயுட னுலுவா வோமம்
மெத்தெலாஞ் சமனாய்க் கூட்டி மேவநீ வறுத்துக் கொண்டு
சுத்திடு கிளியாக் கட்டிச் சுகம்பெறக் காய்ச்சிக் கொள்ளே (ருசாகூ)

## மாதளை நெய்.

மாதளை யிலையு மிளம்பிஞ்சும் வகைசே ரத்தி யால்மொட்டுத்
தூதுளை துளசி வல்லாரை துலங்கும் பருத்திப் பிஞ்சுடனே
சீதள மான பழம்பாசி சிறந்த கொடுப்பை முசுமுசுக்கை
தாதுளமற்றுநலக்கொவ்வைதண்ணீர் விட்டான் சாறுழக்கே (ருஎ0)

## கொச்சங்காய் - பாக்கங்காய்

உழக்கே வகைக்குச் சாறுசம னொக்க விடித்து வடிகொண்டு
வழக்கா மதுரஞ் சீரகமு மருவுந் திப்பிலி சாதிக்காய்
செழிக்கும் பத்திரி யேலமுடன் சேருங் கன்னார் கெருடபச்சை
விழிப்பாய் வகைக்குக்கழஞ்சுகொண்டுமேவுநறுநெய் யுரியாமே. ()

உரிதான் கூட்டி யெரியிட்டங் குடனே மெழுகு பதம்வடித்து
மருவர் நெய்யைக் காசிடையாய் வகுத்துக் கொடுக்கிற் சிவனருளால்
தெரிவாய் பலநோய் பித்தகணை தீரு முடலுந் தெளியும்பின்
சொரியாய்புதுநீர்செவித்துவிடிற்றுலங்கும் பிணியுந் தோன்றாதே()

## பொன்னாங்காணிநெய்.

பொன்னாங் காணி சிறுகீரை புகலுந்துளசி மாதளையும்
நன்னார் கூவிளை முசுமுசுக்கை நலமாங் கோவை வல்லாரை
சொன்னார் தாமரை சீந்திலுடன் றுலங்க வகைக்குச் சாறுழக்குப்
பன்னா வீர வுள்ளியது பகருஞ் சாக முழக்காமே. (ருஎகூ)

இருசீ ரேலஞ் சந்தனமு மிணங்குங் கராம்பு சாதிக்காய்
வருமோ தகமு மாயாக்காய் வளருங் கோட்டம் வசுவாசி
தருமே கன்னார் மதுரமுடன் சாத்திர வேதி சதகுப்பை
பொருமேநெல்லிப்பருப்பதுவும்போற்றிவகையோர்கழஞ்சு
கொள்ளே.

கொள்ளே நறுநெய் நாழியதிற் கூட்டுஞ் சாகத் தரைத்திட்டு
நள்ளே காய்ச்சி மெழுகுபத நன்றாய் வடித்துச் சீனியுமிட்
டுள்ளே காசி னிடைகொள்ள வோடும் பித்த கணையெல்லாம்
எள்ளார்பலநோய்வெதுப்புவிடுமிணங்கச்செய்வீர் பொரியோரே. ()

**சுரக்கணையின் குணம்.**

சுரமதிற் கணைக்கு ணங்கேள் சோர்வுடன் றேகம் வற்றும்
கரமொடு முகமுங் காலுங் கனத்துநீர் குளிர்ந்து காட்டும்
வரவர வெதும்புந் தேகம் பற்கடித் தலறுஞ் சற்றே
சிரமுழு திடிக்குங் கண்டஞ் சிக்கென விருமுந் தானே. (ருஎசா)

சுரந்தனிற் கணைவந் துற்றாற் றோன்றிடுங் குணங்கள் கேண்மின்
நிரந்ததோர் விலாவெ லும்பு நெருப்பெனக் கொதித்துக் காட்டும்
கரங்களுங் கால்க டாமுங் கணையெனத் திரண்டு நீளும்
உரங்கெடக் கெடுத்து முள்ளவூனையு முண்ணு மென்றார். (ருஎஎ)

**சிகிச்சை**

**குடிநீர்**

ஆடா தோடை தூதுவளை யளவர் சீலக் கூவிளைவேர்
தேடா ரியங்கு நன்னாரி சிறுகாஞ் சோன்றி முத்தமுடன்
நாடா விலந்தை சிற்றமட்டி நலமா நிலவே ரோரொன்று
வாடா தெடுத்தே யொருகழஞ்சு வகுத்த மருந்தின் வகைகேளே. ()

கேளாய் திப்பிலி செவ்வியமுங் கிளருந் திப்பிலி மூலமுடன்
நாளார் சீந்தில் சிறுதேக்கு நல்ல மதுர மிருசீரம்
வாளார் கொத்தம் பாலரிசி வளரும் வேம்பி னரிசியுடன்
தூளார்மிளகு நெற்பொரியுந் தொகுத்தே யெடுத்து நிறைகேளே.()

கூட்டி வகையொன் றொருகழஞ்சு குறிசே ருதக மாறுபடி
நாட்டி யெட்டொன் றாய்க்குறுக்கி நலமாய் நான்கு நாட்குடிக்கில்
வாட்ட மறவே சுரக்கணையும் மற்றும் பலநோ யுள்ளவெலாம்
காட்டில் விழுந்தே யோடிவிடுங் கருத்தாய் நெய்யும் வைத்திடுமே.()

## வாழைப்பூநெய்

காவுறு வாழை யின்பூக் கமுகின்பூத் தென்னம் பூவும்
தாவுதா மரையின் பூவுஞ் சதாவேரிக் கிழங்கின் சாறும்
கூவிளை கொடுப்பை யாரை கோவையி னிலையும் பாசி
மேவுற வகைக்குச் சாகம் விளங்கவொன் றுழக்காய்க் கூட்டே. ()

கூட்டியே யதனோ டொக்கக் கோவினெய் நாழி சேர்த்துப்
பாட்டியல் சாதிக் காயும் பத்திரி கராம்போ டேலம்
நாட்டிய மாயாக் காயம் வசுவாசி சாத்திர வேதி
காட்டிய மதுரஞ் சீரங் கல்லினார் கெருட பச்சை. (ருஅர்)

கடைமருந் திவையோ ரொன்று கழஞ்சிடை பொடித்துக் கொண்டே
அடைவுறு மீர வுள்ளி யதுதனிற் சாறு ழக்குத்
தடையற வார்த்துச் சொல்லுஞ் சரக்கினை யரைத்துக் காய்ச்சி
இடையொருகரண்டிகொள்ளவிரியுமேகணைநோயெல்லாம்.(ருஅகூ)

## அத்தி சுரக்கணையின்குணம்.

அத்தி சுரத்தில் வருங்கணைதா னதிக தாக முண்டாகி
மெத்த வெதும்புந் தேகமெலாம் மெலிந்தே யன்னம் வேண்டாது
சத்தி யெடுக்குந் தழற்சியுண்டாஞ் சன்ன விருமல் பெலவீனம்
பத்தி வயிறுங் கழிந்திருக்கும் பகுத்தே யறிந்து கொளநன்றே. ()

## சிகிச்சை

### குடிநீர்

தூதுளை கண்டங் காரி  சொறிகிழங் கதுவுந் தோடை
சீதளை யியங்கு மேனி சேரவோர் பிடியொவ் வொன்று
தீதக லிஞ்சி யுள்ளி கராம்புடன் றிரங்கன் மூலம்
தாதளையரத்தைசுக்குச் சரக்கிவை கழஞ்சொவ் வொன்றே.(ருஅரு)

கூட்டி யிடித்துப் பிட்டவியல் கூறாய் வெந்து பிழிந்துகொண்டு
வாட்டி யதனைக் குடித்திடுகின் மாறு மத்தி சுரக்கணைதான்
தேட்ட நறுநெய் தான்வைக்கச் செப்பு மருந்தின் வகையெல்லாம்
நாட்ட முடனே பொதியமுனி நவிலும் படிதா னினிக்கேளே. ()

### மேனிநெய்

அணிற்பிள்ளை யிரத்தத் தோடே யருமுய லிரத்தந் தானும்
துணிந்தநன் முயிற்று முட்டை துலங்கவே யொன்றாய்க் கூட்டி
மணித்தநல் லாட்டின் பாலும் வல்லாரை கொடுப்பைச் சாறும்
கணித்திடு மேனிச்சாறு மொருசரி கலந்து வையே. (ருஅள)

சொறிகிழங்கு – சிறுகாஞ்சோன்றிக்கிழங்கு திரங்கல் மூலம் - செவ்வியம்.

வைத்த மதுர மிருசீரம் வளருங் கராம்பு வான்மிளகு
மெய்த்த திரிகடு கேலமுடன் மேவு மரத்தை சதகுப்பை
நத்தும் வகையொன் றொருகழஞ்சு நறுநெய் யதுவு மொருநாழி
செய்த்த தேனு மோருழக்குத் திடமாய் விட்டுக் காய்ச்சுகவே. ()

காய்ச்சி யெடுத்துக் காசிடைகொள் காணா தத்தி சுரக்கணைபோம்
கூச்ச மறவே யுடலெரியுங் கொண்ட விரும லீழையும்போம்
வாய்ச்ச மருந்தே யிது செய்யின் மற்றும் பலநோய் மாறியிடும்
பேய்ச்சி முலையுண் டருண்மாயோன் மருக னருண்முன் நிருளெனவே

## வரட்கணையின்குணம்

வரண்ட கணையின் குணந்தன்னை வகுத்தே யுரைப்பன் மடமானே
திரண்டு வளரு முடம்பதனைச் சேதப் படவே தானுலர்த்திக்
கருண்டு நாவு முலர்ந்திருக்குங் கண்ணும் வெள்ளை விழிதனிலே
பரந்து பற்றுஞ் சிலாம்பதுபோற் பகற்போ மளவிற் றெரியாதே. ()

## வாலசந்திரக்கணையின்குணம்

வன்னமே புகலக் கேளாய் வாலசந் திரத்தின் செய்கை
முன்னமே வெதும்பிக் காய்ந்து முதுகின்றண் டெலும்பைச் சார்ந்து
மின்னெனு நயனந் தன்னில் மீன்சிலாம் பதுபோற் பற்றிப்
பின்னுமே கடுப்புச் சீதங் கழிந்துடல் வற்றுந் தானே. (ருகூக)

வற்றுமே தேக மெல்லாம் வயிறது பொருமுங் காயும்
முற்றுமே மூலந் தள்ளு முதுகின்றண் டெலும்பு காயும்
சுற்றுமே புறங்கால் கைகள் சூழ்ந்துதான் குளிர்ச்சி யுண்டாம்
பற்றுறு கழிப்புச் செய்து பகர்நெய்யுங் கொடுக்கிற் றீரும். (ருகூர)

### மகேந்திரக்கணையின்குணம்

மாதுகேண் மகேந்தி ரத்தால் வருத்திடுங் கணைக்கு ணங்கள்
சீதமே கழியும் பின்னைச் சிறந்துடல் வெதும்பிக் காயும்
நாதமாய் வரளு மேனி நயனத்தில் வரியு மீளும்
சாதமாய் நயனம் பாழாஞ் சடுதியிற் கழிப்புச் செய்யே. (ருசாகூ)

### இம்மூன்று கணைகட்கும் கழிப்பு.

பொரித்தரி யிளநீ ரப்பம் புகல்கரும் பிவையி னோடு
மருப்பொரி விளங்காய் தேங்காய் வகையவல் மலர்தாம் பூலம்
கருத்துடன் படைத்து வேழ முகன்கழல் பூசித் தேத்தி
விருப்பொடுகழிக்கின்மீளும்விளம்புநெய் கொடுத்தி டாயே.(ருகூச)

### மூன்றுகணைக்கும் நெய்

பிள்ளைப் பிணியின் வகைதீரப் பேசு நெய்யின் வகைகேளீர்
தள்ளா மருதம் பட்டையுடன் றளமாங் கூவிளை நன்னாரி
கள்ளார் கருவே லிலைபட்டை கருதுஞ் சிற்ற மட்டியின்வேர்
உள்ள படியே கொச்சங்கா யுவந்து வகைக்குப் பலமொன்றே. ()

ஒக்க விடித்தே யுதகமது பலமொவ் வொன்றுக் கிருநாழி
மெய்க்கக் காய்ச்சி யெட்டொன்றாய் மேவி யிறுத்து வடிகொண்டு
வைக்குந் துளசி கீழ்நெல்லி ‡வாரி மீட்டா னலக்கோவை
புக்குங் †கொடுப்பை வல்லாரை புகலு மவுரி பழம்பாசி. (ருகூசா)

கொச்சங்காய் - பீர்க்கங்காய் ‡ வாரிமீட்டா
ன் - சாத்தாவாரிக்கிழங்கு
0மிச்சு – லாமிச்சு †கொடுப்பை – பொன்னாங்காணி
திரிசாதி – ஏலம், கராம்பு, வசுவாசி.

பச்சை மருந்து வகையொன்று பகரிற் சாகம் படிகலாய்
மெச்சுங் கஷாய மதில்விட்டு மேவுங் கற்கந் திரிசாதி
வைச்ச மதுரங் கன்னாரும் வகைசேர் வேதி திப்பிலியும்
மிச்சு முடனே நற்சீர மிகாமே கழஞ்சொன் றிடைகூட்டே (ருகூஎ)

கூட்டி யரைத்துப் படிநெய்யிற் குணமாய் வெந்து மெழுகு பதம்
நாட்டி வடித்துக் காசிடைகொ ணவின்ற கணைகண் மூன்றுடனே
காட்டுங் கடுப்புப் பலரோகங் கடுகத் திரு முள்ளூலதால்
வாட்டும்வரட்சிவகைமாறிவலுக்குமுடம்பு மெனவுரைத்தார் (ருகூஅ)

## தூங்குகளையின் குணம்

தூங்கு கணையி னியல்பதனைக் கேண்மின் முனிவன் சொற்றபடி
ஆங்கு வெதும்பி யங்கத்தி லரைக்கு மேலே வெளுத்திருக்கும்
தீங்காய் வடிவு தனைக்கெடுத்துத் தியக்கஞ் செய்து தூங்குவிக்கும்
பாங்கார்குரலுந்தான்கன்றுமொழியுந்தவறும்பான்மையிதே (ருகூகூ)

## சிகிச்சை

### பிரமிநெய்

கண்ட சர்க்கரை விழாலரிசி கடுக்காய் மஞ்ச ளதனோடு
மண்டு நிலத்து வாகையின்வேர் மருவுந் திப்பிலி நெல்லிமுள்
சொண்ட விடையொன் றிருகழஞ்சு குளிர்ந்த பிரமிச் சாறுபடி
வண்டு பயிலு மலரளக மானே நறுநெய் படியொன்றே (கூ00)

விட்டே காய்ச்சி மெழுகுபத மேவ வடிகொண் டிருகழஞ்சு
கட்டா பேழு நாட்கொள்ளிற் கன்று மிடறுங் குயில்போலாம்
தொட்டேபத்துநாட்கொள்ளத் தோன்றாப் பொருளுந் தோன்றுவிக்கும்
முட்டநெய்தானொருமாதங்கொள்ளவுடம்புபொன்போலாம் (கூ0க)

## சிகிச்சை

## தாழைவிழுது நெய்

காராவி னெய் நாழி பானாழி தாழை தனிற்சாக மொருநாழியங்
கணிரலக்கோவையிலைவல்லாரையால்விழுது கடியதோர் முசுமுசுக்
பர்மீதிலேவளருங்கூவிளைதகரையாரை பழம்பாசி துளசிநெல்லி கை
பண்பானகீழ்நெல்லி வீராணிக் கிழங்குசுரை பரிவான விரிசிலையுமெ
எராரு மோரொன் றுழக்காக வேகொண்டினிதுபெற வைத்தபின்பு
வாராரு மேலமில வங்கநற் சீரகம் மதுரநற் கெருடபச்சை
மாலயந்தலையிரவுள்ளிகன்னாருடன்மாசியின்காய்வசம்பே (கூ0கூ)

கத்தியாங் கோட்டநற் செண்பகப் பூநெல்லி சுருதிசாத் திரவேதியும்
துய்யதிரி லகிரிகச் சோலமொ டிலாமிச்சு தொடுகூகை நிறுசினி
பத்திரியு டனேகோ ரோசனை யிவைபொன்று பகரைக் கழஞ்சதாகும்
பரிவா யிடித்ததூடுவிமேற் காய்ச்சியே பதமுற வடித்தநெய்யைப்

புத்தியுட னேயிரண்டுகாசளவு கொண்டிடிற்புகல்ணைகள் பதினெட்டுமே

பொருமலொடுமாந்தமும்மகரிநோ யக்கரம் போகுங் கிராணிவகையும்
சித்தியாமிருகவகை பாலரது சோகங்க டீகவென் றெண்ணி முன்னாட்
டென் பொதிய மலையிலுறு குறியமுனி யாராய்ந்து செப்பியமொ ழிப்படியதே

## அனற்கணையின் குணம்

மானே யனலின் கணைக்குணமு மியைந்த மருந்தும் வகுத்திடுவன்
ஊனே யெல்லாந் தானுண்டே யோரு நெஞ்சை யெடுத்தடிக்கும்
ஆனைபோன்ற வுடல்வற்று மசன மறுத்துத் தாகமிகும்
வானேய்மதியம்போலவெளுத்துவரிசேர்விழியும் பாழாமே (கூ0ரு)

†நலக்கோவை – கொல்லன்கோவை 0 தகரை – கற்றாமரை
(ததரம் என்பன மூவிரிசு – கையாந்தகரை கூமாலயம் -சந்தனம்

## சிகிச்சை

## சஞ்சீலி யெண்ணெய்

மஞ்சாருங் குழலாய்கேள் வல்லாரை பாசி
வருதுளசி தக்காளி யோடுமஞ்ச ணாத்தி
கஞ்சமிகு கற்றாழை பருத்திவரு பிஞ்சு
கருவேல்வெட் பூலாவுங் கர்ப்பூர வள்ளி
பஞ்சாரும் புள்ளடியந் தகரையொடு பிரமி
பண்புபெறு மிவைசாக மேரண்ட வெண்ணெய்
தஞ்சமுற வேயெல்லாஞ் சமனாகக் கூட்டிச்
சாற்றுமதி லினியமருந் தோடமுட னேலம்

ஏலங்கோட்ட மதிமதுர மிருசீ ரகமுஞ் சந்தனமும்
ஞாலம் புகலு முரோகணியு நல்ல நடுக்காய் மாயாக்காய்
மேலுங் கராம்பு †சாதிரண்டு வெள்வெங்காயங் கெருடபச்சை
‡கோல்கார் கன்னு ரீரவுள்ளி கூட்டி வடித்துக் கொள்வீரோ

கொண்டாலொழியுங் கணைச்சுரமுங் கொடிய விருமல் வயிற்றுளைவும்
உண்டா லிளைக்கு மிருமலுடனூதி மறியு நோயணைத்தும்
கண்டா விந்த வெண்ணையினுற் கடிதிற்றீர்ந்து போமெனவே
பண்டே யாயுண் மறைதெரிந்து பகர்ந்தான் மலையின் முனிவனுமே

பாசி - பழம்பாசி தக்காளி - மணித்தக்காளி,
சாதிரண்டு - சாதிக்காய், வசுவாசி கோல்கார் - கார்கோலரிசி

## வீங்குகணையின் குணம்

வீங்கு கணைதான் புதல்வர்க்கு மிகவே வந்தங் குதிக்குமெனில்
தாங்க நீரு மலமதுவுந் தானே யுடம்பு மிகவெளுக்கும்
ஏங்கித் தியங்கு மெந்நேர மெடுத்துக் குடிக்குந் தண்ணீரை
ஓங்கி வீங்கு முடம்பெல்லா முயிரை மயக்குங் கண்டாயே (கூ0கூ)

## சிகிச்சை

## எண்ணெய்

தென்னங் குரும்பை யதனுடனே சீரார் தகரை பழம்பாசி
மன்னுங் குமரி யாவரையு மஞ்ச ணாத்தி யிவையனை த்தும்
தன்னந் தனியே யொவ்வொன்றிற் பகர்ந்தா ருரியுங் கலந்ததற்பின்
பன்னும் பசுவின் மணக்கெண்ணெய் பகர்ந்தாருரியுங் கலந்தற்பின்
ஏலமோர் கழஞ்ச தாகு மிலவங்கப் பட்டை யிரட்டி
சீலமார் மதுரங் கோட்டஞ் சீரகங் கூட்டிக் கொண்டு
காலமே வடித்த வெண்ணெய் காசிடை கொள்வீ ராகில்
பாலகர் கணைக ளெட்டும் பாறுமென் றருளி னாரே (கூகக)

## வெளுப்புக்கணையின் குணம்

வெளுப்புக்கணைதான்மெய்கலந்தால்வெளுத்தே முகமு மிகவீங்கிக்
கழுத்துந்தேய்ந்து கண்வெளுத்துக் கருவிதளர்ந்தே மயக்கமுண்டாம்
பழுத்த பழம்போன் மிகவுலஉந்து பச்சை நரம்பு வயிறொட்டி
நழுக்குமுடலிற்சுரமுண்டாய் நயந்தே யசனஞ் செல்லாதே (கூகர்)

## சிகிச்சை

## நாயுருவிநெய்

நாயுருவி சிறுகீரை பொன்னாங் காணி
நற்சாறு நறுநெய்யுஞ் சமன தாக
மாயாக்காய் கெருடபச்சை யீர வுள்ளி
மஞ்சணற்சீ ரகமதுரங் கராம்போ டேலம்

ஆயுமிவை யிடித்தபொடி தூவிக் காய்ச்சி
யரும்பதத்தி லேவடித்துக் கொடுக்கும் போது
காயமதிற் கொண்டகணை பதினெட் டுக்குங்
கறியகத்திச் சாகம்பூக் கதலிக் காயே

## சத்திக்கணையின் குணம்

சத்தியாங் கணைவந் துற்றாற் சாற்றிய குணத்தைக் கேளாய்
வத்தியே யுடம்ப தெல்லா மாலையன் மருளுங்கண்ணும்
அத்தியைப் பற்றிக் காயு மரோசிப்பை மிகவுண் டாக்கும்
நித்திய மயக்க முண்டா நெடுமூச்சுத் தோன்றுமன்றே (கூகச)

## கணையவத்தை
## வாலசந்திரக்கயைில்
## அவத்தைக்குணம்

கண்டகன் ணீரும் பாயுங் கருதிடுந் தண்ணீர்த் தாகம்
விண்டதோர் குணமில் லாட்டன் மேவியே சிதறச செய்யும்
அண்டிடு வால சந்திரக் கணையுறு மனத்தை யிதாம்
மண்டிய வியாதி தீரா மரணம் மறிந்து கொள்ளே (கூகரு)

## மகேந்திரக்கணையில்
## அவத்தைக்குணம்

மகேந்திரக் கணைய வத்தைக் குணத்தினை வகுக்கக் கேளாய்
சகோதரன் வால சந்திரக் கணையுடன் றானே கூடி
அகோரமா யுடம்பு வற்றி யானதோர் வயிறுந் தள்ளி
விகாரமாய்க் கண்ம யங்கி விழியினீர் பாயு மன்றே

மாயுமே கடைக்கண் சண்டிற் பகர்ந்திடும் பிராலும் பற்றித்
தேயுமே பிரால்பொ ழிந்து சேர்கரு விழிர்கீ ழாக
மாயுமே பிறையைப் போல வளர்த்திடும் வெள்ளைச் சுக்கிரன்
ஏயமெ கறுத்தச் சுக்கிர னேரிடின மரணமாமே

## இரத்தக்கணையின் குணம்

காலும் வீங்கு முடல்வற்றுங் கடுப்போ டுதிரங் கலந்துவிழும்
மூலந் தள்ளு மேல்காயு முன்னே கைகால் கனப்பாகும்
மாலுங் கொள்ளு மிரத்தத்தில் வருத்துங்கணையின் குணமிதெனக்
கோல முடைய பண்டிதரே குறித்துச் செய்வீர் குணங்கண்டே ()

### சிகிச்சை

### மூலக்கடுப்பு வயிற்றில் வெக்கைக்கு நெய்

மாதாளையின் பிஞ்சினுடன் பருத்திப் பிஞ்சு
வகுத்தகுன்றி யிலைதுவைத்துப் பிழிந்த சாறு
கோதகற்றும் பசுவின்னெய் வகைக்கோர் நாழி
கூட்டிநல்ல மெழுகுபதம் வடித்துக் கொண்டு
சிதமுறு முன்னேலங் குலக்காய் சுக்குச்
செனனகரம் பழமதுரஞ் செண்ப கப்பூத்
தீதகற்றுங் கராம்பினோடு வெளுத்தன் மாயாச்
சேருங்கோ ரோசனையும் பொடித்துத் தூவே

தூவுநெய்யிற் காசினிடை யுள்ளே கொள்ளச்
சொன்மூலக் கடுப்புவெக்கை யக்க ரங்கள்
தாவிரத்தக் கணைதீருங் கடுப்பு நீங்கச்
சாற்றுமருந் தாவரையின் வேரு மற்றைக்
காவிலூறு மாதளையிற் பட்டை தானுங்
கலந்தரைத்தே யெலுமிச்சம் பழத்திற் சுட்டு
மேவுமதின் றோலுடனே யரைத்து மோரில்
வேகவைத்து வடிகட்டிக் கொடுக்கப் போமே

## கணைபதினெட்டுக்கும்

## பொதுச்சிகிச்சை

பொன்னாங் காணி சிற்றமட்டி புகனன் னாரி யுஞ்சிவந்த
பொன்னி னெருஞ்சி யிவைவேர்கன் பொருந்துஞ் சிறிய புள்ளடியும்
மன்னும் பிரமி வல்லாரல் வகுத்த கருவே றனிற்பட்டை
பின்னுமகத்தியதும்பட்டை பேணிச் சமனாக் கொள்ளுகவே(கர்க)

ஏயு மிவைக ளிடித்தரைத்தே யீருள் ளியிற்சா றுரிகூட்டி
ஆயுஞ் சிறிய வேரண்ட வெண்ணெ யதுவோர் நாழிவிட்டுச்
சாயுமிருசி ரகமுலுவாச் சாதிக் காயு மதிமதுரம்
பாயுங்கழஞ்சுநாலரைத்துப்பகருமெண்ணெய்தனிற்கலந்தே (கர்ர்)

கலந்து பசுவின் சாணியெனக் காணும் பதத்திற் காய்ச்சியபின்
மலர்ந்த வெயிலி னாண்மூன்று வைத்தே யெடுத்துப் பின்காய்ச்சி
இலங்கு மெழுகு பதந்தன்னி லிறக்கி வடித்துக் கொள்ளும்போ
தலர்ந்த விழிசேர் மடமயிலே யருமெள் ளெண்ணெய்
முலைப்பாலும்

அவையோர் நாழி கிளுவையினிற் பட்டை வசப்பு பெருங்காயம்
நவைதீ ருள்ளி பிநாறி நலஞ்சேர் கோட்ட மலற்றுடனே
குவைசேர் புறத்துப் பாலாமை கொள்ளு நெஞ்சி னெலும்பதுவும்
தவறாதரைத்துமெழுகுபதந் தன்னில் வடித்துத் தலைக்குவையே()

வைத்து மேலும் பூசிமுதல் வகுத்த வெண்ணெ யுள்ளுக்கு
நந்தி யொருநாள் விட்டொருநா ணாடிக் குடித்து நலநாளில்
வைத்த வெண்ணெய் தனைக்கழற்றி வரவே கணைகள் பதினெட்டும்
ஒத்தகணையிற்காய்ச்சல்வயிற்றூதல்கழிச்சலுடன் மெலிவு(கூர்ரு)

வீக்கம் பழுப்பு நெஞ்சிடிப்பு விட்டுப்போகும் பூசினியில்
ஆக்குநெய்யுங் கணையெண்ணே யதுவு நன்றாம் பலபிணியும்
தீர்க்கு முடலுந் தெளிவாகுங் தேர்ந்தே யுரைத்த தமிழ்முனிவன்
வாக்கின் படியே மாறின்றிச் செய்க வலிதாம் பண்டிதரே (கூர்கூ)

**பூசினிநெய்**

பூசினிக் காயின் சாறு புகலுநீர் விட்டான் சாறு
மாசறு மிளநீர் பானெய் வகைக்கொரு நாழி யாகத்
தேசுறு கூவி ளத்திற் செழுப்பிசி னிலகு தன்னில்
வீசுறு பிசினி னோடு விளாம்பிசின் மாம்பருப்பே (கர்எ)

கோட்ட மேல மிலவங்கங் கூறும் வெட்டி யிலாமிச்சு
நாட்டு மதுரஞ் செண்பகப்பூ நலஞ்சேர் பச்சை கெருடபச்சை
கூட்டு மூமாரந் திப்பிலியுங் குலவுங் கராம்பு மிருசீரம்
ஈட்டும்வகைக்கோர்கழஞ்சுகொண்டே யிடித்துக்கரைத்து மெழுகுபதம்

தன்னில் வடித்துக் காசினிடை தானே கொடுத்து வரக்கணையின்
மன்னுங் காய்ச்ச லுட்சுரமு மாறா விரும லுடல் வெதுப்பும்
இன்னும் பலநோய் களுமாறி யினிதா யுடலும் பூரிக்கும்
துன்னும்பெரியவாயுண்மறைதுணிந்தேயுரைத்த படியாமே (கர்கூ)

**கணையெண்ணெய்**

கூவிளையி னிலைச்சாறு மால்காந்தி துளசி
குமரியீ ருள்ளியொடு நீர்வள்ளி பிரமி
காவிலுறு தக்காளி யிவைசாறு தாமுங்
கணக்காக வொருநாழி யோரொன்று பின்னும்
பாவிலுறு மேரண்ட வெண்ணெயொரு நாழி
பயில்கின்ற வாடுதவு பாலுமிரு நாழி

கோவுதவு பாலுமிரு நாழியது கூட்டிக்
கூகைதகு நீற †ட்டி கோட்டமுட னோமம்

எலமொடு பலைமூன்று முக்கடுகு தாமு
மினிமைபெறு சீரகமு மேலங்க ராம்பு
பாலினுறு நற்கெருட பச்சைவரு மாவின்
பயில்சார மாசியுறு காயிவைக ழஞ்சாய்ச்
சீலமுட னேயுரலி லிட்டிடி பொடித்துச்
செப்பியவவ் வெண்ணெயினி லேவிசிறி வெய்யில்
நாலுவரு நாளளவில் வைத்தெடுபி னடுப்பி
னன்மெழுக தானபத நாடிவடித் திடுமே

வடித்தெடுத்த வெண்ணெய்தனைக் குழந்தை கட்கு
வகுத்தொருகா சிடைகொடுக்க வரட்சி காந்தல்
தொடுத்தகணை யத்திசுர மிருமல் விக்கல்
சொல்வெதுப்புப் பரிதாபஞ் சத்தி யோடே
அடுத்தவரு முழலையுட னெஞ்சி டிப்பு
மகலுமித பெரியவர்க டமக்கு மாகும்
படித்துவருந் தமிழுணர்ந்த மலைய மேலோன்
பகர்ந்தனனிவ் வண்ணமருட் பண்பி னாலே

**சஞ்சீவியாதி யேரண்டத்தைலம்**

உற்ற மாந்த கணந்தீர வுரைக்குஞ் சீந்தில் பரிவாலி
யுவந்தகொடுப்பை குருவிச்சீ ருள்ளி முசுக்கை யோரிதழும்
மற்றுந் தகரை பழம்பாசி வகுத்த பாலைக் கொடிகொத்தான்
மன்னுஞ் சிறிய புள்ளடியுங் கோவை கூத்தன் குதம்பையுமே

†அட்டி - மதுரம்

சொற்ற விவைகடனித்தனியே துவைத்துப் பிழிந்து படிகாலாய்ச்
சூழு மாவின் மணக்கெண்ணெ யதுவோர் படியுஞ் சூட்டியதில்
திற்றி யுதவாஞ் சாதிக்காய் செய்ய கடுக்காய் குங்குமப்பூச்
சேருஞ் சாதி பத்திரியுங் கராம்பு கடுகு ரோகணியே (கசூசூ)

இவையோ டைந்து திரவியமு மேலம் பசுவின் ரோசினையு
மெடுத்து வகைக்குப் பலங்காலா யிடித்துத் தூவி யடுப்பேற்றி
நவைசே ராது மெழுகுபதந் தன்னிற் காய்ச்சி வடித்ததனி
னாடுங் காசி னிடைகொடுத்து வரவே தீரு நவின்றகணை
குவைசேர் நகிலத் துறுமமுதங் கொடுத்து வளர்க்கு மடநல்லார்
கொள்ள முணவு பத்தியமா யிருக்க வென்று குறிப்பித்தான்
சிவமே யன்றி யவமொன்றுஞ் சேராத் தவத்துக் முறுமுனிவன்
செப்புமருந்துநூன்முறையேதெளிதன்முறையாஞ் சேயிழையே

**மாதுளம்பழத்துநெய்**

தத்தவுக் கணைக ளெட்டுஞ் சன்னியக் கரமீ ராறும்
பித்தத்தி லுள்ள வான பிணிகளீ ராறு தாமும்
மற்றுள தோவி மேமு மாந்தத்தின் வாத மாறும்
உற்றிடு மிவைகட் கெல்லா முதவுமென் மருந்து மாதே (சூசூரு)

மாதளங் கனியும் சாறு மலைகள் குமரிச் சாறு
தூதுளங் கனியும் வில்வந் துளசிவே லிப்ப ருத்தி
ஈதுட வீரவுள்ளி யிடைசரி சாறு கொண்டு
நீதறு நறுநெய் நாழி சேர்த்துநற் கற்கஞ் சீரே

இச்செய்யுள் வேறு பிரதிகளிற் பல வேறுபாடுகளோடு காணப்படுகிறது. முதலாமடியில் "குமரிச்சாறு" என்பதற்குப்பதில் குமரிவேரும் என்றும், மூன்றாமடியில் "இடைசரிசாறுகொண்டு"

என்பதற்குப்பதில், இடைசரியாகக்கொண்டு என்றும் பாடமுண்டு வேறு பிரதியில் "தூதுளங்கனியும்" என்று தொடங்கும் இரண்டாமடிக்குப் பதில், "நீதமால் காந்திச்சாறு நிகழ்முசு முசுக்கைச்சாறு" என்றும், மற்றொரு பிரதியில் மேற்கூறிய இரண்டடிகளும் உள்ளனவாய் அச்செய்யுள் ஐந்தடிச் செய்யுளாயு முண்டு நன்கு விளங்கும் பொருட்டு மேற்படி செய்யுளை இதன்கீழ்த் தருகின்றோம்:-

மாதளங் கனியிற் சாறு மலையினிற் குமரிச் சாறு
தூதுளங் கனியும் வில்வந் துளசிவே லிப்ப ருத்தி
ஈதளை யீர வுள்ளி யிவைசரி சாறு கொண்டு
தீதறு நறுநெய் நாழி சேர்த்துநற் கற்கஞ் சீரே

சீரகஞ் சாதிக் காயுந் திப்பிலி யக்க றாவும்
நேரிய மதுரஞ் சந்த நிகழேலங் கணித வேதி
ஆரிய கெருட னோம மாவரந் துளிர்மா யாக்காய்
பாரிலீ சுரனார் மூலி பசுக்கோரோ சனைய தொன்றே (கூகூஎ)

ஒன்றதா யரைத்துச் சாற்று முறுநெய்யின் மருந்தீ ரேழும்
நன்றதாய்க் கலக்கி வெந்து நன்மெழு காம்ப தத்தில்
கன்றிய சிறுவர்க் கெல்லாங் காசிடை கொடுப்பீராகில்
என்று நோய் நீங்கி நன்றா யின்புடன் வாழு வாரே

### சுரம்

கார்பெறு கரிமு கத்துக் கடவுளை யடிவ ணங்கிச்
சீர்பெறு மருந்த வத்துக் குறிமுனி தெரித்துக் கூறும்
பேர்பெறு மருத்து நூலிற் பாலர்நோய் சுரத்தின் பேதம்
நேர்பெறு குணஞ்சி கிச்சை யறிந்தவா நிகழ்த்த லுற்றாம் (கூகூகூ)

### வைத்தியர் அறியவேண்டியன

சுரம்வரு நாளுங் கண்டு சுரத்தினி லேதுங் கண்டு
சுரமுறு தோவி மூன்றிற் றொந்திப்பு நிலையுங் கண்டு
சுரந்தனிற் குணமுங் கண்டு சுரம்விடுங் குறியுங் கண்டு
சுரமறு மருந்து செய்யச் சொற்றனர் முனிவ ரன்றே

தீதுறு பறவை யாதி சேர்சுர நிலையு ணர்ந்து
காதுமக் கரங்கண் மாந்தங் கடுமைசேர் தோஷி மோர்ந்து
வேதனை செயுங்கி ரந்தி வெப்புடன் கடுப்ப தெல்லாம்
சோதனை புரிந்து மற்றச் சுரமறி வதுநன் றாமே

அறியுமச் சுரத்தின் கோழை யடுத்திடு சுவாதந் தானும்
செறிவுறு சன்னி பாதஞ் சேருளை மாந்தை யாதி
குறியெலா மோர்ந்து ணர்ந்து கொண்டுபின் மருந்து செய்ய
நிறைதவ முனிவன் கூறு நேர்மையை யறிந்து கொள்ளே (கூசர்)

சலந்தனிற் பேதத் தோடு தாதுவி லுள்ள பேதம்
மலந்தனிற் பேத நாக்கில் வரிவிழி தம்மிற் பேதம்
குலந்தனி லுள்ள பேதக் குணமெலாந் தெளிந்தா ராய்ந்து
நிலந்தனின் மருந்து செய்ய நிறுவினர் முனிவ ரம்மா

உண்டிடு புசிப்பின் பேத முற்றிடு நாடி பேதம்
கொண்டிடு சுரத்திற் பேதங் கோள்களின் பேதா பேதம்
மிண்டிடு சன்னி தோஷம் விஷகலை நிற்கு மாறும்
கண்டுநன் மருந்து செய்யக் கடனதாம் பண்டி தர்க்கே

தெரிந்திடு சுரத்திற் கேற்ற சிகிச்சையை யுணரு ஞான்று
பொருந்திடுமருந்தி லுற்ற புரையறு சரக்க தெல்லாம்

தெரிந்துநோய்க் கேற்ற வண்ணங் கூட்டியுங் குறைத்துஞ் செய்வோர்
வருந்துநோய் நீக்கற் கேற்ற வைத்திய ராவ ரன்றே

வருந்திடு நோயை நீக்கிச் சுகத்தினை வளரச் செய்யும்
மருந்துதான் னோயுஞ் செய்யு மதுவன்றிக் கொலையுஞ் செய்யும்
தெரிந்துநன் மருந்து செய்யுந் திறமெலாந் தெளிந்தா ராய்ந்து
மருந்து நோய்க் கேற்ற வண்ண மாறின்றிச் செய்க மாதோ

**வாதசுரத்தின் குணம்**

வாத சுரத்தின் குணந்தனக்கு மயிரே சிலிர்க்க மிருமல்குளிர்
போத நடுக்குங் கீழ்முதுகு பொருத்துக் கைகா லுடனுளையும்
காதற் றண்ணீர் மிகுந்தருந்துங் கருதுந் தலைக்குத்துடனோவாம்
மீது தொப்பூழ் மலசலங்கண் மிகவுங் கடுக்குங் குலைப்பனுண்டே

**வாதபித்தசுரம்**

வாத பித்தங் கலந்தசுரம் வாய்கைத் திருக்குந் துவர்த்திருக்கும்
கூத லூண்டா மனலுண்டாங் குளிரும் விடாம லேவெதும்பும்
தாது செறியுங் குழன்மடவாய் சரீரமிகநோ முடம்புளையும்
மீதுவயிறுகழியுமுடல்விடம்போல்வெதும்புமுழலையுண்டே (௬௪அ)

**வாதசேற்பனசுரம்**

இருமித் தொய்வாய் நாவுலர்ந்தே யிறங்காதன்ன மருவருக்கும்
பொருமியுடல முட்குளிரும் பொருந்து மலமோ டுகிர்வெளிறும்
செருமும் பலகாற் கொட்டாவி தீரா வெதுப்பாய்ச் சிலுசி லுக்கும்
வருமே மயக்கந் தெளிவுண்டாம் வாத சேற்ப சுரகுணமே (௬௪௬)

### பித்தசுரம்

பித்த சுரத்தின் குணந்தனக்குப் பிதற்றுஞ் சிறுநீர் சிவந்திருக்கும்
மெத்த வெதும்பு நாவுலரு மிகுந்தே சத்தி யோகங்காளம்
நித்தங் கழியும் வாய்கைக்கு நிறையப் புண்ணாத் தாகமுண்டாம்
சித்தாய்மயக்கும்பித்தசுரஞ்செய்யுங் குணங்க ளிவையாமே(கூரு0)

பித்த சுரத்தின் குணங்கேளாய் பிதற்றிப் பேசும் வாய்வெருவும்
ஒத்த நயனஞ் சிவந்திருக்கு மூடே வயிறு கழிந்துவரும்
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பு நாவுந் தடுமாறும்
சத்தியெடுக்குமுகங்கறுக்குஞ் சலவாய் மிடறுபுண்ணாமே (கூருக)

### பித்தவாதசுரம்

அந்தப் பித்த மதுரவிரண்டும் வாத மொன்றுஞ் சுரமானால்
முந்தக் காயும் பொருமலுமா முடம்பு மிகவு மஞ்சணிக்கும்
நொந்தங்குளையுமுவாந்திசெயுநோக்கிற் கண்ணும் வெளுத்திருக்கும்
மந்தம் பற்று மூதைமிகும் வகுத்த குணங்க ளறிவீரே (கூருர)

### பித்தசிலேற்பனசுரம்

பித்தசேற் பனசு ரத்திற் குணந்தனைப் பேசக் கேண்மின்
புத்திமா றாட்டம் பண்ணும் புகைந்திடு மிரும மென்மேல்
சத்திடை விடாமற் சாயுஞ் சலமல மஞ்ச ணிக்கும்
நித்திரை தானும் வாரா வுழலையு நெருக்க மாமே (கூருகூ)

### சிலேற்பனசுரம்

சென்னிமிகக் கனத்திடித்துச் சீறிமுக முங்கனத்து
மின்னுமனல் போற்சுரமு மென்மேலு மேமுடுகி
மன்னுசிரத் துடதிக வலியிடிப்பு மேயாகும்
அன்னநடை மின்னேயீ தறிவைசேற் பனசுரமே

### சிலேற்பனபித்தசுரம்

செப்பாரு முலைமடவீர் சேற்பனத்திற் பித்தசுரம்
வெப்பாகும் வேவையுமாய் வெய்துறுநா வும்வெளுக்கும்
துப்பாதே யடைத்திருக்குந் தொண்டைகட்டி நாக்கறுக்கம்
ஒப்பாருஞ் சடைமுடியா னோதியவா யுண்மறையே

### சிலேற்பனவாசுரம்

உனைக் கபசுரத்தின் செய்கைதனை யோதிடுவன்
மோதித் தலைதுணுக்கு மோகித்து டன்விறைக்கும்
காதிற் திடுமிருமல் கரகரத்து மெய்குழையும்
பேதித் நூறுகுணங்கள் பேணீய றிந்துகொள்ளே

### பலசுரத்தின்குணம்

வாதபித்த சுரமாகிச் சேற்பசுர மாகி
மந்தபித்த சுரமாகித் தாகசுர மாகிச்
சிதமிகுங் குளிர்சுரமாய் முறைச்சுரமு மாகித்
தினச்சுரமாய் விடாச்சுரமாய் நானாளைச் சுரமாய்ப்
பேதமுற நீங்காமல் வெதும்பிமிக வேர்த்துப்
பிறங்காலு முகம்வயிறும் வீக்கமுள தாகும்
சேதமுறும் பலசுரத்திற் குரியகுண மிவையாய்ச்
செப்பினர்க வாயுண்மறை தெளிந்தபெரி யோரே

தினம்வெதும்பி முறைவெதும்பித் திரும்ப நானாட்
டீர்ந்துசின்னாள் வாராமன் மந்தம் பற்றிக்
கனம்வெதும்பி யுழலையுண்டாய்க் காய்ந்து விட்டே
கால்வீங்கி முகம்வீங்கி வயிறும் வீங்கி
முனம்வெதும்பி வாதபித்த சேற்ப மாகி
முழுக்கில்வந்து வெதும்பிமந்த பித்த மாகி

அனமிறங்கா துடல்வெளுக்குஞ் சோர்வுண் டாகு
மடுத்தபல சுரமெனவே யறையும் வேதம்

**பலசுரத்தில் அசாத்தியத்தின் குணம்**

தானேர் மந்தங் குளிர்தாகந் தலைநோ நடுக்குங் குலைப்பெய்தும்
வானேர் தருமுத் தோஷிமுண்டாம் வருத்த மிகுந்து வாய்வெருவும்
ஊனேர் புறந்தாண் முகம்வயிறு முடனே வீங்குந் தொய்வுண்டாம்
கானேர் குழலாய் பலசுரத்திற் கடின மீதுகண் டறிவீரே (கூருகூ)

**சிகிச்சை**

**பலசுரத்திற் குடிநீர்**

கண்டிடுங் குடிநீர் வட்டுக் கற்றாழஞ் சருகு கோரை
உண்டிடுங் கொட்டைப் பாக்கு முவந்தலா மிச்சின் வேரும்
மண்டுங் கடுக்காய் மல்லி திப்பிலி யசமதாகம்
மிண்டிடுஞ் சுக்குங் கூட்டி வெந்நீர் குடிக்கப் போமே

**குடிநீர்**

குடித்தபின் பற்ப டாகங் கோதறு கடுக்காய் சுக்குத்
தடுத்திடு கோரை வெட்டி தகுமிலா மிச்சின் வேருங்
அடுத்திடு வட்டி னோடே யருகில வேம்ப மல்லி
படித்திடு சீந்தில் சிற்ற மட்டிவேர் பகரு மோமம்

இவைசமன் குடிநீர் காய்ச்சிக் கொடுத்திட வேகு மின்னம்
நவைதரு சுரநீங் காதே னல்லவே லாதி மற்றும்
தவலரு மிருத்தியாதி சந்தனா திப்பேர் கொண்ட
நுவலரு மருந்தி லொன்றை யிட்டுண நொய்தி னேகும்

### பலசுரத்தில் வீக்கத்துக்குக்

### குடிநீர்

குடிக்குநீர் முள்ளிச் சாம்பல் குலவுநா யுருவிச் சாம்பல்
அடிப்புளிப் பொருக்குச் சாம்ப லாண்பனைப் பாளைச் சாம்பல்
துடிப்பல நிறையாய்க் கொண்டு தூணிநி ரவித்துட் கொள்ளில்
தடிப்புள வீக்க முட்டுப் பலசுரந் தணிந்த போமே (சுகசு)

### குடிநீர்

தணித்திடுங் குடிநீர் முள்ளி தளிக்கையாந் தகரை சோரை
பணித்திடுஞ் சிறுகாஞ் சோன்றி பற்படா கங்கீழ் நெல்லி
துணித்திடும் பிரமிநீற்றுப் பூசினி சுரைத்தண் டோடு
கணித்திடு நிலத்திற் பாகல் கடியபேய்ப் புடோலே குப்பி

ஒன்றிடும் வேர்க்கொம் பெல்லா மொருநிறை யிடித்து வித்து
நின்றிடுங் குடிநீ ரந்தி சந்தியாய் நிதானங் கொள்ளில்
சென்றிடுஞ் சுரத்தில் வீக்கஞ் செப்பிய தாகங் கூதல்
கன்றிடுங் கதிர்முன் கண்ட பனியெனக் கலைந்து போமே

### முலைப்பாலெண்ணெய்

பொன்னார் பசுவின் பானாழி புகனல் லெண்ணெ யொருநாழி
மின்னார் முலைப்பா னானாழி விரும்பு மிளநி ரொருநாழி
நன்னார் முத்தஞ் சீதேவி நலஞ்சே ரிருவே விலாமிச்சுச்
சொன்னார் சிற்ற மட்டியுடன் றூய வமுக்கி ராய்வேரே

வேருடைய யரத்தை கோட்டம் வேர்க்கொம்ப தேவ தாரம்
சீருடை யகில்கச் சோலஞ் செவ்வள்ளி மாஞ்சி லேலம்
ஏருடை மதுரஞ் சாதி யிலவங்கஞ் சிறுநா கம்பூத்
தாருடைக் கடுகு ரோணி பச்சிலை சந்தங் குப்பை

ஏய்ந்திடு சரக்கும் வேரும் வகைக்கிரு கழஞ்ச தாக
ஆய்ந்திடு மமுக்கி ராய்வே ரையிரு கழஞ்சு சுக்கும்

**ஷூகுப்பி பீச்சளாத்தி**

ஒய்ந்திடா தரைத்தொன் றாக்கி யுடன்வடித் துடலிற் பூசச்
சாய்ந்திடுங் காய்ச்சல் குத்துத் தணிந்துட னகலுந் தானே

தானதைப் பொருத்திக் காய்ச்சிச் சாதித்துத் துடைத்துப் பூசில்
ஊனதிற் கோழை காச முடனிளைப் பிரும லீழை
ஆனதுஞ் சலம லங்க ளடைத்திட லதிக வீக்கம்
ஈனமார் நெஞ்சின் மார்பிற் குத்துட னிளகிப் போமே

**பலசுரத்திலெண்ணெய்**

பலசுரத்தி லெண்ணெய்வைக்கம் படியைக் கேண்மின்
பற்படக நன்னாரி முல்லை சீந்தில்
குலவியதோர் சிறுபீளை முத்தற் காசு
கூறுமிலா மிச்சுமிரு வேலி தானும்
நிலைமைபெறு மின்பூறல் பொன்னாங் காணி
நேடியிவை யோரளவாய் நிறுத்துக் கூட்டித்
திலதயில மொருநாழி துளசிச் சாறு
செப்பினரோ ரொநாழி தெரிந்து ளோரே

தெரிந்தரைக்கு மருந்துதிரி கடுகு கோட்டஞ்
சீரியரு மிருவர்திரி பலைவ சம்பு
பொருந்தியகற் கடகசிங்கி தேவ தாரம்
பொன்மெழுகு மதுரமுசிர் புகல்செவ் வள்ளி
திருந்தவிரு கழஞ்சுகொண்டே யரைத்தெண் ணெய்யிற்
சிறக்கவடித் துடலமெங்கும் சிரத்தும் வார்க்கில்

விருந்தினரைக் கண்டுகொடா னொழித்தல் போல
வீங்குசுரங் குளிர்தாகம் மெலிந்து போமே

## சுரத்தில் வீக்கத்துக்க

## மண்டூரப்பாகு

மெலிந்திடும் புளியி னிலைதனைப் பறித்து மிஞ்சிடக் காடிவார்த்
தவித்துப்
பொலிந்திடுமதனை மறுபடி துவைத்துப் பிழிந்துடன் வடித்தவந் நீரில்
மலிந்திடுங் கீச்சுக் கிட்டம் தெடுத்து மறுபடி நெருப்பெழக் காய்ச்சி
நலிந்திட வதையந் நீரினிற் போட்டு நல்லரை பொடியுட னரைத்தே

அரைத்ததிற் காந்த மிளகுசுக் குள்ளி யானநற் கடுகுடன் கடுக்காய்
உரைத்திடு முலுவாத்திப்பிலியோமமொன் றுமுக்கழஞ்சு
கொண்டரைத்தே
கரைத்திடுமுள்ளியொருபலநறுநெய்கதிக்கநற்குழம்பதாய் காய்ச்சிப்
பொருத்தமாயருந்திலிருமலெய்பபிளைப்புப்புகல்சுரவீக்கமும்போமே

## வாதரப்பன்சுரத்தின் குணம்

சுரத்துடன்வீக்கம்வெதுப்புடன் குலைப்புத்துயர் செயுநடுக்கடன் கூதல்
உரத்திடுந்தாக மிருமலுள் ளெரிவு முபாதியாய் முகம்வயி றதைக்கும்
பொருத்தமாரன்னமறந்தருங்களையாய்ப்பொருத்துடன்கால்கையிற்
பிடிக்கும்
வருத்தமாய் வீங்குஞ் சுரமிது வாத கரப்பனின் சுரமென வகுத்தார்

## சிகிச்சை

## முலைப்பாலெண்ணெய்

தார்செறிமங் கைமுலைப்பால் பசுப்பால் நாழி
தனியிளநீர் நல்லெண்ணெய் தானு நாழி
சீரிலா மிச்சையிரு வேலி கோரை

திகழுநன்னார் சீதேவி யமுக்கி ராய்வேர்
எர்நாகம் பூவிருசீர் கோட்ட மேல
மியல்பான கொத்மல்லி யிலவ மாஞ்சில்
பார்மதுரஞ் சதகுப்பை யொடுசெவ் வள்ளி
பகர்ந்திடுசந் தனஞ்சரக்கோர் நிறையாய்க் கொள்ளே

கொண்டுபி னரைத்திட் டூறிக் கோதற வடித்து வார்த்துக்
கண்டுட லெங்கும் பூசி முழுகவே காய்ச்சல் வீக்கம்
தண்டிடுங் குத்துத் தொய்வு தகுமுட லெரிவுட் காய்ச்சல்
மிணடிடா தகலு மென்று விளம்பிய தாயுள் வேதம் (கூஎகூ)

**பலவிலைக்குழம்பு**

வேர்தருநற் பிரமியுடன் பொன்னாங் காணி
விளம்பியவா டருந்தாத பாலை கையான்
பார்தருநா யுருவிகுப்பை மேனி வீழி
பகரீச்சங் குருகுநீர் முள்ளி வித்தும்
ஏர்தருவேர்க் கொம்புமிள குலுவா வுள்ளி
யிபல்கடுக்கா யறுபதுநற் கடுகு காந்தம்
சீர்தருசா திலிங்கமதி மதுரங் கோட்டஞ்
சீனக்கா ரங்கருஞ்சீர் திப்பிலிந் துப்பே

துப்பினரை பொடிவாசி கராம்புநற்சா திக்காய்
தூயசவர்க் காரம்பொரி காரநவச் சாரம்
தப்பில்லாக் கிடட்முட னெலுமிச்சம் புளியுந்
தநுகாம லெரித்துநல்ல குழம்ப துவாய்க் காய்ச்சி
ர்ப்பில்லா தந்திசந்தி யருந்தமிக நன்றா
முள்ளியுடன் முருங்கையிலைத் தண்ணீருங் கூட்டில்
வெப்பிலாச் சுரம்வீக்கந் தொய்வுடனே முட்டு
விட்டகலு மெனவாயுண் மறைவித்த தன்றே

### குடிநீர்

அன்றியும் பிரமி சுரைநில வாகை யடுத்தநா யுருவிகைத் தகரை
கன்றியமுருங்கைவீழிவல்லாரல்கடியவவ்விலொட்டியிங் கிவற்றோ
டொன்றிய வுள்ளி சுக்குடன் மிளகு முருங்கர பொடியுடன் கிட்டம்
சென்றிடுங் கடுக்காய் கடுகுரோ கணியுந் திப்பிலி சீரகஞ் சினம்

சீர்நவச் சார மோதக முலுவாச் செப்பிய வொருநிறைப் படியே
நேர்தர வவித்துக் குடித்திரு நேர நிதானமாய் வரவிடுஞ் சுரமும்
சோர்வறு வீக்க முட்டுடன் றொய்யு துடிப்புமெய் பிடித்தலு நடுக்கம்
தேர்வருங்கதிர்கண்டகன்றிடும்பனிபோற்றீர்ந்திடுமெனமறை யியம்பும்

### ஆமசுரத்தின்குணம்

கூறுமாம சுரந்தன்னிற் குணத்தைப் புகலி லுடம்புளையும்
சீறு மிருக்கும் பசியில்லைத் தினமு முறக்கந் தானுண்டாம்
வீறுசேரு முடனோவா மிகவும் வெதும்பா தொருசாமநீ
தோறும் வெதும்பி நடுங்கிடுமெய் சொல்லிற கால்கை தளர்ந்திடுமே

### சிகிச்சை

### குடிநீர்

இடுமே யிதற்குக் குடிநீர் தானிலங்கு கொன்றைத் தோல்சிவதை
கொடுமே கடுக்காய் களிப்பாக்குக் கொட்டைப் பாக்குக் கற்றாழை
வடுநீர்ச் சருகு மிவைதம்மில் வனதா னாழி வார்த்தூறி
அடுநீர்நாழியொன்றானாற்றிப்பிலிப் பொடியிட் டருந்துகவே (கூஅர்)

### குடிநீர்

அடுத்தங் கண்டங் கத்தரிவட் டதன்வேர் சிறிய காஞ்சோன்றி
திருத்தும் பேர மட்டியுடன் சிற்றா முட்டி கொத்மல்லி
விரும்புங் கருவேம் பினிற்றண்டும் வேர்க்கொம் புடனொன்
றொருகழஞ்சு
பொருந்தும் புனல்தா னிருநாழி புகட்டி யெட்டொன் றாக்கிடுமே

அக்கியருந் திப்பிலிமேற் பொடியிட்டே யருந்திடுகில்
தேக்கிவரு கதிரவன்முன் பனியெனவே திருமென்று
தூக்கியரு மறைமொழிந்த துணிபிதுகண் டஞ்சாமல்
நீக்கியிடு குடிநீரா னிச்சமயம்போ மாமசுரம்

### மந்தசுரத்தின் குணம்

அன்றிடு மந்த சுரம்வயி றூதி யதிகமாய் வெதும்பியுட் காயும்
ஒன்றிடும்வயிறுபுகைந்திடும் வலிக்கும் முழலையுந் தாகமு முண்டாம்
நின்றிடுங் கழியுந் தலைவலி கூதனெருப்பென வெதும்பியே காயும்
சென்றிடுஞ்சிலநாள்விடுஞ்சலஞ்சிவக்குஞ்சிரத்தினின்மயக்கமு
முண்டே

### சிகிச்சை

### குடிநீர்

உண்டிடுங் குடிநீ ருள்ளி யுவந்தநல் வசம்பு சுக்குக்
கொண்டிடுங் கருஞ்சீர் கொத்த மலிமிள குடன்க டுக்காய்
மிண்டிட வரிசி கூட்டி விட்டுறக் கருக்கி யொன்றாய்த்
தண்டுற வவித்துட் கொள்ளிற் றான்மந்த சுரம்போ மன்றே

### குடிநீர்

அன்றியுங் கடுக்காய் மூன்று மருமிள கொருக ழஞ்சும்
ஒன்றிய பிரமிதானு மொருபிடி நிதானங் கொண்டு
நன்றதா யவித்த தண்ணீர் நாலிரு நேரங் கொள்ளிற்
கன்றிய மந்த மோடு கடுஞ்சுரங் கலைந்து போமே

## நாலாம்நாள் மாறலுக்கு

### குடிநீர்

செப்பினர் நிலத்தின் வேம்பு சேர்ந்தபற் படாகஞ் சீந்தில்
தப்பிலா மலையின் வேலி சாற்றிடு வட்டத் துத்தி
ஒப்பிலாக் கண்டங் காலி யுவந்தபேய்ப் புடோல்வெட் பாலை
துப்பிலா மிச்சுக் கோட்டந் தூயவேப் பலகு திப்பில்

திப்பிலி மூலஞ் சுக்குச் சேர்ந்திடு மரத்தின் மஞ்சள்
பொற்புறு கடுகு ரோணி பொருந்ததி விடய மொன்றோர்
நிற்புறு கழஞ்சொன் றாக்கி நீரிலிட் டவித்துட் கொள்ளிற்
கொற்பெறு நாலா நாளைச் சுரமது தணிந்து போமே

### குடிநீர்

துணிந்திடுந்தோடமிலையொருபிடியுந்தூயவேர்க்கொம்பு நாற்கழஞ்சு
தணிந்திடுங் கொத்த மலியுடன் றிப்பில் தகுமுறை நீரினிற் காய்ச்சிப்
பணிந்திடு மந்தி சந்திமுன் பருகப் பறந்திடுந் தலைவலி காய்ச்சல்
அணிந்திடு நாலா முறைச்சுர மசலு மெனவரு மறைமொழிந்ததுவே

### மகாவற்சனாதிக்குடி நீர்

பற்படக மதிவிடய நிலவேம்பு கோட்டம்
பகருமிரு வேலிவேப் பலகுவெட் பாலை
சிற்பமுறு கடுகுரோ கணியிலா மிச்சுச்
சிறுமூல கத்தினோடு பேய்ப்புடோல் துத்தி
கற்பமுறு சீனமஞ்சள் சீந்தில் சுரர் காரு
கருமிளகு மாமேதை யிடவசுஞ்சீ வகமும்
பொற்பினுறு திப்பிலிந் துப்பினொடு சுக்குப்
போதமுறு சிறுவீடு கொள்ளுமிரு கொள்ளும்

கொள்ளுமிகு மேதையிவை யோடிராரு கழஞ்சாய்க்
கோலமிகு நீரதனை விட்டுட னவித்தே
உள்ளமிகு பேஉவற்ச னாகியிது தன்னை
யுண்டிடுகி லெச்சுரமு மோடிவிடு முண்மை
தள்ளமிரு நீர்சுரம் விடுத்தனையு முண்ணிற்
றங்கிவரு நாலுமுறை யிற்சுரமு மேகும்
துள்ளிவரு மாசுரந்து ணித்திடுகை யாலே
சொற்றனர்கள் மாவற்ச னாதியிது வென்றே

**சுரந்தெறுகுலிசம்**

வென்றிடும் வற்ச னாபம் விதித்தகன் மதநற் சூதம்
ஒன்றிய நெல்லிக் கெந்த முறுமனோ சிலையி னோடு
கன்றுபொன் னரியின் றாரங் கதிக்கவொன் றிருக ழஞ்சாய்
நின்றுகோ சலத்தி லூறி நிதானமாய் நஞ்சு வாங்கே

வாங்கியே மிளகு சுக்குத் திப்பிலி வகையோ ரொன்று
நீங்கிடா தொருக ழஞ்சு நேர்வாள மிருக ழஞ்சு
பாங்குறு பாகற் சாற்றி லரைத்துடன் பதனம் பண்ணித்
தேங்கிடக் குன்றி போலுந் தெளிந்தவேர்க் கொம்பு நீரில்

நீரினிற் கரைத்து நல்ல குளிகையை நிதான மாகச்
சீரினான் முறையிற் பேதி செய்திடக் கொடுப்பீ ராகில்
பாரினா னாளை மாறற் சுரமுதற் பறந்து போகும்
தேரினா னாளை மாறற் சுரந்தெறு குலிச மாமே

**வெருகெண்ணெய்**

வெருகங் கிழங்கு சமூலமுடன் வெட்டிப் பலமீராறிரண்டும்
பெருகுஞ் சிற்ற மட்டியின்வேர் பேசி ளிறையு மதினளவு

நெரிய விடித்து நாண்மூன்று நேரா யவித்துப் பிழிந்துவடித்
தருநீர் நாலு நாழியினி லளவா யெண்ணெ யிருநாழி

விட்டே மதுரஞ் சிறுதேக்கு மிகுந்த கடுகு ரோகணியும்
மட்டே யிலநதை மெழுகுடனே மருவுங் குரும்பை கழஞ்சொன்றாய்க்
கட்டே செங்கழு நீர்க்கிழங்கு கருநன் னாரி சீதேவி
பட்டே நல்ல சதனமும் பகரு மிலாமிச் சிருவேலி

வேலி யமுக்கி ராய்கோரை விரும்பி யோரொன் றொருபலமாய்ச்
சால வரைத்து விட்டூறித் தங்கி மறுநாண் மெழுகில் வடிக்
தாலு மொருகா சிடையெண்ணெ யமரப் பொருத்தி யுச்சிதனில்
சீலமிகும்வேர்க்கொம்பினினீர்திடமாய்க் குடித்துமூன்றாநாள் (௬௯அ)

மூன்று நாளுஞ் சிரம்வைத்து முற்றும் பூசி முழுகிவரில்
தோன்று நாலா முறைச்சுரங்க டுணிந்தே நாலு முழுக்கில்விடும்
சான்றோர் புகழும் வெருகெண்ணெய் தவறா திதுகை கண்டோநரம்
ஆன்ற வாயுண் மறையுரைத்த தறிந்து பேணிச் செய்வீரே (௬௯௯)

### பெரிய வெருகெண்ணெய்

வெருகங் கிழங்கு நூறுபலம் வெட்டி யிடித்துக் காடிவிட்டுப்
பெருக வவித்துப் பேரமட்டி பெருஞ்சா ரணைவேஉ குறிஞ்சாகம்
மருவுஞ் சிறிய காஞ்சோன்றி மலர்க்கூ விளைவே ரமுக்கிரவு
திருகாதோரொன் றொபலமாய்ச் சீவி யிடித்திட் டவித்துறி (எ00)
ஊறி யிருந்த கஷயமதி லொன்றாய் விட்டு வடித்த தனைக்
கூறா யாறு கொத்தளந்து குறிப்பா யெண்ணெய் முந்நாழி
பேறாய்விழாலிந்ததிவிடையஞ்சிறந்த விருதிப் பிலிமேதை (எ0க)

மேதை கடுகு வெட்பாலை மிகுமஞ் சிட்டி தேவதரு
கோதை யரத்தை பெருங்குரும்பை கொடுமுக் கடுகு முப்பழமும்

சூது முலையாய் பெருங்குரும்பை தூய சிறுதெக் குடனுள்ளி
ஒதை யிடவகஞ் சீவகமு முறுகவர்க் காரஞ் சதகுப்பை (எ0ர்)

குப்பை நிகருங் கச்சொலங் கொடுமா மஞ்சள் பச்சிலையும்
செப்ப முறவே முக்கழஞ்சு தேடி யரைத்து வடித்த வெண்ணெய்
வெப்பை யறவே சிரத்தில்லைத்து மேலும் பூசி முழுகிவரில்
தப்பா தோடும் விடசுரமுந் தரிக்கு நாலா முறைச்சுரமும் (எ0சூ)

### கட்டுமருந்தும் செவியிற்பிழியவும்

தயிர்வளை வெள்ளை யுள்ளி தட்டியே நாடி பார்க்கும்
செயிரறு நரம்பிற் கட்டந் தீருநா ணாளை மாறல்
வயிரநன் மிளகோ டுள்ளி வருந்தயர் வளையி னோடு
பெயருறத் தட்டிக் காதிற் பிழிந்திடச் சுரங்கன் போமே (எ0ர்)

### விட்டாச்சுரத்தின் குணம்

காய்ந்திடுந் தலைக்குத் துண்டாங் கடினமாய்ச் சரீர நொந்து
சாய்ந்திடுந் தணிந்து காயுஞ் சற்றுநா வரட்சி யுண்டாம்
ஒய்ந்திடும் விடாம னின்றே யுள்வெப்பா யனலாய்க் காயும்
ஏய்ந்திடும் விடாச்சு ரத்தின் குணமிதென் றறிந்து கொள்ளே (எ0ரு)

### சிகிச்சை

### குடிநீர்

கொண்டிடுங் குடிநீர் வட்டுக் குறித்திடும் பேர மட்டி
மிண்டிடும் வேர்க்கொம் போடு விட்டுநீ ரவித்துக் கொள்ளில்
அண்டிடும் விடாச்சு ரங்க ளகன்றிடு மாடா தோடை
கண்டிடுந் திப்பில் சுக்கு மலித்துண்ணக் கலைந்து போமே

கலைந்திடுங் கடுக்காய் சுக்குக் கடிய பேய்ப் புடோலுங் கூட்டி
உலைந்திடுங் வவித்து நன்றா யுறுகுடி நீருட் கொள்ளில்
அலைந்திபா வுட்சு ரங்க ளகன்றிடு முண்மை யாகப்
பலந்தரு சுக்கு நீரை யுண்கிலும் பாறு மன்றே

**அத்திசுரத்தின் குணம்**

அத்தி சுரத்தின் கணங்கேளீ ரழல்போல் வெதும்புங் கண்சிவக்கும்
புத்தி தளரு நெஞ்சுளையும் புறநீர் தானுஞ் சிவந்திருக்கும்
மெத்த மயக்கும் பேசாது மிகவு முறக்கந் தானில்லை
வத்தி யிருக்கும் வயிறழியு மரண மிதற்குத் தப்பாதே (எ0அ)

தப்பா தகலு மத்திசுரந் தன்னைக் கெளு முடனடுக்கும்
வெப்பா ருழலை யுடனுண்டாம் விடம்போற் றாகமடங்காது
மெய்ப்பா யுறங்கா மயக்கமுறு மிகவும் வெதும்பு மனல்போலத்
துப்பாரத்திசுரமிதெனச்சொன்னார்சுருதித்துணியுணர்தோர் (எ0கூ)

**சிகிச்சை**

**குடிநீர்**

உணர்ந்தோ ருரைத்தா ரதிமதுர முறுபற் படாக மிலாமிச்சுக்
கணந்நீர் முத்தற் காசுடனே கடிய வேர்க்கொம் பிருவேலி
குணஞ்சேர் கோட்ட மசமோதங் கூடும் பங்கம் பாளையுடன்
மணஞ்சேர் குடிநீர் சஉக்கரையிட் டருந்த மாறு மத்திசுரம் (எக0)

**உட்சுரத்தின் குணம்**

உள்ளே வெதும்பியனுங்கு முட்டா யுடம்பு கனத்துத்தலை நோவாய்க்
கொள்ளா துறக்கம் வயிறூதிக் கூதன் மிகுந்து தாகித்துத்
தள்ளாந டுக்கந் திமிருளைவு தணியா வயிற்றி னடுவேநோம்
துள்ளாவிதுவுட்சுரமெனவேசொன்னா ராயுண் மறையுணர்ந்தோர்

## சிகிச்சை

### குடிநீர்

உணர்ந்தே யுள்ளி சுக்குடனே யுரிய வசம்புங் கடுக்காயும்
தணந்தே சருக்கி யெட்டொன்றாய்த் தானே யவித்துக் குடித்துவரில்
குணந்தான்வருமுட்சுரமெனவேகுறித்தார்வேர்க்கொம்புடன்வசம்
கணந்தா னவித்துக் குடித்துவரிற் கடிதாயேகு முட்சுரமே (எகர்)

அன்றியுங் கடுக்காய் வேர்க்கொம் பரியபற் படாகஞ் சீந்தில்
வென்றிடுஞ் சிற்றா முட்டி விட்டுணு கிராந்தி நாரி
ஒன்றிய வசம்பு சுட்ட கரியுட னுவந்தெட் டொன்றாய்
நன்றிசேர் குடிநீர் கொள்ள நணுகுமுட் சுரம்போ மன்றே

சுரமது நீங்கா தாகிற் சொற்றவே லாதி மற்றும்
வரமுறு சந்த னாதி வகுத்தநன் மிரத்தி யாதி
உரையுறு குளிகை யொன்றை யுற்றநற் குடிநீர் தன்னில்
பருகிட நீங்கு மென்று தமிழ்முனி பகர்ந்த தாமே (எகச)

### கிரந்திவெப்புச் சுரத்தின்குணம்

சுரமிகக் கொதித்துக் காயுந் துயர்செயுந் தலைக்குத் துண்டாம்
உரமிகுங் கனல்போன் மேனி யெரிந்திடு முவாந்தி செய்யும்
இரவினி லிருமித் தொய்வா யிருந்திடுங் களையுண் டாக்கும்
தரமுறு கிரந்தி வெப்புச் செய்குண மவிய லுண்டெ (எகரு)

## சிகிச்சை

### குடிநீர்

உண்டொரு குடிநீர் தான்வட் டுரியதூதுளைநன் னாரி
கொண்டிடுங் கண்டங் கால் கோதிலா விருசீர் கோட்டம்
மிண்டிடு மசம தாகந் திப்பிலி மிளகு கூட்டிக்
கண்டிடுங் குடிநீ ருண்ணக் கலைந்திடுங் கிரந்தி வெப்பே (எகசு)

### நீர்த்தோஷசுரத்தின் குணம்

வெப்புட னிருமல் கூதல் மிகுத்திடுந் தலைநோக் காய்ச்சல்
அப்பினிற் றாக மிஞ்சி யதிகமாய்ப் பிடரி வாங்கும்
செப்பிடி னாடி நோவாந் தீன்மறந் துளைந்து குத்தும்
தப்பிடு முழுக்கிற் றோன்றுஞ் சுரமெனச் சாற்றி னாரே

### சிகிச்சை

சாற்றினா ரரிசி தன்னிற் றலையணைச் சயனம் பண்ணி
மாற்றிடு மிளகு நொச்சித் துளிர்தனைக் கருக்கி மத்தித்
தீற்றினின் மிளகு வேதி லிளகிடுஞ் சுக்கு நீரும்
போற்றினர் குடிக்கிற் றோகூஷ சுரம்பொடி பட்டுப் போமே

### அவசுரத்தின்குணம்

அறிந்திடு முணர்வு தான்கெட் டயர்வொடு மயக்கி வேர்க்கும்
பிறிந்திடாக் கழிச்சல் சோகம் பெருத்திடுஞ் சுரமுட் டாகம்
முறிந்திடா தலையைத்தூக்கி மொய்த்திடு மூட மாகும்
பறிந்திடா பேச்சு மூச்சும் பகரவ சுரமீ தாமே

### சிகிச்சை

சுரமிதென் றறிந்த போதே தூயமுக் கூட்டி லெண்ணெய்
சிரமிகப் பொருத்தி நன்றாய்ச் செப்பிய வாதம் பேணித்
தரமிகு மரிசி சுக்குத் தாமிவை வறுத்துக் கட்டி
உரமிகு குடிநீர் கொள்ளி லோடுமிக் குணங்கள் கரணே (எர்0)

### சன்னிசுரத்தின்குணம்

முன்னமடிக் கடிவெதும்பி நெஞ்சு காயு
முடுகவடிக் கடிகுளிர்ந்து வெதும்ப லுண்டாம்
சொன்னபித்த முடனரைக்கால் வாதஞ் சேரிற்

சொற்றழன்று நடுக்கமுறுந் துயரஞ் செய்யும்
பன்னுபல பேதமுறும் பேச்சுக் காட்டும்
பலபேத சுரமுகமு மெழிலுண் டாக்கும்
துன்னுசன்னி தோன்றுகுணச் சுரமீ தென்றே
சொற்றனர்முன் னாபுண்மறை துண்ந்து ளோரே

## சிகிச்சை

உள்ளசுர சன்னியெண்ணெய் முக்கூட் டெண்ணெ
யுடன் பொருத்திக் கொத்தமல்லி வேர்க்கொம் போடு
வெள்ளை யுள்ளி சீரகத்திப் பிலியுங் கூட்டி
மிடுக்காக நாலொன்று பவித்தெ டுத்துத்
தள்ளருமிக் குடிநீரைச் சற்றுச் சற்றே
தான்குடித்து வரவரவே சாய்க்கி னன்றாம்
எள்ளளவுங் கதித்துவரிற் றீரா தென்றே
பியம்பினா ராயுண்மறை பிசைத்து ளோரே

## பிரேமக சுரத்தின்குணம்

எரிந்திடுங் கனல்போற் காயு மேதமாய்ப் பிடிக்குங் கால்கை
பரிந்திடுங் கடுக்க நீரும் பகர்சலஞ் சியல்போன் மோர்போல்
சரிந்திடு மோங்கா ளிக்குஞ் சன்னிபோ னடுக்கிச் சோரும்
பிரிந்திடு நெடுநாணிற்கும் பிரமேக சுரமி தாமே

## சிகிச்சை

### குடிநீர்

இதற்கொரு குடிநீ ரிலைகுறிஞ் சாக மேதமின் மிளகொரு கழஞ்சு
பதக்கநீர் விட்டே பவித்ததைக் குடிக்கிற் பகர்ந்திடு சுரமது நீங்கும்
அதற்குமே னெடுநாட் காய்ந்திடிற் சுக்கு மடுத்தபற் படாகநா யுருவி
மதர்தலா மிச்சு வேரவித் தருந்தின் மாறிடு மேகத்தின் சுரமே ()

### சலக்கடுப்புச் சுரத்தின்புணம்

மெய்யினிற்குத்தியுளைந்திடுங்கடுக்கும்வெதும்பிடுநாரியிற் பிடிக்கும்
துய்யதோர் நெஞ்சு நொந்திடு மிருமுந் துயர்செயு மன்மு மிறங்கா
பையவேநடுக்கிக்கூதலு முண்டாம் பயம்வரு மயரில்வாய் வெருவும்
வெய்யதோர்சலக் கடுப்பினில் வருமிச்சுர மெனவிளம்பினர்மேலோர்

### சிகிச்சை

நொச்சியின் றுளிரு மிளகுமேயரைத்து துண்ணிதா யருந்திட மாறும்
மெச்சிய மிளகு கஞ்சியு நன்றா மிண்டினாற் சிறுகுறிஞ் சியினீர்
உச்சிதங் கஞ்சி காய்ச்சிநீ ரருந்தி லோடிடு மன்றியு முள்ளி
நிச்சயஞ் சுட்டுத் தின்றிடி லேகு நிகழ்சல்லக் கடுப்பினிற் சுரமே ()

### தடிமன் சுரத்தின்குணம்

கடுத்திடுந்தலைநேரம்மூக்கினீர்காய்ச்சல்கனத்துடன்மிடறு நாகழற்றும்
விடுத்திடுஞ்சரீரநொந்துடனெரியும்வெப்பதிது முகந்தலை யதைக்கும்
கொடுத்திடுமன்னங்குணத்தினிலிராது கோபித்தகண் ணுநீர் சொரியும்
அடுத்திடு நடுக்கங் கூதலு முண்டா மறிந்திடுந் தடிமனின் சுரமே
(எர்எ)

### சிகிச்சை

குணமதின் மிளகு பொடித்திடப் பண்ணிக் கோவின் பாற் கலசத
திற்றூவிக்
கணமதில் வேது விடில்விடுந் தடிமன் கஞ்சியில் வேதுநன்றாகும்
மணமுறு கோவை முருங்கையு நன்றாம் வருகருஞ் சீரகங் கட்டித்
துணையதின் மூக்கின் முகந்திட வேகுஞ் சொற்றிடுந் தடிமனின்
சுரமே

## கோழைச்சுரத்தின் குணம்

தார்செறி விலாவி னெஞ்சிற் றங்கிடு முலைமார் தன்னில்
சீர்தரக் குத்தி நெயந்து தியங்கிடக் குளிர்ந்து காயும்
ஏர்தருஞ் சாய்நே ரத்தி விருமிந் தொய்வுண் டாகும்
பார்தருங் கோழை தோன்றிப் பற்றிய சுரமி தாமே (எர்சூ)

## சிகிச்சை

சுரம்விடுஞ் சிற்ற மட்டி தூதுளை கண்டங் காலி
உரம்பெறு சிறுகு றிஞ்சி யுடனிலை யாடாதோடை
தரம்பெறு நிலக்கு மிழ்வேர் சாற்றிய வட்டுங் கூட்டித்
திரம்பெறு மிளகு சுக்குத் திப்பிலி கடுக்காய் கொள்ளே

கொண்டுசீ ரகமுங் கூட்டிக் குடிநீரை யவித்துட் கொள்ளில்
மிண்டிய கோழை மீதிற் சுரமது மீளுங் கண்டாய்
உண்டிடுஞ் சிற்ற மட்டிக் கஞ்சியு முவந்த தாகும்
பண்டுள தூதின் பாகு நெய்யுணப் பறந்து போமே

போமிதின் முக்கூட் டெண்ணெய் பொருத்திநற் சிரத்தில் வைத்துத்
தீமன்னு தூதி னெய்யுந் தின்றிடிற் சுரமுந் தீரும்
தாமின்ன முலைப்பாலெண்ணெய் பூசிடத் தணியுங்குத்துத்
தேமன்னு சீர கத்தி னெய்யுந்தின் றிடவே மாறும்

## அக்கரசுரத்தின் குணம்

மாற்றரு மிருமல் காய்ச்சல் வயிற்றுநோத் தலைநோக் கூதல்
சீற்றமாய்க் கஞ்சி தண்ணீர் தின்றிடா மயங்கிச் சோரும்
ஏற்றமாய்த் தொய்வுண் டாகி யிடரதாய்ப் பிதற்றிப் பேசும்
சாற்றருமவியலுண்டா மக்கர சுரத்தின் றன்மை

## சிகிச்சை

### குடிநீர்

சாற்றியகர்ப் பூரவள்ளி சிறியகாஞ் சோன்றி
தனிப்பிரமி வல்லார லதிமதுர மிளகு
போற்றியதிப் பிலிகடுக்கா யோமமுடன் கருஞ்சீர்
பொருந்தியிடு மீரவுள்ளி யவித்திடுநீர் குடிக்கில்
மாற்றருமக் கரமிருமல் சுரமுடலிற் புண்ணோ
மாறாத விஷகிரந்தி மாறியகன் றோடும்
ஏற்றமிகு தென்மலையி லிருந்தமிழ் முனிவ
னியம்பியவா யுண்மறையி லிசைத்தபடி யன்றே

### பறவைச்சுரத்தின்குணம்

அன்றருந் தலைக்குத் துண்டா யதிகமா யிருமி வேர்த்துச்
சென்றருந் தாக மிஞ்சித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
நின்றருங் கனவு காட்டு நித்தியம் மயக்கிச் சோரும்
துன்றரும் பறவைமீதிற் றோன்றிய சுரமி தாமே

சுரத்தினிற் பருவெ றிந்து தூயநா வரட்சி யுண்டாய்
உரத்திடுங் கடின மாகி யுவாதியா யறிவு கேடாய்ச்
சிரத்தினின் மயக்கி யேறித் திமிர்த்திடுங் கழிச்ச லுண்டாம்
மரத்தினிற் பறவை வெப்புச் சுரமிது வவல மாமே

### சிகிச்சை

ஆனமுக் கூட்டி லெண்ணெ யதுசுர சன்னி யெண்ணெய்
தானது சிரத்தில் வைத்துத் தணிக்குமக் கரத்தி னெய்யும்
தேன்றுளி பழவி யுள்ளே தின்றிடிற் பறவை வெப்பும்
உளன்மிகு மிருமல் தாக மொடுமென் றுரைத்தார் தானே

### முத்தோஷசுரத்தின்குணம்

சிரத்தினிற் கனத்து மிண்டித் திமிர்த்துவெப் பதிக மாகிச்
சுரத்துடன் குலைப்பன் கூதல் துயர்செயு நடுக்க முண்டாம்
உரத்திடு மந்த மாகு முபாதிக்குந் தாக முண்டாம்
அரத்தின்முத்தோஷவெப்புச் செய்குண மறைந்தா ரன்றே (எகூஅ)

அன்றியு மிருமித் தொய்வா மனலென வெரிவுண் டாகும்
நின்றிடும் வாத பித்த சேற்பன நிலைத்தொன் றாகி
வென்றிடுங் கழிச்சல் தாக மிகுந்திடி லதிக மாகிக்
கொன்றிடு முத்தோ வித்தின் சுரவெனக் கூறும் வேதம் (எகூகூ)

### சிகிச்சை

### குடிநீர்

ஆடா தோடை போமட்டி யடுத்த கண்டங் காலிபுடோல்
காடார் வட்டுப் பற்படகங் கடிய வரத்தை சிறு திப்பில்
கோடார் சுக்குக் கொத்தமல்லி குலவுஞ் சரக்கொன் றிருகழஞ்சாய்ப்
பீடார்நீர்விடடவித்துண்ணிற்பெருமுத் தோகூஷ சுரம்போமே(எச0)

போமே சுக்குப் பற்படகம் புதிய கடுக்காய் மிளகுள்ளி
தேமே வியதிப் பிலிகோட்டந் திகழு மல்லி பேரமட்டி
தூமே வியசீ ரகமரத்தை சுறுக்கா யோரொன் றிருகழஞ்சு
தாமேயவித்துக்குடித்துவரிற்றனிமுத் தோஷி சுரம்போமே (எசூக)

சுக்குடன் கொத்த மல்லி திப்பிலி தூய வாக்கித்
தொக்கவொவ் வொன்றி ரண்டு கழஞ்சினி னீரை விட்டு
மிக்கநா வொன்ற தாக்கி மெய்ப்படப் பருகு வீரேல்
தக்முத் தோகூஷ மன்றிச் சன்னியிற் சுரமும் போமே (எசர்)

## விடசுரத்தின்குணம்

துயர்மிகுவிடமாஞ்சுரந்தனிற்குணத்தைச்சொல்லுதுங்கையுடன் காலும்
அயர்வுறக் காயு நாமிக வாளு மடிக்கடி யமர்ந்திடுங் காயும்
பயமுறுந் தாயைக் கட்டிவிட் டுழலும் பலபல பேசிடு மயங்கும்
நயமிகத் தெளியுஞ் சந்துநோந் தலைநோ நாடியிக் குணம்பகுத்
தறியே

## சிகிச்சை

### குடிநீர்

ஏய்ந்திடு குடிநீர் சுக்குவெப் பந்தோ லிகைநில வேம்படன் சிந்தில்
ஆய்ந்திடு கடுக்கா யோடுபற் படாக படுத்தபேய்ப் புடோலுரு ளரிசி
சாய்ந்திடு மாடா தோடைவே ரிவைக டகுமிரு கழஞ்சிரு நாழி
பாய்திடு நீரி லிட்டுழக் காக்கிப் பருகிட விடசுரம் போமே (எசச)

போமினுஞ் சுக்குச் சந்தன மல்லி பொருந்துவெட் பாலையினரிசி
தாமினுஞ் சிந்தில் வாகைபற் படாகத் தகுமிலா மிச்சிரு வேலி
காமுறு முத்தற் காசிவை முன்போற் கருதியே யவித்திடு நீரில்
பூமலி வெள்ளைச் சர்க்கரை தூவிப் புகட்டி மினுங்கேள்

உற்றநன் மதுரஞ் சிறியகாஞ் சோன்றி யுவர்ந்தவெட் பாலையி னரிசி
துற்றுறு முத்தற் காசுபற் படாகந் தொகுதிரி பலைநில வேம்பு
சொற்றகுகண்டங் காலிவெண் கோட்டந் தூயநற் றருப்பையின் புல்லு
வற்றிடுகொன்றைப் பழங்கடு ரோணி வகுத்தசே வகன்றரு பூடே

இவையெல்லாஞ் சமனாய்க் கொண்டுநா ரத்தி
லெட்டொருபாகமாய்வற்றி
நவையெலாந் தீர வடித்திடு குடிநீர் நாலுநாட் குடித்திடச் சுரங்கள்
அவையெலாந் தீரு மென்றுமா முனிவ ரறைத்தனர் நீங்கிடா நிற்கில்
உவையெலா மகற்று மாத்திரை கூட்டி யுண்டிட வொழிந்திடுங்
காணே

## சுரங்களின் பொதுச்சிகிச்சை

### இச்சாபேதிக்குளிகை

நச்சனங் காரஞ் சூத நல்லிந்து நாவி வாளம்
கச்சணி முலையி னாளே கடுத்திரி பலையி னோடு
நெச்சகெந் தகமுங் கூட்டி நேர்தலைக் கறியின் சாற்றில்
வைச்சரை குளிகை குன்றி போலள வாகத் தானே (எசஅ)

இவ்விச்சா பேதி தன்னை யிஞ்சியின் சாற்றிற் கொள்ள
வெவ்விய சுரமுந் தீரு மிகுத்திடு வாத சூலை
உவ்விய மிருத்தி குன்ம முயர்குட கரியு மோடும்
செவ்வியின் வயிறுங் கான்று தீருமென் றுரைத்திட் டாரே (எசகூ)

### முச்சுரக் குளிகை

கெந்தகந் திப்பிலி வெண்காரங் கிளரு மிரத மரிதாரம்
மந்தங் கெடுக்கு நேர்வாள மருவு மிவையொன் றிருகழஞ்சாய்
முந்தப் பாகற் சாற்றரைத்து முற்றுங் குன்றி போலுண்டை
தொந்தஞ்செயுமூவகைச்சுரமுந்தொலையும்வெந்நீர்தனிலுண்ணே

### சுரத்தில் இருமலுக்கு ஏனோதி

நன்னாரி தூது வளைவட்டு நல்ல மிளகு திப்பிலியும்
சொன்னார் கடுக்கா யிந்துப்புத் தூய நற்சீர் கற்கண்டு
பொன்னார் பதமாய் வறுத்திடித்துப் பொருந்து நறுநெய்தனிற்காய்ச்சி
மின்னாரிஞ்சிச்சாறுவிட்டுவெதுப்பியருந்தில்விடுமிருமல் (எருக)

### சன்னியபாதசுரக் குளிகை

வெண்காரிந்து திரிகடுகு மிகுத்த நெல்லிக் கெந்தகமும்
நண்பா லோரொன் றொருகழஞ்சு நல்ல வாள மிருகழஞ்சு
உண்பார் கடுகு ரோகணியு முறவே நாலு கழஞ்சாக்கி
வண்சேர்முலைப்பால்தனினாலுசாமமரைக்கவகைவருமே (எருர்)

வருந்தி யரைத்து வழித்துளுந்து வகைபோ லுண்டைப் பிரமாணம்
மருந்து மிஞ்சிச் சாற்றிலுண்ண மருவுங் குணங்கண் டொவ்வொன்று
திருந்தக் கொடுத்துப் பத்தியமுந் தெளிவுங் கண்டா லஞ்சாமல்
இருந்த படியே கொடுத்துவரி லேகுஞ் சன்னி பாதசுரம் (எருகூ)

### சுரகுலிசம்

ஏகுஞ் சன்னி பாதசுர மிதற்குக் குளிகை யதுகேளாய்
பாகு போலும் புளிமதந்தான் பகரி லதுவு மொருகழஞ்சு
தாக மிகும்பூ சீனிப்பூவுந் தகுநல்லிரத முயிற்று முட்டை
போகு மிவையொன் றொருகழஞ்ச புதியமரிசங் காற்கழஞ்சே

கழஞ்சோர் நிறையா யிவைகொண்டு கடுகமாற்று வெற்றிலைநீர்
பிழிந்தே யரைப்பா யுளுந்தளவு பிரியா துண்டை தனையுருட்டி
இளுஞ்சேர் மடவார் முலைப்பாலி லிதமா யுண்ணச் சன்னிசுரம்
நுழைந்தேயோடு மிதுசுரத்தி னுதிசேர் குலிச மெனலாமே(எருரு)

### பலசுரக்குடி நீர்

திற்பலி கொத்த மல்லி சீரகஞ் சுக்குங் கூட்டி
அற்பினீ ரவித்தே யுண்ணி லருஞ்சுர மகன்று போகும்
பொற்புறு கொத்த மல்லி பொருந்துசுக் குடனீர் கொள்ளில்
நிற்புறு சுரங்களெல்லா நிச்சய மகலுங் காணே (எருசு)

கொத்தமல்லி சிற்றமட்டி போ மட்டி
குலவுசிறு காஞ்சோன்றி சுக்குச் சீந்தில்
மெத்துவட்டுப் பேய்ப்புடோல் பற்ப டாக
மேன்மையுறு மசமோதங் கண்டங் காலி
முத்தநில வேம்புடனே யாடா தோடை
முதுவேரு மொருநிறையாய்க் குடிநீர் கொள்ளில்

பித்தசுரம் வாதசுரஞ் சேற்ப மேவும்
பெருத்தசுரம் பலசுரங்கள் பிரிந்து போமே

**பித்தசுரத்துக்குக் குடிநீர்**

வட்டுச் சீந்தில் பற்படகம் வளரும் வில்வஞ் சிற்றமட்டி
துட்டச் சிறுகாஞ் சொறிசுக்குச் தூய கோட்டஞ் சிறுதேக்குக்
கட்டச் சிறுதிப் பிலிகோரை கழஞ்சா யவித்துக் குடித்துவரின்
விட்டேபித்தசுரங்களெல்லாம் விரைந்தே யகலு மெனவுரைத்தார் ()

கொத்தமல்லி சிறுகேக்குப் பற்ப டாகங்
கோட்டந்திப் பிலிமதுரஞ் சுக்குச் சீந்தில்
சுத்தநில வேம்புவட்டுக் கண்டங் காலி
சுறுக்கான சிற்றமட்டி சமன தாக
நித்தமொரு கழஞ்சுகொண்டு நீர்விட் டூறி
நிதானமா யந்திசந்தி குடிப்பீ ராகில்
சித்தமுறு பித்தசுரம் பழவெ துப்பத்
தீராத முத்தோஷ ரங்கள் போமே

சிறுதேக்குச் சந்தனம்பற் படாகஞ் சீந்தில்
திப்பிலிமுற் தற்காசு கோட்டஞ் சுக்குச்
செறுமேவு காஞ்சோன்றி யிருவே லிமிச்சுச்
செப்பியபேய்ப் புடோலிவையொன் றிருகழஞ்சாய்
உறுநீர்விட் டவித்தூறி நாலொன் றாக்கி
யுடன்குடிநீர் குடித்துவரிற் றீரும் வெப்புத்
திறமேவு மத்திசுர முச்சு ரங்க
ளராத பழவெதுப்புத் நீருந் தானே

## தோஷம்

### பறவைத்தோஷம்

..டைக்கோழி வானம் பாடி யதிரவே பறந்தாற் பிள்ளை
..டைப்பாடு நீர்தா கிக்கும் வயிறோடு மிளைக்கு முச்சி
திடப்படக் குழியுங் கண்க ளதிற்பட வட்ட மாகும்
படிப்பிலாப் பால கடைக்குப் பறவையின றோஷ மாமே

### நீர்ப்புள்

பிள்ளியிளைத் தேவயிறு நீரா யோடும்
பெருவிழியும் வட்டமிட்டுச் சியுங்கு ளிர்ந்தால்
விள்ளுநீர்ப் புள்ளினது தோவி மாகும்
விரிநிலத்தி லாட்டெருவைக் சுட்டு நன்றாய்க்
கள்ளமற நன்னீரிற் கரைத்துக் கொண்டு
கனமா வுடம்பதனிற் குளிக்க வார்க்கப்
பிள்ளையுநன் றாய்த்தெளியு முடம்பி லுற்ற
பிணிதோஷம் பட்தோஷங் கழன்று போமே

### கணைப்புள்

உச்சி யுடனே கண்குழியு முண்ணு முலைப்பால் தொங்காது
பச்சை நிறமாய் வயிறழியும் பறவைக் குலம்போற் சிறிபழம்
இச்சித்திருந்து தண்ணீரை யெடுத்துக் குடித்துத் திகைத்திருக்கும்
கச்சுமுலைய் னல்லாளே கணைப்புட் தொவி மிதுவாமே (எகூகூ)

### பாலைப்புள்

குஞ்சுத னுடம்ப லர்ந்து குடித்திடும் பாலுந் தொங்கா
நெஞ்சையுங் குழிய வாங்க நிறம்விழி வேற தாகும்
அஞ்சிடுந் துணுக்கென் றேங்கு மரைக்குக்கீழ்க் குளிஉந்தி குக்கும்
பஞ்சின்மேல் லடியனாளே பாலைப்புட் குணமி தாமே

### வெண்புள்

பாலகன் மேனி வாடிப் பசலைவாய் விழி யினீராய்ச்
சிலமாய்க் கால்கு ளிர்ந்த சிறிப்பா லெதிரெ டுக்கும்
தூலமாய்க் குழியு முச்சி தோற்றிடு மலம்வெவ் வேறாம்
வேலைபோ லிரையுமுந்தி வெண்புள்ளுத் தோஷ மாமே

### இரவுப்பறவை

முகத்தைத்துடைக்கும்புறங்கையினால் முறுக்கியழுதே தலைபுரட்டும்
சிகத்துக் குணங்க ணினைவறியா சிந்தை கலங்கி யெழுந்திருக்கும்
அகத்தைப் பார்த்தே வெருண்டு கொளுமனே கருணமாய்ச் சோர்ந்துவிழும்
இகத்துப் பிறந்த குணங்களெலா மிரவுப் பறவைக்குண மென்னே

### கருநீர்ப்பறவை

குடித்தபா லெதிரெ டுக்குங் குழிந்திடுந் தலையுங் கண்ணும்
அடிக்கடி சிலிர்த்து மேனி யறமெலிந் தழன்று பிள்ளை
எடுக்கினுங் கையிற் றங்கா திலையினிற் சாறு போலக்
கடுத்திடும் வயிறு போகுங் கருகுநீர்ப் பறவை தானே

### கன்னிப்பறவை

செங்கை மதலை தான்வாடுஞ் சிறுகக் கழியும் வயிறூதும்
முன்கை காலுங் குளிர்ந்திருக்கு முறுக்கி யழுமே கண்வட்டாம்
அங்கை யாலே முகர்ந்துடைக்கு மறவே குரலு நெரிந்திருக்கும்
கங்கு லனைய குழன்மடவாய் கன்னிப் பறவைக் குணந்தானே

### சாவுக்குருவி

வீரிட டழுமே யொருகுரலாய்விறைத்துக் கிடக்கும் வேர்வையுண்டாம்
பார்விட் டெழும்பு மிருக்கவொட்டா பரந்துவிழிக்கும் பலகாலும்

நீரிட் டிழியு மொழிந்திடுநீர் நினைவு தெரியா மூர்ச்சையதாம்
சாரிட் டுயிர்க்கும் வாய்வெருவுஞ் சாவுக் குருவிக் குணந்தானே ()

### மயானக்குருவி

முறிக்கு மூரி கொட்டாவி முன்னெற் றியிலே மயிர்பறிக்கும்
இறுக்கி யழுது கண்மூடு மிருகை காலுங் குளிர்ந்திருக்கம்
கறுக்கு முதடு நாவுலருங் கஞ்சி கேட்ருங் குடியாது
மறுக்குஞ்சுரடுமிகவுண்டாமயானக் குருவிக் குணந்தானே (எஎ0)

### ஆண்பெண் குருவி

கைகால் பின்னும் வாய்கறுக்குங் கண்ணுஞ் சிறுக்கும் வட்டமிடும்
மெய்தா னிளகுந் தாகமுண்டா மேனி வெளிறு நீர்கடுக்கும்
நெய்பால் தாகக் கஞ்சிகொள்ளு நேரே யிருக்க வொட்டாது
ஐவா யழுமே யிக்குணந்தா னாண்பெண் குருவிக் குணந்தானே

### பட்சி தோகஷம்

அருண்டெழும் வயிறு விம்மு மரைக்குக்கீழ்க் குளிர்ந்தி ருக்கும்
வெருண்டுகை முகத்திற் றேய்க்கு மிகவுநித் திரைகொள் ளாது
உருண்டுபோம் படுக்கைக் கீழே யுழலையு மதிக மாகும்
சுருண்டமென் குழலாய் பட்சி தோகூஷத்தின் குணமி தாமே.

### பறவைக் குணத்துக்குச் சிகிச்சை
### கோரோசனைக் குளிகை.

கோரோ சனையே மாசிக்காய் கோட்ட மதுரந் திப்பிலியும்
கூர்சே ரோம மிவையனைத்துங் கூட்டி யரைத்து முலைப்பாலிற்
சீரார் குளிகை நிழலுலர்த்திச் சேரும் பாலிற் கரைத்திடவே
தீராப் பறவைக் குலமனைத்துந் தீர்ந்துபோமென் றுரைத்தனரே. ()

### ஈருள்ளி எண்ணெய்

சாற்று மதுரஞ் சீரகமுந் தானு மேல மிலவங்கம்
போற்றுங் கராம்பு செண்பகப்பூப் புகலுங் குலக்காய் பத்திரியும்
ஏற்ற முத்த மிவையனைத்து மியலுங் கழஞ்சு முசுக்கையிலை
தோற்றுங் காணி சிறுகீரை சுகமார் கண்டங் கத்தரியே. (எஎச)

சீந்தி லிவைவேர் பலமொன்று சேருமெண்ணெ யிரண்டுபடி
காந்து மீர வுள்ளியினீர் கருது நாழி யரைகூட்டிச்
சாந்த மாகவெரித்தடுப்பிற் சார வடித்து மெழுகுபதம்
போந்த சங்கி நிடைபுகட்டப் போகுந்தோஷ வகையனைத்தும்
(எஎரு)

### புள்ளீட்டெண்ணெய்

வேலிப் பருத்தி பாகலிலை மிக்க மிளகு புளியமிலை
ஆலிச் சிவப்பி தன்பாலு மருந்து மெள்ளி லெண்ணெயுடன்
சாலக் கலந்து நாண்மூன்று சாரும் வெயிலில் வைத்தெடுத்துக்
காலம்பெறவேயடுப்பில்வைத்துக்கடிதாய் வடித்துக் கொள்வீரே.

வடித்த வெண்ணெய் கிரந்தன்னில் வாகாய்ப் பொருத்தி வருவீரேல்
குடித்தபாலை யெதிரெடுத்தல் குறுகி மெலிதல் குளிதோஷம்
சடத்தில் வந்த வுட்காய்ச்சல் சகல பறவைத் தோஷமெலாம்
துடித்துவிலகுமெனவாய்ந்து சொன்னா ராயுள் வேதியரே. (எஎஎ)

### ஒழிபு

### சிறுபுழுக்குணம் சிகிச்சை.

சிறிய தாம்புழுச் சீறி யரித்திடில்
வெறிய தாம்வயிற் றானுரை வீழ்ந்திடும்
செறியு மாடுதின் னாச்செழும் பாலையின்
உறுவி ரையயரைத் தூட்டுநன் னீரிலே.

## மசறிப்புழு

நுரையுஞ் சோரியு நோக்குடன் வீழ்ந்திடில்
இரைகொ ளும்மச றிப்புழு வீங்கிதற்
கரிய வேலிப் பருத்தி யிலையரைத்
துரிய நீரினி லூட்டிட வோடுமே.

## சண்டைப்புழு

இத்தம் வீழு மிதுசண்டை செய்புழுத்
துரத்த வேண்டிற் றெடுகுப்பை மேனியை
அரைத்து நல்லதண் ணீரி லருந்திட
வருத்த முற்றுடன் மாய்ந்திடும் பூச்சியே

## தானைப்புழு

சூழும் வெங்குத வாயி லரித்திடும்
அழுங் கண்ணும் பசந்திடுந் தானையில்
வாழும் வெம்புழு மாற்றிட வேண்டிடில்
வீழும் போந்தை வருமூல மாவிலே

கார வல்லியிற் காயிலை கூட்டியே
நேரும் பிட்டவித் தூட்டியம் மாவையே
சாரு மவ்விலைச் சாற்றிற் பிசைந்துபின்
நேரும் வெங்குத வாயினிற் பூசுவாய்.

## கீரிப்புழு

கீரி யிற்புழுச் செய்குணம் கேட்குறில்
சேரும் வாயினிற் கொள்ளு வடிந்திடும்
ஆரு மேனி வெளுக்குந் திறங்கெடும்
நீரும் வெந்திடு நீரென லாகுமே.

பாந்தைவருமூலமா – ஓடியல்மா. காரவல்லி – பாகல்.

சோரி சீதம் விழுங்கடுப் பாயிடும்
சேரு மேயுத ரத்திற் புரட்சியும்
¶ஆரை 0காளி யொடுவிர ணாரியும்
பாரின் மாதளை வேர்ப்பட்டை யூட்டுமே.

**நாகப்புழு**

நாகப் பூச்சியி னாடுங் குணஞ்சொலிற்
போகும் வாந்தி பொருமும் வயிறது
வேகு நெஞ்சும் வயிறுகர லோடுகை
ஆகு நிம்பத் தலகு புரசினில்
வித்து மாதளை வேரினிற் பட்டையும்
ஒத்த கானக் குறத்தி யுலையுடன்
மெத்த நீர்விட் டவித்துப் பருக்கிடச்
சுத்த மாகத் தொலைந்திடும் பூச்சியே.

**திரைப்புழு**

குடித்த பாலெதிர் கொண்டெடுக் கும்பிள்ளை
அடுத்தி ளைக்கு மதற்குஅ சுண்டைவேர்
எடுத்த ரைத்தே யிணங்குநன் னீரினில்
கொடுத்தி டக்குண மதகுங் குறிக்கொளே

¶ஆரை – வல்லாரை. 0காளி – மணித்தக்காளி. வரணாரி – கோட்டம்
கானக்குறத்தி – வல்லாரல்,

## எல்லாக்கிருமிகளுக்கும் பொதுச்சிகிச்சை

## குடிநீர்

எலிச்செவி முருங்கை வேரு மியறிரி பலைவி ளங்கம்
பலிக்குமா தளையின் வேரிற் பட்டைமாம் பருப்போ டொக்க
நலத்துறு நீரெட் டொன்றாய் நவின்றிடு வாய்வி ளங்கம்
பலத்துறு துண்மேற் றூவிக் கொடுத்திடக் கிருமி பாறும்

## கிருமிநாசமாத்திரை

பாறிடக் குளிகை கேண்மின் பலைமூன்று வாய்வி ளங்கம்
நாறிடும் வசம்பு திப்பில் நவிலுள்ளி யீர வுள்ளி
கூறிடு மாம்ப ருப்புக் குலவுமே னியின்வேர் சுக்குச்
சாறிடு மசந்தீண் டாத பாலைவேர் விரைகொழுந்து

கைப்பொடு கடுகு ரோணி கனமிள கிரண்டு சீரம்
ஒப்பொரு கழஞ்சு வீதங் கிருமியின் பகையோர் நாலு
தப்பறக் கூட்டி மேலுந் ¶தாடிமந் தருவேர்ப் பட்டை
அப்படி நாற்க ழஞ்சு மரைத்திடவ் வேர்ச்சாற் றாலே. (எகூ0)

குன்றியின் வீத முண்டை சர்க்கரை கூட்டி யுண்ண
நன்றதா மேரண் டெண்ணெய் நல்கிட மற்ற நாளில்
கன்றிடுங் கிருமி யாவுங் கழன்றிடும் வலிப்போங் கானம்
வென்றிடுமென்றுமுன்னாளவிதித்தனர் மறையு ணர்ந்தோர் (எகூக)

## தொங்கல்கழிச்சலுக்கு

மிளகு, வெற்றிலைக்காம்பு அரைத்துப் பொடுதலைச்சாற்றில் ஓடு சுட்டு அதிற் போட்டு வடிகட்டிக்கொடுக்கவும்.

¶தாடிமம் - மாதளை

வசம்பு வெள்ளுள்ளி சீனக்காரம் ஓமம் பெருங்காயம் வெளுத்தற்பிசின் இவை பொடித்து இளவறுப்பாய்வறுத்து உத்தமாகாணிச்சாறு விட்டுக் காய்ச்சித் தொப்பூழ்நின்று கீழ்வயிற்றளவும் பூசவும்.

விட்டுணுகிராந்தியிலை வசம்பு ஓருள்ளிப்பூடு இவையரைத்து வில்லைதட்டி ஓட்டிற் கருக்கி வெந்நீரிற்கொடுக்கத் தொங்கல் விழும்,

உப்பை வறுத்துக்கொட்டிப் பின் நாயுருவியிலை ஒருபிடி வறுத்துக் கொட்டி மோரூற்றி மூடினபின் கொடுக்கத் தொங்கல்விடும்.

ஆமணக்கம் நாரையுரித்துக் காதிற்கட்டவும், உத்தமாகாணிக் கொடியைப்பிடுங்கி அரையிற்கட்டவும் தொங்கல் விடும்.

### கழிச்சலுக்கு

பெருமரப்பட்டை கடலிறஞ்சிப்பட்டை முத்தற்காசு காரைவேர் மாதுளம்பட்டை முசுட்டைப்பட்டை புங்கம்வேர் அதிவிடயம் சுக்கு சமன் இளவறுப்பாய் வறுத்து இருநாழி நீர்விட்டு உழக்காக்கிக் கொடுக்கவும்.

### சத்திமாந்தத்துக்கு

பொடுதலை துவைத்து மிளகுவறுத்தபின்கூட்டி வறுத்து எருமை நெய் விளாங்காயளவு போட்டு மூடி இறக்கி நெய்யை இறுத்துக்கொடுக்கவும்.

பன்னீரும் புனுகும் முலைப்பாலுங்குழைத்துச் சீலையிற்தோய்த்து நாவில் வைக்கவும்.

## கட்டுக்குப் பூச்சு

கட்டுக்கு வசம்பு மஞ்சள் கருதுமாட் டுப்பு மூக்கை
மட்டுறு செவ்வ ரத்தம் பூச்சாற்றி லரைத்துப் பூச
இட்டமாந் தேற்றாக் கொட்டை மத்தின்வேர் வசம்பு மஞ்சள்
விட்டெலு மிச்சின் மேவும் பழச்சாறங் கரைத்துப் பூசே.

வயம்புதிப் பிலிக டுக்காய் வளர்பிரப் பங்கு ருத்தும்
¶அயம்பெறு புழுக்கை யெல்லா மதின்சலம் விட்ட ரைத்து
நயம்பெறப் பூச மாறு நவில்கட்டு வகைக ளெல்லாம்
பயம்பெறு மேரண் டத்தின் பருப்புநெற் பொரியுங் கூட்டே.

## எண்ணெய்

கூட்டி முக் கண்ணன் பாலுங் கூறுநீ லியினிற் சாறும்
வேட்டுறு களிம்பு றுத்த வட்டிலில் வெயிலில் வைத்து
நாட்டுறு வசம்புத் தூளு நல்லபூ நாகந் தானும்
போட்டிடத் தெளியு மெண்ணெயிறுத்துமேற் புண்ணிற்போடே

## அதரகுட்டத்துக்கு.

துத்தந் துரிசு கல்லுப்புத் துகடீர் கைப்புக் களிப்பாக்கு
நத்து மாயாப் பசுமஞ்ச ணவில்சிற் றிலையின் பாலாவி
வித்துங் கிருமி சத்துருவு மேவும் புங்கின் பாலதுவும்
சுத்த நந்தி யிலைச்சாற்றா லரைத்துக் கலக்கி யெண்ணெயினில்

காய்ச்சி யிறக்கிக் கடுகுடனே கிளியாய்க் கட்டி யதரத்தில்
தேய்ச்சுப் பத்துப் பதினைந்து தினந்தா னொற்றிப் பத்தியமாய்ப்
பாய்ச்சும் வெந்நீர் குடித்துவரப் பாறு மதரந் தனிற்குட்டம்
வாய்ச்ச மருந்து நெய்யொன்று வைக்கக் கேளு மடமானே.

அயம்பெறுபூழுக்கை – ஆட்டுப்புழுக்கை முக்கண்ணன்பால் - தேங்காய்ப்பால்

### செவ்வகத்திநெய்

மானே வேம்பின் பட்டைதிருக் கொன்றை வகுக்கும் வெள்ளறுகு
தேனே சிற்றா மணக்கிற்பூச் சிவந்த வகத்திப் பட்டையிவை
தானே சாறு பசுவின்னெய் தவறா தோரொன் றொருநாழி
கானேய்ப்பிரம்பின் வருமூலங் கருது சீந்தின் மாதளைவேர் (எசாஎ)

வகையோ ரொன்று பலம்பாதி மதுர மிளகு வெட்பாலை
தோகைசேர் கடுகு மஞ்சிட்டி தூய வெள்ளைக் குந்திருக்கம்
பகைதீ ருள்ளி யீருள்ளி கழஞ்சோ ரொன்று படிகூட்டி
இகறீர் மெழுகு பதத்தில்வடித் துள்ளும் புகட்டி மேற்பூசே.(எசாஅ)

பூசக் கிரந்தி யுதட்டிற்புண் புகலு நாவி லரளைமுதல்
தேசு மருவும் பாலகர்க்குச் சேரு மவியல் பலவகையும்
வீசுங் கரப்பன் சொறிசிரங்கு வேறும் பலநோ யுள்ளவெல்லாம்
ஈசன் குமர ன்றுமுகவ னருள்முன் னிருள்போ லேகிடுமே. (எசாசா)

### கண்டாங்கிரந்திக்குநெய்

கொன்றை, வெள்ளறுகு கிரந்திநாயன் இவைசாறு வகை-படி-க மதுரம், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், சந்தனம், நன்னாரி, இலாமிச்சு, இருவேலி, தகரம், செண்பகப்பூ, தாமரைவளையம், சீரகம், கடுக்காய், மாயாக்காய், சாத்திரவேதி, செஞ்சந்தனம், பூதவிருக்கம், மிளகு, ஆல்-அரசு-அத்தி-இத்தி இவற்றின் முகிழரும்பு, வகை-கழஞ்சு-ர் நறுநெய், பால் வகை-படி-க அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடித்து உள்ளும் புகட்டி மேலும் பூசக் கண்டக்கிரந்தி, கண்டக்கரப்பன் முதலியன தீரும்.

### கண்ணில் அமரத்துக்கு

கலப்புறத்திலே பசுவெண்ணெயிட்டு வேம்பின் தடியினால் ஒருநாழிகை உரைத்து வழித்ச் சீமிழில் வைத்துக்கொண்டு கண்ணிலிட அமரம், கரப்பன், வெப்புநீர்ப்பாய்ச்சல் முதலியன தீரும்.

### அமேத்திரசன்னியின்குணம்

முலையுண்ணா தழுது பார்க்கு முகமது வேற தாகும்
பலபல வலியுண் டாகும் பாலகன் குரலுங் கம்மும்
மலமது கட்டு மெய்யில் வந்திடுஞ் சுரமிதெல்லாம்
அலைவது வல்லப் பிள்ளைக் கமேத்திர சன்னி யாமே (அ00)

### எண்ணெய்

அக்கறா, அதிமதுரம், சிற்றரத்தை, பெருங்காயம், வசம்பு, மாயாக்காய், கராம்பு, திப்பிலி, வெளுத்தற்பிசின், தயிஉவேளைவேர், வேலிப்பருத்தி வேரும்பூவும், அமுக்கிராய்வேர், வேப்பலகு-சமன் வேப்பிலைச்சாறு ஒருபங்கு வேப்பெண்ணெய் இருபங்கு காய்ச்சிவடித்து உள்ளும்புகட்டி மேலும்பூச சன்னிவகையெல்லாந் தீரும்.

வெளுத்தற்பிசின், பெருங்காயம், நெல்லிக்காய்க்கெந்தகம், வசம்பு இவை வெவ்வேறு பொடிபண்ணி இரசம் காற்கழஞ்சும் ஈருள்ளியும் கூட்டியரைத்து நிலவேர், முயிற்றுமுட்டை வகைக்கு ஒருசிறங்கை வேப்பெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்துக் காசிடை பகட்டி மேலும் பூச, சன்னி, நீரேற்றம் முதலியன தீரும்.

### குக்கலின்குணமுஞ் சிகிச்சையும்

கக்குவா னிருமன் மிஞ்சிக் கருதிடு முடம்பு வற்றும்
சக்குகள் புரண்டு மேலும் புறப்படு மோங்கா ளிக்கும்
மிக்கநோய் மூன்றுதிங்கள் விடாமலே வருத்தஞ் செய்யும்
நக்கிட நெய்கேள் கையா னீருள்ளி நவில்ப ருத்தி

சங்குகர்ப் பூர வள்ளி தருமுசு முசுக்கை மேனி
பொங்குசெம் பரத்தை யிற்பூத் தூதுளை பிரமி யெல்லாம்
தங்கிட விடித்தெடுத்த சாறொன்று நாழி பாவின்
பொங்கு நெய்பாலிர் நாழி போதவே கூட்டிக் கற்கம்

சரியசீ ரகம ரத்தை கார்புகா மதுரங் கோட்டம்
வருசத குப்பை யேல முப்பலை மிளகு நற்சீர்
மருவுறு சிவந்த சந்தம் வகுத்தகற் கடக சிங்கி
பொருவுறு குங்கு மப்பூப் புதியகோச் சினையோ ரொன்றே

ஓரொன்று கழஞ்சி ரண்டா யுறுபதந் தனில்வ டித்துச்
சீரொன்று பாலஉக் கூட்டச் சேர்ந்திடு குக்க லீழை
நீரொன்று மிரும லாதி நீங்கிடுங் கிரந்தித் தொய்வும்
பேரொன்று மிதனுக் கேற்ற பெருமருந் தின்னுங் கேண்மோ.

## கஸ்தூரிமிருத்தியாதி

கூறுகஸ் தூரி யொன்று குங்குமப் பூவி ரண்டு
நாறுகோச் சினையு மூன்று நவின்றிடு மேல நாலு
வீறுவான் மிளகோ ரைந்து மிகுந்தவக் காறாவு மாறு
மாறில்சவ் வாது நல்ல மணமுள புனுகு தானும்

வகையொன்றுக் கரைக்க ழஞ்சு மாற்றுவெற் றிலையின் சாற்றில்
தொகையொன்ற வரைத்து முர்க்கத் தளவதா யுருட்டிச் சொல்லும்
நகையொன்று மடவார் பாலி னன்குற வரைத்தே யூட்டப்
பகையொன்று மிருமல் தொய்வு பகர்ந்திடு குக்க நீரும்

## குழம்பு.

கரியசி ரகநற் சிரங் கருதிடு மோம நாயின்
உருவிவே லிப்ப ருத்தி யுபயமுஞ் சமூல மாவின்
வருநெய்கற் கண்டு கூட்டி வகுத்திடு குழம்பாய்க் கொள்ள
இருமலோ டிழை குக்க லேதிடு மென்றார் முன்னோர்

தொண்டையின் வெளிப்புறத்திற் புலிநெய்பூசிப் புலித்தோலும்
புங்கங்காயும் கயிற்றிற் கோத்துக் கழுத்திற் கட்டவும்.

## சேர்க்கப்பட்டவை
## ஏலாதிமாத்திரை

ஏலமும் பச்சை சாத்திர வேதி யிலுப்பையின் மலரிலா மிச்சு
வாலிப மதுர முருத்திர மணியு மருவுறு சந்தன மிரண்டு
கோலநற் பச்சைக் கஉப்புர மாஞ்சில் கூறுமுந் திரிகைபே ரிஞ்சு
பாலுறு கெருட பச்சைகஸ் தூரி பகர்குலக் காயிரு வேலி

பூவுறு நாக முசிறின் முட்டை புகலுமான் கொம்பில வங்கம்
காவுறு முத்தற் காசுவெண்கோட்டங் கருதுகோரேசனை கள்ளார்
மேவுற வகைக்குக் கழஞ்சது வாகவிளம்பிடு கருப்பினி னீரில்
தாவுறு மிளநீர் மட்டையி னீரிற் றகுமுறை யரைத்தபினிலிங்கம்

அதுவிரு கழஞ்சு சுத்திசெய் திட்டே யரியபன் னீரினா லரைத்து
மதிமுக முடையா யுழுந்துபோ லுருட்டி வருகுணங் கண்டனுபானம்
கொதிபெறு சன்னி சுரங்கணை தோஷங் கூடிடு மாந்தமக் கரங்கள்
விதிமுறைதீரு மென்றுமா முனிவர் விளம்பியவியல் புணர்ந் தியற்றே

## தாமரைவளைய ஏலாதிமாத்திரை

சீர்பெறு கோரா சனையதி மதுரஞ் செண்பக மலர்கோட்டம்
நீருறு மம்போ ருகமதின் மூலமு நிலவேர் முயிறரியும்

கூர்பெறு கன்னார் சாத்திர வேதி குலக்கா யிலவங்கம்
வேர்பெறு செங்கழு நீரதின் மூலமும் வெறிதரு மேலமுமே

வெறிதரு சந்தன மதனொடு குங்கும விரைமலர் மான்கொம்பு
நெறிதரு மான்மக மரனது விழிமணி நேரொரு காசிடைகொள்
அறிதரு குடமுலை யதிலுறு மமுதினி லரைபய றளவாக
முறைபுரி யுரைதரு மமுதினி லுரையிடு விலகிடு பிணிகேளே

துயருறு பலசுர மவையொடு சன்னியு மறிபல விருமலுமே"
அயர்வுறு தோஷமு மதிலுறு தாகமு மவியலு மூச்சுடனே
வெயருறு குளிரொடு விக்கலு மக்கரம் வேறுள பலபிணியும்
மயருறு பசிபெறு மவரிடை மானம் தெனவொழி வதுநிசமே

## சுவர்ணகோரோசனை மாத்திரை

சீர்தரு தங்க முயர்ந்தகஸ் தூரி செப்புகோ ரோசனை யதுவும்
ஏர்தரு மோரொன் றொருகழஞ் சுடனே யியறிரி கடுகிரு கழஞ்சு
நேர்தர வகைக்குக் கூட்டிவெற் றிலையினீரினை விட்டுகன் கரைத்துப்
பார்தரு முர்க்க மளவுற வுருட்டிப் பகர்நிழ லுலர்த்திவைத் திடுமே

வைத்திடுகுளிகையேற்றனுபானம் வகுத்து மேகொடுத் திடிற்றோஷம்
மெத்திடு சன்னி சுரங்கணை மாந்த மேவிய கழச்சலே யாதி
உற்றிடு நோய்க டீர்ந்திடு மென்றே யுரைத்தனர் சிறுவர்க டமக்குக்
குற்றமின் றுபர்ந்தசுவர்ணகஸ்தூரிக்குளிகையென்றிதன்பெயர்கூறும்

## பெருங்காயக்குளிகை

பெருங்காய முள்ளிவசம் பிருசீரோமம்
பெருங்கடுக்கா யதிமதுரஞ் சுக்குக் கோட்டம்
மருந்தான திப்பிலிநா கம்பூ வோடு

வருநிலவேர் முயிறறுமுட்டை கழஞ்சோ ரொன்று
முருந்தேயு நகைமடவார் பாலா லாட்டி
முதுசூரைக் காயளவு குளிகை செய்து
திருந்தாத மொழிபேசும் பாலர்க் கிஞ்சி
தேன்முலைப்பால் கூட்டியிடத் தீரு நோய்கேள்

பொருமன் மாந்தம் புதல்சுரஞ் சன்னியும்
இருமல் கோழை யிலைப்புச் சிவாதநோய்
வருமத் தோக்ஷம் வயிற்றி லடசலும்
ஒருவு மாமென் றுரைத்தனன் மாமுனி

## முலைப்பாற்குளிகை

கோரோ சனைதான் கழஞ்சொன்று கூறு வசம்பு நேர்வாளம்
ஒரே வொன்று முக்கழஞ்சி னுடனே திப்பிலி யிருகழஞ்சு
சீரார் மாசிக் காய்பத்துத் தெரிவை முலைப்பா றனிலரைத்து
நீரார் குன்றி யளவுண்டைம ாந்தம் பலநோய் நீங்கியிடும்

## காக்கணவனிலைச் சாற்றுக் கோரோசனைக குளிகை

கோட்டமு மிருசீர் சாத்திர வேதி கூறுகோரோசனை வசம்பு
வாட்டமின் மாசிக் காயுடன் வாளம் வகுத்திடு திப்பிலி யதுவும்
காட்டுமக்கறாவும் வகைக்கொரு கழஞ்சு கரியகாக் கணமிலைச் சாறு
கூட்டியே யரைத்துப் பயறளவு வுருட்டிக் கோதையர் பாலினிலருத்தே
அருத்திடக் கரிய கிரந்திசெங் கிரந்தி யண்டிடுங் கிரந்தியிற் சுரமும்
வருத்திடு முட்டு மூச்சுடன் றொய்வு வயிற்றினிற் பொருமனா வரட்சி
தெரித்திடு கணையிற் சுரஞ்சழிக் கட்டுத் திரிந்திடு மென்றனர் மதியம்
தரித்திடு சடையெம் மண்ண றாண்மறவாத் தபோதனமுனிவர்கடாமே

### வெண்காயக் குளிகை

திரிசடு கிருசி ரோமஞ் சேருநற் கடுக்காய் கோட்டம்
வருமதி மதுரங் கன்னார் வசுவாசி கெருட பச்சை
மருவுறு மேலங் குப்பை மாசிக்கா யிலவங் கத்தோல்
தருவசம் பக்க றாவுஞ் சாரணைக் கிழங்கு துப்பு

துப்புறு மதுர மல்லாற் றொருபெருங் காயந் தானும்
தப்பறு சாதிக் காயுந் தகுமுருங் கையினிற் பூவும்
வெப்பறு முலுவா வெல்லா மிகாதொரு கழஞ்சு கூட்டி
அப்புறு வெள்ளை யுள்ளி யதுவொரு பலமிட் டாட்டே
பொடுதலை சாற்றாலா ட்டிப் பகல்குன்றி யளவு ருட்டி
இடுமுலைப் பால்வெந் நீரி லேற்றவே னுபா னத்தில்
புடவினைப் பொருவுங் கண்ணாப வயிற்றினிற் பொருமன் மாந்தம்
கெடுதலைப் புரியு முட்டுக் கேடுறு கழிச்சல் போமே

பாலரோகநிதானம் முற்றுப்பெற்றது.

Virus Printers Imuvil